உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிவரகசியம்

திரியாங்கிசை.

திருவாரூர்

ஸ்ரீலஸ்ரீ

ஒப்பிலாமணிதேசிகரவர்கள்

அருளிச்செய்தது.

இஃது,

சேற்றூர்ச்சமஸ்தானவித்துவான்

அருணாசலக்கவிராயரால்

பரிசோதித்து

திருச்செங்கோடு

அ. முத்துசாமிக்கோனரது

"சுப்பிரமணியக்கவுண்டர்" அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

விலை ரூபா-ச.

ஜெய-ஹு ஆனி-மீ கக-உ.

[Copyright Registered.]

1 ST. GRADE PLEADER, M. NAGALINGAM PILLAI.

LIBRARY
JAN 17 2019
UNIVERSITY OF TORONTO

உ

சிவமயம்.

முகவுரை.

சிவரகசியம் என்பது இலட்சங் கிரந்தமுடைய பரமேதிகாசம் எனப்பெயர் பெறும். இதிகாசம் பாரதராமாயணங்களாம். இதிகாசங்களினும் பரமேதிகாசம் உயர்ந்ததென்பது சொல்லாமே யமையினும், இந்தப்பரமேதிகாசம் பரமபதியாகிய ஸ்ரீசிவபெருமான் உமாதேவியாருக்கு உபதேசித்தருளிய மகிமையை மேற்கொண்டதென்பது விசேடமாம். காந்தபுராணத்துள் சிவரகசியமென்பதொன்றுளது. அது சிவரகசிய கண்டமெனப்பெயர்பெறும். புராணாந்தர்க்கதமாகியசிவரகசியத்துக்கும், இதிகாசமாகிய சிவரகசியத்துக்கும் பேதமுணராது பெரும்பாலார் மயங்குகின்றனர். ஈண்டியானுணர்த்தப் புகுந்த இதிகாசமாகிய சிவரகசியம் பன்னிரண்டு அமிசங்களை யுடையது. இவற்றுள், மூன்றாவது அமிசமேதமிழில் பத்தியரூபமாக மொழிபெயர்க்கப்பட்டது. இதற்கு ஆக்கியோர் சிவானுபூதிச் செல்வராய்த் திருவாரூரி லெழுந்தருளியிருந்த ஸ்ரீ ஒப்பிலாமணி தேசிகரவர்களென்றறிக. இப்பெருந்திருவாளர் - ௪0௯0 - பாடலிலமைத்த சிவரகசியப்பெரு நூல் இரண்டுகாண்டங்களாக வகுக்கப்பட்டுத் திரியாங்கிசை என்று பிரசித்தியடைந்திருக்கின்றது. இந்நூல் தஞ்சையில் ஸ்ரீ சரபோஜிமகாராஜா அவர்களது திவ்யசமுகத்தில் அரங்கேற்றப்பட்டது. நிற்க.

இதில், ஸ்ரீ சிவபெருமானது பரமகாரணத்வமும், அவர் ஆன்மாக்களிடத்தில் நடத்தும் பஞ்சகிருத்யப் பிரசங்கமும், அவரை மெய்யடியார்கள் வழிபட்டுய்யு மார்க்கங்களாகிய சரியை கிரியை யோக ஞானவிவரணமும், அவற்றுள், சிவபூஜை-சிவனடியார்சேவை-பிரதோஷமகிமை-பஞ்சாக்கரமகிமை - வில்வமகிமை சிவநாமவைபவம்-ஸ்ரீருத்ரமான்மியம்-நமகசமகப் பிரபாவம்-வேதாகமவைபவம்-பக்திவைராக்கியவிசேடம்-மகேசுவரபூஜாபத்ததி-சிவார்ச்சனாவிகிதபுஷ்பவிதி-சிவவிரதம்-ஜெபம்-தபம்-மந்திரம்-கிரியை-பாவனை-தியானம்-தீர்த்தம்-தலம்-மூர்த்தி-திரிபதார்த்தபோத சங்கிரகம் முதலிய பலவிஷயங்களும், இவ்வழிநின்று சிவப்பிரசாத மெய்தினோ ரின்னோரென்பதும், இவைகளை அனுட்டிக்கத் தக்கவர் இவர் அனுட்டிக்கத்தகாதவர் இவர் என்னும்வியவஸ்தையும் அடங்கியுள்ளன.

இவ்வரிய சைவநூலை அச்சிட்டு வெளிப்படுத்துதல் சிவபுண்ணியமெனக்கருதி ஏட்டுப்பிரதிகளுக்கு அடியேன் முயற்சித்து வருகையில், திருநெல்வேலியில் ஸ்ரீ அனவரததானநாதர் வாயில் வித்வானவர்களாகிய தெற்குப்புதுத்தெரு கனந்தங்கிய ம-ா-ா-ஸ்ரீ, **நெல்லையப்பகவிராஜரவர்கள்** நான்கு பிரதிகள் சம்பாதித்துக்கொடுத்தார்கள். அவைகளையும், அடியேனிடத்தில் முன்பேயுள்ள திருக்கயிலாய பரம்பரைத்திருவாவடுதுறை யாதீனத்துச் சுத்தப்பிரதியையும் வைத்துக்கொண்டு மேற்படி கவிராஜரவர்களது சமுகத்திலேதானே ஒப்புமைநோக்கிப் பரிசோதித்து ஒழுங்குசெய்தேன், இவ்வாறு பரிசோதித்து ஒழுங்கு செய்கையில் மேற்படி தெற்குப் புதுத்தெருவில், கல்வியறி வொழுக்கங்களான் மாட்சிமைதங்கிய ம-ா-ா-ஸ்ரீ, **பால்வண்ணமுதலியாரவர்களும்**, அடியேனோடு கல்விபயின்ற துணைவரும், திருநெல்வேலி இந்துகாலேஜ் தமிழ்ப்பண்டிதருமாகிய ம-ா-ா-ஸ்ரீ, **அநந்தகிருஷ்ணகவிராயரவர்களும்** தக்கவாறு உதவிசெய்தார்கள்.

பின்னர் இந்த நூலை அச்சிடுவதற்குத் திரவியோபகரணமுண்டாகும் விதமெப்படியென்று யோசித்துக் கொண்டிருக்கையில், உடுமலைப்பேட்டை போர்டு ஸ்கூலில் தமிழ்ப்பண்டிதராயிருக்கும் என்னுடைய கனிஷ்ட சகோதரர் சிரஞ்

சீவி கந்தசாமிக்கவிராயரது நன்முயற்சியால் சேலம்ஜில்லா காட்டுப்பாளையம் மிட்டாதார் ம-ா-ா-ஸ்ரீ, இராஜாக்கவுண்டரவர்களும், ஷை ஜில்லா சங்ககிரி மிட்டாதார் ம-ா-ா-ஸ்ரீ, சுப்பராயக்கவுண்டரவர்களும் தக்கவாறுபொருளுதவி செய்தார்கள். இவ்வுதவி கிடைத்தவுடனே அடியேனது குலகுருவாகிய திருவாவடுதுறையாதீனம் ஸ்ரீலஸ்ரீ, அம்பலவாணதேசிகசுவாமிகள் சந்நிதிக்கு விண்ணப்பஞ்செய்தேன். அன்றியும், அடியேனையும் அடியேனது முன்னோரையும்பின்னோரையும் தமது சமஸ்தானத்துப் பிரதமவித்வான்களாகவைத்து ஆதரிக்கின்ற சேற்றூர்மகாகனந்தங்கிய ஸ்ரீசுந்தரதாசபாண்டிய மகாராஜா அவர்கள சமுகத்துக்குந்தெரியப்படுத்திக் கொண்டேன். இந்த இரண்டிடங்களி லிருந்துங்கூடிய வுதவிகிடைத்தது. மேலும், எளியேன் எடுத்துக்கொண்ட நன்முயற்சிகளெல்லாம் இனிதுமுடியும் வண்ணம் அவ்வக்காலங்களில் தக்கவுதவிசெய்துவரும்சிவகாசி ம-ா-ா-ஸ்ரீ, அ. சு. வேலாயுதம்பிள்ளையவர்களும், ஷையூர் ம-ா-ா-ஸ்ரீ, வெண்டர் ஆறுமுகம்பிள்ளையவர்களும், ஷையூர் ம-ா-ா-ஸ்ரீ, சிவஞானவுபாத்தியாயரவர்களும், திருச்செங்கோடு "விவேகதிவாகரப்"பத்திராதிபர் மகா-ா-ா-ஸ்ரீ, அ. முத்துசாமிச்சோனாரவர்களும், தங்கள் தங்களாலியன்றவளவில்பொருளுதவிசெய்தார்கள் இவ்வாறுகிடைத்த பேருதவியால் முன்பு பரிசோதித்து ஒழுங்குசெய்துவைத்த இச்சிவரகசியப் பெருநூலை அச்சிற்பதிப்பித்து முடித்தேன். இங்ஙனம் அச்சிற்பதிப்பித்துவருகின்றது திருவிடைமருதூர் ம-ா-ா-ஸ்ரீ, கோவிந்தசாமி யுபாத்தியாயரவர்களாலேமதுரைச்சில்லா கொத்தமங்கலத்தில் சிவபத்தி குருபத்தி அடியார்பத்திகளிற்சிறந்து விளங்கும் ம-ா-ா-ஸ்ரீ, சி. ரா. ம. அ. இராமன்செட்டியாரவர்கள் தெரிந்து சிவரகசியம் சீக்கிரம்பதிப்பித்து வெளியேற்றினால் பரமசாதுக்களுக்குத் தானஞ்செய்யும்பொருட்டு 70-புத்தகம் விலைக்கு வாங்கிக்கொள்கிறேனென்று ஒரு ஆப்தவாக்கியபாசுரமெழுதியனுப்பினார்கள். இன்னோரன்னவர்களன்றோ சிவபுண்ணியசீலத்திற்சிறந்தவர்கள். நிற்க. சைவசித்தாந்தவுண்மை நூலுணர்ச்சியிற்றெளிந்தபுலவர் பெருமான்களாற் பரிசோதித்து அச்சிற்பதிப்பித்தற்குரிய இந்நூலைக் கல்லாதவரிற்கடையனாகிய அடியேன் சிவத்தொண்டாகக்கருதி அச்சிற்பதிப்பித்து வெளிப்படுத்தினேனாகையால் இதனைப் பேரதிகாரங்களைப் பெரிதுமுணர்ந்த பெரியோர்கள் குறைகூறாரென்க. இந்நூலிலெளியேனால் விடுபட்டுப்போன பிழைகளையும், அவற்றின்திருத்தங்களையும் பெரியோர்கள் கருணையோடு தெரிவிப்பார்களாயின், அவர்களாஞ்ஞையைச் சிரமேற்றாங்கி இரண்டாம் பதிப்பிலெல்லாருக்கும் பயன்படும்படி பதிப்பித்து விடுகிறேன்.

இச்சிவரகசிய நூலைப் பிறர்க்குத்தானமாக ஈந்தோருந் தம்மிடத்துச்சேமித்துவைத்துப் பூசித்தோரும், எழுதிவைப்பதற்கு ஏற்ற சாதனமாகிய சிற்சிலகருவி கொடுத்தோரும் சிவலோகத்திற்சென்று பன்னெடுங்காலம் சகலபோகத்துடனுங்கூடி வாழ்ந்திருப்பார்களென்பது சத்தியம்! சத்தியம்!! சத்தியம்!!!

இங்ஙனம்,

மு. ரா. ம. அருணாசலக்கவிராயன்.

சிவகாசி.

சருக்க அகராதி

பக்கம்.	சருக்கங்களின்பெயர்.	பாடற்றொகை.
௧௧௬	அபுத்திபூருவசிவபுண்ணியச்சருக்கம்	௨௯
௨௩௫	ஆயுத்தேவச்சருக்கம்	௨௨
௧௩௫	இராசேந்திரச்சருக்கம்	௩௯
௮௮	உருத்திரவீணைவரலாற்றுச்சருக்கம்	௩௰
௪௧௧	உருத்திராத்தியாயவியாக்கியானச்சருக்கம்	௪௮
௧௭௰	உற்பத்திகாரணச்சருக்கம்	௩௨
௫௧	கணபதிகுமாரன்றேவியைக்கண்டசருக்கம்	௧௭
௪௩	கணபதிமறுத்துரைத்தசருக்கம்	௧௭
௪௩	கணபதியுடன்கடவுளுத்தரச்சருக்கம்	௧௫
௪௰	கணபதிவர்த்தனைச்சருக்கம்	௨௯
௬௭	கத்தரிப்பூவருச்சனைச்சருக்கம்	௪௩
௧௯	காயத்திரிவரம்பெற்றசருக்கம்	௩௰
௩௮௪	காலாக்கினிச்சருக்கம்	௯[illegible]
௨௪௰	கீர்த்திகேதுச்சருக்கம்	௩௭
௧௪௫	கும்பமுனியுத்தரச்சருக்கம்	௨௭
௩௯௧	கூர்மச்சருக்கம்	௪[illegible]
௧௭௭	சதானந்தச்சருக்கம்	௪௮
௯௨	சத்தியலோகச்சருக்கம்	௨௭
௪௪௭	சத்தியவிரதருத்தரச்சருக்கம்	௫௩
௧௭௪	சனகன்மனேவிசாரச்சருக்கம்	௨௮
௪௨௪	சாம்பவவிரதச்சருக்கம்	௧௨௭
௪௪௰	சாம்பவவிரதவுத்தியாபனச்சருக்கம்	௯௩
௩௭௰	சாரணைசொற்டணபூசைச்சருக்கம்	௪௫
௨௪௫	சித்திரகுத்தர்பிரலாடச்சருக்கம்	௩௧
௩௩௩	சித்திரகேதுநாட்டுச்சருக்கம்	௩௯
௩௨௭	சித்திரகேதுமகிமைச்சருக்கம்	௨௯
௧௨௫	சிலாதரன்சமகவரங்கேட்டசருக்கம்	௪௯
௫௩	சிவகணவுத்தரச்சருக்கம்	௨௨
[illegible]	சிவ[illegible]டாலன்முத்திபெற்றசருக்கம்	௭௮
௯௨	சிவதன்மாதன்மச்சருக்கம்	௩௪
௧௯௪	சிவடத்தூர்மகிமைச்சருக்கம்	௨௰
௫௨௮	சிவரகசியமான்மியச்சருக்கம்	௧௨௪
௧௧	சிவரகசியவரலாற்றுச்சருக்கம்	௪௩
௮௨	சிவனடியார்தரிசனமகிமைச்சருக்கம்	௪௪
௨௯௯	சிவஞமமகிமைச்சருக்கம்	௯௪
௫௯	சுகமுனிச்சருக்கம்	௪௭
௧௯௧	சூரசேனச்சருக்கம்	௨௨
௩௩௧	சேடன்வந்தசருக்கம்	௪௧
௭௭	சைவர்பரிகலப்பிரசாதமகிமைச்சருக்கம்	௩௮
௨௫௫	ஞானவாலனுற்பத்திச்சருக்கம்	௫௰
௨௭௯	ஞானவாலன்கல்யாணச்சருக்கம்	௫[illegible]
௨௭௩	ஞானவாலன்கல்யாணநிராசைச்சருக்கம்	௩௮
௯௭	ஞானவாலன்[illegible]சருக்கம்	[illegible]

பக்கம்.	சருக்கங்களின்பெயர்.	பாடற்றொகை.
கசகூ	தக்கன்மகமழித்தசருக்கம்	சக
கசஉ	தக்கன்வேள்விச்சருக்கம்	உஎ
எக	தண்டிகணூதிபன்வந்தணச்சருக்கம்	[illegible]
சரு	தாருகன்கதையுரைத்தசருக்கம்	[illegible]
ளஉ	தேவர்முறையிடுசருக்கம்	[illegible]
ருய	தேவர்முனிவர்காட்சிச்சருக்கம்	[illegible]
எரு	தேவிசிவனைப்பொருந்தினசருக்கம்	[illegible]
ருச	தேவிநாட்டியம்பார்த்தசருக்கம்	[illegible]
ருரு	தேவிமேருகயிலையுற்றசருக்கம்	[illegible]
உஅ	தேவிமேருவரையைச்சார்ந்தசருக்கம்	[illegible]
உரு	தேவியிமயம்விட்டெழுந்தருளியசருக்கம்	[illegible]
ருரு	தேவியுடன்குமாரருத்தரச்சருக்கம்	[illegible]
உசாக	நதிகள்வரம்பெற்றசருக்கம்	[illegible]
ருஅ	நந்திகணங்களாலோசனைச்சருக்கம்	[illegible]
ளச	நந்திகேசுரர்தேவர்க்கருள்புரிசருக்கம்	[illegible]
ககஉ	நந்திகேசுரர்நமனுக்குப்புத்திசொன்னசருக்கம்	[illegible]
உஉச	நாரதருபதேசச்சருக்கம்	[illegible]
ரு	நைமிசாரணியச்சருக்கம்	[illegible]
ளஎ	பசாசுமோசனச்சருக்கம்	[illegible]
கஉஉ	பலிபீடவன்னமகிமைச்சருக்கம்	[illegible]
ருருசா	பற்மாவதிச்சருக்கம்	[illegible]
ககூ	பாக்கியதேவதைச்சருக்கம்	[illegible]
க	பாயிரம்	க
உஉசா	பாவநாசச்சருக்கம்	[illegible]
உருக	பாவரூபமோசனச்சருக்கம்	[illegible]
கருச	பாவஞலிங்கச்சருக்கம்	[illegible]
சசாசா	பிரவஞ்சவுற்பத்திச்சருக்கம்	[illegible]
ருசாரு	பிருங்கியுத்தரச்சருக்கம்	[illegible]
சஅச	புலோமைச்சருக்கம்	[illegible]
உளஎ	பூசாயோக்கியவனச்சருக்கம்	[illegible]
ருளஅ	பெண்மணிசிவபூசைச்சருக்கம்	[illegible]
ருசகூ	பெண்மணியுபதேசம்பெற்றசருக்கம்	[illegible]
உஅஅ	பெண்மணிவயிராக்கியச்சருக்கம்	[illegible]
ருஉரு	மந்திரமூர்த்திகள்பூசைச்சருக்கம்	[illegible]
ருகஅ	மந்திரமூர்த்திச்சருக்கம்	[illegible]
உகஎ	மறவியுத்தரச்சருக்கம்	[illegible]
ருகூஅ	மன்மதவதைச்சருக்கம்	[illegible]
ருளச	மாரதன்பூசைச்சருக்கம்	[illegible]
கூரு	மானதபூசைச்சருக்கம்	[illegible]
கசாஅ	மிதுலைச்சைவநெறிவிளக்கச்சருக்கம்	[illegible]
கரு	மேருச்சருக்கம்	[illegible]
கருரு	வசிட்டருத்தரச்சருக்கம்	[illegible]
ருகசா	வருணைச்சருக்கம்	[illegible]

பக்கம்.	சருக்கங்களின்பெயர்.	பாடற்றொகை.
௬௱௪	வருணராசச்சருக்கம்	௩௯
௧௯௰	வாரீசலோசனைச்சருக்கம்	௩௰
௬௫௭	வானரங்கள்பூசைச்சருக்கம்	௯௰
௩௬௩	விசுவாசிபூசைச்சருக்கம்	௪௮
௨௯௪	1விசுவாவசுச்சருக்கம்	௩௮
௩௭௯	2விசுவாவசுச்சருக்கம்	௯௧
௯௭	விசையைசெயையுத்தரச்சருக்கம்	௩௯
௩௩௭	விட்டுணுவந்தனைச்சருக்கம்	௫௬
௨௬௯	விந்தமன்னவன்சருக்கம்	௨௩
௬௬௯	வியாக்கிரச்சருக்கம்	௯௨
௬௭௬	வில்வவனச்சருக்கம்	௭௮
௨௱	வீரசித்துச்சருக்கம்	௬௩
௨௧௧	வீரசித்துவிரத்தவயிராக்கியச்சருக்கம்	௬௰
௨௨௧	வீரசித்துவுற்பத்திச்சருக்கம்	௨௪
௧௮௫	வீரேசுரச்சருக்கம்	௫௨
௧௩௧	வேதபாதச்சருக்கம்	௨௰

நைமிசாரணியச்சருக்கத்துடன் சருக்கம்-௧௦௧-க்குத்
திருவிருத்தம். ஆ ௪௦௮௯-காப்பு-௧-ஆ ௪௦௯௦.

ஆ. முத்துக்கருப்பஞ்செட்டியார், எட்டியாபுரம்

கையொப்பஞ்செய்தகனவான்கள்:

ஸ்ரீவில்லிபுத்தூர்த்தாலூக்கா குன்னூர்

ம-ா-ா-ஸ்ரீ, வித்துவான் குமாரசுவாமிமுதலியாரவர்கள்.

சிவகாசி.

,, சப்ரிஜஸ்தரார் கணபதி அய்யரவர்கள்.
,, ரிவினியூஇனிஸ்பெக்டர் சுப்பிரமணிய அய்யரவர்கள்.
,, கிராமமுனிசிபு சண்முகசுந்தரமுதலியாரவர்கள்.
,, போஸ்டுமாஸ்டர் சுப்பிரமணியபிள்ளையவர்கள்.
,, பிரமநாயகம்பிள்ளையவர்கள்.
,, வீரபத்திரபிள்ளையவர்கள்.
,, அ. குழந்தைவேலுப்பிள்ளையவர்கள்.
,, மீ. வேலாயுதம்பிள்ளையவர்கள்.
,, செகநாத இராஜா அவர்கள்.
,, புட்பவனம்பிள்ளையவர்கள்.

கோயமுத்தூர்ஜில்லா புரவிபாளையம் ஜமீன்தார்

,, செகமண்டலாதிபதி சந்திரகோப்பணமன்றாடியாரவர்கள்,

ஷை ஜில்லா மாதம்பட்டி

,, ஆண்டியப்பக் கவுண்டரவர்கள்.

பால்க்காடு முனிசிபல் சேர்மேன்

,, சின்னச்சாமிபிள்ளையவர்கள்.

நத்தம்பட்டி.

,, கணக்கு சோமசுந்தரம்பிள்ளையவர்கள்.

அருணாசலபுரம்.

,, பொன்னுச்சாமிபிள்ளையவர்கள்.

எட்டயபுரம்.

,, க. ஆண்டியப்பபிள்ளையவர்கள்.
,, ,, இராக்கப்பபிள்ளையவர்கள்.

குருவிகுளம்.

,, பழனிச்சாமிநாயுடு அவர்கள்.

உடுமலைப்பேட்டை.

,, வைக்கீல் பழனியாண்டிப்பிள்ளையவர்கள்.
,, ,, இராமசாமிப்பிள்ளையவர்கள்.
,, ,, மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்.
,, ,, வேங்கடசுப்பய்யரவர்கள்.
,, ,, சீனிவாசய்யரவர்கள்.
,, சோழியக்கவுண்டரவர்கள்.
,, குப்பாண்டக்கவுண்டரவர்கள்.
,, கந்தசாமிசெட்டியாரவர்கள்.

தூத்துக்குடி.

,, ரா. ம. ப. வ. ஏஜண்டு பாடகலிங்கம்பிள்ளையவர்கள்

திருச்செங்கோடு.

,, மாணிக்கவோதுவாரவர்கள்.
,, அப்பாவுசெட்டியாரவர்கள்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிவரகசியம்

கிரியாங்கிஷ்ச

முதற்காண்டம்.

பாயிரம்.

விநாயகர்வணக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பொன்னிமயப்பிடியானை தருமானைமுகத்தானைப்பொருவிலானைச்
சொன்னயஞ்சேர்தாரகத்தினுருவானையன்பருளச்சோதியானைச்
சென்னியிலாறுடையானைத்தந்தையெனப்படைத்தானைத்திகழோராறு
மன்னுமுகன்றுணையானைவல்லபையின்பத்தானைவணங்கிவாழ்வாம்.

பரசிவம்.

உலகனைத்துமுளனாகியிலனாகியுண்மையாயுலப்பிலாது
யலகிலுயிர்க்குயிராகியற்புதமாயாரமுதாயறிவுற்றோர்பா
னிலவியமர்ந்தனுபூதிநெறிவிளங்கவிளங்கவவர்நேயத்துள்ளே [ம்.
குலவியபேரொளியாகுங்கோமானைக்குணக்குன்றைக்குறித்துவாழ்வா

நடேசர்.

அருமறையதனுலளப்பதற்கரிதாயகண்டிதானந்தநல்வடிவாய்
மருவுபேரொளியாய்மதிப்பதொன்றாகாமனமணிவிளக்கதாய்மயறீர்ந்
தருகுமெய்யன்பருளநடம்புரிந்தேயொழிவறுதெங்கணுமேவித்
தெருளதாயருளம்பலத்தினின்றாடுஞ்சேவடிசென்னிசேர்த்திடுவோம். ()

உமையவள்.

உருவமாபருவாயுணர்வுமாயொழியாதொளிருநல்வியோமமுமாகி
மருவுமாமாயைபரையுமாயுலகின்மதிக்குமெய்ப்பொருளுமாயகண்ட
சொரூபமாயொன்றாயறிவுறுதொளிருஞ்சுயம்பிரகாசமாயடியார்
கருவுறுதருளாற்காத்தருள்புரியுங்கவுரிதன்கருணையேபணிவாம். (௩)

விநாயகர்.

பவளவரைச்சிகரமதிற்பயிறருவெண்பிறைபோலப்பணைகோடோ
ங்கத், தவழருவியெனக்கன்மததாரைபொழிந்திழிபத்தாமபோலி, ॥

வமையில்சூரியருதித்தாலெனவொளிரவீற்றிருக்குமொருசெஞ்சோதிக்
கவளயானையின்முகத்துக்கணபதிசேவடிக்கமலங்கருத்துட்கொள்வாம்.

வேறு-சுப்பிரமணியர்.

அரவணையவனுமன்னவூர்தியுமறிகிலாத
பரவரும்பொருட்குவேதப்பழம்பொருள்பகர்ந்தகோமான்
குரவணிகுழலாள்வள்ளிக்கொடிபடர்குவவுத்திண்டோட்
சரவணபவன்பொற்பாததாமரைதலைமேற்கொள்வாம். (ரு)

வேறு-திருநந்திதேவர்.

சிலையுடைச்சிலையெம்பிரான்றிகழ்கயிலைக்கண்
ணிலைமைபெற்றிடுங்கணங்களின்முதன்மையுநிகரில்
புலமைபெற்றிடுஞ்சைவதேசிகர்க்கெலாம்பொருவி
றலைமையும்பெற்றநந்திதாடலைமிசைக்கொள்வாம். (சு)

தண்டியடிகள்.

பேதையாகியபிள்ளைநம்பிள்ளைசெய்பூசை
யீதையேதெனவியம்புகேமெனமனத்தெண்ணான்
கோதையேபுரிகுணத்தொடுங்குடப்பயமுடைத்த
தாதைதாளறத்தண்டித்ததண்டிதாள்பணிவாம். (எ)

திருஞானசம்பந்தர்.

குவிகையேறியமணிமுடிப்பாண்டியன்கூன்போய்க்
கவிகையேறுசிங்காதனத்தேறிடக்கழுவி
லவிகையேறுறவமணர்களேறவெண்டரளச்
சிவிகையேறியகவிஞன்றாள்சென்னியிற்சேர்ப்பாம். (அ)

வாகீசர்.

கதிருலாவியசடைதொறுங்காலொன்றுதூக்கி
யதிரவீசிநின்றாடியதாண்டவத்தவர்க்கே
மதுரமாதிருத்தாண்டகச்செந்தமிழ்வகுத்த
சதுரனாவினுக்கரையன்றன்சரணமேசரணம். (கூ)

திருநாவலூரர்.

சேனைமேற்கொண்டுசேரனார்தூசிமுன்செல்ல
வானைமேற்கொண்டதேவர்கள்வணங்கிடக்கயிலைக்
கானைமேற்கொண்டுசென்றவனமுதமாங்கவிதைச்
சோனைமேற்கொண்டசுந்தரமுகில்பதந்தொழுவாம். (க0)

திருவாதவூரர்.

எம்பிரான்வெள்ளையிபகடத்திந்திரன்முதலோ
ரம்பிரானெனத்திரிபுரத்தகிலத்தேர்நடத்து

நம்பிரானரிப்பரிநடத்திடத்தமிழ்நடத்துந்
தம்பிரான்றிருவாதவூரான்சரண்சரணம். (கக)

அறுபத்துமூவர்.

குழிதரும்பவப்பவ்வத்தைக்குருலிங்கசங்கமத்தின்
மொழிதிடபத்தியாகுமுந்தியாநாவாயினீங்கிச்
சுழிபெறுங்கங்கைவேணிச்சோதிவாழ்கயிலைமேவி
வழிபடுமொன்பதிற்றேழன்பரைவணங்கிவாழ்வாம். (கஉ)

திரிகாலத்திருக்கூட்டத்தார்.

சென்றகாலத்திற்பத்திசெய்துமுத்தியினைச்சேர்ந்தோர்
நின்றிடுநிகழ்காலத்தினிமலனுக்கன்புசெய்வார்
துன்றிடுமெதிர்காலத்திற்சேர்பொற்றொண்டுபூண்போர்
மன்றலார்கமலத்தாள்களைமனத்துஞ்சென்னியிலுங்கொள்வாம். (கங)

கலைமகள்.

நான்முகனுவின்மேவிநான்மறைவடிவாயின்னந்
தானரும்பொருள்கடேர்த்தடக்கையின்முறையுந்தாங்கித்
தேனலர்கமலப்போதிற்செழித்துவீற்றிருக்குமம்மை
கான்மலர்போற்றினாருங்கருத்துறவணக்கஞ்செய்வாம். (கச)

வாழ்த்து.

வானவர்வாழ்கயாகமறையவர்வாழ்கவானுந்
தானமாமழையும்பாருஞ்சனங்களுந்தழைத்துவாழ்கத்
தேனலர்கொன்றைவேணிச்சிவபிரான்கருணைவாழ்க
வானநல்லறங்கள்வாழ்கவன்பருமவாழ்கவென்றே. (கரு)

அவையடக்கம்.

கைக்கிரிபோலவந்தகரியுரித்தாடல்கொண்ட
திக்குடையானைப்போற்றுஞ்சிவரகசியம்யான்செப்பன்
மைக்கடலுடனேமற்றுமாக்கடல்கடந்துசென்றே
நெய்க்கடல்பருகப்போஞ்சிற்றெறும்பினையொக்குமன்றே. (கசு)

கூற்றுதைத்தவன்மேலன்புகொண்டோர்குழகன்றன்சீர்
போற்றுமென்கவிசிற்றம்போக்கியேபுகழ்ந்துகொள்வா
ரேற்றதோர்கலங்கற்றண்ணீரெய்திலுமதனைத்தேற்றிச்
சாற்றியபடிக்கொள்வா[illegible]டாமே. (கஎ)

மானெடுத்தவரைப்போற்றுமருட்பெரியோர்பெம்மான்சீர்
யானெடுத்துரைத்தசெய்யுளிழிபுதீர்த்தினிதுகொள்வார்
கானெடுத்ததனிலுற்றகடியதேனீயும்போக்கித்
தேனெடுத்தருந்துவாரேதேடியிவ்வுலகுளோரே. (கஅ)

அல்லெறிசோதிவானோரமுதுணவிடமுண்டார்க்கென்
சொல்லெறிசொல்லதேனுஞ்சுந்தரமாகக்கொள்வார்
வில்லெறிவேடன்வில்லமெறிந்திடமேன்மைசெய்தார்
கல்லெறிசாக்கியர்க்குங்கருணையேபுரிந்தாரன்றே. (கஅ)

நொடியனவாளைத்தேருநுண்ணறிவொன்றுமில்லேன்
முடிவரும்பொருளைச்சற்றேமுன்னினன்மொழிந்துவைத்தேன்
படியுளகாலமெல்லாமபரமனுக்கன்பரான
வடியர்பாராட்டுவாரென்றுரைசையாலடியனேனே. (உ0)

நூற்பயன்.

நூற்பெயர்முதனூற்பேரேபுனைந்ததுநுவலுமுன்னூற்
பாற்படுபொருளுஞ்சைவப்பாகுபாடுணர்ந்துநோக்கன்
மேற்பரம்பொருளாமுக்கண்வித்தகன்சரிதம்வேட்கை
பேற்பொடுகேட்போர்பேறுமுத்திவீட்டின்பந்தானே. (உக)

வேறு-நூலியற்றியகாலமுதலியன.

திருமருவுகும்பகோணத்தில்வாழுஞ் செல்வமிகுபலர்சனங்கள்சிவன்பாலன்பர், பொருவில்சிவரகசியபுராணமாகும் பொருந்தும்வடமொழிதமிழாற்புனைவாயென்னத், தருமமிகுதவவணையாஞ்சைவன்றியாகர் சன்னிதியில்வரிசைபெறுந்தலைமைபூண்டோ, னிருமைநல்காரூர்ப்பிறந்தோனாரூரன்சேயிசைகொளொப்பிலாமணிதானிசைத்தவாறே.(உஉ)

மன்னர்புகழ்சரபோசிமகாராசராசன் மாநிலங்காத்திடுநாளிற்றஞ்சைமாநகரிற், றுன்னுமேவிளம்பியுற்றமகரமதியைந்திற்சோதிசிவரகசியமொப்பிலாமணிசொற்றமிழை,யிந்நிலத்தினரங்கேறச்செய்தனர்பொன்மாறையெழில்சேருந்தீராதவினைதீர்த்தான்பாகைப், புன்னைவனநாதனிவர்சைவநெறிவளர்க்கும்பூபாலரவனியெங்கும்புகழினிதோங்கிடவே

திருச்சிற்றம்பலம்.

பாயிரமுற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

நைமிசாரணியச்சருக்கம்.

வேறு.

அற்புதனமலனகண்டிதனனகனனுபமனசலனுணந்தன், றற்பரன் சாந்தன்சச்சிதானந்தன்சங்கரன்றத்துவாதீதன், சொற்பதங்கடந்துநி ன்றருள்சோதிதொண்டனேன்று யர்துடைத்தாளுஞ், சிற்பரம்பொரு ளாஞ்சிவனவன் கமலச்சேவடிசென்னிசேர்த்திடுவோம். (க)

அத்திரிமரீசியங்கிராவசிட்டன்கவுசிகனுக்கினவற்கி,
பத்திசேர்வாமதேவன்குச்சரன்விபாண்டகன்பராசரன்கபிலன்
சித்திபெற்றிடுமார்க்கண்டன்பாற்கவன்றதீசியேகாசிபன்பிருகு
புத்திசேர்வைசம்பாயனன்சுசீலன்புலத்தியனகத்தியன்பூதன். (உ)

கங்கைவேணியனேர்பயில்வனமிருகசிருங்கனங்கார்த்தியாயனன்சீர்ப்
பிங்கிருடிப்பேர்முனிவன்வான்மீகன்பெருமைசேராதித்தவன்மன்
றுங்கனுகங்கன்கிஞ்சுகப்பிரியன்றுந்துபிசிலாதரன்சுமுகன்
சங்கரன்றருமன்சத்திசாண்டில்யனுயுட்டிமான்சதானந்தன். (ங)

கண்ணுவன்சுமந்துகவுதமன்கற்கன்காகுத்தன்காலபத்திரன்மெய்ப்
புண்ணியன்போதாயனன்றுருவாசன்புகழ்பெறுமுரோமசனிடபன்
பண்ணுறுதவத்துமுற்கலன்சுகநற்பத்திரன்கிரீடிபாண்டவியன்
றண்ணளிபெறுமாண்டவிவிசாலாக்கன்சவுனகன்முதலியதவத்தோர். ()

முப்புரிநூலர்குண்டிகைக்கரத்தர்மோனமுத்திரையரஞ்செழுத்தே
வைப்பெனுமனத்தார்பூதிகண்டிகையும்வயங்கியநயங்கொளும்வடிவ
ரிப்புவனத்திலுயிரனைத்துந்தம்மின்னுயிரென்னவேபேணுந்
தப்பிலாநெறியன்புடையவந்தணராசாரசீலத்தர்மெய்த்தவத்தோர்.

குடைகொளுங்கரத்தர்செந்துவின் குலங்கள்குவலயத்திறுமென க்குந்து, நடைகொளும்பதத்தரைவகையிடத்து நான்றிடுமுரோமத்தர் ரார்ப்பட், டிடைகொளுமருங்குலுடையர் பொற்புரிபோலொளிர்தரநீ ண்டசெங்குஞ்சிச், சடைகொளுமுடியர்தத்துவஞானத்தன்மையர்நன் மையாதரிப்பார். (சு)

அருந்தவரினையராறெண்ணாயிரவரனைவருமொருங்குடன்கூடி
யிருந்துநாங்கருமமிதயமொத்திபற்றவேற்றதாயியல்புள தாகத்
திருந்திடும்பலங்கள்சாகமூலாதிசேர்ந்திடுந்தானமதாகி
வருந்திடாதிருந்தேதனியமமாற்றுதற்குவாய்ந்திடுந்தலமெவனென ()

சிந்தனையின்றியாஞ்சிவபூசைசெய்திடச்செபந்தவமோம, நை டாகியற்றவுபகரணங்களுளுமேயிசைந்திடுதலத்தான், முந்தியதலமொ

ன்றெமக்குறல்வேண்டுமுழு துலகளித்தருண்முதலா, மெந்தைபாற்செ
ன்றேயாங்கவன்பணித்தவிடத்தினிலுறைதுமென் றெழுந்தார். (அ)

அரந்தைவெம்பிறவிப்பிணிதணிப்பதந்கோரவுடதமானநீறணிந்தார்
புரந்தமந்திரமாமஞ்செழுத்துரைத்தார்புனைமணிக்கண்டிகைபூண்டார்
நிரந்தரம்பயின்றயோகசாதனையானீடியவிசும்பெல்லைநேர்போய்
வரந்தரும்பிரமன்மன்னிவீற்றிருக்குமனோவதிதன்னில்வந்தடைந்தார்.

தேவர்முப்பத்துமூவர்கந்திருவர்சித்தர்வித்தியாதரரியக்கர்
கோவியலிருநான்கெனுந்திசைப்பாலர்குலவியபிரமரோர்பதின்மர்
நாவியல்சுருதிச்சம்புருவுடனைமாரதாதியர்புடைசூழப்
பாவியல்வேதம்பாடவெள்ளைமையாப்பகர்தருசித்திநின்றுட. (க0)

ஒருகையிற்கரகமொருகையிற்றண்டமுபயமாந்திருக்கரமதனிற்
றருமுபிர்தழைப்பவரதமோடபயந்தயங்கவேபிரமமாம்பொருளைப்
பரிவுடனுன்னிப்பதுமவாசனத்திற்பண்புடன்வாணிதன்னோடுந்
திருமிகவிருந்தபிதாவெனும்பெரியதேவன்முன்சென்றுசேர்ந்தனரால்.

கண்டுகண்களித்தாரெட்டுறுப்பைந்தாங் கருதுறுப்பம்புவியுறவே,
தண்டெனவிழுந்தாரெழுந்துகூத்தாடித்தட்டமிட்டங்கைகள்கொட்டி,
மண்டுபேரன்புபுறம்பொழிந்தென்ன மலர்க்கணீர்பனிப்பமெய்யரும்ப
த்,தொண்டுறுமன்பாலுருகிவாய்குழறச்சுருதிமந்திரங்கொடுதுதித்தார்.

வேறு.

வானவர்முதுவாபோற்றிமண்பொதுத்தந்தைபோற்றி
ஞானமாமுதல்வாபோற்றிநான்மறைக்கிறைவபோற்றி
தேனலர்கமலம்போன்றுதிருவருட்செந்தேன்பொங்கு
மானனநான்குகொண்டவையனேபோற்றிபோற்றி. [கங]

ஐயனேபோற்றியெங்களப்பனேபோற்றிவேத
மெய்யனேபோற்றிமேலாய்விமலனேபோற்றிநாயே
முய்யவேவரந்தந்தாளுமொருதனிமுதலேபோற்றி
செய்யனேபோற்றிதேவதேவனேபோற்றிபோற்றி. [கச]

என்றடிபணிந்துநிற்குமிருவிசைப்பகுதியோர்ந்து
நன்றறிவிரதமெய்ந்தநான்மறைமுனிவர்தம்மை
மன்றலார்கமலப்போதின்வானவன்மகிழ்ந்துநோக்கித்
துன்றியதவத்தீர்வந்தகாரியஞ்சொன்மினென்றான்.

ஓங்குநாற்பொருளுநல்குமொருவவுன்னடிமைபூண்ட
யாங்கள்சிந்தனைவேறின்றியிருந்தருந்தவங்களாற்றத்
தேங்குழலுமையாள்பாகர்க்கினிமையாய்ச்சிறந்தயாகம்
பாங்குடன்புரியப்பூசைப்பயன்றருந்தலமதாக. [கசு]

புடவியினிடத்தின்மிக்கபுண்ணியபூமியான
வடவியொன்றருளாற்கற்பித்தருள்செய்வாயென்னலோடு
மடலவிழ்கமலப்போதில்வானவன்றருப்பையொன்றுற்
றடமிகுமாழியாகச்சமைத்தனன்சாற்றுகின்றான். (கஎ)

இங்கிதன்பின்னரியாருமேகியேயிதுசென்றுற்ற
வங்கணீர்புகுந்துமேவியாச்சிரமங்கள்செய்தே
தங்குவீர்சைவநீதிதவறிடாதென்றுசாற்றித்
துங்கமாந்தருப்பைநேமிதூண்டினன்சுருதிவல்லான். (கஅ)

பூமியில்விசிட்டமானபுனிதமாமிமயத்தென்பா
னேமியுற்றதுபின்னந்தநேமியாம்பேராலோங்குங்
காமர்பூவனஞ்சிறந்தகாதல்சேர்முனிவர்யாருந்
தாமகிழ்ந்தன்புகூர்ந்துசார்ந்தனர்தவங்கள்செய்வார். (கசு)

சத்திரசாலையோமசாலைதேபூசைசெய்யுஞ்
சித்திரசாலைமேலாஞ்செபங்கள்செய்திருக்குஞ்சாலை
புத்திரர்பவுத்திராதிபொருந்தவீற்றிருக்குஞ்சாலை
நித்தராகமம்வேதங்கணிகழ்த்திடுங்கல்விச்சாலை. (உ0)

பன்னியர்மேவியேமுப்பத்திரண்டறம்வளர்க்குந்
தன்னிகரில்லாச்செல்வந்தருமறச்சாலையோடு
மன்னுமிப்பன்னசாலைவகுத்தனராங்கிருந்தார்
துன்னியவளங்கடம்மையாவராற்சொல்லலாமே. (உக)

திங்கண்மும்மாரிபெய்யத்திருந்தியநதிதடாகம்
பொங்கியபுனல்பெற்றோங்கப்பூமரத்துடவையாவு
மங்களமாகுந்தெய்வவாசபுட்பாதிமல்கத்
தங்கியசாகமூலபலாதிகடழைத்தவன்றே. (உஉ)

கடிகையைந்தெனவெழுந்துகடவுளைத்தியானஞ்செய்வார்
விடியலிற்றடாகம்புக்குமிக்கநீர்படிவார்மேலாம்
பொடிகமழ்பூதிமேனிபொலிதரப்பூசுவார்க
ளடிபணிந்தருணன்சீரவருக்கியமளிக்கின்றால். (உங)

கண்டிகைமாலைமார்பிற்கவினுறமேனியெங்கும்
புண்டரந்திகழமேலாம்புனிதமாமுருத்திராக்க
குண்டலங்காதிலோங்கக்கொடுவினைபுறந்தந்தோட
வண்டநாயகரைப்பூசையாற்றுவார்போற்றுவாரால். (உச)

அதிகவோமங்கள்செய்வாரதிதிகடமைக்கொண்டேகிப்
புதியவாசனத்தில்வைப்பார்பூசனைபுரிதல்செய்வார்
மதுரமாமம்பலவர்க்கத்தின்மன்னுபோசனஞ்செய்விப்பார்
கதிதருசிவபுராணகாவியம்பயிற்றுவாரே. (உரு)

வேறு.

பூசைத்தலம்புகுந்தேதிருமெழுக்காற்புதுக்கிடுவார்
வாசத்துறுதிருமஞ்சனம்வடித்தேகொடுவருவார்
நேசத்தொடுபலபுட்பமுநிரைத்தேதெரிந்திடுவார்
தேசுற்றிடுதிருமேனியின்பூச்சன்பொடுசேர்ப்பார். (உசு)

தேனெய்திலதயிலம்பலகனிச்சாறுசெவ்விளநீ
ரானல்குமஞ்சுடனேயபிடேகப்பொருளமைப்பார்
வானெய்துமின்னமுதேயெனநைவேத்தியம்வகுப்பார்
பானெய்யெனக்கலந்தோர்க்குபசாரம்பலபகுப்பார். (உஎ)

பத்திப்பொலிவொடுபூசையிற்பதுமாசனத்திருப்பார்
முத்திக்கிசைதருமாகமமூவொன்பதொன்றுரைக்குஞ்
சுத்திக்கியல்விதியாலைந்துசுத்தித்திறம்புரிவார்
சத்திக்கிறைசிவலிங்கவர்ச்சனைமந்திரந்தெரிவார். (உஅ)

நாத்தாம்புகழ்தருநித்தியநைமித்தியபூசை
பூத்தாமகத்துள்ளுஞ்செய்துபுறத்துஞ்செய்துபணிந்தே
காத்தாடிமுன்னின்றுடிக்கண்ணீராடிக்கைகொட்டிக்
கூத்தாடுவரேத்தாவெர்குழைந்தாடுவர்விழைந்தே. [உகூ]

அட்டோத்தரசதகஞ்சகத்திரநாமவர்ச்சனைபூந்
தட்டார்மலர்கொடுபூசனைசவுராதிசண்டாந்த
முட்டாதருச்சனையேசெய்வர்முத்தீவளர்த்திடுவெ
ரெட்டாச்சிவமனுவக்கரமிலக்கம்மிசைத்திடுவார். [௩௦]

வரதன்சிவவிரதம்பலமனத்தன்பொடுபுரிவார்
சரதம்பெறும்யோகம்பலதாமின்பொடுபயில்வார்
பரதந்தருசபைநாடகப்பரமன்திருப்பாவித்
திரதந்தருமனத்தோடுமுற்றிருப்பார்தவவிருப்பார். [௩௧]

கஞ்சாசனம்யோகாசனம்வீராசனங்கலங்கா
வஞ்சாசனத்திருப்பாருமையரனார்திருவுருவம்
நெஞ்சாசனத்திருத்தித்தொழுநினைவுற்றகமுருகாத்
துஞ்சாவெளிதனைக்கண்டுடன்றூங்குந்திறம்வல்லார் (௩௨)

யோகப்பொருடனையுன்னியயோகத்துறுமுணர்வா
லேகித்துணைவிழிபூருவினிடையேசெருகிடவே
யாகத்தினிலேறிப்பொழிகண்ணீர்தனையடவித்
தாகப்புளூறாத்தேறுசமாதித்தலஞ்சார்வார். [௩௩]

சருகுண்பதுகாலுண்பதுசாந்த்ராயணமாதி
பருகும்புனல்பாலுண்பதுபக்கம்மதியயனம்
மருகும்முபவாசம்விழிதுயிலாவருந்தவமும்
பெருகும்படிபுரிவார்சிவம்பேணுந்தகைமையினர். [௩௪]

வருந்துந்தவமுனிவோர்புரிமறைவேள்வியிலவியின்
விருந்துண்டனர்மருந்துண்டிடும்விண்ணோருளமகிழ்ந்தார்
பருந்தின்சிறைநிழலுற்றதுபாம்பின்கணம்பகைதீர்ந்
தருந்துந்தவளைகள்பாம்பினதளையுற்றவவ்வனத்தே. [௫௫]

உலகம்புகழ்தவவேதியரோமம்புரிசாலைக்
கிலகுங்கனல்சிறைவீசியெழுப்பும்மிளந்தோகை
பலவின்கனிவாழைக்கனிபலமாங்கனிபலவுங்
குலவுங்கருமுகமந்திகள்கொடுவந்துகுவிக்கும். [௫௬]

அல்லற்படுபிறவித்துயரகலத்தவமாற்று
மல்லற்றிருமறையோருறைவனமெங்கணுநிறைய
நெல்லிற்கதிர்புல்லிற்கதிர்நிரையும்முதிரைகளுஞ்
சொல்லிக்கொடுவந்தேதினஞ்சொரியுஞ்சுகத்தினமே. [௫௭]

ஞானத்தவர்மோனத்தவர்நாளும்புரிவேள்விக்
கானத்திரளோமச்சமித்தனைத்துங்கொடுவருமாற்
கானக்கிழங்ககழ்ந்தேகொடுகருமாவினம்வரும்பா
றேனெய்க்கடன்முகந்தேமழைதினமும்பொழிதருமே. [௫௮]

இப்பெற்றிகள்பெறுநைமிசமென்னுந்தவவனத்தி
லெப்பற்றிடுதவவேதியருண்மைப்பொருளுணர்ந்தோர்
செப்பந்தருசிவன்சேவடிசிந்திப்பவர்பெரியோர்
முப்பத்தொருபத்தெட்டெனமொழியாயிரமுனிவர். [௫௯]

வேறு.

ஆழியிலெழுந்தோராழியரியதேரேறிப்பாரின்
வாழிருளகற்றுகின்றவயங்கொளியாலும்போகாத்
தாழிருவினையுநீக்குந்தன்மையைநோக்கிச்சார்ந்தோர்
சூழிருளகற்றுஞானசூரியர்போலுற்றாரால். [௬௰]

அருமறைவாசபேயமரியதோர்பவுண்டரீகம்
பொருவருசோமயாகம்புத்ரகாமேட்டியாக
மிருமையுந்தருமியாகங்களினையனபலவுஞ்செய்தார்
தருமமாஞ்சத்ரயாகந்தான்செயத்தொடங்கினாரால். [௬௧]

சாலைகள்புதுக்கினார்கடாமங்களலங்கரித்தார்
வாலிதாம்வாத்துசாந்திமறைமுறைதருவதாற்றி
யாலயமெனுஞ்சாலைக்குளங்குராற்பணமுஞ்செய்தார்
சீலமங்கலமெட்டோடுதெசாயுதஞ்சிறப்பித்தாரால். [௬௨]

கும்பபூசைகள்புரிந்தார்கூறுமந்திரங்கள்கொண்டே
விம்பபூசனைகள்செய்தார்வேதமந்திரங்களார்ப்பச்
செம்பொனுட்டவரையாமந்திரணங்கள்செய்தழைத்தார்
சம்புவைப்பணிந்தேயூபத்தம்பமுநாட்டினாரால். [௬௩]

வேதபண்டிதர்கள்வந்தார்வேள்விசெய்வதற்குவேண்டு
மோதருங்கலப்பையாதியுபகரணங்கள்சேர்த்தார்
சோதிசேர்தருஞ்சுருக்குச்சுருவமுந்தொகுத்திட்டார்கண்
மாதவச்சவுதிமார்கள்வந்தனர்மகிழ்ந்துற்றூரால். [சுசு]

அங்கிபூசனைபுரிந்தாரவிப்பாகம்யாவும்வாய்ப்பப்
பொங்குமாகுதிகள்செய்தார்பூரணாகுதிபூரித்தார்
மங்களமாகும்யாகமண்டலந்தன்னில்வந்தே
செங்கண்மாலறியாதானுந்திருவருள்செய்தானன்றே. [சுரு]

இத்திறமுனிவரெல்லாமியம்பியவிதியினாலே
சத்திரயாகஞ்செய்துதாபதர்தங்கட்கெல்லாம்
பத்திரமாகப்பூசைபலவுபகாரஞ்செய்தே
சித்தமாதரவுகூரச்சிறந்துவீற்றிருந்தானன்றே. [சுசு]

வேறு.

அப்போதினில்வந்தானுயரரன்பூசனைநாளு
முப்போதினும்புரிவான்மறைமுறையோதியநாவான்
றுப்போவெனுஞ்சடையான்கண்டித்தொடையான்றயவுடையான்
மெய்ப்பூதியுமனுபூதியும்விளங்குஞ்சைவநடையான். [சுஎ]

வேதங்களோர்நாலுந்தனிவிளையாடல்செய்நாவான்
பூதங்களோரைந்தாகிமுப்பொருளாகியபொருளின்
பாதங்கணினைந்தேயுடல்புளகங்கள்பரிப்ப
நாதன்சிவகாதைப்பொருணுளுந்நவில்சூதன். [சுஅ]

வந்தானெனவறிந்தார்மனமகிழ்ந்தாருடனெழுந்தார்
சிந்தாகுலமின்றேயொழிந்தனம்யாமெனச்செழித்தார்
முந்தாவெதிர்நடந்தார்முகமலர்ந்தார்முறைமுறையே
கொந்தார்மலர்கைக்கொண்டனர்குழைந்தேகினர்விழைந்தே. [சுகூ]

தூரத்தினில்வரக்கண்டனர்தொழுதேவிழுந்தெழுந்தார்
வாரத்தினோடிருகண்களுமகிழ்ந்தாரெதிர்புகுந்தார்
சாரத்தொடுபுட்பாஞ்சலிதாண்மீதுசொரிந்தார்
பாருற்றதோரடியற்றிடுமரமேயெனப்பணிந்தார். [எ0]

எழுந்தாருடன்மகிழ்ந்தாடினரினிதாகியமுகமன்
மொழிந்தார்சிவனைமையாளுடைமுதல்வந்தனனென்றார்
வழிந்தார்தருகண்ணீரினர்மனமும்வதனமுமே
பொழிந்தார்தயவொடுதாங்கொடுபுக்காருடனன்றே. [எக]

நைமிசாரணியச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-எசு.

முதலாவது,

சிவரகசியவரலாற்றுச்சருக்கம்.

வந்தனைசெய்வோர்நெஞ்சில்வாசனைமாலயற்குஞ்
சிந்தனைசெய்தற்கெட்டாத்தேவனைத்தேவர்கோனைக்
கந்தனைக்காழிவாழ்சம்பந்தனைக்கடப்பந்தாமக்
கந்தனைத்தந்தேதான்றன்னைக்கருத்தனைக்கருத்துள்வைப்பாம். [க]

புனிதமாஞ்சாலையெங்கும்பூவினலலங்கரித்தா
ரினியதோராசனத்தினேற்றினர்தாம்வெவ்வேறே
தனிதனிபாத்யமோடாசமனவர்க்கியங்கடந்தே
மனமகிழ்பூசைசெய்தார்மாதவத்தோர்கள்யாரும். [உ]

சைவதேசிகனேவேததத்துவமுழுதுந்தேர்ந்த
தெய்வமேசிவஞானந்தான்சீவனமாகவாழ்வோய்
கைவல்யமேவுங்கோவேகண்டனமுன்னையாங்க
ளுய்வகைபெற்றோமேலைக்குறுதியும்பெற்றோமென்றார். [ங]

வந்தனைபெற்றைமேல்லாம்வாழ்விக்கும்படிக்கேயென்று
ரெந்தைநீயுணராச்சைவரகசியப்பொருளொன்றின்றாற்
சிந்தனைசெய்துநன்றாத்தெரிபவாங்கவற்றையின்று
நந்தமையுய்யக்கொண்டுநவிற்றுகநாதவென்றார். [ச]

முடிவறும்வேதமெல்லாமொழியுமுக்கியமதாகும்
படியினிற்புண்யதீர்த்தம்பரமசாந்நித்யலிங்க
மிடிதவிர்புத்திமுத்திவிரைந்தெளிதாகப்போற்று
மடியவர்தமக்கெக்காளுமளித்திடுந்தலமுஞ்சொல்வாய். [ரு]

எனப்புகல்சவுனகாதியிருடிகடம்மைநோக்கி
மனத்தினிற்சிவத்தியானமயிர்புளகரும்பச்சொல்வா
னினைத்தமைநன்றுநன்றுநீவிர்மெய்த்தவங்களாற்றிச்
சினத்திறந்தவிர்ந்திருங்கடெரிசனந்தனிலுய்ந்தேனல். [illegible]

பரமர்பாற்பத்திபெற்றபாக்கியந்தழைத்தீர்நீவி
ருரமதாமுங்களோடுமுற்றுநானுறுதிபெற்றேன்
சிரமதாஞ்சைவரோடுசேர்ந்துறல்கிடைக்குமோநம்
மரனடியாருக்கெய்தாவரும்பொருள்யாதொன்றுண்டோ. [எ]

நாதனரன்பரோடுகூட்டுறவேண்டுமென்றே
காதலுற்றிருந்தேனின்றுகிடைத்ததுகண்டீர்தொண்ட
ராதிசெய்தவத்தோரீசனன்பருக்குறவாவாரென்
றோதினர்வசிட்டனாதியுயர்மறைமுனிவரெல்லாம். [அ]

சிட்டமாஞ்சிவசின்னங்கள்சேர்ந்துளீர்சென்மகோடி
மட்டிலாதியற்றும்புண்யபலத்திவைவரப்பெற்றீரா
லட்டமாமூர்த்திபூசைபுண்டரமணிருத்ராக்க
மிட்டமாய்ப்பொருந்தப்பெற்றீரிவைபலாற்றவம்வேறுண்டோ. [கூ]

அண்ணலாரன்பர்பாதரேணுவையடைந்ததீர்த்தம்
புண்ணியதீர்த்தமன்னோர்புகுமிடம்புனிதபூமி
மண்ணிடையவர்பாற்செய்தால்வர்த்தனையாகுந்தன்ம
நண்ணியவவீட்டமெல்லாநமர்கள்பாற்பெறலாமன்றே. [க௦]

பத்தியன்பாகச்செய்வோர்பரமன்மெய்யடியார்வந்தான்
முத்திபெற்றேமென்றேடிமுன்விழுந்தடிவணங்கித்
துத்தியஞ்செய்தென்னையன்வரப்பெற்றேனென்றுண்டனேன்செய்
புத்தியென்னென்பார்கொண்டுபுகுந்துபூசனைகள்செய்வார். (கக)

பெருமனைபுகுந்தாற்றேவர்பிதிர்க்கள்கூத்தாடுவார்க
ளருமையாசனத்தில்வைத்தாலமரலோகத்தனுவ
னுரிமையாற்பாதபூசையுஞற்றினாற்பாசநீங்கித்
தெரிதருந்தவங்களோங்கிச்சிவதன்மவடிவனுவன். (கஉ)

அடிமிசைமுடியைச்சேர்த்தியடிக்கடிவணங்குவானை
முடியணிதேவரெல்லாமுதல்வனென்றிறைஞ்சுவார்கள்
படியிலிப்படியெந்நாளும்பத்திசெய்திடுவோனுத
னடியவனவனேமேலாமளவில்புண்ணியஞ்செய்தோனும். (கங)

அன்பர்தம்பாதீர்த்தபானமேயமுதபான
முன்புகுசிவசின்னஞ்சேர்மூர்த்திகடம்மைக்கண்டா
லென்செயலென்றிறைஞ்சாதிருந்தவன்கொடியபாவி
பின்பவன்வேதங்கொள்ளாப்பெற்றியன்பேதைகண்டீர். (கச)

அண்ணலாரடியார்க்கண்டாலவர்தமைச்சிவனுமென்றே
யெண்ணவும்வேண்டும்யாதானென்றிடிலவர்கடம்பா
னண்ணினுலயம்போனுதனங்கவர்கடம்மைத்
திண்ணமார்சிவமாமென்றேசிந்தனைசெய்வர்மேலோர். (கரு)

சேர்தருமனந்தகோடிசென்மத்திற்றவஞ்செய்தானேற்
பார்தனிற்சைவனுவன்பண்புடனவனைக்கண்டே
யார்தருபத்திசெய்தோனடையாதபொருளொன்றுண்டோ
வேர்தருமவனைப்பூசித்தேதத்தினேன்றனைப்பூசித்தோன். (கசு)

தேவர்மாதவர்க்குமேலாந்தேசிகனுவனிப்போ
தோவிலாச்சைவசீலத்துற்றுளீர்சிவசின்னங்கண்
மேவினீர்யானுமும்மைவிரும்பிப்பூசிப்பேனென்றே
பாவனையாகப்பூசைபண்ணினன்சூதன்றானே. (கஎ)

அன்னதுகண்டுநின்றசவுனகனதியானோர்
பன்னருஞ்சூதன்றன்னைப்பார்த்தனர்கண்ணீர்மல்கி
யின்னதோர்சிவபத்திக்குளியாவர்களுன்னைப்போல்வா
ருன்னருமன்புபெற்றவுறுதிசெய்தவத்தாலென்றூர். [கஅ]

சொல்லுதியென்றுசொல்லச்சூதமாமுனிவன்சொல்வான்
வல்லியோர்பாகனெம்மான்மகிழுங்கேதாரந்தன்னி
னல்லவன்வியாதனெங்கோனண்ணிப்பூசனைபுரிந்தே
யல்லறீர்முனிவரோடுமௌவளாயிருந்தானங்கே. (கசு)

அப்பொழுதியானுஞ்சென்றேனடிபணிந்தவனைக்கண்டே
னொப்பருஞ்சிவத்தியானவுறுதிவந்தனையும்பார்த்தே
னிப்படியுனக்கிந்நேசமேய்ந்ததெத்தவத்தாலென்றேன்
செப்பினன்வியாதனெங்கோன்றேசிகத்தலைவன்றானே. (உ0)

மனதருச்சனைமேல்வைத்தடாதவனென்னைநோக்கி
யனகவஞ்செழுத்தையுன்னியாதியைப்பூதிதன்னைத்
தனதுகைதன்னாற்றொட்டுச்சத்தியமிவைசான்றாக
வுனதுளந்தனில்வைப்பாயென்றுபதேசமுரைசெய்தானால். (உக)

அருமைசேர்பரமதாகுமதிரகசியமிதாமற்
றிரமதாநீயுநல்லசிவபத்தனெமக்கும்பத்த
னுரிமையானீயுங்கேட்டியென்றுடனுறையுமங்கட்
பெருமுனிவோருங்கேட்கப்பிரியமாப்பேசினனால். (உஉ)

இப்பொருளன்பிலாருக்கிசைக்கொணாதியம்பும்போதிற்
றப்பிலாதெங்கும்பார்த்துச்சங்கரன்பத்தியில்லா
ரப்பொழுதங்கணுற்றாலப்புறத்தகற்றிப்பின்பு
செப்பிடவேண்டுமென்றுபின்னருஞ்செப்பலுற்றான். (உ௩)

தவமுறுமுனிவீர்தேடுந்தனக்குடந்தனைச்சீவன்போ
லுவமைதீர்மணியையாருஞ்சோரர்பாலுணர்த்துவாரோ
வவனியிலவைபோல்வேதத்தரும்பொருளாகுஞ்சைவச்
சிவரகசியமன்பில்லாச்சிதடர்பாற்செப்பொணாதே. (உச)

வேறு.

கயிலைவாழுங்கடவுள்கருணையான்
மயிலைநேருமையாட்குவகுத்தன
னயிலையேந்துமருமைமைந்தற்கவ
டயவினாலிதுசாற்றினளாமரோ. (உரு)

சாற்றுமந்தப்பொருளைத்தனதுதாள்
போற்றுநந்திதனக்குப்புகன்றன
னேற்றமாங்குகனெம்பெருமானந்தி
யாற்றல்சாலச்சுதற்கறைந்தானன்றே. (உசா)

அந்தமாப்பொருடன்னையயனெனு
மைந்தனுக்குவகுத்தனன்மாயவன்
சந்தமாமறையோன்சனகாதியாம்
புந்திமைந்தர்தமக்குப்புகன்றனன். (உஎ)

சனகராதிமுனிவர்தமைப்பணி
யனகனாரதனார்க்கருள்செய்தன
ரெனதுபத்திகண்டேமுன்னர்யாழ்முனி
மனதனோடும்வகுத்தனனென்றனன். (உஅ)

இறைவனாரதனெற்குரைத்தானஃ
துறவுமக்கின்றுரைக்கின்றனனது
துறவிர்காள்பத்தியோர்க்குச்சொல்வீரென
வறவன்வேதவியாதனறைந்தனன். (உகூ)

அந்தணீரெந்தையார்கதைக்கன்பிலாச்
சிந்தையார்க்குச்சொல்லாதசெவ்வொன்றுமே
யிந்தமாநிலந்தன்னிலெமக்குநீர்
தந்திடுங்குருதக்கணையாகுமே. (ஙo)

என்றுவேதவியாதனியம்பவே
நன்றுசொற்றனைநாயகநாமுய்ய
வுன்றனல்லருளன்றியுணர்த்திடோ
மொன்றுநீநினையேலென்றுரைத்துடன். (ஙக)

ஐயனேயிவ்வரும்பொருளெங்களுக்
குய்யவேமுன்னுரைத்திலையாலின்று
செய்யனேநின்றிருவருள்செய்தெங்கண்
மையநீரவகுத்தருள்வாயென்றோம். (ஙஉ)

சிந்தைசெய்துசிவனைத்தியானித்தே
முந்துமன்பொடுரைக்கமுயல்கின்றா
னந்தணீர்சிவவித்தைக்கணியராய்
வந்தநீர்சிவசின்னங்கள்வாய்த்துளீர். (ஙங)

பைவரும்பணிப்பூணோன்பணிபுரி
சைவவேடத்தர்தாமடைந்தாரெனி
லுய்வகைக்கரனுண்மையுரைசெய்தான்
மெய்வழுத்துமிருவர்க்கும்வீடுண்டாம். (ஙச)

எங்கணேனுமெம்மான்றன்கதைப்பிர
சங்கமுற்றவமுதசமுத்திரம்
பொங்குகின்றவிடந்தொறும்போயுமை
நங்கைவேலவர்நந்திகணாதிபர். (ஙரு)

கூடவந்துமகிழ்ந்துறக்கோனட
மாடல்கொண்டிடுவானந்தியாணையா
னீடவேபயங்கொண்ணெடுந்தேவரை
யோடமாயன்பிரம்புகொண்டோச்சுமே. (ஙசா)

இனையமாக்கதைகேட்குமிடத்தினின்
மனதிலேந்தொடுக்கிம்மரப்பாவைபோ
னினைவுவேறற்றதினிற்கவேண்டுமா
லனையபத்திவருந்தவத்தன்பர்க்கே. (௩௭)

ஆற்றல்சான்முனிவீரரன்றன்னையே
போற்றுகின்றபுராணகதைதனைத்
தேற்றமாகத்தினந்தொறுங்கேட்பவர்
மாற்றரும்பலன்யாவர்வகுப்பரே. (௩௮)

அதிகமாதவத்தீரென்றறைந்துபின்
மதுரமாமதுவர்க்கவகையினு
மிதுவென்னுவுக்கினியதெனக்கொண்டே
கதிதருஞ்சிவன்றன்னைக்கருதுவான். (௩௯)

உரமதாம்பத்தியோடொருநாளுமை
பரமனார்கதைகேட்போர்பகவன்றன்
புரமதெய்தல்புதுமையதோவவர்
மரபெலாஞ்சிவலோகத்தின்வைகுமே. (௪௦)

மேருவிற்பிடித்தோர்கையில்விண்டுவாங்
கோரவாளியுங்கொண்டுமைகோனன்று
போரிலேறிப்புரம்பொடிக்கப்புவித்
தேரிலேறுந்திருவுருச்சிந்தித்தான். (௪௧)

இனத்துத்தேவரரம்பையரேத்தவே
வனத்துக்கொன்றையன்வாமமகிழ்ந்துறை
யனத்தின்பாதமும்போற்றியருள்பெற்றே
மனத்திற்றூயவியாதன்சொல்வானரோ. (௪௨)

ஈதுதான்கருப்பாலையிலிட்டுறுங்
கோதுதீர்ந்தரசத்தினுங்கூர்ந்ததென்
றோதுசூதனுரைப்பச்சவுனக
ராதிவேதியர்கேட்டனரன்புற்றார். (௪௩)

முதலாவது சிவரகசியவரலாற்றுச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௪௩.

காயத்திரிவரம்பெற்றசருக்கம்.

பாலினுற்றநெய்யிந்தனத்தங்கிபோற்பரமன்
சாலவெங்கணுநிறைந்தனன்பத்தியாந்தனித்த
வேலுங்கோலினையூன்றியேயுறுதிநாணிறுகக்
கோலியேகடைந்தால்வந்துகூடுவன்றனே. (க)

வேறு.

நன்றறிவியாதனென்னுநாயகனன்றுசொற்ற
பொன்றரும்பரமன்காதையெனுமறைப்பொருள்களின்னு
மின்றெமக்கருள்கவென்னநைமிசத்திருந்தோர்கேட்பத்
துன்றியதவத்துச்சூதமுனிவரன்சொல்லுகின்றான். (உ)

வேறு.

பூதிபூசியைந்தெழுத்தினைநினைந்தரும்பொருளாஞ்
சோதிதாளிணையுன்னியேகேளுமின்றொண்டீர்
வேதமாகமஞ்சொற்றிடும்விதியினின்மேலா
மாதியாந்தவவிலிங்கவர்ச்சனையெனலாமால். (ங)

மற்றுமேபுரிபுண்ணியம்யாவுமெம்மானை
யுற்றபூசனைபுரிவதற்குற்றிடுமுறுதி
சொற்றதேவனெத்தன்மையனென்னவேசொலுங்காற்
பற்றில்சச்சிதானந்தரூபப்பராபரமே. (ச)

மோனஞானவானந்தனென்றேறுடுறான்மோக
மானதொன்றிலாஞதியுமந்தமுமில்லான்
வானநாடர்தம்மனத்தொடும்வாக்கினைக்கடந்தோன்
கானநான்மறையறிவரும்பொருளவன்கண்டீர். (ரு)

சோதிநிர்க்குணநிரஞ்சனன்றுன்பமொன்றில்லா
னாதிநாமமோடுருவமுமுருவமுமில்லா
னாதன்வேதங்களேோர்வருநாயகன்பெருஞ்சீ
ரோதுகின்றநம்புராணத்துளடங்குமோவுரைக்கில். (சா)

விரதிகாளரன்கதைமிகுவெள்ளமென்றாலும்
வரதனார்தந்தவரத்திலென்மனத்தினுள்வருமாற்
பரமரின்னருளாலுமக்கின்றியான்பகர்வே
னிரவிமண்டலத்திருந்தொளிதரும்பற்கரியல்பே. (எ)

அந்தமில்லதோர்பற்கர்தாநமக்கறிவருள்வா
ரிந்துசூரியர்க்கொளிபுரிந்தியக்குவோரவரே
முந்துமப்பொருளன்றியோர்முதல்வருமில்லைச்
சந்தவேதமெலாஞ்சொல்வதவர்பெருந்தகைமை. (அ)

வணங்குமன்பர்க்குப்பிறவியாமுளைவித்தைவறுத்தே
யணங்குறுவகைசெய்வதாற்பற்கராமொருபே
ரிணங்கினின்றதங்கவர்க்கெனவெம்பிரான்பெருஞ்சீர்
குணங்களோதியமாதவன்றான்பின்னுங்கூறும். [௯]

அரியவேதநாதத்துருவாய்வருங்காயத்
திரியருந்தவம்பற்பலகற்பமுஞ்செய்தே
புரிமகாலிங்கபூசைகண்டெம்பிரான்போந்தே
வரிசையாலவட்கின்னருள்சுரந்துரைவழங்கும். [௰]

அயுதகற்பமியருந்தவமாற்றினுயதனாற்
றயவுன்பாலுறவந்தனனினைந்தவைதருவோ
முயருந்தேவர்கடமக்கெலாமுறுவரமுதவு
மியலுளோமியாமுதவிடாவரமெவையென்றான். [கக]

பகவனின்னணம்பகரக்காயத்திரிபரிந்தே
முகமலர்ந்துகண்ணீர்மல்கவுரோமங்கண்முகிழ்ப்ப
வகநெகிழ்ந்திடப்பணிந்தெழுந்தானந்தமாடித்
தகைமைசேர்தருதோத்திரம்பற்பலசாற்றும். [கஉ]

பகவனேயண்டர்நாதனேபற்கனேயுன்சீர்
புகலுமன்பர்தஞ்செனனவித்தைப்பொடிப்படுத்தே
யகிலமீதருட்கடலெனவிளங்கியவரனே
முகமுன்வந்தனைதந்தருள்வரமெனமொழிவாள். [கங]

ஓதுன்னுமங்களுற்றிடுமந்திரமவையே
வேதநான்குகொண்டாடவேவிளங்கியவாகும்
போதஞானியரவையன்றியொன்றையும்புகலார்
தீதிலாச்சிவமந்திரமேசித்திசெறிக்கும். [கச]

மைந்தரைப்பெறுமனைவியும்பலமிலாமரமு
மிந்துசூரியரெய்திடாநாள்களுமீனு
முந்துகோவுமங்களமிலாமொய்குழலாரு
மெந்தைநாமமில்லாதமந்திரத்தையெய்ந்திடுமால். [கரு]

வாரியூடுறுபொருளெலாமிகழ்ந்துமற்றதனிற்
சேருமாணிக்கமொன்றையுமுடிமிசைச்சேர்ப்பார்
யாருமற்றதுபோன்மறைக்கடலினுளெய்துங்
கூருமந்திரமிகழ்ந்துநின்னுமங்கைக்கொள்வார். (கசு)

ஒளிகொளுஞ்சிவமந்திரமகத்திருளொழிக்குந்
தெளிவைபன்றிமற்றவைகளுக்காதிக்கஞ்செலுமோ

வெளியனேனுற்றமந்திரஞ்சிவபதமின்ருற்
களிகொண்மாதவராங்கதுகருதிலர்கண்டே. (கஎ)

வேறு.

உ[illegible]பெரொழுகேநயுணர்வாருளமன்றொருவாசரண [ங்
மினமாமறைபாலதிபாய்முனிவொரெண்ணும் பொருளேசரணஞ்சரண
கனமார்பொருளாபனுவாயுமையுங்கண்மூன்றுடையாய்சரணஞ்சரண
மனமாசுடைபாரிடம்வைகலிலாமணியாமிடறாய்சரணஞ்சரணம்.

விடைமேல்வருவாய்சரணஞ்சரணம்விதிமாலறியாவிகிர்தா[illegible]
முடையாயிகழும்பாமூந்தருவாயுமையாள்கணவாசரணஞ்சரணங்
கடியார்கலையின்பொருளேயெனவுங்காயத்திரியாள்[illegible]
டொடியாவரமென்றொருமந்திரமீறன்றமுறற்குதவென்றனளே. (௧௯)

[illegible]பெருவாளவருந்[illegible]
ளுன்னும்படிகண்டனன்மெய்த்தவமாவுறுபெருருவர்க்கொழிவுற்றிடு
மன்னுஞ்சரணத்தனையேயுணர்வோர்மறலிக்கிடையார்வரன்விடுறுவார்
ப[illegible]. (உ௦)

இறைவாவுனையெள்ளளவுந்நினைவார்க்கெய்தாப்பதமுஞ்சிறிதும்மு
ளதோ,குறைபாவலியுங்குறைபாவியுங்குறையாதகல்யாணபரம்பரையு
நிறைவார்திடபத்திகள்பெற்றுடையோர் விமலானந்தப்பொருளேபெறு
வார்,மலறையார்தருபற்கபதந்தனையென்மந்த்ரப்பெறுமேல்வரமற்றதுவே

வேறு.

என்றுபோற்றுகாயத்திரிபுகன்றிடவிறைவ
னன்றுநந்தனங்கேட்டமெய்வரமெனநவின்றே
குன்றுபோலுமக்கணங்களுந்தானுமக்கொம்ப
ரன்றுபூசித்தலிங்கத்துண்மறைந்தனனன்றே. (உஉ)

ஒப்பிலாதவவ்விலிங்கத்தைத்தெரிசித்தோருவந்து
தப்பிலாதுபூசித்தவர்தொழுதவர்தாமே
மெய்[illegible]ரும்பெறுகுவர்நினைத்தபேறெய்துந்
து[illegible]முனிவிர்காளென்றனன்சூதன். (உங)

உந்து[illegible]த்திரிமந்திரத்துள்ளே
பெந்தையார்திருநாமமன்றிருந்திடும்பல்பாற்
சிக்[illegible]வர்புந்தியுமுத்தியுஞ்சேர்வார்
முக்தவோதியேமுத்திபெற்றோர்முடிவிலரால். [உச]

எத்துசென்றகாயத்திரியிசைத்திடுமந்தத்
தோத்திரந்தனையொருதரந்துதித்துளோரெல்லா
மாத்தனுகியசிவன்றிருநாமங்களனைத்து
நாத்தழும்புறவழுத்தியபலத்தைநண்ணுவரால். [உரு]

அருந்தவத்திறமுன்னைநாளாற்றினர்க்கல்லாற்
றிருந்துமெந்தையார்நாமங்கள்செப்பிடவருமோ
பொருந்தும்வேதத்திற்காமுதலிழிவுப்பேர்பொருந்தி
யிருந்துமெந்தையார்நாமமுற்றிசைபடைத்தனவே. [உசு]

திலகமாமெந்தைநாமஞ்சேர்ந்தருமறைசிறந்த
விலகுநன்மணிபாற்கடலிரத்நவாகரமா
முலவுவாசமிருமேபுனைவதற்குரித்தா
மலர்களோடுற்றுமறைப்பொருளுணர்ந்தமர்தவத்தீர். [உஎ]

மதியணிந்தவனுமங்கள்வழுத்திடப்பெற்றோர்
கதிமடந்தையைக்கைப்பிடித்தேயுடன்கலப்பா
ரதிகலிங்கமாதீர்த்தமுற்றிடுந்தலத்தமர்ந்தே
முதிரவோதினோர்பெறும்பலன்யாவரேமொழிவார். (உஅ)

அரியதாமெகுர்வேதத்திலணியுருத்திரத்திற்
றெரியுமெந்தையஞ்செழுத்தினைச்செபஞ்செயப்பெற்றே
முரியபூதியுங்கண்டியுமுவந்துடன்றரித்தேநம்
பெரியசைவமுற்றோம்போற்பெற்றவர்யாரே. (உகூ)

இன்னதாகுமுன்னுதவேதத்துருவியைந்தே
மன்னுகின்றகாயத்திரிவரம்பெற்றவாறென்
றுன்னுசூதமாமுனிவரனுரைத்திடவுவந்தார்
நன்னயம்பெறுஞ்சைவர்சீர்நைமிசவனத்தோர். [௩0]

காயத்திரிவரம்பெற்றசருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-கசஎ.

மூன்றுவது,

மேருச்சருக்கம்.

ஐந்தவித்துயர்வரையிருந்தருந்தவயோகஞ்
சிந்தையுற்றவர்களுஞ்செலற்கருங்கதிசெல்வார்
கந்தனைத்தந்திமாமுகக்கடவுளாங்கருணை
மைந்தனைத்தநதமைந்தனோர்நாமஞ்சொல்வாரே. [க]

வாதராயணனிமயகேதாரத்தின்மன்னி
யாதிநாமத்தினுண்மையிதென்றருந்தவர்கட்
கோதினைவையுளங்கொண்டாருறுதியுங்கொண்டார்
போதநீதியிரென்றுபின்சூதனும்புகல்வான். [உ]

எந்தையார்தமைப்பூசித்தலாதியாமியாவு
முந்தவேதவியாதன்முன்னருளொடுமொழிந்தா
னந்தவாறுசொல்வாய்மைகேட்டருந்தவர்யாரும்
புந்திகூர்ந்தனரானந்தக்கண்கணீர்பொழிந்தே. [௩]

சிவனைப்பூசித்தல்சிவதருமத்தர்சீரண்ணற்
குவமையாந்தருமம்மவனுறையுளாங்குறைவோர்
நவிலுமத்தலத்தற்புதமிவையெலாநம்பன்
கவுரிபாற்சொலுமவையெலாமுரையெனக்கழறும். [௪]

நல்லவாம்பொருள்சொற்றனரிவையெலாநவில
வெல்லையில்லதோரானந்தமெய்தியதெனக்கே
சொல்லரும்பவமலைதொலைந்ததுகடற்றுயர்போய்
மல்லலுற்றனனிப்பொருள்கேட்கநீர்வாய்த்தீர். (௫)

மேருமால்வரைச்சிகரத்தின்மேலதாஞ்சிகரஞ்
சாருமொன்றதிலெம்பிரானாலயந்தழைக்கு
மாரும்யோசனைபலவுள்ளவதனிடையகலம்
பாருமெண்டிசையளவுமேதன்கதிர்பரப்பும். (௬)

ஆலயத்தினின்மகிமைவேதஞ்சொலவறியா
சோலைகற்பகமமுதமேசூழ்ந்தியதனின்
வேலையிற்கிடந்தனந்தசிந்தாமணிமிளிர்வ
காலையுற்றெழுமிரவியோரனந்தமாய்க்காணும். (௭)

குழகனார்மனத்தியற்றியகோயிலக்கோயி
லழகையார்புகல்வாரதன்சிகரத்திலழுத்து
மெழில்கொண்மாமணிக்கதிரெறித்திடவெதிர்ந்து
தழுவிளங்கதிர்தானுமின்மினியெனத்தகுமால். (௮)

அனந்தகோடியுண்டதனிடைவாயில்கோபுரங்க
ளனந்தகோடிமண்டபமுயர்மாளிகையமைந்த
வனந்தகோடிசாளரந்திண்ணையதனையேதேவ
ரனந்தகோடிகற்பம்புகுந்தளவிடற்கரிதால். (௯)

அந்தவாலயச்சுற்றெலாந்தெற்றிகளருகே
யிந்திராதிகடருக்கணின்றிடுமிவற்றின்கீழ்
முந்துதேனபிடேகமும்பூவுமேமுடிக்கொள்
சந்திராதிபர்கோடிபோலிலிங்கங்கடழைக்கும். (௧௦)

நன்றிசூழ்தருமமுதமாநதித்தரங்கத்திற்
சென்றுதோய்ந்துபூமணங்கொடுதென்றல்வீசிடுமாற்
குன்றுபோலுயர்கோபுரவாயில்கடோறுந்
துன்றுபூதகணாதியர்கோடிபேர்சூழ்வார். (௧௧)

சொல்லுமாலயச்சோதிபாற்சூழிருடொடரா
தொல்லைமுச்சுடரொளிகளும்வேண்டிடாரோங்கு
நல்லகற்பகநறுங்கனிநுகர்ந்திடுநலத்தால்
வல்லதேவர்தமமுதுமெண்ணாரங்கண்வாழ்வோர். (௧௨)

அனையவாலயநடுவின்றோங்குமண்டபந்தனை
நினையலாவதோவதன்கதிர்நிகர்சொலலாமோ
பனிதுரந்திடுமிளவெயின்மண்டபப்பாலிற்
புனிதவேதிகையதனிடையரியணைபொலியும். (௧௩)

கூடும்யோசனையாயிரநீண்டதிற்குலவ
நீடுகற்பகப்பூந்தொடர்விதானத்தானிலவு
நாடிலீந்திடுதருவுக்குநல்கியநம்பன்
றேடொணாதகோரழகுக்கோரழகெனத்திகழ. [௧௪]

ஐந்தவித்தவரகத்தினிலடங்குவோனடங்காச்
சிந்தையுற்றவருளம்புகானெமக்கருள்செய்வா
னுந்துபாற்கடல்பொன்வரையுடுத்தெனவொளிரப்
புந்திகூரும்வெண்பட்டுடீஇக்கந்தங்கள்பூசி. [௧௫]

பூதியோங்கியபுண்டரம்புனைந்துகண்டிகையே
யாதியாகியநவமணியணிகளுமணிந்தே
சோதிநீன்மணிமவுலியுங்கடகமுந்துலங்கக்
காதிலாதித்தர்கணமெனக்குண்டலங்கவின. (௧௬)

சன்னவீரமுமாரமுமார்பினிற்றயங்கத்
துன்னுபொன்னரைஞாண்கதிருலகெலாஞ்சூழப்
பன்னுகைவிரலாழிகள்பசுங்கதிர்பரப்ப
மன்னிவீற்றிருந்தானமையாளுடைவரதன். (௧௭)

முத்தினொளிர்கவிகைபொன்முடிமிசைக்கவிப்பப்
பத்தியாய்மணிக்காம்புறுசாமரைபயிலத்
தத்துமால்விடைக்கொடியொருபானின்றுதயங்கக்
கொத்துமாமலர்மாலிகைபுயந்தொறுங்குலவ. (௧௮)

ஈசனாசனத்திருந்தனன் றூரத்தேகணங்கண்
மூசிநின்றுகைப்பிரம்பொடுமுகிழ்த்தகையினராய்க்
கூசியேத்தொடுநின்றிடத்தேவர்தங்கூட்ட
மாசையெங்கணுங்கண்கொடுபார்த்திடலாமோ. (௧௯)

ஆரணன்புகழ்நாரணன்றேவர்கட்கதிபன்
காரணன்சமையம்புகுந்தேதொழுங்கருத்தாற்
சீரிணங்குமத்தாழ்வரைச்சாரலிற்சேர்வார்
பூரணன்றிருமுன்னரில்யாவரேபுகுவார். (௨௦]

தந்திமாமுகத்தைங்கரன்சண்முகத்தலைமை
மைந்தனீக்கிவர்சேயிடைவைத்துமன்று
[illegible] விழிபிக்கமாய்கெழுந்தே
யந்தமால்வரைச்சாரலினடந்தனனருளால். (உக)

கண்டுகைதொழுநாரணனாதியர்கலந்தே
தொண்டுசேர்தருநந்திதன்னேவலாற்சூழ்ந்தார்
சண்டபூதகணாதிபர்பிரம்பினாற்சாட
மண்டியோடினர்சேயிடைவணங்கிவாழ்த்துவரால். [உஉ]

வந்துவாழ்த்துமங்கவர்க்கருள்புரிந்துவானவர்தஞ்
சிந்தைபாலுமெட்டரியவன்மீண்டனன்சிறந்தே
யந்தமால்வரைக்கோயில்வீற்றிருந்தனனவனைத்
தந்ததகோயிலினமர்ந்திடுமம்பிகைசார்வான். (உங)

வேறு.

அருந்தவஞ்செய்ததாயரருகுறப்
பொருந்துசாம்பவிபுன்மூரல்கோட்டியே
மருந்துபோன்மணிவாய்திறந்தாசனத்
திருந்ததாதைதனக்கொன்றியம்புவாள், (உச)

கனககோயிற்கதிர்மணிபாசனத்
தெனதுகேள்வரிருக்குஞ்சிறப்பெலா
நனிகண்டேமகிழ்கூரநயனமு
மனதுமேமிகவாஞ்சித்தவென்றனள். (உரு]

ஞானபூமியினாயகனாரிடத்
தானகாதலையம்பிகைகூறவே
மேனையோடுறுமவேந்தனினிதுகேட்
டூனமின்றியுரைக்கலுற்றானரோ. [உசு)

உனைச்செல்கென்னவென்னுள்ளமுஞ்செல்கில
நினைத்தநின்செயனீக்கவுங்கிற்றிலே
னனைத்தையுந்தருமன்னைநின்கேள்வர்பான்
மனத்தைவைத்தநின்னோடும்வருகுவேன். (உஎ)

என்றுதாதையியம்பவுமையவ
ணன்றுநீர்தளரீரின்றுநாளையே
சென்றுமீள்குவன்சிந்தைகலங்கலீ
ரொன்றுமன்புடையீரென்றுரைசெய்தாள். (உஅ)

ஆளும்வெற்பரசும்மவன்றேவியு
நாளைநாளைநின்னுபகர்பாற்செலும்

வேளையென்றுவிளம்பவிளம்பவே
பாளையோதியொருதிங்கள்பாத்தனள். (௨௯)

திங்களொன்றவர்செய்யுபசாரங்கள்
பொங்குபூசைபொலிந்திடமேவினு
ளங்கவட்குளமாதரங்கூரவே
மங்களத்தில்வரிசைபலசெய்தார். (௩௦)

இங்கிவ்வாறிவளுற்றவியல்பெலாங்
கங்கைவேணிக்கடவுளறிந்தன
ணங்கநாயகனாங்கிரியைக்கூவியே
மங்கையைக்கொணர்வாயெனவந்தனன். (௩௧)

நாதனார்தங்கணங்களொடுநந்தி
யேதந்தீர்மவெற்பில்வந்தெய்தலுங்
காதல்கூரிமவேந்தன்கடிதெழுந்
தோதுமன்புடனோடியெதிர்கொண்டான். (௩௨)

அழைத்துவந்தனனாசனத்தேற்றினன்
றழைத்தவன்பொடுதானுபசாரங்க
ளுழைக்காத்தணைப்பூசையுளுற்றல்போன்
மழைக்கணீரொடும்வந்தித்துவாழ்த்தினன். (௩௩)

ஞானயோகிசிலாதனயந்தரு
ளானசைவத்தரசேயென்னையனே
யானுன்றுள்பணிந்தின்புற்றனனெனு
மேனைகாதலனன்பின்விளம்பினன். [௩௪]

ஆதியாரெமதன்னைமணாளனர்
சோதியார்சுகமோவெனச்சொல்லினு
னேதையாவிமயத்தரசேயெனு
நாதனேவியநந்திநவிற்றுவான். [௩௫]

பகருநாமமொன்றேறுதும்பரிவினோர்க்
கிகபரச்சுகமீந்திடெம்பிரான்
சகலநன்மையுமாகுமத்தம்பிரான்
சுகமுறும்படிசொல்லவும்வேண்டுமோ. [௩௬]

காலகாலனவன்கணிமைத்திடின்
மாலும்வேதனுங்கோடியர்மாய்வரான்
ஞாலநாயகனல்லருள்பெற்றநா
ளேனுமன்னணீறெத்தனைகண்டுளேன். [௩௭]

சுகவுருக்கொளுஞ்சோதிக்கோர்துன்பந்தான்
புகல்வதோவவனும்புகன்றுளோர்

வெருவிதஞ்செயுமாயைவினையொரீஇ
கிரிலாச்சுகவீட்டினிலைப்பரால். (௩அ)

நித்தியானந்தநின்மலனுன்மறை
சித்தியாஞ்சுத்திசெய்யுமாதேவன்றன்
சத்தியாமுமைதன்னைக்கொணர்கெனப்
பத்தியாலிங்ஙன்யான்வந்தபான்மையே. (௩௯)

எந்தையார்தந்தவாழிமற்றிங்கிதை
முந்தையார்மனையாண்முன்னருய்த்துநான்
வந்தகாரியமும்மென்வணக்கமுஞ்
சிந்தைகூர்தரச்செப்புதியாலென்றான். [௪௦]

கொடுத்தமோதிரங்கொண்டிமயத்திறை
யடுத்தனன்னுமையாளிடத்தண்ணலார்
விடுத்தநந்திவரவும்விளம்பினு
னெடுத்துமுத்திரையாழியுமீந்தனன். (௪௧)

வாங்கினண்மகிழ்ந்தாடந்தைவார்த்தைகேட்
டேங்குநுண்ணிடையாளென்னிறைவனர்
பாங்குசேர்திருவாழியெனப்பரிந்
தோங்குசென்னிவைத்தாள்கண்ணிலொற்றினள். [௪௨]

மனமகிழ்ச்சியிற்றன்னைமறந்தனள்
பனகபூடணன்பால்வைத்தவன்பினாற்
றனதுகண்ணீர்தழைத்திடவேமுகிழ்த்
தனகிதானெடும்போதமர்ந்தாளரோ. [௪௩]

என்றுமேசுகமுற்றிருப்பாரையா
னன்றுற்றாரெனக்கேட்குநலத்ததோ
துன்றுமன்புபெற்றேசுகமுற்றுளேன்
சென்றுசேர்தறிடமெனச்சிந்தித்தாள். (௪௪)

அன்னையின்னணமாகவிருந்தனண்
மன்னுநந்திமகிழவரிசைகள்
பொன்னின்மால்வரைவேந்தன்புரிந்தனன்
பின்னிகழ்ந்தபரிசினிப்பேசுவாம். [௪௫]

மூன்றாவது மேநச்சநக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௧௫௨.

தேவியிமயம் விட்டெழுந்தருளியசருக்கம்.

வேறு.

வானவருந்தொழும்வானவனம்பிகைமாதேவன்
றேனவிரம்புயபாதநினைந்தவர்சேர்வாரே
யூனமுறும்பவவாரிகடந்துணர்வுறலாகா
ஞானவனந்தசுகோதயவின்பநலந்தானே. (க)

சீதவளப்பனிமால்வரையுற்றசிவன்றேவி
யாதியிடத்துநன்மேருவினிற்செலலங்கார
மாதவருக்குவியாதனுரைத்திடும்வகையெல்லாஞ்
சூதன்முனிக்கணமேவவனத்திடைசொல்கின்றான். (உ)

அம்பிகைதன்செயல்கண்டிமவானெனுமரசன்றான்
வெம்பியசிந்தைவிசாரமொடும்மனைமேனையொடு
நம்பிசிவனைநனிநம்பிக்கெதிர்மொழிசெல்வற்றோ
வெம்பெருமாட்டிசெலற்குபகாரமியற்றென்பான். (ங)

மங்கலமேவியகற்புடையாடன்மணாளரைவிட்
டிங்குறைகின்றதுநன்குறுமோவவரேவல்செய்தே
யங்குறைவதுவேமேலாந்தருமமதாமன்றோ
நங்கைமகிழ்ந்திடவிடையின்றுதவுதுநாமன்றே. (ச)

இன்றுவிடுத்திலெமெனினிறைவன்வெகுள்வுற்றிடுமா
னன்றுபகாரத்தொடுபலவரிசைகளுஞ்செய்து
மொன்றியவன்புடனென்றுரைசெய்தேயுமைதன்பாற்
சென்றுளமுருகிக்கண்டுமகிழ்ந்தேதசிந்திப்பான். (ரு)

ஓடியறைக்குளுவந்துபுகுந்தனனொளிர்முத்தி
னீடியமாலைகணவமணிமாலைகணெடுநாளிற்
றேடியமகுடங்கடகங்கைவளைசிலவாரங்
கூடியவாபரணச்சுமைகோடிகள்கொடுவந்தான். (சா)

பொன்னரிமாலைகள்பன்னிறச்சேலைகள்புனையோலை
கன்னமணிந்திடுபூடணவர்க்கங்கண்டசரம்
பன்னியகைவிரலாழிசிலம்பொடுபதசாலஞ்
சொன்னபணிச்சுமைகோடியின்மேலுஞ்சொரிதந்தான். (எ)

வருணன்றிறைதரவந்தனமாநிலமன்னரெலாங்
கருணைபெறும்படிகொடுவந்திடுகைக்காணிக்கை

தருவின்வளந் தருநாடுறைவோர்கடரும்வரிசைக்
குருமணியாரச்சும்மையோர்கோடிகொணர்ந்துற்றான். (அ)

தன்னுடைமாமனைமேனையில்பின்னுஞ்சார்ந்துற்றே
யென்னுடையன்னையுடன்சென்மடந்தையரீசன்பாற்
றுன்னுகணங்களுமுண்டுசெலும்படி தூய்தாக
மன்னுமபூபவகைப்படியோதனவர்க்கங்கள். (௯)

ஆறுசுவைக்கறிநால்வகையுண்டிகளவையெல்லாம்
வேறுசமைத்தமைகனிவகைவர்க்கமும்விதமாகக்
கூறுமினிப்புறுமதுவர்க்கம்பலகோடிசுமை
யேறவமைத்தருளுண்டவர்கொண்டேகிடவென்றான். (௧௦)

அமைதலிலாமகிழ்வுடனேமற்றுளவரசரைநம்
மிமயவரைக்கும்மேருவரைக்குமிடையெல்லாங்
கமைதருபுட்பவிதானப்பந்தர்கடிதாகச்
சமையுமெனச்செய்தனர்மலர்மாலைத்தண்பந்தர். [௧௧]

ஏகுநெறிக்கிடையேபடமாளிகையிமகிரா
லாகியதவளத்தான்மதிமண்டலமெனவார்த்தார்
மாககனஞ்செலுமேருவைமானும்விமானங்க
டோகைதனேடுறுதோகையரேறச்சூழ்வுற்ற. [௧௨]

அடங்குபிடர்க்குளமைந்தவுளைத்திரளம்புலியாத்
தடங்கொளும்வெள்ளிவரைக்கெதிரேபொருதன்மையுட
னிடங்கொள்புறத்துறுகலணையிரத்தினவெழில்சேரு
மடங்கலின்வாகனமுமையவண்மேற்கொளவந்தனவே. [௧௩]

என்றுதனில்லவளுள்ளமகிழ்ந்திடவிமையக்கோ
னன்றுபுகன்றுநின்வரிசையுன்மகள்பெறநல்கென்றான்
சென்றுயர்கோபுரமுற்றமணைந்தெவையுஞ்செப்பித்
துன்றுகளிப்புடனேகறங்கென்னச்சுழல்கின்றான். [௧௪]

வந்தனன்முந்துறுவரையரசன்றன்மகடன்பாற்
சுந்தரநந்திக்கருளுபசாரத்தொழில்கொண்டே
நந்திதனக்குபசாரம்பலசொலிநல்கிப்போய்ப்
புந்திகொளம்பையைநோக்கிக்கண்மழைபொழிகின்றான். (௧௫)

வேறு.

நந்திதேவனுக்கம்பிகைசந்தனநலமுறுநறுசாந்தங்
கந்தமாலிகைபூடணம்பூந்துகில்கடிகமழ்முகவாச
மைந்துமீந்திடப்பெற்றுயரானந்தமடைந்துறைந்திடும்வேளை
வந்துகண்டனரெம்பிரான்விடுத்திடுந்தூதராமாபூதர். (௧௬)

என்னதாமதமெங்களையெந்தையாரேவினரெனச்சொன்னார்
மன்னனுமிமயத்திறைகண்டனன்மனத்திடைமருள்கொண்டான்

முன்னவர்க்கும்வந்துற்றவர் தமக்குமேமுறைமுறையுபசார
மன்னபானஞ்சந்தனங்கலைபூடணமனைத்துநல்கினனன்றே. (௧௭)

இனித்தரிப்பதன்றென்றிமயத்திறையிறைவிதன்னிடத்தெய்திப்
பனித்தகண்ணொடுமினித்தபூசனைபலபத்தியாற்புரிந்தாற்றி
மினிற்றுனும்படாம்பதுமராகப்பணிவெயில்விடுகதிரார்ந்
தனித்தனித்தனிகொடுவந்தாசாத்தினன்சாற்றருங்களிகூர்வான். (௧௮)

அன்னையேசிவனனுப்பவிப்போதும்வந்தடுத்தனர்கணநாத
ரென்னதாமதமெனவுரைத்தாரவரினித்தரித்திடலாமோ
நன்னயம்பெறுபூசமுமோரையுநல்லவேளையுமீதான்
மன்னுசோதியின்விமானமும்வாய்தலின்வந்ததிங்கெழுகென்றான். (௧௯)

தாயராகியமேனையார் வந்தனர்தபவினர்தயவாகத்
தூயவம்பிகையெழுந்தனள்வாய்தலிற்றோன்றினளதுபோதின்
மேயபல்லியமுழங்கினவூழியின்விரிகடலார்த்தென்ன
மாயனான்முகன்வானவராதியர்மனைவியரொடும்வந்தார். [௨௦]

முனிக்கணங்களுமுன்னரேதுன்னினர்முறைமுறைசிவனைவுந்
தனிக்கணங்களுமன்னினரன்னைதன்றாடொழுதனரன்றே
யினிக்குமின்சொலாரற்புதமடந்தையரேறினர்விமானங்கள்
கனிக்குமின்மொழியம்பிகைசிங்கவாகனத்தினிலிவர்ந்தாளே. [௨௧]

தந்தைதாயரும்பின்செலவிமானத்திற்சார்ந்தனளெமதன்னை
யந்தவேளையின்மூவுலகத்துளாவனைவரும்வந்தார்த்தார்
முந்தவேபுகுந்தோர்களுங்கூடியேமுறைமுறைநெருக்குற்றார்
நந்திபூதகணாதிபர்பிரம்படிநாடியோடினரன்றே. [௨௨]

சென்மகோடியிற்செய்தபுண்ணியத்தினாற்றெய்வநாயகிசேரும்
பொன்மயத்திருவிமானசேவையும்பெற்றோம்பொருந்துகாற்றுறப்பெற்
றன்மகிழ்ச்சிசேர்மருத்துற்றான்கந்தவாகனனெனுநாமந்தா [றே
னின்மைதீர்த்தருடேவிசெந்தாமரையிணையடிதவழ்ந்தென்பார். (௨௩)

தூரத்தேபணிந்தடிதொழுவார்பலர்துதித்துநிற்பார்சிலோ
ராரத்தார்திகழ்விமானத்தின்முடிகண்டோமடிகண்டோமென்கின்றார்
சாரத்தார்தருநாடகந்தரம்பையர்தனித்தனிநடஞ்செய்தார்
வாரத்தேயிசைத்தும்புருநாரதர்வந்துபாடினரன்றே. (௨௪)

செய்யசோதிவிமானத்தின்காந்தியெத்தேசத்துமிருளோட்டத்
துப்பநேர்சிகரத்தினிலிடக்கயற்றொடக்கியேகூடரோட்ட
வையமீதினில்வந்தடிதொழுமவர்வல்வினைத்துயரோட்ட
வையையம்பிகைவிமானமும்பைப்பயவடிபெயர்த்ததுவன்றே. (௨௫)

கொடிநெருங்கினமகரதோரணங்கள்வெண்குடையொடுசேறுடிப்
படிநெருங்கினசாமரைக்காடுகள்பரந்தனநிரந்தெங்கு

மடியிடுந்தலமிலையெனவட்டமாசித்திகளொடுந்தேவர்
முடிவின்முப்பதருமூவருஞ்சூழ்தனர்முறைமுறைநெருக்குற்றார்.

தேவர்பூமழைமேகங்கள்பொன்மழைசேவடிபணிகின்றார்
தூவுகண்மழையமடிகையருண்மழைசொரிதரவிரிந்தெங்கு
நாவில்வேதியர்தோத்திரவோசைகணுடகம்பயிலோசை
மேவுதேவவிமானத்தினேசையும்விரவியமிகவன்றே. (உஎ)

நீதிசேர்கணநாதர்கைப்பிரம்படிநினைந்துநாம்பயந்தோடி
லாதியார்திருத்தேவிதன்றரிசன்மதுனமக்கரிதென்றே
பூதிசேர்தருமேனியர்ஞானியர்புனிதன்மெய்யடியார்கள்
சோதிசேர்ந்தவிமானத்தின்புடைவந்துசூழ்ந்தனர்தொழுவாரால். ()

இன்னவாறெமையுடையவளிமயமவிட்டெழுந்தருள்சிறப்பென்றே
சொன்னவேதவியாதனைத்தொழுதனர்துதித்தனர்முனிவோர்கள்
பின்னரன்னைதான்செய்தெதன்னெனவவைபேசினனெனச்சூத
னன்னதும்புகன்றனுயர்சக்கரத்தடவிவேதியர்க்கன்றே. [உகூ]

நான்காவதுதேவியிமயம்விட்டெழுந்தருளியசருக்கமுற்றிற்று,
ஆகத்திருவிருத்தம்-உஉக.

ஐந்தாவது

தேவிமேருவரையைச்சார்ந்தசருக்கம்.

வேறு.

பூதநாயகனுதிரைநாயகன்புகழ்சேர்நால்
வேதநாயகன்விண்ணவர்நாயகன்விடையேறு
நாதநாயகனம்பலத்தேநின்றுநடமாடும்
பாதநாயகன்றோத்திரமொடுறும்பகர்வோமே. (க)

குன்றசைந்ததுபோலுமையேறியகுளிர்மான
நின்றசைந்துசெலக்கொடியாடைகணிறைவுற்ற
தென்றல்வந்துதவழ்ந்ததுசேவைகள்செய்வோர்தா
மின்றுநம்பிறவிக்கடனீந்தினமென்பாரால். (உ)

ஆதிநாயகிபின்னுறமேவியவனைமேனை
நீதிசேருபகாரமனைத்தையுநிறைவித்தாள்
பாதிசேர்பிறைபோனுதலாயிவைபாரென்றார்
சோதிசேரும்விமானமருங்குறச்சூழ்கின்றார். (௩)

செய்யவம்புயத்தேவியொடுந்திருமால்வந்தா
னையன்வேதன்வந்தானிசைவாணிமின்னவளோடுந்

தையலாஞ்சசியோடுவந்தானண்டர்தனிநாதன்
மையல்கூரிமையோரும்வந்தார்தங்கண்மனையோடும். [ச]

சென்னிசேர்த்தியகையினர்கண்மழைசேர்கின்றார்
துன்னுநான்மறைத்தோத்திரம்பற்பலசொல்கின்றார்
பன்னிமாரொடுமொழுமுனிவோர்கள்வந்தனர்பாராய்
கன்னியேயுனகாறெழும்வானவர்கண்பாராய். [௫]

ஆடுகின்றவரம்பையர்நாடகமதுபாராய்
பாடுகின்றவர்தும்புருநாரதர்பணிபாராய்
கூடுகின்றகணங்கள்பிரம்புகள்கொடுசாட
வோடுகின்றகணங்கணெருங்கியவுவைபாராய். [௬]

மேருமால்வரைச்சாரலினருகுறமின்னேநீ
சாருகின்றவிமானம்வரத்தயைதருவாயென்
றோருமன்னைசொலென்னுடையன்னையுவந்துற்றாள்
கூருமானமும்வந்ததுமேருவின்குளிர்சாரல். [௭]

அங்குறைந்திடுதேவரும்வந்தனரடிதாழ்ந்தார்
பங்கயாசனனேமுதற்றேவர்கள்பலரெல்லாஞ்
சிங்கவாகனமேல்வருதேவிசிறப்பெல்லாந்
தங்கணூர்தரக்கண்டனர்தோத்திரந்தனிசெய்வார். [அ]

வேறு.

மங்கைநாயகியேபோற்றிமாமறைப்பொருளேபோற்றி
சிங்கவாகனத்தின்மேவுந்தேவியேபோற்றிபோற்றி
துங்கமாமிமயமீன்றதோகையேபோற்றிமேலா
நங்கையேகயிலைவாழுநாதர்நாயகியேபோற்றி. [கூ]

கும்பிடுமடியார்தங்கள்கொடுவினைதவிர்ப்பாய்போற்றி
யம்பையேமேனையீன்றவன்னையேபோற்றிபோற்றி
வம்பவிழ்நீலவெற்பின்மரகதக்கூந்தல்போன்று
தும்பிசேர்தார்க்குந்தொங்கற்சுரிகுழலுடையாய்போற்றி. [கo]

கமலமாமுகத்தாய்போற்றிகளபமாமுலையாய்போற்றி
யமருமாலிலைபோல்வாய்த்தவணிவயிற்றணங்கேபோற்றி
விமலர்கைத்துடிபோல்வாய்த்தமெல்லியவிடையாய்போற்றி
தமருடனடியார்போற்றுந்தாமரையடியாய்போற்றி. [கக]

உலகநாயகியேபோற்றியும்பர்தம்பிரானூர்தோளி
னிலகுபூமாலைசேர்க்குமிணைகரமுடையாய்போற்றி
குலவியவடியார்செய்யுங்குறைதவிர்த்தாள்வாய்போற்றி
கலவமாமயிலேநித்யகல்யாணவுமையேபோற்றி. [கஉ]

காட்சியேசரணமேலாங்கருணையேபொழிதருங்கா
மாட்சியேசரணமன்பர்மகிழ்வுறக்கடாட்சிக்கும்மீ
னாட்சியேசரணமெங்களன்னையேசருவலோக
சாட்சியேசரணமுன்றன்சரணமேசரணந்தானே. [௧௩]

தேவியேசரணந்தேவதேவனுஞ்சிவனார்தேகத்
தாவியேசரணமெங்களன்னையேசரணநீண்ட
காவியேயனையவுண்கட்கன்னியேசரணநித்தம்
பாவியேனானவாரிபாவியேமெனப்பணிந்தார். [௧௪]

மாமுனிவோருந்தேவகணங்களும்வந்துகூடி
யாமுனமியற்றும்பூசாபலத்தினாலிறைவிதன்னை
யாமுறைபுகழ்ந்துபாடியாடிடப்பெற்றோமென்றார்
தாமுளமகிழமேருச்சாரலின்வந்துசார்ந்தாள். (௧௫)

இனையவாறெம்பிராட்டியிலங்கியமேருச்சாரற்
புனையலங்காரத்தோடும்புகுந்தனளென்னவேதந்
தனையொருநான்கதாகச்சாற்றினோன்புகன்றனென்றே
முனிவர்வாழ்நைமிசத்தின்மொழிந்தனன்சூதன்றானே. (௧௬)

ஐந்தாவது தேவிமேருவரைசார்ந்தசருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-உ௩௭.

ஆறாவது,

தேவர்முனிவர்காட்சிச்சருக்கம்

வேறு.

ஒருவனையோரிரண்டுருவமுக்கண்ணன்றனைப்புயநான்குடையகோனை
பெருகியவைந்தொழிலானையாறுமுடித்தானையெழுபிறப்புந்தீர்த்தே [ப்
யிருமையெமக்கருளட்டமூர்த்திநவகோணத்தாட்கிறையைப்பத்தா
மருவுபதினொருவருருத்திரர்பணியுநாயகனைவணங்கிவாழ்வாம். (௧)

சிந்தைமகிழ்மேருவரைச்சாரலில்வாழ்முனிவர்களுந்தேவரியாரும்
வந்துதிரண்டனரிமயமலையரசன்றருமரசிவருகின்றாளென்
றுந்தியவன்புடனோடிப்பணிந்தொளிர்விமானத்தையுற்றுநோக்கிப்
புந்திமகிழ்ந்தானந்தக்கண்மழையும்பூமழையும்பொழிகின்றாரால். (உ)

சென்னகோடிகடோறுஞ்செய்ததவப்பலம்பெற்றோஞ்சிவன்றாட்பூசை
மனமகிழ்ந்துபுரிந்திடுமோவரம்பெற்றோமுரம்பெற்றோம்வாழ்வுபெற்றோங்
கனகமலையரையன்மகள்விமானத்தின்வரும்பெருமைகாணப்பெற்றோ
மனவரதகல்யாணியருள்பெற்றோமென்றுமுன்னின்றறைகின்றாரால்.

அருமறைகள்சொலற்கரியனினதுபதாம்புயச்சேவையர்தேயன்றோ [மா
மருமலர்கொண்டுனையடியேம்வந்தனைசெய்திடவெதிர்வந்தனையேயம்
திருமதிமாமுகத்தாயேசெகதலத்தையளித்தாயேசெல்வத்தாயே
கருணைபொழிவிழித்தாயேகனியமுதமொழித்தாயேகதிதந்தாயே. (௪)

தஞ்சமெனவடைந்தவெமைப்புரப்பதுநின்கடனன்றோதரணிவா
ழூ, மெஞ்சலிலாவுயிரனைத்தும் பெற்றுவளர்த்தவணியேயாங்கள்வே
றோ, வஞ்சகவெவ்வினைவனத்தைப் பொடிப்பதற்குன்கருணைசிகாவன்
னியன்றோ,வஞ்சலென்றேயெமைப் புரப்பாயரனிடத்தின்மேவுமகிலா
ண்டத்தாயே. [௫]

உன்கருணைப்பெருவெள்ளந்தொருதிவலைபெறினளவேயுய்குவோம்யா
மின்குலவுமிடையாய்நின்னருள்வாழ்வேவாழ்வல்லான்வீண்மற்றெல்லா
மன்குலவுமரியினிடஞ்சேர்ந்திடில்யானைக்கொம்புமணியும்வாய்க்கு
நன்குணமின்னரியினிடத்தெலும்புதசைதோலலதுநலம்வேறுண்டோ.

ஏழையடியேப்புகலுமின்சொலுநின்செவிக்கண்ணேயிசைந்திடா
தோ, மாழையொண்கணருட்பார்வையருந்தவஞ்செய்தோர்க்கன்றிவா
ய்த்திடாதோ, கோழைமனத்தெமக்களித்தாலுனதருள்வாரியிற்சிறிது
குறைந்துபோமோ,வாழியெழுமுகிலெங்கும்பொழிந்திடுமேமலையரசன
ருளும்வாழ்வே. (௭)

இந்திரையுநாமகளுமிரதியுடன்சசிமகளுமின்பமாகச்
சந்ததமும்வந்தனைசெய்சேவடியாயயன்மாயன்றுமமோலி [து
முந்துமணியொளிவிளங்குமிளிர்தளிர்ச்சேவடியாய்முத்தொழிலடாத்
மந்தரிகின்சரணாரவிந்தமேசரணெனவந்தடைந்தோமம்மா. [௮]

சாற்றருநின்முகமதியின்கருணைநிலாவுண்டுமகிழ்சகோரம்போன்றே
ஆற்றல்பெறுமிணைவிழியினருண்மழையாற்றழைத்தமுதிரடவியானே
கூற்றடருங்கொடும்பிறவிக்கடுங்கானத்தீயவியக்குளிர்ந்துபாயு [ங்
மாற்றரியபெருவெள்ளம்வந்தெனவந்தாயெனவேவாழ்த்தினரால்.

இவ்வகையான்முனிவர்களுந்தேவர்களும்பரிந்துபரிந்திறைஞ்சியேத்த
வைவகைநாதமுமுழங்கவரிபிரமனமரர்பதமனைத்துநீங்கித்
தெய்வநாயகன்மருவுமேருகயிலாயத்திற்சேர்ந்தாளென்றே [ஞனே.
மெய்வகைதேர்வியாதன்முனிவரர்க்குரைத்தானெனச்சூதன்விளம்பி

ஆறாவது தேவர்முனிவர்காட்சிச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௨௪௭.

தேவிமேருகயிலையுற்றசருக்கம்

வேறு.

சூடகவால்வளைகண்களியாடத்தொடையாட
வாடகமன்றினினாடகமாடியவரனும
நீடகமுற்றுநினைந்துவழுத்தியநியமத்தோர்
பாடகமொத்தபிறப்பொடிறப்பிடைபடாரே. (௧)

ஆழிவனத்துறைசூதனைமாதவரடிபோற்றி
வாழியெமன்னைசெயற்பின்னென்னெனமகிழ்சூத
னேழிசைநாரதனுருபதேசமிதென்றென்றே
சூழிசைவேதவியாதனுரைத்தவைசொல்கின்றான். (௨)

அம்பிகையேறியசோதிவிமானமதுசென்றே
செம்பொனின்மேருவின்வாழ்கயிலாயத்திடைசேர
வும்பருமாதவருஞ்சிவயோகத்துரவோருங்
கம்பிதநெஞ்சொடுகண்டவரிங்கிதுகழறுற்றார். (௩)

அரியதவம்புரிபலனிதுவாமெமையாளம்பை
பெரியவிமானத்தரிசனமுற்றிடுபேறென்பார்
புரிகுழல்கயிலைப்புகுதருமெழிலைப்புடைநின்றே
தெரிகணநாதர்கள்செய்தவம்யாஞ்செய்திலமென்பார். (௪)

இப்பரிசன்னவர்செப்பியிரங்கிடவெமையாள்வா
டப்பில்விமானமதொப்பருகயிலைத்தாழ்வரையின்
வைப்புறவங்கணிழிந்தவணுற்றிடுவளமெல்லா
மொப்புடனருகுறுதந்தையுடன்றாய்க்குரைசெய்வாள். (௫)

தண்டளிர்சேர்தருவின்குளிர்சோலைகடழைசாலை
புண்டரிகத்தடமமுதநதித்திரைபொழிமாலை
யண்டருநாடருதெற்றியரங்கமொடணிவேலை
யெண்டருசித்திரமண்டபமாமிவையென்றாளால். (௬)

இந்திரர்சந்திரரெய்தியதெற்றிகளிவைதோறும்
வந்தெனைவந்தனைசெய்தனைசெய்ம்முறுமறையோர்போ
லந்தருநின்றுபொழிந்திடுபூமழையவைபாரீர்
சுந்தரலிங்கமனந்தமிருந்தொளிர்சுடர்பாரீர். (௭)

என்றுமையங்கணிலங்கெழுறுமிவையிவையென்றே
நன்றுமொழிந்திடமனையுடனேமகிழ்நகராசன்
சென்றெமையாளுடைநாயகியோடொருதெற்றியின்மேற்
றுன்றுகளிப்பொடுமன்புடனேயிவைசொல்கின்றான். (௮)

அன்னையுனைப்பெறவுற்றதவப்பலனதுவன்றோ
வுன்னதுகயிலையில்வந்திவையெல்லாமுறப்பெற்றே
னென்னவுரைத்துமகிழ்ந்துறுமமைபத்தெழின்மேனை
துன்னுதருக்கனிகனிகோவெந்திவைசொல்கின்றாள். (௯)

நம்பனிமால்வரையின்கணுமில்லையிந்நலமென்றூ
ரும்பரொடிம்பர்விண்மூவுலகத்தினுமுளவாமோ
செம்பொனெனன்னையிதன்சுவைதேர்குவைதேர்குவையென்
றம்பிகையோடுநுகர்ந்துகளித்தனளாமன்றே. (௧௦)

நங்கையுமங்கதுகண்டனளன்னையைநகுகின்றூ
ளிங்குளபுதுமைகளென்சிலகண்டனையினியெம்மான்
றங்கியகோவிலினுற்றனைநீயனைசார்வாயே
லங்குளவதிசயமெங்குளவென்றவணகல்வுற்றாள். (௧௧)

தந்தையொடன்னைதொடர்ந்திடவவ்விடைசார்போதிற்
சிந்தைமகிழ்ந்துகணங்கள்வணங்கச்செல்கின்றாள்
சுந்தரமாளிகைசூளிகைதெற்றிகடுற்றுசுடர்
முந்தியகோபுரவாயில்கடந்தனண்முறைபுக்காள். (௧௨)

இரவிதன்மண்டலமதிவளர்மண்டலமிவையென்ன
வரவின்மணிச்சுடர்விரிபலமண்டபமவைகண்டா
ருரகபணிப்பரனுரைதருமியோசனையயுதத்தின்
விரிவுளமண்டபமதனுளவற்புதமிகவுண்டால். (௧௩)

அத்திருமண்டபமத்தியிலத்தனுமம்பிகையு
முத்தமபரியங்கத்தணைமீதினிலுறைபோதிற்
சித்திரப்பாவைகள்சத்திரசாமரைசிவிறிகளும்
பத்தியினின்றுவிசித்திரமாம்வகைபணிமாறும். (௧௪)

அன்னதொர்மண்டபமன்னினளுமைமலையரசனெடுந்
துன்னுமரம்பைகளழகாலத்திகள்சூழ்கின்றூ
ரென்னுடைநாயகரிவணினுமுறைகுவரென்றோதி
யுன்னுறுசெல்வந்தனையனைதந்தைக்குணர்விப்பாள். [௧௫]

பரிவட்டத்தொகைதிருவாபரணம்பயிலறைகள்
புரியிட்டம்பெறுபரிமளகளபம்புகுசாலை
விரிவுற்றிடுபலபண்டநிறைந்திடுவியலிடமு
மரிகிற்பெற்றிடுதந்தையுடன்றாய்க்கறிவித்தாள். [௧௬]

இங்கினிநீருமதிகமயத்தேதகுமினிப்பானிறைவன்
றங்கியதிருமுன்செல்குவனென்றுமைதாய்தந்தைத்

கங்குபசாரவிருந்துடனுடைகளாபரணம்
பொங்குவிமானமளித்துவிடுத்தருள்புரிவேலை. [௧எ]

வேறு.

கயிலைநாயகனருகுறநின்றிடுகணங்களைமுகநோக்கி
யயிலைநேர்விழியாடனையழைத்திடவமைந்துசென்றிடுநந்தி
செயலிதாற்றனன்றுயதுகேட்டித்ததிறமெவையெனத்தேர்மி
னுயருநாயகனுரிமைசெய்வானிவையுறப்பெறுமோவென்றான். [௧அ]

சென்றுபூதர்கணந்திமுன்னெம்பிரான்றிருவுளமிதுவென்றே
நின்றுகூறினர்சாமிகாரியஞ்செயுநெறியினரவர்நெஞ்சிற்
றுன்றுசிந்தையின்படிபுரிவாரவைசூழ்ந்திலைநீயென்று
ரென்றவாசகங்கேட்டலுங்கணங்களோடிவையிவைபுகல்கின்றான். [ ]

தேவநாயகிசிவன்றனைப்போலவெந்திறங்களும்படைத்துள்ளா
ளாவதாகியவவள்கருத்தின்படியமைவதேயல்லாமன்
மூவராகிலுமுன்னின்றுமொழிந்திடமுற்றுமோவரனேவ
மேவுபூதர்காள்வல்லமையுண்டெனில்விளம்புவீர்சென்றேனபான். [ ]

ஆதிநாயகிசந்நிதிபுகுந்தயானவளெழுந்தருளுங்காற்
பாதசேவைகடெரிதரவருமரிபதுவாசனன்முன்னோர்
மோதுகின்றதோர்நெருக்கத்தினிடைப்பட்டுமூர்ச்சையுற்றனன்யானே
யோதுகின்றதோர்செயல்பிறிதுண்டுகொலுறுங்கணத்தீரென்றான். ()

அரனனுப்பியபூதரோடின்னணமறைந்துறைந்திடுநந்தி
பரவுமம்பிகையுறுமிடத்தவரொடும்படர்ந்தனனதுபோதி
லுரவுமந்தரவாணிசென்றுமையிடத்துயர்விசும்பிடைநின்றே
பரமருன்னிடத்தருள்சுரந்திடவுநீபாணித்தல்பபனன்றால். [௨௨]

என்றவாசகங்கேட்டலுமச்சமுற்றிவர்ந்தனளரியேற்றி
னின்றதந்தைதாய்தங்களையிமயத்தினீர்செலுமென்றேவிக்
கொன்றைவேணியனிடம்புகநடந்தனள்கொற்றவையென்றேதான்
றுன்றுநைமிசவாணருக்குரைத்தனன்சூதமாமுனியன்றே. (௨௩)

ஏழாவதுதேவிபேநசயிலையுற்றசருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௨எ௦.

எட்டாவது

தேவிநாட்டியம்பார்த்தசருக்கம்.

அரனதாலயஞ்சூழ்வரப்பணிசெயவடியிணைகரம்வாய்த்தோ
முரமதாங்கதையுன்னவுங்கேட்கவுமுளமுங்கேள்வியுமுற்றோன்

பிரமதாஞ்சிவன்பாற்றொழச்சேவிக்கச்சென்னிநேத்திரஞ்சேர்ந்தோம்
பாமனுமஞ்சொனுவும்பெற்றோமியாம்பாக்கியம்படைத்தோமே. (க)

வாதராயணன்சொற்றனனுமைசிங்கவாகனமிசையேறிப்
போதன்மேயினுளத்தனையன்னையைப்புகன்றுபின்னுறநோக்கி
யாதியாட்டத்துமக்குறலரிதுநும்மருவரைச்செலுமென்றாள்
காதலாலவர்நின்றுநின்றுருகிக்கண்கலுழ்ந்துசென்றனரன்றே. (உ)

அப்புறந்துபர்சிங்கவாகனத்தின்மேலம்பிகைசிறிதேக
வொப்பிலாவொளிவிமானமும்பூதருமுற்றனர்சிவனேவ
மெய்ப்பிறைதிலிவர்ந்தனள்பூதர்கண்மிடைந்தரகரவென்றார்
செப்பொணுநதுந்துமிபுடனேசெபசத்தஞ்சேர்ந்தனவன்றே. (௩)

கூடிவந்திடுகணங்கள்வீழ்ந்தானந்தக்கூத்துகளினிதாடிப்
பாடினாரரனுமங்களுமையுளம்பரிவுறப்பலகோடி
போடினார்வந்துநெருக்குறுமவர்களைப்புருக்கிவேத்திரங்கொண்டு
சாடினாருபர்மேருவின்சிகரமுஞ்சலனமுற்றிடவன்றே. (௪)

பூதரேத்தியதோத்திரங்கேட்டுடல்புளகமுற்றிடுநங்கை
நாதர்ராடங்கண்மதுரகீதத்தொடுநாவினுவில்கின்றாள்
வேதநாயகசங்கரசிவபற்கவீமசந்திரவேணி
யாதிருத்திரமகேசவீசானநின்னருள்புரிவாயென்பாள். (௫)

காலகாலகிரீசகாலாந்தகண்கண்மூன்றுடையோனே
பாலலோசனவிசுவநாதபசுபதிபரமானந்தா
சூலபாணிகங்காதரவரசம்போதொண்டர்தந்துயர்தீர்க்கு
நீலகந்தரநித்தியநிர்க்குணநின்மலாவருள்வாயே. [௬]

தக்கன்மாமகமழித்தபூதேசசர்வேசசற்கதிநல்கு
நக்கவாமதேவாவருள்வாயெனுநாத்தழும்புறவேத்தாத்
தொக்கவானவர்யாவரும்புகலருஞ்சோதிநின்னுயர்சோதி
மிக்கநின்பதிபுறப்பெற்றேன்யான்பெற்றமெய்த்தவமெவையென்பாள்.

பாமர்மேருவின்கயிலையின்சோதியைப்பார்த்ததிசயங்கொண்டு
குரவவார்குழலிமையவேந்தனுப்பியகொடியிடைமடநல்லார்
வரவிசைந்திலரிப்பெருமானத்தின்மன்னுமியான்றனியேகி
லான்வியந்திடாளெள்ளுவனெனவுளத்தன்னையுன்னினளன்றே. [௮

அளவிலாப்பெருமையனிடத்தொருந்தியாயடைந்தியான்றனித்துற்று
ளுளகொலாமவமதிப்பெனநினைத்தனளுருவிலெண்ணிலகோடி
தளவவார்குழலரம்பையர்மருண்டிடத்தழைத்தபேரொளிவாய்த்த
விளகிலாநகைமடந்தையருதித்தனரிந்திரைதொழத்தக்கார். (௯)

பூணிலங்கியவடிவினரிளமையின்பொலிவினர்நலமிக்கார்
நாணிரம்பியமதிநிகர்சாமரைநவரத்நகாளாஞ்சி

காணவேதரு மடப்பைகைக்கொண்டனர் கானஞ்சேர் தரும்ருத்ர
வீணைதங்கியகரத்தினர்சூழ்ந்தனர்விதம்விதமடநல்லார். [௧௦]

இலங்குமாதர்களுருத்திரவீணையினெந்தையார்புகழேத்து
நலங்கடன்செவிப்புகவுளமுருகினனுனும்வாழ்த்துவனென்று
ரலங்கல்வீணைகொண்டம்பிகைபாடினளமுதவேழிசைகேட்டே
கலங்கினருளந்தும்புருநாரதர்காந்திருவர்களன்றே. [௧௧]

ஓதுசாமரம்வீசிடக்கொடிகுடையுவரியின்றிரைபோல
மீதுசென்றிடவீணைகண்முழங்கிடமிக்கதுந்துமியார்ப்ப
வாதிநாயகிசெலும்பொழுதெம்பிரானவட்குளங்களிகூர
மாதரார்சிலரனுப்பிடவந்தனர்வாணிபோலிசைவல்லார். (௧௨)

வேறு.

கானவித்தைபரதங்கள்சக்கிணிகானுநாடகவித்தைகள்கற்றுளார்
வானவித்தகமாதர்மயங்குறமரன்மருட்டியபார்வைமயக்குவார்
பானலத்துறுசர்க்கரைப்பந்தரிற்பன்னருத்துளிர்த்தாலெனப்பாடினு
ரானவற்புதமாநடநாடகமாரவாரத்தினோடுவந்தாடினர். (௧௩)

கண்டனள்ளுமையாள்கண்களித்தனள்கருணை யென்னிடத்துற்ற கருத்தெலா, மண்டர்நாயகரென்னுடைநாயகரண்டர்யாருமறியச்செய் தாரென்றாள், கொண்டசங்கரனார்சுகநல்குமோர்குறிப்புணர்த்தக்கொடுத்ததிவையன்றோ, பண்டுநான்செயருந்தவத்தாலுறும்பாக்கியங்கள்பலித்துளவாமென்றாள். (௧௪)

அன்னவேலையின்மின்னசைந்தாலென வாடகத்தட்டமேந்தியவந் நலார், தன்னைநேரிலவட்கழகாலத்திதாங்கிச்சூழ்ந்தனர் தானுவனுப்பவே, பன்னலங்கொள்கனிபலபண்டமும்பஞ்சவாசம்பரிமளகந்தமு, மின்னலங்கொள்காளாஞ்சி பொற்பள்ளையமேந்திவந்தாரெதிர்கொண்டுவாங்கினள். (௧௫)

அனையவெம்பெருமான்பிரசாதமீதமரருக்குங்கிடைத்தற்கரியதா
மினிதருந்தப்பெற்றோர்பரிசுத்தராயின்பவீட்டினிலெய்துவராலிது
தனையிகழ்ந்தவர்நல்குரவோடுற்றுச்சார்வருநரகத்திற்றளர்வராற்
புனிதமாதவர்யாகத்தவியினும்புனிதமாமிதுவென்றுளம்பூரித்தாள். ()

தாங்கிக்கொண்டுகனிபலபண்டமுந்தானுகர்ந்துதாம்பூலமருந்தினள்
பாங்குசேர்தருகந்தசுகந்தமும்பரித்தரன்செய்பரிசுகொண்டாடினு
ளீங்குப்புக்கவர்நாட்டியம்பார்த்திடாதேகல்குற்றமிறைவரிகழ்வரென்
றுங்கணுற்றவர்நாடகம்பார்க்கவேயாசையுற்றுளிமயத்தரசியே. (௧௭)

நேத்திரமொருமூன்றவற்றுளுறநேத்திரமடவார்நடநெஞ்சிற்புல் [டாள்
காத்திருந்துறவேகினைந்தம்பிகைகாத்திரந்தனந்திருக்கண்கொண்

சாத்திரப்பொருளார்தரவந்தவச்சாத்திரப்பரதத்தனிநாடகப்
பாத்திரங்கணின்றுடும்பரிசெலாம்பார்த்திருந்தனள்பாணித்தகாலமே.

இந்நாடகந்தான் கயிலாயத்திலெந்நாளினும் யான்கண்டறிந்திலேன், முந்துமென்பொருட்டாற்புதிதாகவேமுதல்வனுரின்றமைத்தமுறையென்பா, ளந்தவானத்தரம்பையுருப்பசியணிதிலோத்தமை மேனகையாதியோர், வந்துபார்த்திவைகற்றறியோமெனமருள் கொள்வாரெனமங்கைகொண்டாடினள். (௧௯)

வானநாட்டவர்பார்த்திவைதான்சிவன்வல்லபத்தி லமைத்துளவாறன்றோ, கானவித்தைக்குவாணிகலங்கினள்கமலத்தாளிவர்கட்டழகைக்கண்டே, மோனமுற்றுமுகங்கவிழ்ந்தாளென்பார்முத்துமுத்திவராடியநாடக, மானவற்புதமெய்த்தவத்தாலிவராதிதாசியரா யடைந்தாரென்பாள். [௨௦]

பின்னுமம்பிகை பேசுகின்றாளிவர்பெம்மான் பூசைப்பலன்பெற்றபெற்றியாற், றுன்னுசுந்தரமாமுகத்தோற்றமுந்தொலைவிலாதவிளநலத்தோற்றமு, நன்னயங்கொள்சங்கீதப்ரசங்கமுநவநவம்பெறுநாட்டியப்புங்கமு, மன்னுகின்றனரெம்பெருமானருள்வல்லபஞ்சொல வல்லவர்யாவரே. [௨௧]

அழகுமாண்மைகளுநெடுவாழ்க்கையுமளவிலாச்செல்வமும்மருஞ்சுற்றமு, மழவுநோயற்றகாயபெலங்களும்வல்லபங்களுமாட்சியுஞ்சூழ்ச்சியுங், கழகம்போற்றியகல்வியின்காட்சியுங்காவலர்க்கரசாமரசாட்சியுந், தழனிறத்தெம்பிரான்சிவபூசனை தந்திடும்பலன்றந்திடுங்காண்மினே. [ ]

செம்பொனாட்டிலும்புண்ணியஞ்செய்துளோர்தேவராகியசுரத்திரளினுற், கம்பமுற்றுடைந்தோடிக்கலங்குவார்காசினிக்குட்பிறந்திறந்தேங்குவார், விம்பமாஞ்சிவபுண்ணியஞ்செய்துமேல் வீடுபெற்றவர்மீட்டும்பிறந்திடா, ரெம்பிரான்சிவலோகத்திலின்பமேயின்பமற்றெலாந்துன்பமாமென்பவே. (௨௩)

ஆதலிற்சிவபூசையின்பேற்றினாலாதிசந்நிதித்தாதியராயினர்
மாதராரிவரென்றுமைநாயகிமாதராடன்மகிழ்ந்திருந்தாளென்றே
சூதமாமுனிவேதவியாதனுர்சொன்னகாதைமுனிவர்க்குச்சொல்லினன்
காதலாலிவைகேட்கப்பெற்றோரெலாங்கவுரியீசன்கழல்பெற்றிருப்பரே

எட்டாவது தேவிநாட்டியம்பார்த்தசருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௨௩௪.

நந்திகணங்களாலோசனைச்சருக்கம்

வேறு.

நிரோட்டம்.

ஆணாகியலியாகியாயிழையாயல்லதாயனைத்தானானைச்
சேணாகியணித்தாகிச்சேராதாரிடந்தனிலேசேராதானை
நாணாளாயரியயனார்நாகங்கீழிடைத்தேடிநலிந்தேகண்ணாற்
காணாதகாரணனையகக்கண்ணாற்காண்கின்றார்காட்சியாரே. [௧]

வேதபாராயணன்வியாதன்விளம்பினவைவெகுவிதங்களாகு
மாதரார்நடனகீதங்கள்கண்டுகேட்டுள்ளமகிழ்ச்சிகூர்ந்தே
யாதிநாயகிசூழ்ந்தபரிசனத்தின்வரிசையுங்கொண்டமர்ந்தாளென்றேல்
சூதன்றானோதினன்பின்னிகழ்ந்தவையுமருந்தவர்க்குச்சொல்கின்றான்

வல்லவள்பார்த்திருந்தபரிசதனையுணர்ந்தேயவையும்வல்லநாதன்
பல்லவராயருகுநின்றபரிசனராங்கணங்கடமைப்பார்த்துச்சொல்வான்
சொல்லுடலன்கண்டுகேட்டெண்டுயிர்த்தவூறைந்தாஞ்சுகங்கணல்கு
மில்லவளிங்கில்லாளேலென்னவின்பமற்றுளநமின்பமென்று. [௩]

காதலியில்லாக்காலமவகாலமம்பிகைதான்கடிதிங்கெய்தப்
போதிரெனச்சொற்றநந்திகணத்தரிதுவரைக்குமிங்ஙன்புகுந்தாரில்லை
யாதலினானீவிருமப்படியோசுந்தரிவருமாறதுசெய்வீரோ
வோதுமென்றேவிடமுன்போயிருக்குநந்தியிடத்தவர்வந்துற்றாரன்றே.

வந்துளோருமைசமையம்பார்த்திருக்குநந்திகணமற்றோர்தம்மை
யெந்துசெய்தீரென்றிறைவரெமையேவவந்தனமியாமீசன்பாங்க
ரந்தரியங்கில்லாமலையவவர்படுந்துயரமநேகங்கண்டி
ருந்துகணமோருகமாவுற்சாகபங்கமுற்றேயுறைகின்றாரால். (௫)

காண்பருநற்பொருளெவைகளிருந்துமவண் முகத்தெழில்போற்கா
ணோமென்பார், மாண்புறுமற்றவளழகுங்குணங்களுந்தம்மகத்திருந்தே
வருத்துமென்பார், நாண்பெறுமங்கவள்வந்தகாலநல்லகாலமென்றார்நந்
திநந்தீ, வீண்புகன்றதிறையிலிறையிடத்திறைவிசேர்வதுவே வேண்டு
மென்றார். [௬]

சொன்னவுரைகேட்டலுமேநந்திசொல்வான்கணங்களேசோதியார்தா
மன்னையிடத்தெமையேவியாட்டுவிக்கின்றார்கண்டீரகிலமீதி
லென்னகாரியங்களெம்மாலியலாதகாரியந்தானிதுபோலுண்டோ
பன்னவரிபாணடனம்பார்த்திருக்கின்றாணீரும்பாரும்பாரும். (௭)

வேறு.

பாமோகமிருந்திறையகிதன்வாமத்துறவேமயல்கொண்டுறைவோர்
தாமோகனமாநடனம்படவார்தமையேவிடவுந்தகுமோதகுமோ
சேரமோதயமாம்வதனத்திமயத்துரைராசதுரந்தரிதன்றிருமுன்
யாமோபுகல்வோமவளிச்சைபலாலெமதிச்சையுமிங்குநடந்திடுமோ. ()

அண்டத்தினையோரணுவாக்கவலோ மமரர்க்கிபர்க்கதிபர்க்கதிபர்,
றுண்டப்பிறைபோனடியார்க்கடியார்தொண்டர்க் குறுதொண்டர்கடா
மலவோ, விண்டைச்சடையானிகரென்றெமையேயெதிர்கொண்டிமை
யோரயன்மான்முதலோர், கண்டப்படுமாமரமாமெனநங்கால்வீழ்ந்திடு
மாகண்டிலையோ. (௰)

வந்துற்றபெருங்கடல்வெள்ளமெலாம்வாரிச்சிறிதாகமனங்கொளலா
முந்திச்சுடர்வீசுகடுங்கனலாமூழிக்கனலூதியவித்திடலா
மந்தப்பிரமாதியர்தங்களையேயடிமைத்தொழிலேவலமைத்திடலா
மெந்தைக்குயிராமிமயத்தரசிக்கெதிர்சென்றுரையாடலிசைந்திடுமோ.

பெருமைக்கொ ரிருப்பிடமாமிறைவன் பெருமாமலைதந்தருள்பெ
ண்பெருமா, னருமைத்திறமுற்றறிவானிமையோரறியாவிறைவன்செய
லாரறிவா, ருருமைக்கரிமாமுகன்வேலவன்வந்துறுமேல்வரு மோவுண
ரேமெனவே, பொருமுற்றிடுபூதகணங்களொடும்புகலுற்றனனந்திபினு
ம்புகல்வான். (கக)

சார்வுற்றிடுமெம்பெருமாட்டியிடஞ்சார்வோமிகு சாரதரிப்பொழு
துஞ், சேர்வுற்றனரென்றுரைசெய்குவமாற் றிருவுள்ளமதெப்படியோவ
றியோ, மார்வுற்றிடுநாடகமாடுமினரவர்வந்துவளைத்தனரம்பிகையைப்,
பார்வைச்செயலங்குளவாமெமையும்பார்க்குந்திறமும்முளதோபகர்வீர்.

கண்ணுக்கினிதாகியநாடகமோகாதுக்கினிதானகவித்துவமோ
வுண்ணத்தகுமின்சுவையோமணமோவுடலம்புளகந்தருசந்தனமோ
நண்ணுற்றபுலன்கள்களித்திடவேநாதன்றரவந்துநிறைந்தனவாற்
பெண்ணுக்கினியாளிவணுற்றனளாற்பிழையாவரிடத்ததுபேசுதிரே.

நடராசனனுப்பியநாடகியார்நடனந்திறநாடிநகைத்திறைவன்
மடமாதிருந்தனரிங்கிதனைமாற்றுந்திறம்யாவர்வலாரெனவே [ன்
றிடமார்தருநந்தியுடன்கணமுஞ்செயலேதெனவெண்ணியிருந்தனரெ
றிடமார்தருநேமிவனத்தவருக்கிசைத்தானருஞ்சூதனெனுந்தவனே.

ஒன்பதாவது நந்திகணங்களாலோசனைச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௩௱௮.

கணபதிவந்தவணச்சருக்கம்.

கழையாடியதோள்வளையாடியகைகனியாடியசொல்களியாடிடவே
மழையாடுவிழிப்புலியாடரவுமகிழாடவுமாடகமன்றினிடை
யுழையாடவிடத்தின்வலத்தினிலையொளியார்மழுவாடமணிப்பணியின்
குழையாடநின்றாடியகூத்தனையேகொண்டாடவலார்குறைபாடிலரே.

தவராசன்வியாதன்விளம்பிடுவான்றலைவன்னவனேவியசாரதரு
நவராசதநந்தியுநங்கையிடநாடுற்றவரின்னமுநண்ணிலரா, லெவணேகி
னரோவவடான்வழிவந்திடர்கூரவிளைத்திடையுற்றனளோ, வுவமானமி
லாளுடல்வாகையின்மேலொண்போதினையோவெனவோதுவனால். (௨)

கயிலைக்கிரிமாபெலவானவருங்கருதற்கரிதாம்வழிமற்றலவோ
மயிலொப்பியலாளெகினச்செயலாள்வழிவந்துபரிந்திடவல்லவளோ
வயிலைப்பொருகூர்விழிபாலுறவேயடிவைத்திடவிங்கறியேனவறியே
னுயிரொப்பவளங்குறவிங்குநமக்குறுசத்தியுமுண்டுகொலோதிடிலே.

கொடிதேகயிலைக்கணவாய்வழிமென் கொடிபோலுருவாள்குழை
வுற்றனளோ, துடிபோலிடையாளழலுற்றனளோசூறாவளியாற்சுழலுற்
றனளோ, கடிசேரமுதேயனையாடனையேகதிரோன்சுடுமேகவலுற்றிடு
மே, யடிபோற்றுமடந்தையரங்கிலையோவறியேன்குறியே னவடன்செ
யலே. (௪)

மலையான்மலையாண்மனை மேனையெனுமாதா வுடனேவரவந்தில
ளோ, தொலையாவழியிங்கிதுதானெனவேசோர்வுற்றவடான்மீள்வுற்ற
னளோ, தலையாகியதாயவணுற்றனளேற்றளிர்போலுருவாடளர்வாற்று
வளே, வலிதாடொழுவார்க்கருள்செய்வளெனமறைபோதியதென்னள
வும்மிலையோ. (௫)

மனமார்தருகற்புடையாளவடான்வழிவந்துவருந்தியிருந்தனளோ
புனமானனையாளையழைத்துவரப்போனாரவர்வந்துபுகன்றனரேற்
ஜனமார்தவமுற்றவுறைப்புடையாள்கணையுற்றிடுமாறிலையேகருதிற்
றனமார்தவம்விட்டுமணந்திடும்யாந்தனியேயுறானவமானதுவே. (௬)

பூரித்ததனச்சுமையாற்றுகிலாள்பொறையுற்றுவருந்தியிருந்தனளோ
வேரிக்குளிர்தாமரைவண்டெனவென்விழியங்கவண்மாமுகமேவிடுமோ
வேரிற்றிகழ்பாரியணைந்திடுமாறினிதுற்றநிமித்தமுமெய்திலதா
லாரித்துயரத்திலிடைந்தனரென்றரனோதினனின்னுமறைந்திடுவான்.

புனையோவியமன்னதோர்கற்புடையார்பூப் புற்றிடநற்பொழுதிற்புணர்
வா, ரினிதாகியவேதனைகட்டியரென்றெழுதாமறையாவுமியம்பியவாற்,
றனையேமகவாமெனவேவயினிற்றாரித்திடுமெப்பாரிப்பெயரே, வனையாயி
ழையார்மனமாதரவாமனைமாதவமாந்துமாதவமே. [௮)

என்றுலகநடைவிளக்குமெய்ப்பாலினைத்துகிலைத்திருத்திநெஞ்சிற்
குன்றனையதுணைபதியாங்கணபதியைபவரக்குறித்தான்குறிக்குமாற்ற
மன்றுமொழிதாங்கித்தந்திமுகத்தடியனைச்சிந்தித்தானென்னையினென்றே
நின்றுநின்றுகூத்தாடிபத்தாடித்தொழுதிமையைக்கணினைக்கின்றானால். ()

பிறைபணிபெம்மானினைக்கப்பெறும்பேறு பெற்றனன்யான்பிரம மாயன், குறையிரந்துங்காணுதகோலத்தான்கொடியபவக்கொடுமை தீர்க்கு, மறைகழலான்வந்தித்தார்க்கருங்கதிநல்குஞ்சரணத்தையன் மெய்யன்,மறைமுதல்வன்றுள்பணியவந்தநல்லதினமின்றுவாய்த்ததெ ன்பான். (௧௦)

என்றுமனக்களிகூர்ந்தேபெருந்தையன்பார்க்கின்பநல்குமெம்மான்முன்பு
சென்றுகுன்றுவீழ்ந்ததெனவட்டாங்கமுஞ்சாங்கத்திறத்தினோடு
நன்றுபணிந்தெழுந்துச்சிகுவித்தசெங்கையொடுங்கண்கணீரரும்பாப்
நின்றுநாத்தழுதழுப்பத்துதிமிருத்தியுஞ்செயங்கனிகழ்த்துவானால். ()

தேவாதிதேவமகாசிருத்ரகோரசசிசேகரேச
வேவாகுமாமேருசாபகரபகவசம்போவெழிற்பினாக
மூவாதவில்லாளகலியாணவன்பரிடர்முற்றுந்தீர்க்கு
நாவாருமறைப்பொருளேநமோநமோவெனுநாமநவிற்றுவானால். (௧௨)

சித்திபலங்களங்கொடுக்குமெருக்குப்பவங்களைப்போக்கியென்றும்
பத்திபுரிவோர்க்குமுத்திபாலிக்கும்பாமர்க்குப்பாரைத்தாங்கும்
வித்தகர்க்குப்பார்வடிவாமேனிவினர்க்குப்பிணியிலாமெய்யினருக்கு
முக்கியமாங்காலத்தும்வருத்தமிலார்க்கெனைக்காக்குமுதல்வனுர்க்கே.

அடிப்பிணிதீர்ப்பருவக்கருச்சனைசெய்வாரிடர்தீர்த்தாள்வாரென் றே, படிபுகழ்ப்பாம்பொருளுக்கெமக்கிடுக்கண்புரிவோரைப்படுக்கும் பானை,மொடிவிலப்பறுத்தூணியொருநாறுபடைத்தவருக்குராகத்தோடு கொடியவிராக்கதர்கூற்றின்பயமுதலாப்பயங்கெடுக்கும்குரிசிலார்க்கே.

கண்களாயிரமுடையகடவுள்சிலைகணைமறுவாள்கைமிலைத்துந்
திண்கொள்படைக்கலமகேசுரர்சடாமுடிபொருநெற்செப்பொணுர்க்கே
யெண்கொள்சேனைபதிதிக்கரன்னப்பதிபசுவின்னிறைபிரகாசர், வென்
றோனைநயந்தவர்போற்றுடனார்முப்பூர்த்திகளாம்விமலனுர்க்கே. [௧௩]

மச்சரமில்லாதவர்க்குமுந்நூலின்மார்பருக்குமகத்தாஞ்செல்வ
மெச்சுபதிவனபதிசேத்திரபதிதேர்ப்பாகரொடுவேதச்சொல்ல
ருச்சிதசந்திரகாவிவன்னர்யோசனைவல்லருவரிநீர்க்கே
யர்செறுநல்லனையானேர்பைங்கூழின்பதிபானவாதியார்க்கே. [௧௪]

உன்னதசத்துருக்கெல்லாம்பெருங்கருடன்கூறனருக்குமிரதர்க்குப்
பன்னுசுத்தபடிகசொருபருக்குவேடர்கள்பதிக்குப்பசுருந்திக்கு

மன்னுமுருவர்க்குவஞ்சருக்குவஞ்சராங்கள்வர்மன்னருக்
கன்னியர்காரியமறிந்தேயனுக்கிரகநிக்கிரகமமைக்கின்றார்க்கே. [கஎ]

வரையினிடைத்திரிபவருக்கியாவரும்பூசிப்பவர்க்குமனத்திலன்பு
தரையினில்லாரிடத்தினில்லாதகல்பவர்க்குப்பாவிகளைச்சங்கரிக்கும்
விரிதருசெஞ்சடைநீலகண்டருக்குச்சிவிகையின்மேன்மேவுவோர்க்குப்
பரிமசிவாயருக்குத்தீர்த்தநதிகரைபெருக்காம்பகவனார்க்கே. [கஅ]

அறலுருவாயப்புனலின்வீழ்ந்தவர்க்குந்தோணியாயரும்புல்லாகி
நிறையுமழைக்காலமாயல்லாதகாலமுமாய்நிறைதலோடு
குறைதலாய்க்கந்தரமில்லாதவராயுளராகிக்குளிர்மாணிக்கம்
பெறுஞ்சட்டையுளரிலராய்க்கேள்வியுளராயிலராம்பெம்மானுக்கே.

சேட்டர்கனிட்டருமாகிவனப்பொருளாய்மலைமுழையாய்த் திருந்
தவோடு, மோட்டமுளதேருமம்புமுடையராய்ச்சேனைகளாயொளிர்பூ
ணுகிக், கோட்டுபறைகொட்டுதெறியேவுவோன்செய்வோனுங்கொள்கை
யோராய், நாட்டமுறுபரவிந்துருபிவாமப்பொருளாராதனார்க்கே. [உ0]

இதமாகிவழிநடக்குமவராகிவன்மைபெறுமிடையராகி
யதமுடையபிறப்பியற்றுமவராகிப்பிறப்பறுக்குமமலராகி
முதுகெலும்பாயெலும்பில்லாரூபராய்க்கூட்டமாய்முறைவீடாயார்
சதகுணத்திற்கூடுவாரிரத்நவுருவாய்நின்றதலைவனார்க்கே. (உக)

அரிசனரூபத்தர்பாரதமற்றோரடிபடுவோரம்பிற்சித்தர்
விரிவிசுவரூபர்விசுவம்பரிப்போர்விசுவவரதாவானார்க்குப்
பரியுமலைமகள்கணவனார்க்கிடபவாகனராம்பரமனார்க்குத்
தெரியுமுருவறிவரியசுந்தரத்தின்சுந்தரமாஞ்செய்கையார்க்கே. (உஉ)

சாட்சிக்குஞ்சாட்சியாய்முக்குணதீதருமாந்தம்பிராற்கே
யாட்சிகொள்வில்வார்ச்சனைகண்மகிழ்நவருக்கிரவுபகலற்றுளார்க்குக்
காட்சிகொளுங்காலகாலர்க்குவிசுவேசருக்குக்காசிவாழு
மாட்சிபெறும்பிறவாதவமுதசாகரியழகிமணவாளர்க்கே. (உ௩)

நிலஞ்சுமக்குங்குலவரையாய்மலையருவியாபுடைவைநிலவைப்போலுங்
கலஞ்சுமக்குமாரவடவீரராய்வீரருக்குங்கடவுளாகி
நலந்தருபேரருளுறையுளாய்நின்றவுமக்குநமோநமோவென்றோதிப் [றே
புலந்தருமன்புடன்போற்றிபோற்றியெனத்தோத்திரங்கள்புகன்றானன்

செப்பரியவுருத்திரமந்திரந்திறுடுமரியசகத்திரநாமங்க [சொல்லித்
ளெப்பொருளும்புகுவேதப்பொருள்களாகமப்பொருள்களெல்லாந்
தப்பரியவைந்துகரத்தானுமதப்பிள்ளைநின்றுசாற்றலோடு [னுல்.
முப்பொருளாம்பழம்பொருளப்பிள்ளைமுகம்பார்த்தினியமொழிகுவா

இவ்வண்ணந்துண்டிவிநாயகன்பணிந்துபணிந்துபுகழ்ந்தேத்திநின்
றேமைவண்ணக்கந்தரனைவாழ்ந்திறைனிந்துநிபைவமூத்தினேர்க, னுய்

வண்ணம்பெறுவரெனநைமிசவாணருக்குரைததானுலகம்போற்றுஞ்,
செப்வண்ணத்தபோதனனுஞ்சூதமாமுனிவனின்னுஞ்செப்புவானால்.

பத்தாவது கணபதிவந்தனைச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௩௩௪.

பதினோராவது,

கணபதிமறுத்துரைத்தசருக்கம்

வேறு.

பாவலர்க்கொடன்றியும்பாணியாதுபாணியாற்
பூவலர்க்கொடன்பினோடுபுந்திவைத்துநாடொறு
மூவருக்குமுதலதானமூர்த்திதாளையேத்துவார்
தேவருக்குமதிகரானதேவராவர்திண்ணமே. (க)

அருகுநின்றமைந்தனைதுண்டியானைதனையர
னுருகுமன்பினோடுபார்த்துவந்துநின்றனிளவலா
முருகனெங்குமேவினனும்முறைகொடாயைநுங்களைப்
பெருகுகின்றகாலம்யாம்பிரிந்துளோமெனச்சொல்வான். (உ)

உன்னையுன்றனிளவறன்னையுங்களைப்பயந்திடு
மன்னையாமெம்மின்னையாம்பிரிந்துவாழ்வதழகிதோ
வென்னைசொல்வமிமயம்விட்டெழுந்தவேழைவழியிலே
மன்னினுள்கொலென்னவின்னல்வந்ததென்றறிந்திலேம். (௩)

தாயிடத்தினீமிகுந்ததயவுபத்திசார்ந்துளாய்
போயடுத்தவாறுணர்ந்துபொள்ளெனக்கொணர்கெனு
வாயெடுத்துரைத்ததந்தைவார்த்தைகேட்டுவாழ்த்தியே
சேயெனத்திகழ்ந்தயானைசிந்தைசெய்துசெப்புமால். (௪)

இமயவெற்பினுக்குமேருகயிலைவெற்பிதற்குமே
யமைதலுற்றநெறிவெளிக்குளாயுதகோடியதிகமே
கமையெடுத்தவெமையளித்தகருணையைக்கணருமையா
முமைபவட்கும்வழிவரச்செயுறுதிமெத்தவருமையே. [௫]

எம்பிராட்டியென்னையீன்றவிமயராசகன்னிகை
தம்பிரானனுப்புகின்றதையலார்கள்வஞ்சியின்
கொம்பனார்கள்பாலினிற்கொழும்பழம்விழுந்ததா
கம்புபாடலாடலேகபந்துநண்ணினுள்கொலோ. [௬]

அன்னமன்னமின்னனார்களாடல்பாடல்வையக
மன்னிவிக்கினங்கள்செய்தியான்விலக்கவல்லனோ

பின்னையுற்றபேரிடத்தில்விக்கினஞ்செய்பெற்றிபோ
லென்னையாளுமன்னைமுன்னிழைக்கின்மோசமெய்துமே. [எ]

வேதவிந்துரூபமேவவேணுமென்றுவந்தநீ
ரேதினல்வினைதமாதராரையங்கணேவினீர்
காதன்மாதராடல்கண்டுகண்களிக்குநங்கைபா
லோதுகின்றயான்விலக்கிலூறுகோபமேறுமே. [அ]

அன்னைசீறிலன்னள்கோபமாதரிக்கவல்லரா
ரென்னையாவுயிர்க்கொரீறுவேண்டினேரிழைப்பரீ
துன்னையான்விடுத்தகன்றிவாறுசென்றுஞற்றிலேன்
பொன்னடித்துணைக்கணன்புபூண்டுளேனெனச்சொல்வான். [௯]

உனதுபாதவருளதாகுமூறுதேன்விரும்பியென்
மனதெனுஞ்சுரும்புசென்றுமண்டுகின்றதென்சொல்கே
னனகமெய்த்தவங்கள்செய்தடுத்திடாவரும்பொரு
டனதுகையிலுற்றபோதுதள்ளுவான்கொல்வள்ளலே. [௧௦]

தந்தையானநீயெனக்கோர்தாயுமானதுண்மையே
யெந்தையானேர்வேறிடத்திலெய்துதற்கிசைந்திலேன்
புந்தியாரவுன்பதாம்புயம்பணிந்திருக்கவே
மைந்தனுமெனக்குநீவரம்பணித்தியையனே. [௧௧]

கூறுமாதர்மீதிலெய்துமன்பினூறுகோடியொன்
றூறுகூடியையவுன்பதத்தில்வைத்தவவர்களே
யேறுகின்றவானவர்க்குமிறைவராகுவாரெனத்
தேறுகின்றமறைகணின்றுசெப்புகின்றவப்பனே. [௧௨]

கற்பகோடிகாலமைங்கனற்குணின்றருந்தவம்
வெற்பினுச்சிமீதிருந்திழைத்தமேலவர்க்குமே
நிற்பணிந்துளோர்கள்சேவைநேடினும்பெறுததா
லற்புடனின்பாதசேவையன்றியான்புறத்துறேன். [௧௩]

தருமசிந்தையறிவுளோர்கள்சங்கரன்பதாம்புயத்
துருகுமன்புபுண்ணியமதுறுதிகொண்டவுதவியா
மருகுநின்றமனைவிமைந்தராண்டபண்டமுடலமும்
வருவதொன்றுமில்லையென்றவாய்மைவாய்மையல்லவோ. [௧௪]

சங்கராபராபராதயாகராமனேகரா
பொங்கராவணிந்திடும்புரகராவராகரா
விங்குவந்துனைப்பணிந்திணைப்பதத்திலன்புகொண்
டங்கணைதுகின்றிலேனெனப்பவொப்பிலப்பனே. [௧௫]

எம்பிரான்புகழ்ச்சிகேட்டவிருசெவிக்குமினிமையா
னம்பிநின்றன்வடிவுகண்டனயனமுற்றநன்மையே

கம்பியாதுபூசைசெய்தல்கைகளுக்கதுறுதியே
தம்பிரான்றன்பரிகலங்கள்சாற்றுநாவிற்கேற்றமே. [௧௬]

பனுநினுக்குமுறுதியுன்றன்வடிவையுன்னுமாறெனத்
தனையளித்தவரன்முனின்றுதந்திசாற்றினெனுப்
புனைமலர்ப்பொதும்பர்நைமிசத்திருந்தபுனிதரா
முனிவருக்கிபம்புசூதனின்னபின்னுமொழிகுவான். (௧௭)

பதினோராவது கணபதிடலத்துரைத்தசருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௩௱௰௧.

பன்னிரண்டாவது,

தாருகன்கதையுரைத்தசருக்கம்

வேறு.

கரணமும்புலன்களுங்கலங்கிடவுடல்கலங்கு
மரணவேதனைசனனவேதனையுறமாட்டே
னரனுன்னுமமுஞ்சரணமுமேதுணையரவா
பரணசங்கரவிங்கெனைப்பரிந்தருள்வாயே. (௧)

வேதநாவினன்வாதராயணனுரைவிரித்தே
சூதனேதுவானுனதுதாடுணையெனச்சார்ந்தேன்
பேதையேன்றனைக்கைவிடேலென்றரன்பெருஞ்சீ
ரோதுமைந்தனுங்கணபதிக்கிறையுரைத்தனனே. (௨)

அருகழைத்தனன்றழுவினன்றுண்டியையங்கரனைப்
பெருகுநின்றுதிகேட்டுளமகிழ்ந்தனம்பெரிதே
தருவரங்களிங்குனக்கியாந்தராதனவுளவோ
முருகனீயுமைமூவரும்பிரியராநமக்கே. [௩]

மறையின்வித்தகமறைப்பொருளாகுநந்நாம
நிறையுந்தோத்திரம்புகன்றனைநீசிரஞ்சீவி
மறையுமித்துதிபுகன்றுளோர்நினைத்தவையனைத்தும்
பெறுவருன்றனைப்போலென்றான்பேசுவன்பின்னும். [௪]

மைந்தவேகமதாகவேமலமகடன்பாற்
புந்திவைத்துநீபுகுந்தவட்கொணருதிதாயே
தந்தைதன்னிலுமதிகமென்றருமறைசாற்று
முந்துமோனருந்தாயர்தான்முடிவைப்பரன்றே. [௫]

தாயர்கற்பினில்வழுவினராயினுந்தனையர்
மேயதீப்பிணிதீர்த்தவர்ப்புரப்பதுவிதியா

லாயதாலனையனைமனையிருக்கினுமவளை
நேயமாகவேதந்தைபாற்சேர்த்திடனெறியே. (௬)

அன்னதாலையவேகியேயுனதன்னையவளை
மன்னுமென்னிடத்துய்த்திடவேண்டுமேமைந்தா
கன்னிநம்பரிகலத்தமுதுண்ணுங்கற்புடையாட்
குன்னுநம்பிரசாதமீதுதவுதியுரவோய். (௭)

தகைமையாளவளிடத்தினிலேகியேசலியா
தகமகிழ்ந்திடப்புரிந்தெம்பாலவட்கொணர்குவையே
மிகவுமங்கனைநம்மிடத்தன்புமேவுவதே
திகழும்யாமுமன்னவளிடைச்சிந்தைசெய்வதுவே. (௮)

வாகுசேர்தருவடிவினிற்குணத்தினின்மதியி
னுகரீகமாமைந்தரைப்பயந்திடுநலத்திற்
போகம்யாவையுந்தந்திடுஞ்செயலினிற்பொலிந்தா
ளாகையாலவளிடத்தில்யாமன்புவைத்தனமால். (௯)

சிதடராயினுஞ்சிந்திக்கிற்செல்வமுற்றிடுவார்
புதர்களுந்நினையாரெனிற்போகமுற்றிலரே
யிதமியாவர்க்குமளித்திடுமிறைவிகல்யாண
முதல்விதன்னையாம்பிரிந்திருக்கின்றதுமுறையோ. (௧0)

ஏகுகின்றநீயங்கவடனையிதயத்திற்
ருகமோடுறநினைத்தனைசார்குவையாயிற்
போகுமந்தநற்காரியம்வாய்த்திடும்புகழே
யாகுமாறுநின்றுணைகுகன்புரிந்தனனதுகேள். (௧௧)

வேறு

ஏருறுங்குகனுனும்பியெமதேவனுடனே
சேர்பவானியடிசிந்தனையில்வந்தனைசெய்தே
தாருகன்றறுகணற்கரசனுனதகைமைப்
போருகாதவனைவென்றுபுகழ்பூண்டனனரோ. (௧௨)

அன்னதாருகனதன்மையறைகின்றனமவ
னுன்னருந்தவமுஞற்றிமலருற்றவயனுர்
மன்னுகின்றவரநமதுவரம்வவ்விவலியாற்
பன்னுமூவுலகும்வென்றிசைபடைத்தனனரோ. (௧௩)

விண்டுவோடயனுமெண்டிசையின்மேவுமெவருங்
கண்டகன்கொடுமைகண்டுகடல்காடுமலையுங்
கொண்டவண்டமிசைகூடுமிடநாடிமறுகி
மண்டியோடினர்கரந்துருவமாறினர்களால். (௧௪)

தேவராசன்முன்விருத்திரசெயங்கொடிறல்சேர்
தாவில்வச்சிரமோர்தண்டெறிதுரும்புதரவே

மேவுமாதவர்தம்வேடமுடன்மேதினியின்மேற்
பாவைமைந்தனொடுபன்னகுடிமன்னினனரோ. (க௫)

அங்கிபங்கவனடுக்களைமடைத்தொழில்செய்வான்
மங்குகின்றவருணன்புனல்வழங்கியுறுவான்
றுங்கவாயுமனையிற்றுகடுடைத்துலைகுவான்
றங்குதேவரவன்சாற்றுதொழிலேற்றனர்களே. (கசு)

பானுவெங்கதிர்பரப்பிலனதெத்திடல்செயா
னுனமற்றையவர்போனவழியாரறிகுவார்
தானம்விட்டுயிர்தபோவனமும்விட்டுமறைதேர்
மோனர்வெற்புறுமுழைஞ்சினினுழைந்தனர்களே. (கஎ]

ஆனகேளசுரருக்கிகலனனவரியுந்
தானவன்சமரினெக்துதளர்வுற்றுவலிபோய்
மீனமாயுவரிமீதினில்விழுந்ததுமலா
னுனமுற்றொழியுமின்மினியையொத்தனனரோ. [கஅ]

அன்னவூர்திதன்மனைவதியகன்றவனியிற்
றுன்னுநம்பிரமமாபுரமதிற்றுரிசிசேர்
பன்னசாலைபழைமைப்படவமைத்ததனிலே
மன்னிவாணியொடுமாதவரின்வேடமலிவான். [கக]

இத்திறத்தமரர்யாவருமிடைந்தயரவே
முத்திறத்துலகும்வவ்வியமுரண்கொளசுர
னத்தெடுத்தவனலங்கொள்பதிநண்ணியவன்வாழ்
சித்திரச்சபையிருந்தரசுசெய்தனனரோ. [உo]

அன்னவேலையவனுற்றவிரசாநதியதிற்
றுன்னுமங்கிவெகுசூலமுனைகொண்டொடரா
மன்னுமங்கவனைவாட்டியிடவோட்டமுறுவான்
பின்னரங்கண்மருவான்றனிபெயர்ந்துபடர்வான்.

நமதுநெற்றியுறுகாட்டவனல்கேட்டழிகுவான்
சமரெடுத்துநமிடத்துறுதல்சற்றுநினையான்
குமாதாருகனெனுங்கொடியகொற்றவசுர
னமரரைத்திறலடக்கியுலகாண்டனனரோ. [உஉ]

ஆனகாலைதனிலண்டர்பலர்கூடியரிசேர்
தானமானபலதேடியெதிர்சார்ந்துதொழுதே
யூன்முற்றொருளிமழுங்கியுறலோர்ந்துளம்வெரீஇ
மானமுற்றதிசயத்துடன்மயங்கினர்சொல்வார். [உங]

வரிசிலைக்கணையிலசுரர்கிளைவாட்டுதிறல்சே
ரரிபடைக்கலமெமக்கெனவடைந்தனமியாம்

புரியும்வெஞ்சமமும்வாகுபெலமும்பொருவிலா
வுரியவைந்துபடைமைந்துமெவனுற்றவுரவோய். (உ௪)

வீரியத்திறையொளித்திவண்மெலிந்துறைதியே
லாரினிச்சரணெமக்குவிறலாண்மையுளவோ
தாருகக்கொடியதானவனைவென்றிடுதனிப்
போரிழைக்கிலலதேதுபுகலென்றுபுகலா. (உ௫)

தேவர்சிந்தனைகலங்கியிவைசெப்பலுமலர்ப்
பாவைகொண்கனதுணர்ந்துரைபகர்ந்திடுவனு
லியாவர்தாருகனைவெல்லுமவர்யான்முனமவன்
கோவவங்கியினில்வெந்துறல்குறித்திலிர்கொலோ. (உசு)

தேடிவந்தவசுரன்றனெதிர்சென்றுசிலைகால்
கோடிவெங்கணைகள்கோடிசதகோடிபொழியா
வாடியைந்துபடைவெந்துவடிவுங்கருகியா
னோடிவந்தகதையொன்றையுமுணர்ந்திலிர்கொலோ. (உஎ)

இனையதானவனைவென்றிடுவனென்றுணர்தரு
நினைவைவிட்டுவிடுநீவிரிவண்வந்துபுகலும்
புனையுமிவ்வுரையறிந்திடில்வளைந்துபொருமால்
வினையமொன்றுமறியீரெனவிளம்பிடுவனல். (உஅ)

மதுவைவென்றனனியானெனவிம்மன்னுலகுசொல்
வதுவறிந்திலிர்கொலண்டர்மகமாயிபரையாம்
விதுவணிந்தமுடிவிமலைசிவைதந்தவிறல்காண்
புதுமலர்க்கொடவள்சேவடிகள்பூசைபுரிவீர். (உகு)

வேறு.

அன்னவளுமங்கூறிலம்பிகையுமைசர்வாணி
மன்னுமாகௌரிதுர்க்கைமங்களைவிகடைவாமை
கன்னிகாமாட்சிசித்தைகாளிமாமயிடற்காய்ந்தாள்
பன்னுசாலாட்சிகார்த்தியாயினிபரையாமன்றே. (௩௦)

அவண்மகாமாயையானசிற்சத்தியகிலமெல்லாந்
தவறிலாமோகஞ்செய்யுந்தாயவடனைப்பூசித்தா
லுவமைதீர்மாயைநீங்குமுறுதியும்பெறலாமென்று
கவலுறுங்கடவுளோர்க்குக்கண்ணன்கூறினன்பின்சொல்வான்.

முன்னவள்சிவனுக்கங்கமுத்தொழில்புரியவல்லா
ளன்னவளுலகமெல்லாமாட்டுவித்தடக்குவாளாற்
பன்னியபலரையைப்பூசைபண்ணிலுய்ந்திடலாமேலாங்
கன்னிதன்னருளால்வென்றேன்கபிடவன்மதுவைக்கண்டீர்.

அம்பைதன்பதாம்புயத்தையருச்சனைசெய்தோமாகி
னம்பனுங்கருணைசெய்வானமக்குநல்லுறுதிவாய்க்கு
மிம்பரிற்செல்வம்யாவுமெய்திவீற்றிருக்கப்பெற்றே
யும்பர்காள்பிறவாச்செல்வமுறுதலும்பெறலாமன்றே. (௫௫)

பரமனைப்பரையைப்பூசைபண்ணுவோர்தங்கள்வாசற்
பெருகியசதுரங்கம்பிறைநுதன்மடவார்மைந்தர்
திருவுளயாவும்வந்துசேர்ந்திடுமவர்களெய்தா
வருமையாம்பொருளொன்றுண்டோவமரர்காளெனவுஞ்சொன்னான். ()

தேவியாம்பரையைச்சேர்ந்துசிவனொருகுமரன்றன்னைக்
கோவியலசுரன்மாளக்கொடுப்பனென்றமரர்க்கெல்லா
மாவியன்மார்பன்சொன்னனென்றுமாதேவன்மைந்தன்
ரூவியதறுகண்யானைமுகனுடன்சாற்றினனே. [௫௭]

பன்னிரண்டாவதுதாருகன்கதையுரைத்தசருக்கமுற்றிற்று.

ஆகந்திருவிருத்தம்-௫௭.

பதின்மூன்றாவது

கணபதியுடன்கடவுளுத்தரச்சருக்கம்.

வேறு.

பந்தனைசேர்பிரபஞ்சப்பற்றினைவிட்டோருளத்திற்பதியானானை
முந்தனையுந்தந்தையுமென்முதல்வனுமாமவனையருண்மூர்த்தியானை
வந்தனைசெய்வார்வினைத்தவரந்தனைத்தந்தருள்வானைவரனைச்சோமாஸ்
கந்தனைச்சிந்தனைசெய்தாற்கதிபுலகம்புகுநெறியைக்காணலாமே. [௧]

சங்கரன்சொல்வான்றண்டிடையைங்கரனைப்பார்த்துனதுதம்பியான
செங்கைவேலனைவிளித்துத்தாருகனைவதைபுரியச்செல்வாயென்ன
வங்கவன்றானஞ்சலிசெய்தருட்கடலேசங்காரத்ததிபனென்றே
துங்கமறைசொல்லுமுனையன்றிவல்லார்யாவரெனச்சொன்னனன்றே. [௨]

சூழ்வினைசெய்வார்தம்பாலாகாதகருமங்கடுணிவாருண்டோ
வாழ்வுபெறுமசுரன்வந்தகடைநாளிற்கொடுங்கனல்போல்வனைத்தகாலை
தாழ்வுறுதேவர்கள்பாருஞ்சுடரிலவிழுபதங்கமெனத்தளர்ந்தார்நாளும்
வெள்ளியுரிமாலயன்மானடுங்கியொடினர்யானேவிறல்செய்வேனல். (௩)

பன்னரியவரங்கொடுத்துப்பரிபாலனங்கள்செய்தாப்படருங்காலின்
மன்னியபுண்மரம்வயிரமெனவிபங்கருப்வாய்ப்படிந்திடாவோ
தன்னரியவிடமெழுந்தகாலமெனவாரோலாஞ்சுழல்கின்றாரா
னென்னுடைநாயகவுன்னையன்றியன்போலிகளொருவரெதிர்க்கலாமே

அடலரக்கன்வாணுளும்வலியுங்கேட்டவனுடனேயரும்போர்செய்யத், தொடருமென்றன்மனம்புகுதாதென்றுகுகன் புகலயாஞ்சொற்றேமன்றே, திடமுடனுன்ருய்பரையையருத்தியுடன்மனத்திருத்திச்சென்ருயாகில், விடலைவிசையம்பெறலாமெனவிசையைநாமங்கள்விளம்பினேமால். [௫]

துதிக்கைபெறுந்துண்டிகேளிந்நாமமியாரேனுந்துதிக்கப்பெற்றே
கதிக்குமமரிடைக்கலந்தால்வெற்றிதருங்கார்த்தியாயினியேகாளி
மதிக்குமுமைசிவைகவுரிசருவாணிசண்டிகையேமனுருத்ராணி
விதிக்கரியமிருடானிமலைமகள்பார்ப்பதிகமலைவிசையைமாயை. [௬]

ஒப்பிலாண்மாமாயைசாம்பவிமயேசுரியேயுயர்கல்யாணி
தப்பில்புரதகனிதுர்க்கைபவானிமுதலாப்புகலுந்தனிநாமங்கள்
செப்பியமர்க்களம்புகுந்தாற்செயம்பெறுவர்வாணுளுந்திருவுமுண்டா
முப்புவனம்பரிக்குமைந்தர்ப்பெற்றுவாழ்ந்திறவாதமுத்திசேர்வார். [௭]

அன்னவடன்பதத்துகளாமம்புவிசேடன்றலையாயிரங்களாலுந்
தன்னிகரிலாமாயன்கமடவுருவாயுநின்றுதாங்குவாராற்
பின்னருமுந்நாகங்களெண்மூன்றும்பரிக்கும்பெருமையன்றே
வுன்னுடையவன்னைபதந்தனைப்பூசித்தவணுமமுன்னுவாயால். [௮]

என்றுகங்கைமைந்தனையாமேவினேமவனிவ்வாறிதயத்துன்னிச்
சென்றுநாருகனையடர்த்தெதய்நிறனைப்பரிசுதிகழுந்தொந்திக்
குன்றனையதந்திமுகதுண்டிவிநாயகன்சரணங்குறித்துப்போற்ற
நன்றிகொளுன்ருயிடத்தினடத்தியெனவெடுத்துரைத்தானுதன்ருனே.

தனியேகச்சம்மதியின்றேனுனதுதம்பிகுகன்றனையுங்கொண்டே
யினியேகாபவனெல்லாவல்லமையுமுடையவனம்மிதயம்போல்வான்
கனிவாகுமன்னையிடத்தன்புமிகப்பூண்டுளான்கருணைத்தாயுந் [றே.
துனிதீரமைந்தனைக்கண்டான்மலையருவியெனமுலைப்பால்சொரியுமன்

நமக்குமவனிடத்தன்புமிகுந்ததன்றேகுமரனெனுநாமம்பெற்றேனெமக்குரியதொழில்யாவும்புரிந்ததனலழகாண்மையிறைமைபூண்டானுமைக்குநல்லபிள்ளையைப்பெற்றுளெனவேயொருநாமமுதவிசெய்தான்,நமைக்குரித்தாயனைதந்தைகருத்துவரநடக்குமவன்கண்டாய்துண்டி

அந்தரங்கத்தம்பிகையுமியாமுமிருந்திடுமமையத்தன்பின்வந்து,மைந்தனவனடுவிருந்துவிளையாடமகிழ்சோமாற்கந்தராஞேக், தந்தியவன்றனைக்கண்டாலுமைமகிழ்ந்தேயோடிவந்துதழுவிக்கொள்வாள், சிந்தையிற்றுமதஞ்செப்பாதவனுடனேகாயெனவேசெப்பினேன்பின். (௧௨)

உருகுமனத்தன்புபொழிவதுபோலஞானமுலையொழுகுதீம்பால்
பருகுவபோற்கிண்ணத்தில்வார்த்தளிக்கவுண்டுபசிப்பரிவுதீர்வீர்

திரிபுரையிங்குவந்திருந்தானமக்குழுங்கடமக்குநமைச்சேர்ந்தார்யார்க்
கும்,பெருகுமனுகூலமுமுற்சாகமனக்களிப்புமல்லாற்பிறிதுமுண்டோ

அலையெறியுமமுதவின்பவாரியாமவளுருவமவடன்பாத, நிலைமையு
டன்பூசித்தோர்வாய்தலிற்பங்கயமாதுநிருத்தஞ்செய்வா, டலைமைபெறு
மவனுமநினைப்பவர்களிகபரமுந்தழைப்பரென்றே, மலைமகடன்பெரு
மையெலாந்தொந்திவிநாயகற்குரைத்தான்மகிழ்ந்துவள்ளல். [கச]

இணையிலின்பசாகரமாந்துணையவனைப்பிரிந்திருப்பதியல்போவென்று
பணைமருப்புமுகத்தானைமுகந்தானுமைந்தனுடன்பகர்ந்தானென்றே
கணைவிழிபார்மயக்கிலுறுவாதராயணன்புகன்றகாதையெல்லா
மணவுறுஞ்சக்கரவனத்தின்முனிவர்தமக்கருட்சூதனறைந்தானன்றே.

பதின்மூன்றாவது கணபதியுடன்சடவுளுத்தாச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-சஎக.

பதினாலாவது,

கணபதிகுமரன்

றேவியைக்கண்டசருக்கம்.

தக்கபத்தராநவகாதசித்தர்தோத்திரங்கொடலைவனெட்டாங் [ன்
திக்குடையானெழிசையாறுறணிந்தானைந்தொழிலான்றிகழ்நால்வேத
முக்கணுடையானிருவர்க்கறிவரியவொருமுதலாமூர்த்தியான்ற
னக்குவடம்பூதியுங்கொளடியரடிப்பூமுடிப்பூவாக்கொள்வோமே. (க)

வேதவியாசன்புகல்வான்விசுவேசன்றொந்திவிநாயகனைப்பார்த்து
நீதயவாபுனதன்னையிடத்தேகாய்நீலமயிலேறிச்செல்லுஞ்
சோதிவடிவேலன்வரிலாங்கவன்றமதஞ்செய்யான்சுதனோநீமுன்
போதுதிதாமதம்புரிந்துகாலநீட்டிப்பதுவும்போதாதென்பான். [உ]

அங்கவடன்முகமாகும்பூரணசந்திரவுதையமதனைக்கண்டாற் (றே
பொங்குறுமென்மனக்களிப்பாம்புணரியெனப்புகன்றிடுமப்போதில்வந்
சங்கரனைப்பணிந்தெழுந்துவீராதிவீரனெனுஞ்சண்முகேசன்
றுங்கமுறுமன்பினொடுநாத்தழும்பத்தோத்திரங்கள்சொல்கின்றானல்.

எண்ணரியவேதங்களறிவரியாய்முடிவில்லாவிறைவாபோற்றி
நண்ணுசச்சிதானந்தசின்மயரூபாபோற்றிநம்பாபோற்றி
மண்ணுலகுபடைத்தளித்துத்துடைத்திடுமுப்பொருட்கதிபவரதாபோ
தண்ணளிசேர்தேவதாசார்வபூமாவுமாசகிதாபோற்றி. (ச) [ற்றி

வேலைகடந்திடுஞானவேலையெனுமுனிவர்களும்விண்ணுளோரு
[illegible]லுமறைகளுமறியாநின்றுளென்னுளத்திருத்துநம்பாபோற்றி

மேலவர்க்குங்காண்டரிதாய்க்கிட்டுதற்குமரிதானவிரைப்பொற்பாதஞ்
சாலவெனக்கின்றுதரிசனந்தந்தாண்டருள்புரியுந்தலைவாபோற்றி. (ரு)

சித்தசுத்திபெற்றவருந்தரிசனஞ்செய்திடவரியசெய்யபாதம்
பத்திசற்றுமில்லாதேன்கண்டுதொழவின்றருளும்பரனேபோற்றி
யெத்திறத்தேவரும்வணங்குமுடிமணிப்பேரொளிமழுங்கவிரவிசந்த்ரன்
றந்துகதிர்யாவையுமேசாயமிளிர்தருமுனதுசரணம்போற்றி. (சு)

சந்திரசூரியரங்கிதாக்குகதிரினநீக்கவரியதான
சிந்தையிலஞ்ஞானவிருடீர்த்தருள்சிற்சூரியனுஞ்சிவனேபோற்றி
முந்துமனவாக்கினுக்குமெட்டாதமுழுப்பொருளாமுதல்வாநாளும்
வந்தனைசெய்படியேன்முன்வந்தனைதந்தையுமானவரதாபோற்றி. (எ)

வையமிசையுன்பாதமகிமைதனையாரறியவல்லார்போற்றி
யுய்யும்வகைதிடபத்தியுண்டாகவெனக்கருளுமொருவாபோற்றி
வெய்யவினைதீர்த்தருளும்விசுவநாதாசிவனேவிமலாபோற்றி [றி.
யையவுன்பாதாம்புயந்தென்மனச்சுரும்புற்றேகளிப்பவளிப்பாய்போற்

மாமோகம்வந்துறினுமெனதுமனமுனதுபதமறவாவாழ்வு
தாமேவத்தந்தருளாயுனதடிமையெனக்குமரன்றமியேனுக்குத்
தூமேவுநின்னிருபாதாம்புயத்தைநாடோறுந்தொழுவதல்லாற்
பூமிதில்வேறொன்றுமில்லையென்றேபடிபூண்டுபோற்றிநின்றான். (அ)

கண்டுகருணைகராங்கடவுண்டியைங்கரனைக்கந்தவேளை
மண்டுகாதலிற்றழுவிவாய்த்ததுநங்கருமமென்மகிழ்ந்துசொலவார்
தண்டியுன்றன்றுணைவனுடன்சோதிவிமானத்திவர்ந்துன்றூயதாயார்
தண்டளிர்ப்பொற்றாளருளினமுததாரைகளருந்தச்சார்வாயென்பார்.

அன்னமெனுமென்னடைநும்மன்னைதரிசனம்பெறுதற்கடுத்ததான
நன்னயமாங்காலமின்றுவாய்த்ததுங்கட்கென்றுசிலநன்மைகூறப்
பொன்னொளிர்விமானமிசைப்புகுந்தனர்துந்துமிமுழங்கப்புட்பமாரி
துன்னிடத்தென்காலினுடன்கவரிகால்வீசிடவேதுணையிலாதார். (கக)

கண்டுதொழுதார்சேணிலம்பிகைவிமானத்திற்கட்டிநீண்ட
வண்டரும்பதாகையிவர்தம்மைவரவழைப்பதுபோலாடுந்தோற்றங் [க்
கொண்டன்முழங்கிடத்தோகைமயில்கணடித்தாலனையகொள்கைபோ
லெங்கன்மடைவிழியாராடுநாடகப்பேரிகைமுழக்குங்கேட்டாரன்றே. ()

இப்பரிசாற்றூரத்தேதொழுதுவிமானத்தில்வருமிருவர்சொல்வா,
ரோப்பிலெமதன்னைபதந்தெரிசனஞ் செய்திடவுற்றோமுறுதிபெற்றோம்,
முப்பொழுதுந்தொழப்பெற்றோமோனஞானியர் வணங்குமுதல்விதன்
னைத், கைப்பொருள்போலுநவுகருணாநிதியையானந்தக்கனியையென்
பார். (கங)

இன்னபகர்ந்தவர்கடிதுவந்துவிமானந்திழிந்தவியல்பையெல்லாம், பொன்னின்விமானத்திருந்தவம்பிகை கண்டாளுடலம்புளகங்கொண், டாள்.மின்னனையாராடுகின்றநாடகத்தைக்கைய மைத்துவிருப்பமுற் றே,யன்னைமுன்னர்வந்துதொழுமைந்தர்தமைப்புகுந்தெடுத்தேயணைத் துக்கொண்டாள். (கச)

பாவையவளணைத்தவுடன்மைந்தரிடத்தன்பின்முலைப்பால்பீர்விட்டே
யாவல்பெறுமைந்தரங்கமெங்குநனைந்திடக்குளிர்ந்தேயகம்பூரித்தார்
தேவியவளிடத்திருந்தநந்திகணநாதர்கண்டார்செப்புகின்று
ரேவிடமைந்தரும்வந்தாரினிச்சிவன்பாலுமைகடிதினேகுமென்பார். ()

அம்மையரனிடஞ்சேரவாய்த்தநனுலாதித்தவத்தமின்னுண்
மைம்மருகண்ணிபராடல்விலக்கிபபராதமெய்தாவகைபெற்றேமியாஞ்
செம்மைபெறுதிருமால்கண்மலர்கொடுபூசித்தபதந்தெரிசித்தேத்த
வெம்மையாண்டருள்பரமனிடத்துறப்பெற்றேமென்றேயேமாப்புற்றார்

கணங்களுநந்திபுமிவ்வாறுளமகிழவம்பிகைதன்காலில்விழ்ந்து, வணங்கியமைந்தரைப்பார்த்துமனமகிழ்ந்துசில சொன்னளென்றேமேலாங், குணங்கொளும்பராசரனர்குலமைந்தன் கூறியவக்கொள்கையெல்லா, மிணங்கியநைமிசர்க்குரைத்தான்சூதனுஞ்சைவராசேந்த்ரன்றனே. ()

பதினாலாவது கணபதிநாரன்றேவியைக்கண்டசருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-சுகஅ.

பதினைந்தாவது,

தேவியுடன்குமாரருத்ரச்சருக்கம்

வேறு.

பெரியதாருகவனமுனித்தலைவோரனுப்பியபிளிறடற்
கரியுரித்தமராடுமைந்தினர்கந்தனைத்தருபரமர்தா
டெரியுமாமலர்கொண்டுசிந்தையிலன்புகொண்டுதினந்தொறு
மரியபூசனைபுரியுமாதவரடிகள்பூசனைபுரிகுவாம். (க)

பெருகுமாதவமருவும்வேதவியாதமாமுனிபேசினு
னருகுநின்றநன்மைந்தர்தங்களையம்பையாதரவோடணைத்
துருகுமன்பொடுகண்களித்துளமுங்களித்தனளோதுவான்
முருகசங்கரரேவணிருந்தனர்மொழிகுகந்தினரோவெனு. (உ)

ஐயவுங்களையின்றனுப்பியவையராமெனதண்ணலா
ருப்பவென்னையுமேகினைந்தனரோவுவந்தனரோசொல்விர்

செய்யவான்கருணைக்குநானெனசெய்குவேனெதிர்செல்லும்யான்
கையிலென்சிலபரிசுகொண்டெதிர்காணுவேனெனநாணுவாள். ()

அன்னைசொல்லியவாசகத்தையுணர்ந்தனன்குகனறைகுவா
னின்மலப்பொருணித்தியச்சுகர்நிர்க்குணப்பரமப்ரியர்
தன்னையொப்பறுசச்சிதானந்தத்தலைவர்தன்மையறிந்தநீ
யின்னராகியவிறைவரைச்சுகமோவெனச்சொலவிசையுமே. (௪)

அண்டம்யாவையுமுண்டுபண்ணியளித்தழித்தூளரளவிலாத்
திண்டிறற்பொருகாலகாலர்சிறந்ததேவரெலாரையும்
வெண்டலப்படவேயொடுக்குவர்மிக்கசாந்தசொரூபர்த
மண்டுசெல்வமனந்தபேதமதாகுமப்படிமகிமையே. (௫)

இமைநொடிப்பொழுதீசனுர்க்கிமையோர்களிந்திரன்மாலய
னமைதல்பெற்றதுநாசமுற்றதுமளவில்கோடிகளல்லவோ
தமையடுத்தவருக்கனந்தசுகங்கொடுத்திடுதலைவனுர்
நமையளித்தவர்சுகமதோவெனநவிலலுற்றதெனன்னையே. (௬)

பிறையணிந்தவரடியர்தாட்டுகள்பெற்றபேர்விசும்பெய்துவார்
சறுவதேவர்செய்பூசைகொண்டவர்சத்யலோகமதாதியா
நிறைதரும்பலலோகபோகமுநேருவார்கரையற்றதோர்
குறைவிலாவமுதக்கடற்சுகமோவெனச்சிலகூறுமோ. (௭)

அண்ணலாரிருபாதபங்கயமுற்றதூளியோரணுவிலே
கண்ணனிந்திரனயனுமன்னர்களத்திரங்களும்வந்தது
மெண்ணிலாதனபின்னருள்ளனயாவும்வந்துபிறந்தது
முண்மையென்றுசிவன்றனுண்மையைநாலுவேதமுமோதுமால். (௮)

மோகமுற்றவரறிகிலார்சிவன்மகிமைநன்னெறிமும்மல
பாகமுற்றவரறிவர்வேறுளபண்ணவர்க்குநமண்ணலோ
டேகமுற்றுரைசெய்வதும்மறியாமையேகடையூழியிற்
சோகமுற்றுடன்யாவுமற்றிடுதூளியாக்குவதுண்மையே. (௯)

இந்துசேகரரீசர்சங்கரர்நமனைவெல்விசுவேசனு
ரந்திவண்ணர்பராபரப்பொருளாதிநாதர்புராந்தகர்
நந்திவாகனரம்பிகாபதிநயனமூன்றுடையாரென
மைந்துகொண்டிடும்வேதம்யாவும்வழுத்திடும்பொருளல்லவோ. (௧௦)

அண்ணலார்சிவலிங்கபூசைசெய்தண்டமுற்றுமளித்திடுந்
திண்ணறாசுரேசர்வாசல்கள்சென்றுநின்றுதியங்கியே
கண்ணனரணனிந்திரன்சுரர்கண்கலங்குபிரம்படிக்
குண்ணெகிழ்ந்துவருந்தியோடியொளிப்பதின்றுணராய்கொலோ. [௧௧]

சனகர்போன்மனுவேதமாகமதத்துவங்களுணர்ந்திடு
மனகராயறிவோடொடுங்கிபடங்குசிந்தையராயினும்

பனகபூடணர்பூசைசெய்திபெத்திபெற்றிலராமெனிற்
கனகபூடணசுமையெடுத்திடுகரமெனத்தருவார்களே. [கஉ]

சென்மசாகரமூடழுந்தியதீனராமறிவீனர்தாந்
தன்மமார்தருபூதிகண்டிகைதாஞுவர்ச்சனைநாமமா
நன்மனுக்களிலொன்றணைந்தவர்ஞானவிளைராமென
வென்மனத்தினிலென்னுகின்றனனெம்பிராட்டியிதுண்மையே. [கங]

அன்னைமாரெழிலொழியவர்தூபிறந்தமாந்தர்களவர்பிறப்
பென்னையம்பிகையீசர்பாதமிறைஞ்சிடாரெனிலெம்பிரான்
பொன்னையன்னவிலிங்கபூசனைபொலிவினோடுபுரிந்துதஞ்
சென்னிகொண்டுவணங்கிடாதவர்சென்மமேயவசென்மமே. [கச]

உரனையின்றியதேவரைத்தமதுள்ளம்வைத்துமைபாகம்வா
ழரனைவந்தனைசெய்திடாதவர்நரகவேதனையாழ்வரால்
வரனையென்மனம்வைத்தபாதனைமட்டிலாதமகாபரா
பரனையேத்தவலார்களேபரலோகமேபதியாவரே. (கரு)

பரமர்பாதம்வழுத்துவோரவர்பாததூளிபரந்திடுந்
தரணியேபரிசுத்தபூமிதலத்தின்முக்கியதலமதா
முரமதாமரனைப்பணிந்திடுமுண்மைஞானியர்சரணமே
சிரமதிற்கொளுவோர்கள்சேவடிதேவர்வந்தனைசெய்வரே. (கசு)

எந்தையாரிணையடிவழுத்தியசிந்தையார்தமையீன்றிடுந்
தந்தைதாயொடுமூவகைப்பிதிர்வர்க்கமுங்கதிசார்வரான்
முந்துமங்கவரேவல்செய்தவரவர்களேவன்முயன்றுளோ
ரந்தமேலவரடிமையோர்களுமடைவரேயமருலகமே. (கஎ)

நவமதாகியபத்தியோடுபசாரமாம்பதினாறுட
னவனியிற்சிவபூசைகாடொறுமாற்றுவானருளாளனே
புவனமேத்திடுசைவர்வந்தணிபூதிசாதனப்பொலிவுடன்
சிவனையேதொழுமவனையேசிவனென்றுசிந்தனைசெய்வரே. [கஅ]

மயலொழிந்தனர்பரமர்நாமம்வழுத்துவோரிடமன்னியே
கயிலையாதியதலம்விடுத்தரனுடகம்பலகாட்டுவா
னுயர்தருஞ்சிவனருளிலாவிடிலொருவருக்குமவன்புகழ்
பயிலவர்ச்சனைசெய்திடப்புரிபாவகத்திறம்வாய்த்திடா. [கக]

வள்ளைவார்குழையன்னைகேண்மதிசூடிபாதம்வழுத்துவேன்
பிள்ளைமாமதியாதலாலதுபேதைதமைப்படவும்படு
முள்ளமாநரவுடையநின்பதசேவைபெற்றிடுமுறுதியாற்
றெள்ளுசிந்தைகலங்கிடாவகைசெல்விநின்னருடந்திடும். [உ0]

இமயநாயகியுனையழைத்திடவென்னையென்னுடனைங்கரத்
தமையனாகியதுண்டிநாயகன்றனையனுப்பிடவில்லையா

லமைதலுற்றனைசிவனுளத்தினிலம்மைநீபிரிவாற்றிலா
யுமையைவிட்டரனீங்கிலானனையுனையழைப்பதெவ்வாறரோ. (உக)

உன்னிடத்தினில்வைத்தசிந்தனைபோலவெங்களுமாபதிக்
கென்னிடத்தினுமில்லையைங்கரன்றன்னிடத்தினுமில்லையான்
மன்னுமன்பர்தமக்கனந்தம்வரம்புரிந்திடுமென்னைகேள்
பன்னுமுன்றிருவடிவமேநிறையும்பராபரன்படிவமே. (உஉ)

மைந்தனிவ்வுரைகூறமாமலைமங்கைகேட்டுமகிழ்ந்துள
முந்துமன்புறுமமுததாரையினுணவுபெற்றெனவுருகியே
தந்தமைந்தரையுச்சிமோந்தனடயவுடன்விழிபொழிதரு
முந்துதண்புனலாட்டியன்பமுதூட்டினளருண்முதல்வியே. (உரு)

வேறு.

இப்பரிசுபனிமயமாம்வெற்புதவுமங்கையுமையென்னையாள்வா
ளொப்பின்மைந்தருடல்கரத்தாற்றைவந்துசீராட்டியுரைத்தாளென்றே
முப்பொழுதுமேயுணர்ந்தவாதராயணமுனிவன்மொழிந்தவெல்லாந்
தப்பினைமிசாரணியமுனிவரர்க்குச்சூதமுனிசாற்றினனே. (உசு)

பதினைந்தாவது தேவியுடன்குமாரநுத்தரச்சநுச்சமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-சுசுஉ.

பதினாறாவது,

சுகமுனிச்சருக்கம்

வேறு.

அருமறையாய்முதலாகிநடுவாகிமுடிவாகியனைத்துமான
பெருமைபெறுபூதங்களைந்தாகிமுச்சுடராய்ப்பிறக்கும்யோனி
யொருமைபெறுமெண்பத்துநான்குநூறாயிரமாமுருவந்தோறு
மருவுமுயிர்க்குயிராகித்தாண்டவஞ்செயாண்டவனைவழுத்துவோமே. ()

மறைபுகல்வியாசமுனிவரன்புகன்றனம்பைசெம்பொன்மலர்ப்பொ
ற்றாளின், முறைமுறையாவிறைஞ்சிநின்ற மைந்தர்முகம்பார்த்தினிய
மொழிவதானு, ளிறைவருமையனுப்பும்போதியம்பியசொற்கேட்கயா
னிச்சைகொண்டேன், குறைதவிர்ந்தேன்மனங்களிப்பக்கூறுவீரெனக்
குமரன்கூறுவானல். [உ]

அம்பிகையும்பர்கண்மாதர்முடியொடுமெந்தாரத்தினலங்கல்சேர்ந்த,
செம்பொனடித்தலத்தில்வீழ்ந்தெழுந்து வாய்புதைத்துநின்றுசெப்புகி,
ன்று ,னெம்பிரானுனதன்னையிடத்திற்போவெனவென்னையேவும்போ
திற், றம்பிரான்மொழிந்தவுரைதனையென்னை யடியனுன்முன்சாற்று
கேனே. (௩)

அளந்தறிபாவழகுடையாள்சற்குணசிந்தாமணியாமமுதம்போல
விளம்பிடுவணம்மிடத்திலவள்போலுமன்புடையார்வேறுமுண்டோ
களங்கனிநற்குழலாள்விட்டகன்றதனாலுயிர்கருதவுங்கடனெல்லாகம்
முளங்கொடுமுற்றுவதனாலுமைவிரைந்தேயிவண்வருதலுறுதியென்றார்

என்றுரைக்குமமையத்திலெம்பிரான்விசையையெசயையென்னு
மாதர், குன்றிரண்டுதாங்கியபொற்கொடிபோல்வார்தமையனுப்பக்கொ
ண்டுவந்தார், நன்றுதருகனிவர்க்கமாபரணவர்க்கமுடனுகரீகந், துன்று
துகில்வர்க்கமெல்லாமுமையுடன்வேலனைவணங்கிச்சொரிந்தாரன்றே.

மாதரார்கொவெந்தகனிதுகிலாபரணவகைவகையதாக
வாதியாரனுப்பினவென்றன்னையானந்தங்கொண்டவற்றையெல்லாங்
கரதலடங்காதமனத்துடனெடுத்துப்பூண்டுடுத்துக்கனியுங்கொண்டா
ணீதியன்றிங்கிவணிருப்பதென்றுசிவனிடத்தேகநினைவேகொண்டாள்.

அன்னதுகண்டைந்துகரத்தோனுடனேயாறுமுகன்புறத்தேவந்தா
ன், முன்னர்வந்துநந்தீசன்கணநாதரடிவணங்கிமொழிகின்றார், லென்
னபுகல்வேமெமையாளையர்வரப்பெற்றுய்ந்தோமிறைவிமுன்னர்த், துன்
னவேபயந்திருந்தோஞ்சிவனருள்பெற்றோமினியெந் துயர்தீர்ந்தோமே.

எனப்புகன்றாரிமயமயிலெழுந்தருளத்தாமதந்தானினியேதென்றே
மனத்துயரந்தீர்ந்தநந்திபுகன்றிடச்செவ்வேளுரைப்பான்வருகின்றா
ளனைத்துலகுமீன்றருளுமெமதன்னையிவர்ந்தேகவணிபொற்சோதி
கனத்தவிமானங்கள்கடிதலங்கரிப்பீர்கடிமலராற்கணங்களென்பான். ( )

கட்டிமின்பட்டுமேற்கட்டிபொன்னின்குடைகளிடக்கயங்களெ
ல்லாஞ், சட்டமாநிரைத்திடுமின்கண்ணாடி தூக்கங்கள்சந்த்ராதித்தர்
விட்டொளிர்வதொருகோடிகோடியெனக்கோடிதொறும் விளங்கச்சேர்
த்தே, மட்டவிழ்பூஞ்சரங்களுடன்மணிச்சாமரமுமணியணிபாவகுப்பீரெ
ன்பான். (௯)

கொந்தரியுமலர்மாலைகுளிர்கொழுந்துவேர்மாலைகொன்றைமாலை
சுந்தரவிமானத்திற்சுடர்விடுபொன்னரிமாலை தூக்குமாலை
நந்தலிலாவரியணையினடுவணையவிரித்திடுநற்சலவைமீதிற்
கந்தமிகுபன்னிமலர்முல்லைமலர்பரப்பிடுமின்கணங்களென்பான். (௧௰)

இருளகிலவும்மெறிப்பவிந்திரநீலத்தின்வடத்திடைகடோறுந்
தரளவடந்தூக்கிடுவீர்சங்கரனுமுமையுமுடன்சார்ந்ததென்ன
மரகதமாலைக்கிடையேமாணிக்கமாலைகளும்வயங்கச்செய்வீர் [illegible] பாள
நிரையாம்பைகமுகினிரைந்தலைபழுக்காய்க்குலைகளுமே [illegible]
பொற்றூமத்துவிவரைச்சிகரமெனவலங்கரிப்பீர்புனைமந்தா
நற்றுமந்தேன்சொரியமலையருவிவீழ்வதுபோனாற்றுவீரால்

வற்றாதவருவிமணிகொழிப்பதெனவிடையிடைமாணிக்கமாலை
விற்றுவநூக்கிமதன்விற்கரும்புகணைகள்கொண்டேவிதானஞ்செய்வீர்.

மாணிக்கவிமானம்போம்வழிமுழுதுமலங்கரிப்பீர்மலர்ப்பூம்பந்தர்
காணிக்கைகளிவர்க்கமதுவர்க்கம்பானகமுங்கலந்துவைப்பீர்
சேணுற்றவரமாதர்திருந்துநடமாதரிருந்திளைப்புத்தீரத்
தாணுற்றவிருபுரத்துந்திருவாசற்றிண்ணைகளுந்துலக்குவீரால். (௧௩)

எம்பிரான்மகிழ்ச்சியினாலெதிர்வரினும்வந்திடுமாலெதிர்கொள்வெள்ளி
செம்பொனாற்பாங்கரெங்குந்திருமதில்விண்ணுலகளப்பச்செய்குவீராற்
கொம்பனாராடலொடுபாடலிசைவீணையிசைகுலவச்செய்வீர்
பைம்பொனார்தோரணங்கடுபெதீபங்களெங்கும்பரப்புவீரால். (௧௪)

மண்டபங்கண்மாளிகைகள்சந்திரகாந்தச்சிலையால்வகுத்தல்செய்வீர்
தண்டளிர்ப்பூஞ்சோலைதழைசாலையிளந்தென்றல்வரச்சமைப்பிப்பீரான்
மண்டுகொண்டற்படங்குமழைமலர்விமானம்மகரதோரணங்க [ன்
ளெண்டிசையோர்கொண்டாடவிந்திரவில்லாகிரைப்பீரெங்குமென்பா

வெண்பட்டுமெத்தைநடைக்காவணப்பந்தர்கடோறும்விரிப்பீர்மீதிற்
றண்பெற்றசுகந்தமலர்தான்விரிப்பீர்மண்டபங்கடம்மின்மேலாந்
திண்பெற்றபெருந்திருப்பாவாடைதிருக்கண்சாத்துத்தீபாலாத்தி
யெண்பெற்றசிறப்பெவையுமெம்பிராட்டிக்கமைப்பீரென்றானன்றே.

இடையிடைநீர்வாவிகளுந்தண்ணீர்ப்பந்தருமமைப்பீரென்றானந்தி
புடையில்வருங்கணநாதரவைபெலாமமைத்தனரப்போதுதூய [மேவுக்
விடையில்வருமெம்பிரான்விடைகொடுப்பவசைந்தசைந்துவிரைந்து
தடையில்விமானத்துவந்தான்பிருங்கியெனுங்கணநாதர்தம்பிரானே. ()

வேறு.

சதுரனம்பிகைகுமரன்முன்படர்தருபிருங்கிவிமானமே
லதிரவந்திடுசடுதிகண்டுளமயரநந்தியொடறைகுவா
னெதிர்புகுந்தனனியாவனோசிவனேவவந்தனனாவனா
லதிர்தருந்நமதிறலினாறிலோரளவுமுள்ளவனோசொலாய். [௧௮]

யாவனாகிலுநங்கணாயகன்டிமையேயலதில்லையே
தேவதேவன்மெய்யடியர்வந்திடுசெய்திகண்டிடுசீலர்தா
மாவலோடவரேவலாளெனவமைதலேகடனாகையா
னீவலாயெதிர்கொண்டுதொண்டொடுநின்றுநல்லுரைசொல்லுவாய். []

அண்ணலாரடியார்களாகியவன்பர்துன்பமகன்றுளார்
மண்ணெலாம்வழிபாடுறத்தகுமாதவத்தினரல்லவோ
நண்ணுமங்கவர்தமையிகழ்ந்தவர்நரகிலாழ்குவர்நந்திகேள்
டிண்ணையாகியவிதனிலோர்கதைசெப்புகின்றனன்மேலைநாள். [௨௦]

இடபவெர்க்கிடைசுகனெனத்தகுமிருடிவந்தனனவனுறுந்
சிமையமுற்றுறைபசுபதிச்சிவலிங்கமங்கதுதெரிசியா
வுமையிடத்திறைபூசையிங்ஙனுஞற்றுவேனெனவுன்னிறு
னமைதலுற்றுடனேவல்பெற்றிடுசீடரோடரனன்பனே. [௨௧]

ஆலயஞ்சிவனுக்கமைத்தனனதிகமாகியசிகரமு
மாலையாகியமதிலுடன்பலமண்டபங்களுஞற்றவுஞ்
சீலமேபெறுமாகமப்படிசெய்யுநித்தநைமித்தியங்
காலைமாலையொடுச்சியும்புரிகடவுள்பூசனையாற்றுவான். [௨௨]

அருணனுற்றிடுகாலையிற்கடிதறலின்மூழ்கியணிந்துநீ
றுருகுமன்பொடுகண்டிமாலையுறுப்பெலாமதுறப்புனைந்
திருவர்தேடருமொருவரர்ச்சனையினியபூவொடுமஞ்சன
மருமிகுந்திடுபளிதகுங்குமவாசமுற்றிடுசந்தனம். [௨௩]

மதுரவர்க்கமொடேகனித்தொகைமணமிகுந்தநைவேதன
மதிகமாகியசிவன்விரும்பியவாறுபத்துபசாரமும்
புதிதமைத்தெதிரில்சுகம்பெறுபூசையாற்றியிருந்தனன்
றுதிகொளுஞ்சுகனென்றுரைத்திடுசுமுகமாதவயோகியே. [௨௪]

மாதராடல்கள்பாடல்சந்நிதிவரிசையாவுமமைத்தன
னாதரித்திடுவில்வவர்ச்சனைபாதபூசையினர்ச்சனை
காதலாற்சிவனடியரர்ச்சனைகருத்தின்மீதிலருத்திசேர்
சோதியர்ச்சனையாற்றியேசுகமுற்றனன்சுகயோகியே. [௨௫]

புரியுமாதவமைந்தழற்கிடைபூம்புனற்கிடைபுரியினு
மரியபூசனைசெய்திலாரெனினந்திகேளவையவமதாந்
தெரிதருஞ்சிவபூசையற்றவர்செனனமுந்தவவிரதமு
முரியபுண்ணியகோடியும்பலமொன்றுமில்லையதுண்மையே. [௨௬]

அம்பிகாபதிபூசைசெய்பவரரியமாவிரதங்களுங்
கம்பமுற்றிடுதவமுமேசெய்துகாயம்வாட்டுறவேண்டுமோ
வெம்பிரான்சிவபூசையற்றவரெங்கணுஞ்சுழறவமெலா
நம்புபாவினிலோடியேதிரி*குழனிகர்த்திடுநத்தியே. [௨௭]

வழிதரும்பலபுண்ணியங்களுமாதவங்களுமாற்றினோர்
சுழிதருஞ்சனனத்தில்வந்துசுகித்திறந்துசுவர்க்கமுற்
றழிதரும்பலபுவனபோகமுமனுபவித்துழல்வார்களான்
மொழிதருஞ்சிவபூசைசெய்தவர்முத்திபெற்றிடுவார்களே. [௨௮]

வே று.

தேக்குமன்புடனேசிவபூசைசெய்
தாக்குபாக்கியம்பாக்கியமாகுமா

* நாடா.

னுக்கினுற்சொலநன்மையுண்டாகந்தி
பாக்கியக்கடவுள்பகர்காதையே. [௨௯]

எண்ணில்பாக்கியமியாவையுமெய்தியே
மண்ணுமோர்மணிமண்டபத்துற்றவாற்
பண்ணுகின்றபலத்தாலவற்றினுக்
குண்ணிகழ்ந்ததோருடல்வந்துற்றதே. (௩௦)

தக்கபாக்கியங்கள்சண்டையுற்றிடு
மிக்கவார்த்தைவினவியுற்றோநந்தி
தொக்கவிக்கதைசொற்றிடக்கேட்டுளோர்
நக்கனூர்சிவலோகத்தினண்ணுவார். (௩௧)

சங்கரன்றிருச்சந்நிதிமண்டபத்
தங்கண்மேவுமரும்பாக்கியங்களுட்
டெங்குமுற்றிடுமோர்தெய்வஞ்சூழ்ந்துள
பொங்குபாக்கியங்கட்குப்புகலுமால். (௩௨)

யாகமோவிரப்போர்தமக்கீதலோ
தாகமுற்றவிரதந்தவங்கொலோ
வாகமப்படிசெய்யரன்பூசையோ
மோகமற்றதுமுக்கியஞ்சொல்லுவீர். (௩௩)

சொல்லுதல்சத்தியம்பெறச்சொல்லுவீர்
வல்லவாறெனவோர்தெய்வம்வாய்திறந்
தெல்லையில்சிவன்சந்நிதியீதுகாண்
புல்லுபொய்கள்புகலவொண்ணுதரோ. (௩௪)

மேயமாமறைசொல்லும்விமலன்முன்
வாயினுற்பொய்புஞ்சொல்லமதிப்பரோ
தீயசொற்றோர்நரகினிற்சேர்வரீரன்
றேயதோர்சிவதன்மமிசைக்குமால். (௩௫)

ஆணையாகுமரன்சந்நிதானத்திற்
கோணிலாமொழியீதுகுறிக்கொள்வீ
ரேணுளீரியானிருக்குமிடமது
தாணுவன்பர்தனியிடங்காண்மினே. (௩௬)

எய்தியானிங்கிருக்குமிடந்தனிற்
செய்திகேட்குதிர்சேர்ந்தவன்வாய்தலின்
மைதிகழ்ந்திடுமோகரிவாம்பரி
மொய்தரும்பொருண்முன்னருங்கோடியே. (௩௭)

குடச்செருத்தலின்கோக்குலங்கோடியே
மடக்கொடிக்குலமாதர்கள்கோடியே

யடக்கமில்லாவணிப்பணிகோடியே
யிடத்திலுற்றிடும்யாசகர்கோடியே. (௩அ)

மதனமோகனவஞ்சியர்நாடகச்
சதனமங்கையர்தாஞ்சதகோடியே
யதனமாமைந்தராயிரம்பேரவர்
சுதனமாஞ்சிவபத்திதுணிவரே. (௩௯)

அன்னபுண்ணியராளடியார்குழாம்
பன்னுமூவகைப்பந்தவர்க்கத்துளோர்
மன்னுநாட்டிலுறமைந்தர்கள்யாவருங்
கன்னிபாகனுக்கன்பர்கள்காண்மினே. (௪0)

ஆங்கவனுற்றசெல்வமனைத்துமே
யோங்குபூசைக்குபகரணங்களாந்
தேங்குநாளொன்றிற்செய்பணிபூசைக்கே
தாங்குகோடிதனஞ்செலவென்பவே. (௪௧)

அன்னவன்றொருநாளவமாகவே
மன்னிலானங்கண்மாதவர்கூடுவார்
கன்னிபாகன்கதைதலைவல்வினை
தன்னையேயறிசாத்திரங்கேட்பனால். (௪௨)

அன்புறுஞ்சிவனன்பர்க்கருத்தியே
பின்பருந்தப்பெறுவன்விருந்தொடு
நம்பரம்பொருணுதனைச்சிந்திச்கு
மின்பமுற்றுடனேமாப்புறுவனால். (௪௩)

பூதிகண்டிகைபூண்டுமைபாகரா
மாதியார்முன்னரானந்தத்தாழ்குவான்
பேதியாநெஞ்சமென்றும்பிறையணி
சோதிபுண்ணியம்பின்னருஞ்சொல்லுமால். (௪௪)

அன்னவன்றன்னிடத்திலமர்ந்தியான்
சொன்னயாவையுஞ்சூழ்ந்திடச்செய்குவேன்
பின்னையோரிடம்பேர்கிலேனென்றசொற்
றன்னைக்கேட்டுத்தளர்ந்தபிறவெலாம். (௪௫)

வேறு.

இப்பரிசுசிவசரிதைதப்பாக்கியஞ்சொற்றிடக்கேட்டவேனையாவு [டே
மொப்பரியதிதன்பெருமையுணர்வதற்குமரிமரிதென்றுள்ளங்கொண்
தப்பிலிதனொடுதழுவிச்சார்வதுநந்தமக்குறுதியென்னச்சாற்றி
யெப்பொருளுமானபிரான்திருக்கோயில்சார்ந்துகலந்திருந்தவன்றே. ()

நந்திகேளாகையாற்சிவபூசைப்புண்ணியமேநலமாங்கண்டாய், சிந்தைமகிழ்சுகமுனியையிகழ்ந்தொருவனரகினிடைச் சேர்ந்தானன்றே, பெந்தையாரவரடியார்க்கிதம்புரிவார்தமக்கருளேயிசைந்துள்ளாராற், புந்திசெய்வாயெனக்குமரன் புகழ்ந்துரைத்தானெனச்சூதன் புகன்றிட்டானே. [சுஎ]

பதினாறாவது சுகமுனிச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-சுஅ௬.

பதினேழாவது,

சிவதன்மாதன்மச்சருக்கம்

உமைமுழங்கப்பகையின்றியுமையினின்றுபுலிமுழங்கவுயருஞ்சோதி, முழையிலரியினமுழங்கக்கரியினங்களருகினின்றுமுழங்கநீண்ட, கழைமுழங்குதடஞ்சாரற்கண்ணருவிமுழங்க வெதிர்கருஞ்சூற்கொண்டன், மழைமுழங்குகைலமலைவாசனையீசனைநாளும்வழுத்துவோமே. (க)

மறையோதும்வாதராயணன்புகல்வான்சிவபூசைமகிமையெல்லா
முறையோதுங்குமரேசனடிபோற்றிநந்தீசன்மொழிதலுற்றா [னன்
னிறையோனேசுகமுனியையிகழ்ந்தொருவனரகிலுற்றானென்றாயன்
குறையேதுநரகிலுற்றவகையேதுன்னடியேற்குக்கூறுவாயே. (உ)

வேறு.

வெற்படர்த்தவேற்குமரன்சொல்வானந்திமிக்கதொருகாதையிதைவிளம்பக்கேளாய், கற்பமதிலம்பரீடப்பேர்பெற்றகல்விமுனிகோத்திரத்திற்பிறந்துளோனு, மற்பவறிவுடையவனோர்முனிவனுளனம்பிகாபதிபாதத் தன்புபூண்டு, சொற்படிபூசிப்பதுவேசுகமென்றுன்னுஞ்சுகமுனிவரிடத்தில்வந்துசொல்லுகின்றான். (ங)

நெட்டூரனின்பமுறுபாக்கியங்கணிலவரமென்றுன்னுகின்றநெஞ்சன்வஞ்சன், மட்டூர்பூங்குழலுமையாள்பாகன்பூசைமறவாதசுகமுனியைப்பார்த்துச்சொல்வா, னெட்டுருமூர்த்தியார்பூசைபூண்டாயின்பசுகபாக்கியங்களியாவும்வேண்டாய், விட்டேரத்துன்பமுற்றாய்சுகப்பேர்கொண்டாய்விரகறியாயென்னநின்றுவிளம்பினனால். (ச)

அன்னவன்றன்வாய்மொழியையகத்திற்கொள்ளாரறிவிலா னவனுடனேயொன்றும்விள்ளார், மன்னுமிவன்மதியிலானெனவறிந்தார்மதியணிந்தார்பூசையினை மனத்தேவைத்தார், சொன்னதுகொண்டவனைவினைசூழ்ந்ததாலேதுன்பவரவாலிறந்தான்றெனபான்மேவு, மன்னவனார்தூதவனார்வளைந்து கொண்டார்மணிக்கயிற்றாற் பிணித்திழுத்தார்கொண்டுபோனார். (ரு)

கூற்றுவன்றன்முன்கொடுபோய்விட்டாரந்தக்கொடியோனைக்கண்டுசித்ரகுத்தர்தம்மைப், போற்றுகணக்கோடுவரச்சொலென்றான்வந்தார்போற்றினாரந்தகனங்கவரைப்பார்த்தே, சாற்றுமினிங்கிவன்செய்ததன்மாதன்மந்தானென்றானவர்தெரிந்துசாற்றுகின்றா, ரேற்றமுறுஞ்சிவத்துரோகங்கள்செய்தானிவன்பாவிபெயர்சொல்லவிசையோமென்பார்.

சொல்லரியபாவியிவற்கண்டபாவஞ்சுருதி விதிப்பரிகாரம்புரிந்தாற்றீரு, மெல்லையிலாநரகமெழுநான்குகோடியிடையெண்ணில்கோடிகற்பமிவனைவீழ்த்தி, யல்லலுறுத்தினுந்தீராதையவென்றா ரதுகேட்டேயமனடுங்கிபந்தாவென்றே, மல்லலுமைபாகனுர்க்கபராதஞ்செய்மாபாவிமுகத்தில்விழித்தனனேயென்பான். (எ)

சிவத்துரோகங்கள்செய்தபாவியின்றனைன்றிட்டிமுன்னே யுறவந்தபாவந்தீரத், தவத்தைநான்புரிவேனேபரிகாரந்தான்சாந்திராயணவிரதந்தான்செய்வேனே, வவத்தினிவன்றனையென்முன்னேன்கொண்டுய்த்தீரார்முகத்தில்விழித்தனனித்தினத்திலேயா, னிவற்றையொழித்திடமூலமகோரநாமமிசைதருமக்கரலக்கமுரைப்பேனென்பான். (அ)

மற்றுளபாவங்களைந்தும்பரிகாரத்தான்மாற்றலாஞ்சிவத்துரோகங்கண்மாற்ற, வுற்றதொருபுண்ணியங்கடவங்கடம்மாலொழிக்கலாமுபாயங்களொன்றுமில்லைக், குற்றமிவன்றனைப்பார்த்தபாவம்போகக் குமிப்பதினியென்னென்றுகூறுகின்றான், பொற்றொடியாள்பாகனுர் பாதபூசைபோற்றுவதேநலமென்பான்புகலுகின்றான். (கூ)

பாவரியபாதகங்கடவயோகங்கள் பவித்திரதானஞ்செய்தன்மோனஞானம், விரதமிவைமுதலாம்புண்ணியங்கள்கோடிமேவிடினுஞ் சிவபூசைமேவிலாரே, லூரமருவுமகத்தானபலமேயாகாதுறுதிதரும்பேறில்லையுலகோர்க்கெல்லாஞ், சரதமிதுசரதமேயதனுன்மேலாந்தன்மமாஞ்சிவசரணகமலபூசை. (க0)

மூடராஞேர்விமலர் பூசைசெய்யார்மொழியுமவர் வேதமிகழினராவர், தேடரியதவஞ்சென்மகோடிதம்மிற்செய்துறவே சிவபூசைசெய்யவாய்க்கு, மாடகப்பொற்சபைநடித்தார்க்கன்பராவா ரவர்களேதத்துவமெய்ஞ்ஞானராவார், நாடிலளித்திடுமணியுந்தருவுங்கோவுநாடாமலளித்துவிடுநாதன்பூசை. (கக)

ஆதிசிவபூசைபுரிபலத்திறுலேயயனுலகமாலுலகமதற்குமேலா, மேதனையசிவலோகமுத்திலோக மேவுந்தோரளவினையும் விளம்பலாமோ, காதலுறுகுலத்தானபவரிடங்கள்கருதுவேதாகமசாத்திரங்கள்கற்றவோதரியசற்குருவினுடதேசத்தாலுறும்பூசைகினைத்தவெலாமுதவுந்தானே.

உறுந்தாகமுற்றோர்க்குக்கங்கையாற்றினுறும்புனலல்லாற்கானலொழிப்பதுண்டோ, பெறும்பெறுகதிவிரும்பிலெய்தற்கெம்மான்பிரசமலர்

ப்பதமல்லாற்பிறிதொன்றுண்டோ, தெறும்பாவிதரிசனத்தின்பாவந்தீர ச்சித்திரகுத்திரரேநகதேவன்றுளி, னறும்பூவுமஞ்சனமுங் கொண்டுபூ சைநான்புரிவேனென்றுபின்னுநமன்சொல்வானல். (கங)

மன்னுபவவரையிடறவலாரிகையில் வச்சிராயுதமன்றே பரமன்பூ சை, யன்னதனுக்கையமிலைமண்பெண்பொன்னினுசையுந்தாபத்திரை யமவையுநீக்கு, முன்னரும்பாவிகட்குவிடமாகுமென்றேயோதினுனிரு ந்திடுமப்போதுதன்னிற், றுன்னருங்கானகத்திலொரு முனிவன்கூவுந் தொனியதனைவினவியமன்றுளங்கினனே. (கச)

மனங்கலங்கிச் சித்திரகுத்திரர்தம்மோடு மறலியுமவ்வனத்தேகிமு னியைக்கண்டான், கனந்தருமெய்ப்பூதியின்முப்புண்டரங்கள் கண்டி கைமாலிகைவிளங்கவிருந்தோன்றுளி, யினந்தருமெய்க்கணக்கருடன் வீழ்ந்திறைஞ்சியேதையாமுனிவரனேயிந்தக்கானி, லனந்தசுகந்தருசி வபூசனையைச்செய்தேயசையாமலிருக்குமுன்பாலுரையாதென்றான்.

அன்னவுரைகேட்டலுமேசாகமூல மருந்துமருந்தவன் புகல்வான் றென்றிசைக்கோர், மன்னவனேசிவத்துரோகங்கள்செய்தமாபாவியொ ருவனிங்குவரவேகண்டேன், றுன்னுமவன்றனைக்கண்டபாவமென்பாற் றொடராமல்விடமுண்டசோதிநாமந், தன்னைமனக்கலக்கமுடன்கூப்பி ட்டேனுன்சாற்றியவச்சத்தமங்குச்சார்ந்ததேயோ. [கரு]

ஆயவனைநீவிருமேகண்டீர்போலுமருந்தருமவடிவாகு மவரன்றே நீர், தீயவனைத்தான்கண்டபாவந்தீரச்செய்கருமமிவையென்றுசொல்வீ ரென்றே, நேயமுடனுரைத்தளவேமுனிவனேடுநிலைபெயர்ந்து சித்திர குத்திரரதம்மோடுந், தூயமுனிசுகனிருக்கும்வனத்தில் வந்தான்சுருதி வழியிருவினையுந்துடைத்தல்செய்வான். [கள]

சகத்தில்வழிதனிற்கிடந்துமின்னு மிப்பிதன்னையொருதகட்டு வெ ள்ளிதானிதென்றே, யகத்தின்மடவாட்குடைமைக்காகுமென்னவதை ப்பற்றுமதுபோலுமாசாபாசச், சுகத்தைமுற்றுமெண்ணுமன்முத்திவே ண்டித்துளிர்கனிகாய்புனலருந்திச்சோகநீங்கி,மகத்துவஞ்சேர்சிவபூசை யுறுதிபூண்டமாமுனியாஞ்சுகமுனியைவணங்கிச்சொல்வான். [கஅ]

என்னுடையவுலகிலியானிருக்கும்போதிலீனமுறுமொருபாவி சிவ த்துரோகி, தன்னையான்வரக்கண்டேன்கண்டபாவந்தனை நீங்கவுபாய மொன்றுதான்சொல்வீரென், றன்னசமன்சொலச்சுகனு முனிவன்சொ ல்வானவனமதுதபோவனத்திலருகுசார்ந்தான், றுன்னரியதவங்கள்பல செய்தானன்னேன்சூழ்வினையாற்சிவபத்திதொடர்ந்திலானல். [கசு)

அப்படியாயிருந்ததவனதிட்டங்கோடியருந்தவங்கள்செய்தாலுமா வதென்னே, மைப்படியுங்கண்ணுடன்பாகன்பத்திவந்திலதாலாங்கவற் தமறலிகேளா, பொப்பரியசிவபூசைப்பலத்தினுலேயுருதபொருளோ

ன்றுளதோவுலகமூன்றின, மூபபொருளுமப்பொருட் குழுதன்மையப்பதழுமூப்பொருளுங்கைப்பொருளாய்முடியுமன்றே. (உ0)

சாற்றுமகாமேருவரைச்சிகரத்துற்றுற்சந்திரசூரியர்கள்சகலாசமேய்து, மாற்றரும்பாதலத்துற்றால்வருமோவன்னவாறு சிவபத்திவந்தால் வருங்காண்முத்தி, யாற்றுறுபூசைக்கிடுக்கண்பலவுமெய்துமவைவிலக்கிப்புரியிலருங்கதியைச்சேர்வார், பொற்றுதற்குத்தலைவந்தாலவற்றைநீக்கிப்புரியாதார்படுநரகிற்புகுவாரன்றே. (உக)

மன்னுசிவபத்தியில்லாமாந்தர் தங்கள்வாண்முகமபார்த்திடிற் பாவமாகுமேமேலோ, ரன்னவர்தமுகங்காணில்வானிலுற்றவாதித்தன்றனைநோக்கிப்பூதிபூசல், பன்னியவப்படிசெய்யிற்பாவநீங்கிப் பரிசுத்தனுவனவையெவற்றுமென்னிற், றன்னிகரில்லாதசத்திவடிவாம்பூதிதனைப்பூசும்பலத்திலுற்றதன்மைத்தானே. [உஉ]

சொல்லரியஞானசத்திவடிவாநீறுதூளனஞ்செய்திடின்மயிர்த்துவாரமெல்லா, மல்லறவிராவுடையாளாகவேமூன்றரைக்கோடி சிவலிங்கவுருவமாவன், மல்லல்பெறும்பூதியணிவோர்கடாமே மகத்தானசிவலிங்கவடிவமாவர், புல்லுபுவிப்பிரதிட்டாலிங்கந்தன்னிற்பூதியணி யோகியுருப்புனிதலிங்கம். (உங)

காசிமுதலாந்தலஞ்சேரிலிங்கமெல்லாங்கருதிலசையாத தாபரவிலிங்கம், வாசியாஞானசத்திவடிவாநீறுவனையோகியுருவுசரலிங்கமாகு, நாசமிலாவன்பரிடத்திருந்துநித்தநைவேத்ய முதலெவையுங்கவர்தலாலே தேசுபெறுஞ்சிவயோகர்பூசைமேன்மைசிவனறிவனேவிலனோ தெரிந்திலோமே. (உச)

கன்னிபராசத்திகைகள்குவித்தேதபாலிங்கனம்புரியாவுடையாள்சேர்திருவிலிங்க, மன்னியதன்கைகுவித்தஞ்சலிசெய்யோகிவாய்த்த வாவுடையாள்சேர்சரவிலிங்கஞ், சென்னிபெறுமிரண்டிலிங்கந்தன்னிலெங்குஞ்சென்றுவருஞ்சிவயோகியாகுஞ்செல்வ, வன்னசரலிங்கத்திலிருந்தெந்நாளுமரன்போனகாதிநுகர்ந்தமர்கின்றனே. (உரு)

அருமறைகளன்பரிடத்திருந்தெந்நாளுமரன்பூசை கொள்வனெனவறைந்தவன்றே, அருமைருசிவயோகிபூசையொன்றுஞ்சாலுமெனவியமப்புகிமேற்றருமமேளார், இருமைபெறுதிரலிங்கபூசைநாளும் பிரியமுடன்செய்துபத்திபெற்றுவாநீண்டு, மருவுசரலிங்கமாமன்பர்பூசைவாய்த்திடச்செய்தேமுத்திமருவலாமே. (உசா)

அன்பர்தமக்கிருப்பாமரென்றேமறைகின்றதால் வேதமரனுர்நாமம, தன்பரிவினிலனத்தவுடன்கண்ணீர்வாரத்தழுதழுப்பநாவுடலம்புளகம்போர்ப்ப, வின்பர்ஞானத்தம்பெருசப்பெற்றேனிறைவாறுபார்க்

குளவன்ஞானதீரன், றுன்பமில்லாநான்குவன்னத்தாரும்பூசைசொன்னமுறைசெயிற்பாவத்துயர்தீர்வாரே. (உஎ)

செல்வமுற்ருேன்பொருளளவின்சிறப்பாற்பூசை செயவேண்டுமுளோபமுற்ருனரகஞ்சேர்வன், சொல்லரியவானந்தக்கனமாய்மேலாஞ் சுயம்பிரகாசமுமான சோதிதன்னைக், கல்வியறிவாம்பொருளைக் காணவேண்டிற்கருத்துடன்பூசிக்கவெதிர்காணலாமே, பல்வரஞ்சேர்சிவபூசைகாட்டுத்தீப்போற்படர்பாவக்கனலழிக்குமழைகண்டாயே. [உஅ]

இப்படியாஞ்சிவபூசைமேன்மையின்னமெத்தனையென்றுரைத்திடுகேன்யமனேகேளாய், மைப்படியுங்கண்டனபராதஞ்செய்த மாபாவிதனைப்பார்த்தபாவந்தீர, வொப்பரியசிவபூசைசெய்திபோ யுன்னுலகிலெனச்சுகமுனிவனுரைத்தலோடுங், கைப்பிடிசூலம்பாசமுடையகாலன்கருணைமுனிவனைப்பார்த்துக்கழறுகின்ருன். [உகூ]

சிவபூசைபுரிவோர்களும்மைப்போலெத்தேசத்துங்கண்டிலேன்றேவரீரித், தவமேவுமுருவெடுத்தேயுறைதலிந்தத்தரணியெல்லாங்கண்டுபிழைத்திடத்தான்கண்டீர், நவமானவுபகரணவகையோபத்திநலமோவாசாரமோநாடுங்காலத், துவமானமற்றவுமதிட த்தில் வந்தேயுற்றேன்கண்பெறும்பேறுபெற்றேனென்பான். [ங0]

சுத்தமுறுசுகமுனிவீர்நுந்தாட்போதிற்சுரும்பெனவென்மனம்விரும்பிச்சுழன்றதென்ருன், பத்திபெறுமுமைத்தொழவேகைகள்பெற்றேன்பாக்கியம்பெற்றேனென்ருன்பரமானந்த, முத்திதருந்தவம்புரியுமுனிவர்நும்போன்மூவுலகந்தனிலுமிலையெனமொழிந்தே, யுத்தமமாமுனிவரடிபணிந்துசித்ரகுத்தருடன்மறலியுந்தன்னுலகுற்ருனே [ஙக]

அரசுபுரிசபையதனிற்போய்ப்புகுந்தானுணிப்பொன் ஞசனமேல்வீற்றிருந்தான், பரசும்பமபடர்கடம்மைவிளித்தான்பூவைப்பத்திபெறுஞ்சுகமுனியைப்பழித்தபாவத், துரிசுடையோன்றனைப்பாசக்கயிற்ருற்கண்டஞ்சுருக்கிட்டேயிழுத்திட்டுத் துடிக்கமோதி, நரகின்மிக்கசண்டகோலாகலப்பேர்நரகிலிட்டுத்தள்ளுமெனநவின்றிட்டானே. [ஙஉ]

கொண்டுபோனர்சூலமுனைகளாலேகுத்தினர்தடிகள்கொண்டுமொத்தினர்கள், சண்டகோலாகலமாநரகிலிட்டுத்தள்ளினர்யமதூதர்துள்ளினராற், றெண்டுபுரிசுகமுனிவன்சொன்னவாற்ருற்சோதிபூசனைபுரிந்துசுகத்திருந்தார், மண்டுசண்டனுடன்சித்ரகுத்தர்தாமுமற்றைமுனிவனுமென்றேவழங்திப்பின்னும். [ஙங]

பாரதனிற்சிவபத்தரானவன்பர்பரமன்பூசைக்குரியபதார்த்தமெல்லாஞ், சாரமாச்சேகரித்துப்பூசித்தேத்தித்தம்பிரானடியரொடுந்தான்பூசித்தீந, வாரமுடன்சிவதருமகதையுங்கேட்டுவாழ்வரெனக்குகனந்திக்கி

சைத்தவாறே, நாரதமாமுனியுரைத்தானெனவியாதனவின்றதனைச்சூத னைமிசத்திற்சென்னுன். [௩௯]

பதினேழாவது சிவதன்மாதன்மச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௫௨௩.

பதினெட்டாவது,

விசையையெசயையுத்தரச்சருக்கம்.

வேறு.

கனகன்குடர்புனையுநரவரியாகியகரியோன்
பனகந்துயிலரிதேடியபாதன்குருநாத
னனகன்வடவாலன்னுகராலன்காலகாலன்
சனகன்முதலியர்போற்றியசரணஞ்சரணமக்கே. (க)

வேதம்பயிறருநாவன்வியாதன்விளம்பிடுவா
ஞதன்குருநாதன்பணிநந்தீசனைப்பார்த்தே
யிதிவ்வணமுன்னெய்தியதிறைவன்னடியவர்முன்
னேதுங்கருத்தறிந்தோதிடவேண்டும்மெனவுரைத்தான். [௨]

வருகின்றவரெவரோவவர்முன்போயினைமதுரந்
தருகின்றநல்வசனம்புகறருவாயெனச்சாற்று
வொருகுன்றனமணிமானமிவர்ந்தேகெனவுடனே
பெருகுங்கணம்புடைசூழ்தரப்பெயர்ந்தேகினனன்றே. [௩]

அதிர்துந்துமிமுழங்கக்கடன்மலைவந்தெனவாமென்
றெதிர்வந்தநந்தியைத்தூரத்தினிடைகண்டனன்மகிழ்ந்தான்
பிதிரன்புடைமனத்தன்னுயர்பிருங்கிக்கணநாதன்
முதிர்பத்தியோடருகுற்றடிமுடிவைத்தனன்மொழிவான். [௪]

வந்தாய்சிவன்மாதைக்கொடுவரவேவிடநந்தீ
யந்தோவெருகற்பங்களடுத்தேகியவன்றே
நந்தாவரன்கருத்தின்படிநடக்கின்றவனீயே
யெந்தாய்வெகுகாலங்களிருந்தாயிதுதகுமோ. (௫)

நீவந்தபினையாநெடுமால்கோடியரயனே
டோய்வந்தவர்சதகோடியரொன்றேபிறந்திறந்தார்
தாய்வந்திலளென்றுமெலமையாள்சங்கரன்றன்பால்
வாய்வந்தனசெயவேசொலவந்தாயிலையந்தோ. (௬)

உமைபம்மைதன்னிடத்துஞ்சிவனிடத்தும்முறுபூசை
யமையுங்கருத்துடையாயரனதணுவுணதிட்டதே

கமைகொண்டனன்வெகுளுற்றிலன்கருணைக்கடலன்றோ
தமையன்புடன்றொழுவாரிடத்தினிற்சங்கரன்றானே. [௭]

ஒப்பாருமிலாநம்மிறையுக்ரன்னெனவுற்றுந்
தப்பானருளடிபோற்றியதனியன்பர்கடமக்கே
யப்பாலவன்பொறுப்பானெனவபராதங்கள்புரிந்தான்
முப்போதிருபோதன்றியுமுற்றும்பொறுப்பானோ. [௮]

என்றோதியபிருங்கிக்கணத்திறையோனைநந்தீசன்
குன்றோவெனுந்தோளோடுதன்றோள்கூடுறத்தழுவி
நன்றாகுமுன்மொழியென்றனனயந்துற்றிருவோருஞ்
சென்றார்மணிமானத்தினிற்சிவன்மைந்தன்முன்வந்தார். (௯)

வந்துற்றனர்மணிமானம்விட்டிழிந்தேவணங்கினராற்
கந்தப்பெயர்க்கடவுள்ளதுகண்டானருள்கொண்டா
னந்திப்பெயர்த்தலைவாவுயர்பிருங்கிக்கணநாத
வெந்தைக்குரியீர்நீவிர்களிணையில்விர்களன்றோ. [௧௦]

எனவோதினன்பிருங்கிப்பெயர்க்கணநாதனொடிசைப்பான்
மனமாசினரிடத்தேயுறமதியாமதிச்சடையான்
கனகாசலவிமயக்கொடிகணவன்னெமதையன்
னனகன்னெனசெய்தேயெவணமர்ந்தானெனக்கேட்டான். [௧௧]

அயுதஞ்சதமொருகோடியற்புதநிற்புதமனந்த
முயரம்மளவையும்யோசனையுளவாநவமணியின்
செயலொன்றியகதிர்வீசியசிங்காரமண்டபங்க
ணயமொன்றியவெவற்றுற்றனனாதன்னெனநவில்வான். [௧௨]

கோமண்டபத்திடையோவுயர்கொலுமண்பத்திடையோ
மாமண்டபத்திடையோதனிமணிமண்டபத்திடையோ
பூமண்டபத்திடையோர்வியம்பொலிமண்டபத்திடையோ
வேமண்டபத்துறைவோனெவனுறைகின்றனனுரைப்பாய். [௧௩]

அமுதந்நதியலைவாய்க்கரையதிலுற்றுலவினனோ
குமுதவ்விதழெமதன்னையைநினைத்தேகுலவினனோ
விமுதென்றல்வந்துலவுந்தனிமேல்வீட்டிலுற்றனனோ
வெமதன்புறுமிறையோனெவணியம்பாயெனவிசைத்தான். (௧௪)

கொற்றக்குமரேசன்னிவைகூறப்பிருங்கிப்பேர்
வெற்றிக்கணநாதன்புகல்வான்வீசியதென்றன்
முற்றுத்துறுசுகந்தப்புதுமுகைநாண்மலர்வசந்தத்
தெற்றிக்குளிர்திருமண்டபத்திடனென்றுசெப்பினனே. (௧௫)

அமலன்னெனைவிளித்தேதனதனைபாற்சென்றுவரப்போங்
குமரன்னிடைப்போய்வாவெனக்கூறுற்றனுப்பினனா

மெல்லமையாண்டருளரசேபுனையெய்தித்துபமொழிக்தே
னுமைநாதன்முன்னுறத்தாமதமுளதோபுகலென்றான். (௧௬)

வேறு.

அங்கவன்புகன்றவாய்மைபறிந்தவைங்கரத்தோன்றம்பி
சங்கையின்மகிழ்ச்சியோடுஞ்சார்ந்தனனிருந்தானிப்பாற்
றுங்கமாம்விசையையோடுசெயையென்பார்தொழுதார்நின்ற
பங்கயமுகத்தார்தம்மைப்பார்த்துமைபகருகின்றாள். (௧௭)

தோழியர்கேண்மினென்றுஞ்சுகரூபியானபெம்மான்
வாழிதானெனனினைக்கவல்லனோவென்னலோடும்
யாழிசைமொழியாய்கேளாயிறைவருன்பிரிவினாலே
யூழியேயாகநாளொன்றிப்படியுறப்பெற்றாரால். [௧௮]

மங்குலையளகமென்றுமதியதேவதனமென்றுஞ்
சங்கமேகிரீவமென்றுந்தரளமேநகைகளென்றும்
புங்கமேவிழிகளென்றும்புலவர்கள்புகலுகின்றா
ரங்கவையிமவான்மங்கையணியுறுப்பொவ்வாவென்பார். [௧௯]

மேருவேதனங்களென்றான்மெய்யினிலணைக்கவின்பஞ்
சாருமோவென்பார்செய்யதண்கிடையதரமென்றா
லாரும்போதமுதாகலாகுமோவதுதானென்பார்
சேருமோமணநாசிக்குச்செப்புமெட்பூவுமென்பார். [௨௦]

உந்தியின்சுழிக்குக்கங்கையூர்சுழியொப்போவென்பார்
தந்தியின்கரமோவாழைத்தடைகளோதுடைகளென்பா
ரந்தியின்பிறையோமாதரரைசிபார்நுதற்கொப்பென்பார்
சுந்தரிகனிவாய்க்காம்பல்சொல்லவும்பெறுமோவென்பார். [௨௧]

மடநடைக்கனங்களொப்போவடிவிற்குமின்றானொப்போ
விடையினுக்கிணைசிங்கத்தினிடையென்பதியல்போவென்பார்
பிடிநடைப்பெண்கட்கெல்லாம்பேரரசுரைக்கொப்புண்டோ
கடைவிழிப்பார்வைகாட்டுங்காலமுமுளதோவென்பார். (௨௨)

தனத்தணிமுத்தமாலைதனையுடுக்கணமோவென்பார்
புனக்குயில்போதாதென்றன்பூவைதன்வார்த்தைக்கென்பார்
கனத்தெழுகாமத்தீயாற்கலைமதிக்குளிர்ச்சிதன்னை
நினைத்தனர்வரவேகண்டார்நெருப்பிதுநெருப்பிதென்பார். (௨௩)

பத்திமண்டபத்திற்போவார்பஞ்சணைமிசையேபோவார்
கத்திகைக்கூந்தன்மாதர்களிடம்பார்க்கில்லார்வே
ளத்திரமதனைவென்றவாண்மையுமிழந்தாரம்மா
பித்தரிற்கலங்கிநின்றார்பெண்கணுயகியுன்னாலே. (௨௪)

சந்தனக்காவிற்சாரார்சந்திரகாந்தத்தாலே
சுந்தரமாகச்செய்தசோதிமண்டபத்திற்செல்லா

ரந்தரிகிணப்பிரிந்தவாசைநோய்க்குவுடந்தான்
வந்தருள்வாரைக்காணர்மயங்குவாரியங்குகின்றார். (உ௫)

காணவேயினியரானகடவுளைக்காணவம்மா
நாணினைபோலுமுன்றனகைநிலாவமுதமுண்ண
வேணுறுசகோரம்போன்றவெம்பிரான்விழிகளன்றோ
தாணுவினிடத்திற்சாரத்தாமதம்புரிதனன்றோ (உ௬)

தம்புகழ்கேட்கின்றார்க்குத்தாளிணைபூசிப்பார்க்குச்
செம்பதுமத்தானெஞ்சிற்றியானங்கள்புரிகின்றார்க்கே
யம்பிகையழியாவீட்டிவின்பங்களளிக்கின்றாரா
னம்பர்மாவிமயநங்கைநயந்திடாதிருத்தியென்னே. (உஎ)

மலைமகள்கேட்டிவெள்ளிமலையவர்க்கின்பநல்குந்
தலைமையாம்பெரியவானதனம்பெற்றாய்நீயேயன்றோ
வலகிலாச்சத்ரயாகத்தவபிரதத்தாற்பெற்ற
நலமெய்போற்பரனைச்சேர்ந்துநலங்கொண்மெய்யுடையாயன்றோ.

அன்னபூரணியேயம்மாநித்யகல்யாணராகுந்
தன்னிகரில்லாவின்பசாகரமதியஞ்சேர்ந்த
சென்னியாரிடத்தில்வந்துசடிதியிற்சேரவேண்டு
முன்னையாமிறைஞ்சுகின்றோமுன்பதம்பிடிக்கின்றோமால். [உ௯]

அனகனுமெம்மானுகத்தணைத்திடாதிருக்கிலுன்றன்
கனகபுட்பாதிபோன்றகவினுக்கோர்பயனுமுண்டோ
சனகர்சூழ்பரன்செய்லீலைதனக்கிளங்கொடிபோன்மேனி
யுனகமுற்றிசைந்தாலன்றோபெற்றதற்குறுதியம்மா. [௩0]

இறைவிநீயெம்மான்பாகத்திருந்திடலன்றோவுன்ற
னிறைமதிவதனமூரனிலாக்கதிர்விரிவதம்மா
வறைகழலண்ணன்மூரலளித்திடும்வதனங்கண்டே
பிறைமதிநுதலாயோகைபெறுவதுன்னிதயமன்றோ. (௩க)

வாவியின்மலருநீலவரிவிழிப்பார்வையாலே
தேவிநீசிவனுக்கின்பஞ்செய்வதெக்காலஞ்சொல்லா
யாவியாமுன்னைக்கண்டாலவர்புயம்பூரிக்குங்கா
ணேவியநீயுங்கண்டாலுன்குயம்பூரியாவோ. [௩௨]

அன்னைகேளெம்பிரானுரவர்கவன்றுரைக்குமாற்றஞ்
சென்னியைந்தவற்றிலேந்துதீக்கண்கள்சீறுபாம்பு
துன்னுமாபரணஞ்சூண்சுந்தரமதனைக்கொன்றே
மின்னதால்வந்திலாளென்றினைந்தினைந்தேங்குகின்றார். [௩௩]

இப்படிப்புலம்புகின்றாரிறைவிநம்பால்வந்துற்றா
லப்படிப்பட்டவெல்லாமனுகூலமாகுமென்றார்

கொப்படிபாயுங்கண்ணுய்குறுமூரல்செய்பவேண்டா
முப்படிபாயுமையன்முன்வராயெனமொழிந்தார். [கச]

துன்னருங்கருணைவெள்ளச்சோதிமாநதித்தீரத்தி
லன்னைநீவிளையாட்டுற்றாலழகினுக்கழகேயன்றே
முன்னவன்கருணைமேன்மைமொய்யொளிவடிவமெல்லா
முன்னையல்லாமலுண்டோவுமையம்மையுரையாயென்றார். (கடு)

உருப்பெறுமுன்னோடுற்றாலுலகெலாந்தழைக்குங்கண்டாய்
கருப்பெறுமுயிர்கள்வாழக்கடிதெழுந்தருள்வாயென்றே
திருப்பொலிவிசையைசொன்னாளெனப்பராசரனார்செல்வ
னருட்பெறுசூதனேமிவனத்தவர்க்கருள்செய்வானே. (கசு)

பதினெட்டாவது விசையைசேனயுத்தரச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-ருறுக.

பத்தொன்பதாவது,

நந்திகணபதிபன்வந்தனைச்சருக்கம்

வேறு.

உண்ணிலாவன்பின்வெள்ளமுவட்டெடுத்தோடிற்றென்னக்
கண்ணிலானந்தவாரிபொழியமால்கமலனிந்த்ர
னெண்ணிலாமுனிவர்வானோரேத்தவீற்றிருக்கும்வெள்ளி
வெண்ணிலாச்சிலம்பன்செய்யசிலம்படிவிரும்பிவாழ்வாம். (க)

வேணிசேர்வியாசன்சொல்வான்விரைநீலவேணிமுன்னர்
வாணிபோல்விசையைசொன்னவாணிகேட்டுளமகிழ்ந்தா
ளாணியாந்தோழிசொல்லாரமுதுண்டாண்மான்பிடித்த
பாணிபாரனுப்புந்தூவெண்பட்டெடுத்துடுத்தாளன்றே. (உ)

புரிகுழல்வகிர்ந்துவாசப்பூமுடிச்செருகிக்கொண்டாள்
விரிவெயினிலவெறிப்பமின்னெறித்திடுமெய்யெங்கு
மரியபொன்னாரம்ரத்நாபரணங்களலங்கரித்தாள்
பரியுஞ்சேடியர்கொணர்ந்தபள்ளையத்தமுதுமுண்டாள் (ங)

மைந்தரைப்பந்திவைத்தாள்மாணிக்கப்பள்ளையத்திற்
சுந்தரபோனகங்கடுய்த்திடப்பணித்தாள்பின்னர்
நந்தியேமுதலவாயநற்கணநாதர்க்கெல்லா
மந்திரிபரிகலத்தாரமுதுணவளித்தாளன்றே. (ச)

காதலோடெவருங்கொண்டார்கைகளும்பூசினார்கள்
சீதளகளபகற்பூரங்கண்மேனியிற்றிமிர்ந்தார்

தாதவிழ்சுகந்தந்தாம்பூலாதியுந்தரித்துநின்று
ரோதுறுகணங்கள்கண்டாருவந்தனரார்க்கின்றூரால். (ரு)

பஞ்சதுந்துமிகள்பேரிமத்தளம்படகந்தாரை
கஞ்சத்தின்கருவியாயகண்டகைமணிசேகண்டி
யெஞ்சலிலொருபத்தெட்டென்றிசைக்கும்வாத்தியங்களெல்லா
மஞ்சுறவூழியாழியார்ப்பெனவார்த்தவன்றே. (சு)

பெருகியமுழக்கங்கேட்டான்பிறையணிவேணிப்பெம்மா
னருகினிலிருந்ததண்டிகணுதிபன்றனையழைத்தான்
வருகின்றுடேவிபோலும்வாத்தியங்கடலோரேழும்
பொருகின்றமுகிலோரேழும்போன்மெனமுழங்கிற்றன்றே. [எ]

சென்றுநீபார்ப்பாயென்றுசெப்பினனுடனேதண்டி
நன்றுநன்றெனப்பணிந்துநகையொளிவிமானமேறிக்
குன்றுவிண்பரந்ததென்னவுமையிடங்குறுகலோடு
மன்றதுகண்டநங்கையருகுறுங்குகற்குச்சொல்வாள். [அ]

ஏவனேவருகின்றான்பாரென்றலும்புறத்துவந்து
சேவலங்கொடியோன்பார்த்துத்தேர்ந்துமீண்டுரைக்கலுற்று
ஞவியேசிவனுக்கின்னேனதிபத்தனுகுமன்றே
கோவின்வண்கொடிகளாடுங்குளிர்மணிவிமானந்தானே. (கூ)

எனக்குமரேசனின்றுகூறினனிமயத்தன்னந்
தனக்கரனேவவந்ததண்டியுமருகுசார்ந்தான்
மனக்கருத்துடனேவீழ்ந்துவணங்கியஞ்சலிக்கையோடுங்
கனக்குழலுமையாண்முன்னேநின்றனன்கழறுகின்றான் (க0)

அம்பிகையின்னமுண்டோதாமதமமலனேவச்
செம்பொனின்விமானமீதோகொடுவந்தேன்சிறப்பதாக
வும்பரோடிம்பர்யாருமுறுதுயரொழிந்துவாழ
வெம்பிரான்மகிழயாங்களுய்யவேபிவர்வாயென்றான். (கக)

பன்னியமாற்றங்கேட்டாள்விமானத்தின்பொலிவுபார்த்தாண்
மின்னேயயனையாள்சேடிவிசையையுஞ்செயையும்பாங்கார்த்
துன்னவேயடியார்சென்மத்துயர்க்கடற்கரையிலேற
வென்னையாளுடையாள்செம்பொன்விமானத்தினேறினாளே. [கஉ]

ஆடகப்பாவைபோலுமற்புதமடந்தைமார்க
ளாடகமடவார்கூடிநாட்டியநடிக்கலுற்றார்
மாடகமகரயாழ்கள்வானதுந்துமிகளார்ப்ப
வேடகத்தலர்விமானமிசைந்தசைந்தேகிற்றன்றே. (கங)

கணபதிகுமரனந்திகணுதிபன்பிருங்கிதண்டி
குணபதியாகுமம்பைதோழியர்குறித்தேயேறு

மணமிகுவிமானமுன்னும்பின்னருமருங்குமொய்த்த
விணையிலானுறைதற்கைந்தாமயுதயோசனையினெல்லை. (கா)

கையினிற்பிரம்புகொண்டுகணநாதர்கோடிகோடி
யையைதன்விமானஞ்சூழநெருக்குறவடர்க்கின்றாராற்
செய்யதோர்விமானமீதிற்றேவர்கள்பொழிபூமாரி
வையகத்துடனேவானுமறைந்திடநிறைந்தவன்றே. (கரு)

மன்றலார்தென்றல்புட்பமாரியின்பராகத்தோடு
குன்றசைந்தாற்போற்செல்லுங்குளிர்மணிவிமானத்தூடு
சென்றதுவாசம்வீசத்திருவனூர்கவரிவீச
நன்றருள்வீசுமன்னைநகைகிலாவீசச்சென்றாள். (கசு)

தண்டளிர்ச்சாலைசோலைதடாகங்கடண்ணீர்ப்பந்தர்
மண்டபமுப்பரிகைமாளிகைதெற்றிமுற்ற
மெண்டருநெறியினோங்கவியற்றியசிறப்பையெல்லாங்
கண்டளிர்த்திடவேகண்டுசென்றனள்கருணைகூர்வாள். (கஎ)

மாங்குயின்மயிலோடன்னம்வரியளிசக்ரவாக
நாங்கணவாய்சுகங்கணலங்கொள்பேட்டுடனேசேவ
ருங்கலந்துறைதல்கண்டாடம்பிரான்றனைநினைந்தா
ளீங்கிவளேகக்கண்டகணங்களேத்தெடுக்கின்றாரால். (கஅ)

வேறு.

வேதமெய்ப்பொருளேவிசையீபவாவீறுசொற்கவுரீவிசையீபவா
நாதனுக்குரியோய்விசையீபவாநாடுதற்கரியாய்விசையீபவா
மாதிரந்தொழுவாய்விசையீபவாமாநிலந்தருவாய்விசையீபவா
சோதிமங்கலையேவிசையீபவாசொல்லுசாம்பவியேவிசையீபவா. (கசு)

சறுவமங்கலையேவிசையீபவாசங்கரனிடத்தாய்விசையீபவா
வறிவினுக்கறிவேவிசையீபவாவன்பர்க்கின்பருள்வாய்விசையீபவா [வா
வெறிகொடார்விகடைவிசையீபவாவிசையையேசெயையேவிசையீப
நறுமலர்த்திருவேவிசையீபவாநங்கைவாகீசுரிவிசையீபவா. (உ0)

சாம்பவிசறுவாணிசெயசெயசங்கரிமகமாயிசெயசெய
காம்பெனுந்தோளுமையேசெயசெயகாலகாலப்பிரியேசெயசெய
வாம்பல்வாயம்பிகையேசெயசெயவனகையேவரைமாதேசெயசெய
தேம்புசிற்றிடைத்தேவிசெயசெயசெய்யதாமரைத்தேனேசெயசெய.

தேவரம்பைபர்பூசைகொளம்பையேசெல்விரித்தகல்யாணிசெயசெய
தூவியன்னநடையுடைத்துற்கையேசுந்தரீசண்டிகையேசெயசெய
மேவுமீசற்கினியநியமத்தாய்விமலையாம்விசாலாட்சிசெயசெய
பூவில்வானவர்போற்றும்பொன்னேதிரிபுரபயிரவிமாதேசெயசெய. ()

பின்னையாமதிருடியர்ச்லைகயேபிரமராம்பிகைத்தாயேநமோநம
கிள்ளைபேந்திபலைகயாய்நமோநமகிண்கிணிமேகலையாய்நமோநம [நம
வள்ளைவார்குழைப்பெண்மணிநமோநமச்சம்போன்றிகெண்ணிநமோ
கன்றுவாரைநக்குழலாய்நமோநமகாக்கேயனைத்தந்தாய்நமோநம. ()

நீலமேனியேநமோநமசித்தியானைத்தருபிநமோநம
பாலலோசனத்தெம்மானுடனொருபாதிகொண்டபரைபேநமோநம
சூலமோடுகபாலங்கைகயேந்தியசுந்தரியந்தரியேநமோநம
ஆலகாலமுண்ட ருக்கமுதமாமாயேமகமாயேநமோநம. [உச]

வேறு.

எங்களையேகாத்தருள்வாயிமயமாமலைபயந்தவிறைவியேயுன்
பங்கயமாமலரனையபாதமேதுணைபல்லாற்பற்றொன்றில்லோஞ்
சங்கரனிடத்தினினிபந்தாங்கத்துடனிருக்குஞ்சமையத்தன்னி
லெங்கள்பிழைபொறுத்தாளவரம்வாங்கித்தரக்கடிதினிளகாயென்றார்.[]

இவர்கடாங்குற்றங்கள்செய்தாலுந்தந்தைபார்சிறான்றே. குறைய டிபேம்புரிந்தாலுமன்புவைத்தூகேருணைகூர்வாயம்மா, பிறையணிநுதற் றேபசங்கானு மெங்களுடைப்பிதாவதீயு, மிறையுமெமைப்பாராமுகஞ் செய்யாதருளக்கடிதினெழுந்தருள்வாயென்றார். [உரு]

காலகாலன்சரணத்தடிமைபூண்டேமெமக்கோர்கவலையுண்டோ
ஞாலமிசைபாவர்தமக்கஞ்சேவோமுன்சரணத்தினைப்பூசிப்போம்
பாலனஞ்செயுனதருட்குப்பாத்திரமாமெமையீயும்பரனுங்கூடிக்
கோலமுடனந்தரங்கத்துறைபோதிலெமக்கருளக்குறிக்கொள்வாயே. []

ஆறுநூற்பாதிகொண்டாயெமக்கருள்வாயுன்னருள்பெற்றனமே லம்மா, வானுவோம்பாங்கனாண்டவன்பெருமையடிச்சேர்க் குளதா மன்றோ. வாமுபாம்புகல்வார்க்கைநமறவாமலீயவர்க்கு வழங்கியெம் மைத், திரமுறச்செய்திடலவருக்குமாசகாயப்பெருந்திடமாயன்றே.()

இப்பரிசுகணாதர்கூறுகின்றமொழிகேட்டாளெய்பிரான்ற, ஞெப் பரியபெருமைபொலாமினிலியரயகிரீசவுமுவந்தாள்பாருஞ், செப்பரி யபெருமையான்றேறுவென்றுன்னைத்தவளாத்திபானஞ்செய்ர, டப் பிலாவானந்தங்கொண்டேவின்மயிர்ப்புளகந்தான்கொண்டாளே. [உசா]

சந்திரியப்பரிசுசெல்லுநெறிபிலரனுரிருக்குஞ்சூழ்பாக்கர்
வந்தரியவிசித்திரமாமண்டபங்கண்டதனிலுறமனங்கொண்டாளான்
முந்திரிபாசனங்களதிலனந்தவாசனத்தின்முறையாலேபி
யந்திரசந்திரனுதித்திதாலெனவிருந்தாளெவர்க்குமினைப்பாற்றிறுனே. ()

மண்டபத்திலுமையிருந்தாள்ததனைவென்றவள்ளலார்மானஞ்சேனிற்
கண்டனராம்பிகைவந்தாளென்றுளத்திலிருந்தபெருங்கவலைதீர்ந்தார்

மண்டுறுங்காதலினினியமொழிப்பூவைகோவையிதழ்மதுரப்பாவை
யொண்டொடியுந்தாமுமுனமிருந்தபரிசத்தனையுமுன்னின்றால். (௩௧)

சந்தனப்பூண்முலைமார்பிலழுந்தவேயணைந்தணைந்துந்தழுவிக்கொள்வோஞ் சுந்தரவாண்முகத்தெழிலுங்காண்போமஞ்சுகவார்த்தைச்சுகமுங்கேட்போம், கொந்தளகமணங்கவர்வோமிதழ்த்தேனுண்போஞ்சப்ரமாளத்தேறி, மந்தமாருதம்விசவிற்றிருப்போமெனவுளத்தின்மகிழ்வுற்றால். (௩௨)

இவ்வாறுபுகன்றொருமண்டபத்திரத்னவாசனத்தினினிதுதேவி
மைவாழுமணிமிடற்றான்மகிழ்ந்துவீற்றிருந்தனனம்மாற்றந்தேர்ந்தே
பொய்வாதசதுர்வேதமுரைத்தருளுமுனியுரைத்தாலுண்மையென்றே
செவ்வாறுசேர்சூதனைமிசவாணருக்கினிதுசெப்பினனே. (௩௩)

பத்தொன்பதாவது தண்டிமானுசீபன்வந்தசருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௫௨.

இருபதாவது

தேவிசிவனைப்பொருந்தினசருக்கம்

வேறு.

பொங்கரவாடவேயம்புலியாடப்புலித்தோலாடத்
தங்கமாஞ்சபையிலாடுந்தம்பிரானெம்பிரானார்
மங்களங்கண்ணிநீலமலர்க்கண்ணிவாமஞ்சேர்ந்த
திங்களங்கண்ணிவேணிச்சிவனடிக்கண்ணிவாழ்வாம். (௧)

மாதவன்றனேயானமாதவன்சொல்வான்கண்க
ளாதவன்சோமனங்கியாயவனுமையாள்வந்த
போதவண்விமானம்வந்தபொலிவுந்துந்துமியினார்ப்பு
மோதியகணங்களார்ப்புங்கண்டுகேட்டுளம்பூரித்தான். (௨)

பருகுதாகத்தார்நீர்க்குப்பரதவிப்பார்போலுற்ற
முருகவிழ்கொன்றைபார்க்குமொய்குழலுற்றபோதிற்
றருமிளநீர்சிற்றுண்டி தருணத்தேபெற்றதாமா
லருகுறக்கண்டானண்ணலாகமும்புளகங்கொண்டான் (௩)

பற்றுறுபசியாளர்க்குப்பாற்சோறுகைபுற்றாற்போ
லற்றவர்தமக்குச்செம்பொனருங்குடமகப்பட்டென்ன
வற்றுறுதடத்தில்வாரிவரிலுயிர்மகிழ்ச்சிபோலப்
பொற்றொடிவந்தபோதிலளவிலாமகிழ்ச்சிபூத்தான். (௪)

தன்னிகர்விசையையோடுசெயையுமேதளிர்க்கைதாங்கப்
பொன்னடிபணிந்துமின்னிருவரும்புகழ்ந்துபோற்று

மன்னியவிந்திராணிமுதலியோர்வரிசைசெய்ய
வன்னமென்னடையாள்வந்தாளண்ணறன்முன்னமன்றே. [ரு]

அம்பிகைகண்வேலண்ணலரும்புயந்தன்னிலாழ்ந்த
சம்புவின்கண்ணுமம்பைதனங்களிற்பாய்ந்தவன்றே
நம்பன்முன்பணிந்துநங்கைநாணொடுமருங்குநின்று
ளெம்பிரான்கண்டணைத்தேயிடத்தினிலிருத்திக்கொண்டான். [சு]

கண்டனர்கணங்கள்கண்கள்களித்தனருமையாளோடு
மண்டர்நாயகன்றானுற்றனகிலமின்றுய்ந்ததென்பார்
மண்டுபூமாரியோடுமழைக்கண்ணீர்மாரிபெய்தார்
தண்டெனவிழுந்தெழுந்தார்தனித்தனிகளித்தாரன்றே. [எ]

தூரியம்பேரியார்த்ததுந்துமிக்குழாங்களார்த்த
தாரையெக்காளஞ்சின்னஞ்சங்கமெங்கெங்குமார்த்த
வாரியையோடுமெங்கோயன்வீற்றிருத்தல்கண்டார்
நாரியர்தாமும்வந்தார்நாடகமாடினாரால். [அ]

பண்ணேறுமகதிவீணைபலாண்டிசைபாடுகின்றார்
தண்ணேறுமழகாலத்தித்தட்டங்கள்சுற்றுகின்றார்
கண்ணேறுகழிப்பார்போலக்கடவுளோடுமையையைச்சூழ்ந்தார்
விண்ணேறுமரம்பைமாதர்மேனகையாதியோரே. [கூ]

வேறு.

தமரமிகுஞ்சபைதனிலுறைவோர்கள்
விமலமுழுமுதல்விளம்பியெழுந்தா
ரமலனொடம்பையுமன்பர்தமிதயக்
கமலநிகர்த்திடுகடிமனைபுக்கா. [கo]

கதியுலகெனவொளிர்கடிமனையதனின்
மதியுலகெனமிளிர்மலரணைமிசையே
புதியநன்மலரளிபுகுமவையெனவே
யதிகனுமமலையுமவண்மருவினரே. [கக]

பாலுறுசுவையும்பருகுறுபுலனு
மேலுறுமுலகுமேவுநல்வினையுஞ்
சீலர்தம்மன்புந்திருவடியும்போ
லாலனுமமலையுமரியணையுற்றார். [கஉ]

வேறு.

அருத்தியோடுலகெலாமளித்தவம்பையா
மொருத்தியுமுயிர்க்குயிராமொருத்தனும்
பொருத்தமாயுலகெலாம்பொருந்தவைகிப்பின்
றிருத்திடுமானந்தசபையிற்சேர்ந்தனர். (கங

தோகையுமதனைவெல்சுந்தரேசனு
நாகரீகம்பெறுநலங்கொண்மண்டபத்
தோகைசேர்பரியங்கத்துலகமுய்யவே
யேகசிங்காதனத்தெய்திமேவினார் [கச)

இலங்கியமணிப்பணியங்கமெங்கணு
நலம்பெறவணிந்தனர்நாதனோடுமை
துலங்குமண்டபத்துற்றுளென்றுசூதன்றான்
றலம்புகழ்நைமிசத்தவர்க்குச்சாற்றினான். (கடு)

இருபதாவது தேவிசிவனைப்பொருந்தினசருக்கமுற்றிற்று.
ஆகத்திருவிருத்தம்-சுா௦எ.

இருபத்தொன்றாவது,

சைவர்பரிகலப்பிரசாத மகிமைச்சருக்கம்.

வேறு.

தங்கப்புரிபோல்விரிதந்தொளிருஞ்சடையானிமையோர் தமையாளுடையான், கொங்கைக்குயிலாண்மயில்போலியலாள்கொடிநேரிடையாளிடையன்புடையான், வெங்கட்புலியின்விரிதோலுடையான்விரையாரிதழித்தொடையான்மிடல்சேர், செங்கட்டனிமால் விடையானடியார்திகழ்சேவடியெம்முடிசேர்த்துதுமே. (க)

வேதம்பகரும்வியாதன்புகல்வான்வெறியார்மலர்மண்டபமேவினரா
னுதன்னுமையாள்புதல்வர்வரவேநாடுற்றனர்முன்னனுகுற்றனராற்
போதந்தருவிஞ்ஞானநந்தப்பொலிவாயுறைவோரிருவோர்தமையும்
பாதந்தொழுதார்மறையின்முறையாற்பகருந்துதிபற்பலபன்னுவரால்.()

இமையோர்பணிவெற்பிறைவாசரணமிமயத்தரசன்மகளேசரண
மமைவாமிடபத்துசனேசரணமரியின்கொடிசேரனையேசரணங்
கமழ்பூதியின்மேனியனேசரணங்களபம்புனைமெய்யுடையாய்சரண
மெமையாள்கருணைவிழியாய்சரணமிருதாமரையாநயனீசரணம். (ஙு)

பொருசூலமெடுத்தவனேசரணம்புனைதாமரைசேர்கையாய்சரண
மரிதாகியதிக்குடையாய்சரணமணிதூயொளிபட்டுடையாய்சரணம்
வரிவேணியிளம்பிறையாய்சரணமலர்க்கொந்தளகப்பிறையாய்சரணந்
தெரியாடரவக்குழையாய்சரணந்திகழ்மாமணித்தோடுடையாய்சரணம்

உடுக்கோளணிமாலிகையாய்சரணமொளிர்முத்தணிகந்தரத்தாய்சரண, மடுக்குந்திகழ்பொன்னிறத்தாய்சரணமணியார்பசும்பொன்னிறத்தாய்சரண, மடுக்கும்புரமூன்றெரித்தாய்சரணமதுகை டவனைநெரித்

தாய்சரணம், படிக்குஞ்சமனையுதைத்தாய்சரணம்பகட்டாசுரனைவதைத்தாய்சரணம். (௫)

வேறு.

ஒருஞானவுருவாகும்பரனேபோற்றியொப்பில்சிதானந்தமன்பர்க்கருள்வாய்போற்றி, மருவாகுஞ்சடைமவுலிபரனேபோற்றிமணிலேவேணியுடைமயிலேபோற்றி, திருவாருங்கற்பூராகரனேபோற்றிதிகழ்தருகுங்குமந்தரித்தசெல்வீபோற்றி, குருவாருங்கூவிளவர்ச்சனையாய்போற்றிகுருக்கத்திமலர்விரும்புங்குயிலேபோற்றி. (௬)

மண்டலசிங்காரனேபோற்றிபோற்றிமாணிக்கவலங்கிரியேபோற்றிபோற்றி, யெண்டருவேதாந்தத்தோத்திரத்தாய்போற்றியெழில்விசுவேசன்புகழுமிறைவிபோற்றி, யண்டர்கள்பாவரும்வணங்குந்தலைவாபோற்றியம்புயமாதடிபரவுமமலைபோற்றி, பண்டருமென்மொழிதழுவக்குழைந்தாய்போற்றிபரமருண்மகிழ்ச்சிபெறும்பரையேபோற்றி. (௭)

காசினிக்குத்தந்தையேபோற்றிபோற்றிகடலுலகீன்றருடாயேபோற்றிபோற்றி, பேசுஞ்தன்றனைக்காய்ந்தாய்பெரியோய்போற்றிபெரியமதன்றனையேவல்கொள்வாய்போற்றி,யேசறவேவிடநுகர்ந்தாய்போற்றிபோற்றியின்னமுதநுகர்ந்தாயேபோற்றிபோற்றி, தேசுபெறுமகேசுரனேபோற்றிபோற்றிசேர்திருக்கொந்தளதேவிபோற்றிபோற்றி. [அ]

இன்னவாறனந்தந்தழைக்கநல்குமிறைவனையுமிறைவியையுமிருவர்மைந்தர், முன்னர்நின்றுபுகழ்ந்தவுடன்றழுவிகொண்டார்மொழிகின்றாரானைமுகன்குகனேவாரீ, ரென்னவுமக்கியன்றவரங்கேட்பீரென்றாரீன்றவரைமைந்தர்பார்த்தியம்புகின்றா, ரன்னையுமத்தனுமானவுங்கள்பாதத்தன்புமனமறவாமலருள்வீரென்ன. [௯]

பின்னருநன்னுமங்கண்மந்திரங்கள்பெருகுசிவார்ச்சனையுபயோகத்தைவேண்டல், சொன்னவாகமம்வேதம்புராணமங்கந்துதித்தருளுநும்பெருஞ்சீர் தீர்த்தஞ்சேவை, பன்னுவதுசிவவிரதந்தியானம்யோகம்பகர்வரியசிவஞானமுதலவான, மன்னுசிவபுண்ணியமாமிவற்றிலெங்கண்மனஞ்செல்லவேண்மெவரம்வழங்குமென்றார். [௧௦]

பொன்னாசைமண்ணாசைமோகமின்னார்போகத்தில்வருமாசையெனுமுத்தீயின், மன்னுதபடியடியார்க்கருளுமெந்தாய்மாதாவேநாவினியசுவைகண்டாற்போ,லன்னுறுமலர்கண்டவண்டுபோலகளினெய்தலிருசுடரைக்கண்டவாபோ, லெந்நாளுமுமதுரியசரணங்கண்டா லெமதுமனங்களித்திடவேவேண்டும்வேண்டும். [௧௧]

இன்றுமதுசாணநரிசனந்தான்பெற்றோமிதுபோதுமினியெய்தாப்பொருண்மற்றுண்டோ, வென்றிதருநும்பதமேயிதற்குச்சாட்சிவேறிலையென்றுரைத்துநின்றமைந்தர்தம்மைத், துன்றுமுவகையினுடனேதழு

விசாதன்சொன்னபடியேயாகக்கடவதென்றே, பென்றுமென்பானீயுமி பமுகனுந்தாயுமினியிருக்கவென்கருத்தப்படிச்செய்வீரே (௧௨)

என்றவரையருகிருத்தித்தழுவிக்கொண்டேயிரத்தினவாபரணமு டன்விசித்ரவாடை, நன்றளித்துக்குமரனைப்பார்த்துரைப்பானெம்மா னங்கைபிவடனையழைத்துவந்துளோர்க, டென்றுநந்திபிருங்கிதண்டிமு தலோரானதூயகணத்தலைவருக்குமற்றுளோர்க்குஞ், சென்றுநந்தப்பிர சாதமாடைபூண்கள்செய்யுமுபசாரமெலாஞ்செய்தியென்றான். [௧௫]

சொன்னவுடனிருவோருந்தொழுதுநின்றுதுதித்துவிடைகொண் டெசுடர்ச்சோதிதுன்னு, மன்னுமணிவாசல்பலகடந்துசென்றுமாணிக்க மண்டபத்தில்வந்துசேர்ந்தார், பன்னுநந்திமுதற்கணங்களைவருமவந் தார்பணிந்தவர்பாற்றோத்திரங்கள்பண்ணுகின்றா, ரன்னவரைக்குகனை ழைத்தேபெம்மான்சொல்லியருளியவாறேவரிசையமைக்கின்றானல்.

குமரேசனினைத்தவுடனன்னராசிக்கூறுகறிவர்க்கமதுவர்க்கராசி
கமழ்கூரும்பனிநீர்க்களபராசிகற்பூரகுளிகைதாம்பூலராசி
யமரேசற்கரியசித்ரவத்ரராசியாபரணராசிமலைமலைகள்போல[ன்றானல்.
வமைவாகவர்துகுவிந்திடவேமுந்து மடற்கணங்களுவகைபெறவளிக்கி

நந்தியுடன்பிருங்கிதண்டிமுதலாயுள்ளநாயகமாங்கணநாதர்தங்கட் கெல்லாம், புந்திமகிழ்போசனந்தாம்பூலமெல்லிப்போதுமெனவாடையாப ரணமீந்தான், சுந்தரிமுன்கொடிகுடைகடாங்கிவந்தோர்சொல்லரும்ப ல்லியந்துவைத்தோர்பணிகள்செய்தே, வந்தவர்க்குமன்னமுடன்களப ம்பஞ்சவாசந்தூசாபரணம்வழங்கினனே. [௧௬]

எங்கள்பிரானுலாபச்சுற்றெங்குந்தங்கமிழைந்தரத்நமாளிகைகளொளி கையுண்டாக்கி, யங்கங்கேகணங்கள்வீற்றிருக்கும்வண்ணமமைத்திடவ ங்கவரிருந்தார்செவ்வேலண்ண, றிங்கண்முகமங்கைதெய்வயானையின் பந்தினைத்துமணிமாளிகைபிற்சேர்ந்திருந்தான், றுங்கதுண்டியையங்கரன் வல்லவையினோடுசோதிபெறுமாளிகையிற்றுன்னினானல். [௧௭]

மங்கையுமைநாயகிதன்சேடிமாராமாதரார்செயைவிசையைமகிழு ம்வண்ணந், தங்கமணிப்பூடணங்கள்விசித்ரவாடைதான்கொடுப்பவாங் கினார்தாங்கிக்கொண்டா, ரங்கதற்பினுடகஞ்செய்மாதர்க்காடையாபர ணவரிசைகளநேகஞ்செய்தா, னிங்கிதன்பினங்கையுடனெங்களுதனி யற்றியவுப்பரிகைபுகுந்திருந்தானன்றே. [௧௮]

ஆங்காரும்போதனிலெம்பிராட்டியமைத்தனடன்கையாலன்னதியெ ல்லாம், பாங்குடனேபரிமாறவெம்பிரானார்பரிந்தமுதுகொண்டனரம்பி கையுங்கொண்டா, ளோங்குமடைக்காயுநுகர்ந்திருந்தபோதி*லோலைப்பூ

* ஓலைப்பூ-தாழம்பூ.

வாசம்வந்துவீசிற்றுங்கே, யிங்ஙனமக்கிரவாகாதுமையேபீகொர்வொள விறைவியிறைவனைப்பார்த்தியம்புகின்றாள். [௧௯]

ஐயநீவிரும்பிநுகர்சேடமல்லாலடியனுகர்ந்திடலாமோவென்று னின்று, டையனுயகிகையிலுருத்ரவீணைதாங்கினாள்சிவனருகிற்சார்ந்தி ருந்தாள், செய்யமுறுக்காணியுடனரம்பின்கோவைச்சீர்கண்டாள்சுருதி கொண்டாள்சிவன்றனுமம், [பையவெடுத்தாகாசங்கரவீமேசபற்கபாப ரவெனவேபாடினாளே. [௨௰]

பாடினாள்சிவன்மகிழ்ச்சியாற்கொண்டாடப்பலகலை வல்லவைபா மானந்தக்கண்ணீ, ராடினணகங்களாற்றெறியேலென்னுமதிசயருத்திர வீணைவரலாறெல்லா, நாடிநானறிகிலேன்புகல்வாயென்றுனுயகனும்பு கல்கின்றான்முன்னைநாளி, னீடியகந்திருவரினிதிருந்துவாழு நீணகா மொன்றுளதுநிகழ்த்தக்கேளாய். [௨௧]

வனைபுகழந்நகரிலோரிலிங்கமோங்கிவளர்ந்துளதாங்கதன்பெருஞ்சீ ர்வகுக்கலாமோ, வனையநகர்மேவியகாந்திருவர்ச்கேந்தலாகு மவனாரு வென்பானுண்மைமிக்கான், புனைமணிப்புட்பகவிமானத்திலேறிப்புகுந் தூலகம்பார்க்கவேபுறப்பட்டானல்,வினையமுடனதிசயமெங்குளதாமே ன்றுவிசாரிப்பானவனொருவெற்பருகுசார்ந்தான். (௨௨)

அந்தவரைச்சாரலில்வீற்றிருந்தசைவவாண்மைபெறும் யோகினை க்கண்டங்கணுற்றே, யுந்துபுகழ்க்கந்திருவனாருவென்போனுலகிலிவன் றனைப்போலவொருவற்காணே, மூந்துசிவனிவனெனவங்கவனைத்தாழ்ந் துமொழிகின்றான்சைவநெறிமுதன்மைபெற்று, யிந்துசேகரன்பூசைப் பலனும்பெற்றுயென்பெறநீயிவ்வரைவந்திருக்கின்றாயே. (௨௩)

என்றுரைத்தோன்றனைப்பார்த்துநகைத்தேசைவத்திருங்கருமத்த வயோகியியம்புகின்றான், றுன்றுமிவண்மகத்தானவிலிங்காதன் சுத்த ராஞ்சித்தர்தொழுஞ்சித்தநாத, னன்றிதருமிவ்விலிங்கப்பெருமையெல் லாநற்செவியாரமுதமெனநவில்வாங்கேட்டி, குன்றிதனில்விரதனெனு மந்தணளன்குருடனகங்கைசொத்தைகுட்டரோகி. [௨௪]

கூனனுடுத்திடுகூறைநூறுபீறல்கொடும்பாவம்புரிந்ததனாற்படும்பா டொன்றே, வானதுயராளனல்லவினைமுன்செய்தானுதலாலித்தலம்வ ந்தடுத்தானன்னு, னீனமகற்றிடுஞானவிலிங்கமிங்கணிருந்ததறியா னி னைப்போதிருந்தானப்போ, தூனமிலோர்கின்னரனிவ்விலிங்கபூசையுஞ ற்றுவானன்பினுடனுவண்வந்துற்றான். (௨௫)

வந்துசைவசீலத்தான்பூசைசெய்வான்மஞ்சனங்களாட்டினான்மல ர்கள்சூட்டிச், சிந்தைமகிழ்கிருதகுளபாயசந்தான்றீங்கனியபூபமதுவர் க்கத்தோடு, நந்துகதலியினிலையிற்றளிகைசேர்த்தானலமிகு நைவேத்தி யங்கணுடிச்செய்தான்,முந்துமுபசாரங்கள்புரிந்தானன்பின்முன்பணிந் தான்றோத்திரங்கண்மொழிந்தானன்றே. (௨௬)

மன்னினன்சண்டபூசைபினைப்பின்னின்மாலியமோரிடத்திருந்துண்டுவகைகூர்ந்தா, னன்னபரிகலத்தரம்பைத்தளிரைக்கைக்கொண்டபலெறிந்தானங்கிருந்தவந்தணாளன், முன்னர்விழுந்ததுதடவியெடுத்துக்கொண்டான்மோந்துகொண்டான் மணங்கண்டான்மூர்ச்சைதீர்ந்தான், றன்னுபசிபாலதனைவாயில்வைத்துச்சுவைகண்டானென்றுமென்றுதுப்பித்திட்டானே. (௨௭)

அருந்தினன்விண்ணுலகின்மருந்துண்டான்போலகத்திலுறுதீப்பிணிகளனைத்துந்தீர்ந்தான், வருந்தியமூப்பதுவொழிந்தானிளமைசார்ந்தான் வரிவிழிகடெரிந்திடவேமகிழ்ச்சிகூர்ந்தான், பெருந்தவமென்செய்தேனென்றகம்பூரித்தான்பிரியமுற்றிவ்விலிங்கத்தினருகேசார்ந்தான், பொருந்தவேபிராதக்காலம்பூசித்தோன்புகுந்தனனுச்சியினுமெம்மான்பூசை செய்வான். (௨௮)

முன்போலவருச்சனைநைவேத்தியங்கண்முறைபுரிந்து பரிகலத்தினமுதந்தன்னை, யின்போடுமருந்தியிலைதன்னையப்பாலெறிந்தனனங்கதுபார்ப்பானிருந்துபார்த்தான், பொன்போலவோடியெடுத்தருந்தியுள்ளம்பூரித்தானுடலமுமேபாரித்தானு, லன்போடுமுருகமலன்முன்னம்வந்தானரகரசங்கரவென்றோர்சைவன்றானே. (௨௯)

வந்தவுடனித்தமகாவிலிங்கந்தன்னைமகிழ்பூசை செய்துபின்னின் மாலியத்தைச், சிந்தைமகிழ்ந்தருந்தியேகளித்திருந்தேதசுபெறுசைவதேசிகன்முன்வந்தே, யந்தணனும்விரதன்றான்பணிந்துநின்றே யஞ்சலிசெய்துரைக்கின்றானையரேயா, னெந்தவகையென்றறியேன் றேவரீரிங்கெழுந்தருளவிறும்பூதுகண்டேனென்பான். (௩௦)

வருகின்றபோதிருந்தவுருவம்வேறேவந்துசிவபூசைசெய்து மாலியந்தான், பரிவினுடனருந்தியபோதுருவம்வேறேபார்த்திடிலோ ரயுதமடங்கதிகமானீ, ருருகுகின்றேனிதனுண்மையுரைப்பீரென்றானேதுசைவதேசிகன்றானுணர்த்துகின்றான், புரிகின்றதவவிரதகேட்டியெம்மான்பூசனைநின்மாலியத்தின்புனிதமீதால். (௩௧)

ஓங்குமெனக்கிவ்வுருவம்வாய்த்ததிதல்லாமுமைபாகன்பூசனையின் சேடமுண்ட, வாங்கதனாலிதன்பெருமைபுகலலாமோவழகாண்மைபெறுவரிந்திரருமாவர், பாங்கினுற்றோர்பரிகலப்பெற்றாலுமேலாம்பதம்பெறுவரெனவேதம்பகர்ந்ததாமா, லிங்கதனானிகழ்ந்ததையொன்றுகேட்டியென்றுசைவதேசிகன்றானியம்புகின்றான். (௩௨)

வேடர்குலந்தனிலுதித்தாள்பதுமையென்பாள் வேட்டோன்றன்னெடும்விறகுபுல்லுவிற்பாள், காடதனின்மிருகவேட்டைகளுஞ் செய்வாள்தன்னுடனேயூனருந்திக்காலம்போக்கும். பாடுமையாள்வயதுள்ள

காலமெல்லாம்பாவமேபுரிந்துடலம்பழுத்துமூத்தாள், கூடுபசிபால்வரு ந்திவிறகுசுமந்மைகொண்டுதமொற்றமுடன்குறுகினளால். (௩௩)

வருகின்றநெறியதனிலொருவர்சைவர்மாதவத்தோர் தீர்த்தயாத்தி ரைபோய்வந்தா, ரொருகின்றநதிக்கரையிலரனைப்பூசையுஞற்றினர்பாத் திரத்திலமைத்ததூய, பரிகின்றவன்னபானியநைவேத்யம்பணித்தாமே நுகர்ந்தபரிகலங்காட்டெய்த்தார், பொருகின்றகாலதனைப் பதுமைமேனி பொருந்துறவேசெலுத்தவவடானும்வீழ்ந்தாள். (௩௪)

வீழ்ந்தவுடனிந்தனக்கட்டுடனேவீழமெய்யிலுறுகட்டும்விடவுயிரு ம்விட்டாள், சூழ்ந்தயமபடர்வந்துபிடித்துக்கொண்டார்சொல்லரியயம ன்சபையிற்கொடுபோய்விட்டார், வாழ்ந்தருளுஞ்சித்திரகுத்திரரைநோ க்கிமன்னுமிவனிருவினையின்வகைகளெல்லா, மாழ்ந்துரைமினெனப்ப கர்ந்தானிவள்செய்பாவமடங்கியவெங்கணக்கேட்டி லடங்காவென்றார்.

நண்ணியதிண்ணியரானகணக்கர்பின்னுநவிலுவார்சிவநாமநாதனார் தம், புண்ணியமென்றொருகாலும்புகன்றுமில்லாள்புரிந்ததுதா னில்லை யேயிவடான்முன்னம், பண்ணியநல்வினையேதோசைவருண்டபரிகலங் காற்றெறியவந்துபட்டதேயாற், றண்ணியவிங்கிவளுடல்விட்டுடனேயா விசாம்பினுளிதுவுளதாற்றருமவென்றார். [௩௫]

என்றவுரைகேட்டலுமேயாசனம்விட்டெழுந்தெதிரே போடிவந் தான்மின்னனுண்மேற், றுன்றியபாசக்கயிற்றின்கட்டுவிட்டான்சூழ்வந் தான்பணிந்துபணிந்தெழுந்துநின்று, னன்றிதருஞ்சைவர்பரிகலஞ்சேர் தூயநல்லவுடலென்றவண் மெய்நைவந்துற்று, னன்றவன்கைதடவள வேகமலைதானேயாயினுளவள்பெற்றதார்பெற்றாரே. (௩௭)

ஆசனத்தின்மேல்வைத்தான்பூசைசெய்தானுபரணதிகள் பூட்டிவி மானத்தேற்றிக், தேசுபெறுந்தேவர்பதந்தோறுமேகி சென்றிருந்துவாழ் தியெனவனுப்பினுன், மாசில்சமனென்றுசைவன்விரதன்கேட்பவழ ங்கினனைவையோகியூகவுக்கே, பேசினனெனப்பரம னுமைக்குச்சொ ன்னபெருங்கதைசூதன்முனிவர்க்குரைசெப்தானே. [௩அ]

இருபத்தோராவது சைவர்பரிசலப்பிரசாதமகிமைச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௬௪௫.

இருபத்திரண்டாவது

சிவனடியார்தெரிசனமகிமைச்சருக்கம்

வேறு.

வன்னிசென்னியிற்கையினிற்றரித்திடும்வரதன்
பொன்னின்மாலிமையந்தருபொன்னறம்வளர்க்குங்

கன்னிமேவியகடவுளன்பர்கள்பதம்பணிந்தே
சென்னிபெற்றிடுபலன்பெறச்சிந்தைசெய்திடுவாம். [க]

தெய்வநாயகன்செப்புகின்றானுமைதனக்கே
சைவன்வார்த்தைகேட்டுவகைசேருறுவினைதவிர்தந்
துய்வருந்தவவிரதன்வேட்டுவர்குலத்துதித்த
மைவருங்குழல்பின்செய்ததென்னெனவகுப்பான். [உ]

போற்றுகூற்றுவன்புகன்றிடப்பொன்னுலகுற்றா
ளாற்றுநல்வினைப்போகந்துய்த்தவ்விடையமர்ந்தா
ளேற்றமாம்பதுமாசனனுலகிலெய்திடவே
தோற்றியன்னவடனக்குபசாரங்கொடுத்தான். [௩]

அன்னவாகனனுடன்சனகாதியரவரு
மன்னுபூசனைபுரிந்திடமகிழ்ந்துவீற்றிருந்தாள்
பொன்னினாசனத்திருந்தவள்பொலிவினைநோக்கி
யென்னமாதவஞ்செய்தனளிவளெனக்கேட்பார். [௪]

சனகராதியர்வினவிடச்சாற்றுவான்வேத
னனகனாஞ்சிவனன்பர்தம்பெருமையாரறிவார்
பனகபூடணப்பரனறிந்துரைப்பனோவறியே
னெனகமுற்றிடும்வேதமுமறிந்திசைத்திலவே. [௫]

வான்புகழ்ந்திடும்விண்டுவும்வல்லனோபுகல
நான்புகன்றிடவெளியதன்றாயினுநவில்கேன்
* யான்பிரிந்திடுமன்பர்சந்நிதியெய்தப்பெற்றோர்
தான்பொருந்துறுஞ்சுத்தரேயாகுவர்தவத்தீர். [௬]

அனையதொண்டர்தம்முருவமேசிவனுருவாகும்
வினையொழிந்திடுமெய்யன்பர்கையினாற்றீண்டிற்
பினையுஞ்சென்மசாகரந்தனைப்பின்னிடப்பெறலா
மினையவாலவர்தன்மையையான்சொலவெளிதோ. [௭]

அண்ணலாரவர்பெருமையுமன்பர்மேன்மைகளும்
பண்ணமைந்தவேதங்களும்பகர்ந்திடவரிதே
நண்ணுகல்விசேர்நாவிரண்டாயிரம்படைத்த
திண்ணமிக்கதோர்சேடனுஞ்செப்பவல்லானோ. [௮]

திசையெலாம்புகழ்சிவனடியார்களாந்தேச
ரிசைகொண்மேனியைப்பரிசிக்கவேண்டுமோயாக்கை
விசையில்வந்திடுங்கால்பட்டமெய்யினார்வினைக
ளசனிவீழ்ந்திடமடிந்திடுமரவு ×புள்ளாமால். [௯]

---

* யான்-ஆணவம், × புள்-அசுணம்

வேறு.

இன்னவற்றோர்கதையியம்புகின்றனந்
துன்னருமுனிவிர்காள்வேடர்தொல்குல
மன்னவனொருவனுண்டவன்செய்மாபவந்
தன்னையிவ்வளவெனச்சாற்றலாகுமோ. [௧௦]

உலகினிற்பலபொருள்கவர்தலூறுசெய்
தலல்சிலபுரிந்திடலரியகற்பினோர்
நலனுகர்ந்திடனிந்தைநவிற்றறீயவெங்
கொலைபலபுரிந்திடுங்கொடுமைபூண்டுளான். (௧௧)

கோவதைமாதர்தங்கொலைகளந்தணர்
மாவதைமற்றுமன்னுயிரைவாட்டுதல்
காவதையழித்தல்செய்காதகன்செய
லாவதையென்னென்னவறைகுவாமரோ. (௧௨)

ஆங்கவனொருபகல்டவிவேட்டம்போந்
தேங்கியமிருகங்கள்வதைசெய்தெங்கும்போய்
வாங்கியசிலையினன்வருந்தியுச்சியி
னோங்கியகூவிளநிழல்வந்துற்றனன். (௧௩)

தழைத்திடும்வில்வத்தினீழல்சார்ந்துளா
னழைத்தனன்வேடரையதனுக்கேயர
ணிழைத்துநீர்வார்த்திடுமிவ்விலோர்தடங்
குழித்திடுவீரெனக்கூறிப்போயினன். (௧௪)

அன்னவனேவலாலமைத்தகாவினிற்
றன்னிகரிலாவொருசைவநாயகர்
துன்னியவேனலின்வெப்பஞ்சூழ்தலான்
மன்னியவில்வத்தினீழல்வந்துற்றார். (௧௫)

அத்தினத்தரசனும்வேட்டமாடியே
மத்தியானத்தவண்வந்துசார்ந்தனன்
முத்திசேர்சைவமாமுனியைக்கண்டன
னத்தியபரியிழிந்தருகுசார்ந்தனன். (௧௬)

தவமுனிதாளினிற்றாழ்ந்திறைஞ்சின்
னவமெனுமஞ்ஞைபோயறிவுசார்ந்தன
னெவனிவனோவெனவிதயத்தெண்ணியக்
குவல்யத்தரசன்றான்கூறன்மேயினன். (௧௭)

அண்ணனீரெங்குளீரடைந்ததேதிவண்
கண்ணினுலும்மையான்கண்டபோதிலே
திண்ணியஞானங்கள்சேர்ந்துளேனரோ
புண்ணியபாவங்கள்பகரொணாதவே. (௧௮)

உம்மைநான்கண்டுமெய்யுறுதிபெற்றிட
வெம்மையிற்செய்தவமென்றறிந்திலேன்
செம்மனீரென்றடிசென்னிசேர்த்தினன்
மும்முறைவணங்கினன்மூரிவேலினன். [கக]

அரியனுஞ்சிவனடிக்கன்பர்மெய்யினிற்
பரிசனத்தரிவந்துபட்டபான்மையா
லுரியதோர்தேகத்தினுற்றபாவங்கள்
கரிகள்போற்புறம்வந்துகருகிவீழ்ந்தவே. [உ௦]

அன்னதுகண்டனனரசனையநுஞ்
சன்னிதானத்துறுந்தன்மையாலன்றே
வென்னுடைப்பாவங்கள்யாவும்யானையாய்த்
துன்னிவீழ்ந்துளவெனவணங்கிச்சொல்லினன். [உக]

அரசனைப்பார்த்தரனன்பர்கூறுவார்
விரைசெறிகூவிளம்விளங்கத்தண்புனல்
கரைசெய்துபெய்தனைவளர்த்தகாட்சியா
லுரைசெயிலுன்னைப்போலொருவரில்லையால். (உஉ)

செயலரும்புண்ணியஞ்செய்ததன்மையாற்
பயிலுறுபாவங்கள்பாறப்பெற்றுளா
யுயர்வில்வத்தோர்துளிபாணியுய்க்கினு
மயலுறுபாதகங்கோடிமாயுமே. (உ௩)

தண்ணுறுவில்வத்தின்றளிர்கண்மூன்றுமே
யண்ணலார்நேத்திரமூன்றுமாகுமாற்
கண்ணுதலுருவமாய்வில்வங்காண்பதென்
றெண்ணிலாவேதங்களியம்புகின்றவே. (உச)

சாற்றரும்வில்வமங்குற்றதன்மையாற்
போற்றியவிவ்வனம்புனிதமானதான்
மாற்றருமிங்கிழல்வதிந்துளோரெலா
மாற்றல்சேரிலிங்கரூபங்களாவரே. (உஉ)

வில்வமூலத்தினிற்புனலைமேற்கொளி
னல்லதீர்ந்தாறுபத்தாறுகோடியா
மல்லல்சேர்தீர்த்தங்களாடுமாபலன்
புல்லுவர்புவியினிற்புனிதமாவரே. (உசா)

பரனையர்ச்சனைசெயல்செபங்கள்பண்ணுத
லுரமுறுவிரதநல்லோமஞ்செய்திட
லரனடியவர்க்கனமளித்தல்கூவிளத்
திரமுறுகீழலிற்செய்தன்மேன்மையே. (உஎ)

கூவிளத்தருவைநாயகனெனக்கொடே
தீபதூபங்கொடுபூசைசெய்திடிற்
ருவில்சந்ததிகளுந்தழைக்கவாழ்ந்துபின்
மேவருங்கதியுலகத்தின்மேவுவார். (உஅ)

தண்டவில்கூவிளந்தன்னைச்சூழ்வரல்
கண்டபோதிறைஞ்சிடல்கருதுமூலத்தி
லெண்டருநல்விளக்கேற்றிவைத்திடன்
மண்டலத்திபற்றினேன்வரதனுவனே. [உகூ]

ஒருவருக்கணமதன்மூலத்துய்த்துடில்
வருசதகோடிபேர்க்குதவன்மானுமாற்
பொருதிறலரசகேள்புகலுமப்பலன்
றருகதையொன்றுளசாற்றுவாமரோ. (௩0)

விந்தவெற்புறுந்தலத்துறையும்வேதியன்
மைந்தரும்பேருமனையும்வாய்த்துளா
னுந்துநல்குரவினூர்கடோறும்போய்ச்
சந்ததமிரந்திரந்துழலுந்தன்மையான். (௩க)

அண்டரும்விந்தவாரணியந்தன்னிலே
யெண்டருமைந்தருந்தானுமெய்தினன்
கண்டனன்முனிவன்மாற்கண்டயன்றனைத்
தண்டெனவிழுந்தடிதொழுதுசாற்றுவான். [௩உ]

எந்தைகேள்வறுமையாலிடருற்றேனியான்
வந்ததுமூப்புமென்மனையுமூப்புற்று
டந்தருண்மைந்தருஞ்சாம்புகின்றன
ருய்ந்திடவுறுதியொன்றுரைசெய்வாயென்றான். [௩௩]

அடுத்திடுமைந்தருமனையுமாருயிர்
விடுத்டுவோமெனவிளம்புகின்றனர்
கிடைத்திடுமொருபொருள்கெடுவதேயலாற்
கொடுத்திடுவோருமிலென்னகொள்கையோ. (௩௪)

எவ்வகையெம்பிரானிடர்கடீர்ந்தியா
னுய்வகைபுகலெனவுருகும்வேதியன்
கவ்வையையறிந்துமாற்கண்டமாமுனி
செய்வதுகேளெனச்செப்புவானரோ. [௩௫]

கூவிளநீழலிற்கொன்றைவேணியா
னேவல்கூரன்பருக்கன்னமீந்திடாப்
பாவமதாற்கலிப்படர்வந்துற்றதா
லாவதெனினியதையாற்றல்வேண்டுமால். [௩௬]

இவ்வனந்தன்னிற்கூவிளமெங்குற்றதென்
றவ்விடைநாடிச்சென்றரன்றனன்பர்க்குச்
செவ்வியபூசனைசெய்யென்றேவின
னவ்வகைபுரிந்திடவலன்சென்றனரோ [௩எ]

இரந்திடுமுபகரணங்கொண்டேகியே
பரந்திடுங்கானகம்படர்ந்துநாடினன்
வரந்தருசிவனன்பர்மன்னுகூவிள்
நிரந்திடுநிழற்புரிநியதிகண்டுற்றான். (௩அ)

வணங்கினனுய்ந்தனனென்றுவாழ்த்தின
னிணங்கிரோடிப்புக்கிறையைப்பூசித்தான்
குணங்கொளச்சமைத்தனன்கொணர்ந்தவாலரி
வணங்குறுமமலையோரமலையானதே. (௩௯)

கண்டனராங்குறுகடவுளன்பர்தா
மண்டுபேரன்புடன்மகிழ்ந்துவாழ்த்தினர்
பண்டுறுகலியிலாப்பாக்கியம்பெற்றாய்
தொண்டரிவ்வனத்துளார்க்கணித்துச்சூழ்ந்தென்றார். (௪௦)

ஓடினனிவ்வனத்துற்றசைவரைத்
தேடினன்கொணர்ந்துசேவடிகள்பூசித்தா
னாடினன்பந்திவைத்தமுதுசெய்வித்தான்
கூடினனளகையிற்குபேரன்செல்வமே. (௪௧)

மைந்தருமனைவியும்வாழவாழ்ந்துளான்
முந்தியகூவிளமூலந்தன்னிலே
பைந்தையாரன்பர்பூசனையியற்றினோர்
சிந்தனையின்றியேயின்பஞ்சேர்குவார். (௪௨)

மன்னவநீயுமிவ்வில்வமாநிழ
றன்னிலேசிவலிங்கதாபனஞ்செய்தே
யென்னையாள்சோமநாதேசன்பூசனை
யுன்னியேபுரிதியென்றுவந்துகூறினன். (௪௩)

கேட்டனன்கிராதர்தம்வேநதன்கேடிலா
நாட்டமூன்றுடையவன்பூசைநாடினன்
வீட்டலகுறுஞ்சைவமேவினனன்றே
சேட்டராமுனிவர்க்குவேதன்செப்பினன். [௪௪]

இருபத்திரண்டாவது சிவனடியார்தரிசனமகிமைச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௯அ௪.

உருத்திரவீணவரலாற்றுச்சருக்கம்.

வேறு.

பணவாளரர்வேடலவன்கலந்துபகையின்றிவாழுமுடியர்
னிணர்சேருமாலைமுடிநங்கைபங்கனிமையோரிறைஞ்சுமிறைவன்
கணநாதர்சேவைபுரிபாதனுதிகயிலாசவாசனடியார்
மணமேவுபாதமலரன்புகொண்டுமலர்கொண்டுபூசைபுரிவாம். [க]

பதுமாசனத்தின்முனிவோரொடுற்றபலதேவருக்குமொழிவான்
முதுகூவிளத்தினிழல்வாசமுற்றமுறையோகிதாள்கள்பணியா
வதிர்வேடருக்குமுதன்மன்னனையவடியன்செய்பாவவினைபோய்க்
கதிசேரும்வண்ணமுதவென்றுசிந்தைகவலுற்றுநின்றுசொலவே. [உ]

சிவயோகிசிந்தைமகிழன்புகொண்டுசிலைவேடர்தங்கள்பதியே
நவமாகவுன்றன்வினைபோயொழிந்துநலமேவுகாலமுளதாற்
றவமேவுநந்தமுடனுற்றபூதிதருகானுன்மெய்யிலுறவே
பவகோடியானையுருவாயெரிந்துபடியுற்றுவீழ்ந்தபடிபார். [௩]

திருநீறுகண்டிபுனைதந்துதீக்கைசிவசைவசீலநெறியுங்
குருநாதர்சொல்லுமுபதேசமுங்கொள்குறைவற்றநெஞ்சமுடனே
யுருமேவிலிங்கவுயர்பூசைபெற்றவுரவோர்கடாங்களலரோ
தருமேவுநாடர்முனிவோர்களோடுசமனும்வணங்குதகவோர் [ச]

எனவிண்டுசைவனினியஞ்செழுத்துமியல்பாகவெய்தியுமைகோன்
புனைலிங்கபூசைபுரிகென்றுரைப்பமகிழ்வோடுநின்றபொழுதில்
வனமெங்குமோடியிறையோனைநாடிவருகின்றசேனைமுதலோர்
சினைதுன்றுவில்வநிழலின்கண்யோகிதிருமுன்புகண்டுமகிழ்வார். [ரு]

சிவபத்தர்பாதமுடிவைத்துநின்றுசிலைவேடராசனுருகு
நவமத்திகண்டுதளகர்த்தர்சொல்வர்நகரிற்பொருந்தியெமையா
ளவனிக்கிராசனிவனுற்றதென்கொலருளென்னலோடுமறைவா
னுவமிக்கொணாதசிவபூசைசெய்யவுபதேசர்சைவருளரால். (சு)

தழைவுற்றவில்வநிழன்மேவுசைவர்சரணத்தடைந்தென்வினைபோ
யொழிவுற்றதிங்ஙன்வளர்சொற்கமன்னுமுயர்தச்சனிங்ஙன்வருவித்
தெழிலுற்றகோவினகர்கட்டிலிங்கமினிதிற்பதிட்டைபுரிவித்
தழிவற்றபூசைபுரிவித்தியோகியருள்பெற்றுவாழ்வனினிநீர் (எ)

மூதூரிலேகியுபயோகம்யாவுமொழிவுற்றவாறுகொணர்வீர்
போதீர்களென்னவவர்போகவேடர்பதிபுத்திகண்டுபுகுதாத்
தீதூர்தலற்றநகரத்தினோடுசிகரத்துலாவுகதிர்வான்
மீதூர்செய்கோவிலமைவித்தனன்சொல்வினிலுற்றதச்சனவனே. (அ)

வேறு.

மாடமாளிகைகள்சூழ்ந்தமாநகரதனிஞுப்ப
ஞுடகக்கோயில்கண்டேயரசனுமகம்பூரித்தான்
கூடியகலப்பையாவுங்கொணர்ந்தனன்சேனைநாதன்
றேடியமுனிவன்முன்போய்த்திருவடிவணங்கிச்சொல்வான். (கூ)

அத்தனேதீக்கைக்கேய்ந்தவருந்திரவியங்கள்யாவு
மித்தலைவந்தவன்றேநருமதையிலிங்கந்தானும்
பத்தியாற்கொடுவந்துற்றேன்பதிட்டைபூசையுமேபண்ண
மத்தியானமுதல்வேளைவாய்த்ததென்றேத்தினின்றான். (க0)

கண்டனர்சைவர்யோகர்கனகவாலயத்துட்சென்றே
யண்டர்நாயகனைத்தாபித்தரியபூசனைகளாற்றி
யெண்டருஞ்சந்நிதிக்கண்யாகமண்டபமுண்டாக்கிக்
குண்டமண்டலஞ்செய்தோமக்குறைகளுமுடித்தாரன்றே. (கக)

அரசற்குமவன்றன்மைந்தர்மனைவியரனைவோருக்கு
முறைசெயுந்தீக்கையாற்றியுபதேசமுறையுஞ்செய்தார்
வரைதருமவன்றனாட்டின்மாந்தர்கள்யாருஞ்சேனை
நாபதியவரும்வந்துநல்வினைப்பயம்பெற்றாரே. (கஉ)

அந்நகரத்திலுள்ளவனைவருஞ்சைவரானார்
மன்னவன்சைவயோகர்மலர்ப்பதம்வணங்கியேத்தித்
தன்னிகரிலாவிலிங்கார்ச்சனைவழிபாடுசார்ந்தான்
பன்னுகூவிளத்தின்கீழும்பரமனைத்தாபித்தானே. (கங)

ஆலயந்தனிலெம்மானுக்கபிடேகமாநைமேத்யங்
காலந்தப்பாதபூசைகன்னியராடல்பாடல்
சீலமார்திருவிழாநற்சிறப்புடன்றீர்த்தநல்கல்
சாலவேபுரிவித்தன்னதானமுஞ்செய்வித்தானால். (கச)

அரியகூவிளமூலத்திலரனடியவர்கள்கோடி
தெரிதருமவர்க்கேயாறுதீஞ்சுவைக்கறிகளோடும்
பொருவருமகேசபூசைபுரிந்தனன்யோகிசொல்லா
லுரியதன்பொருள்களன்பர்க்குதவினனுவகைகூர்ந்தே. (கரு)

ஒருசிவயோகர்வந்தேயுற்றகானவனுடெங்கும்
பெருகியசைவநீதிப்பிரளயமாகவன்றே
திருமறைமுனிவீரன்னசிறப்பெலாஞ்சென்றுபார்க்க
வருதிரென்றுரைத்துப்பின்னுமலரயன்வதுக்கின்றானால். [கசு]

அன்னதோர்சைவகூட்டமதனைநாங்காணப்பெற்றாந்
பன்னருபாக்கியங்கள்பார்வைபெற்றதற்குண்டாமா
லுன்னுமந்நாட்டிலுள்ளவூர்வனபறப்பயாவும்
பொன்னகர்புகுவதல்லாற்புகுமன்புரத்துச்சாரா. [கஎ]

சாற்றருஞ்சைவநீதிசார்ந்தருள்வேடர்வேந்தன்
போற்றருங்கிளைகளோடும்புத்திராதிகளினோடு
மாற்றவோர்பிரமகற்பமவனியாண்டிருந்தபின்ன
ரேற்றமார்வைகுண்டத்திலெய்தியோர்கற்பம்வாழ்ந்தான். [கஅ]

பின்னர்ப்போய்ச்சிவலோகத்திற்பெருங்கிளையோடும்பெம்மான்
றன்னடிநீழல்சார்ந்தான்சைவயோகீசர்தாஞ்செய்
யுன்னரும்யோகத்துற்றுருறுந்தவமுனிவீரென்னுப்
பன்னரும்வேதஞ்சொன்னுன்பின்னரும்பகர்கின்றுனே. [கக]

தன்னிகரிலாதசைவத்தபோதனர்பெருமையெல்லா
மின்னமெத்தனையென்றென்றேயியம்புகேனன்னோருண்ட
வுன்னரும்பரிகலந்தானுயிர்விடுங்காலத்தூறு
துன்னலாலன்றுவேடர்தோகையும்பவங்கடீர்ந்தாள். [௨௦]

தென்றிசையரசன்செய்யுஞ்சிறப்புகள்பலவும்பெற்றுள்
பொன்றிகழுலகில்வந்துபுரந்தரன்பூசையுற்று
ணன்றிநம்முலகில்வந்துநாஞ்செயுநலமுஞ்சார்ந்தாண்
மன்றல்சேர்வைகுண்டத்தில்வாழ்ந்துபின்கயிலைசேர்வாள் [௨க]

அம்பிகையருடான்பெற்றேநித்தியகன்னியாவ
ளெம்பிரானிவட்குநாமமிலக்குமியென்றுகூறி
யும்பரிவிவள்கல்யாணத்துரியர்யாரென்றுதேர்வான்
கொம்பனுளிவளை மாயோற்களித்திடமனத்திற்கொள்வான். [௨௨]

இந்திரைகமலைபற்மையிலக்குமியெனப்பேர்மேவிச்
சுந்தரமுகுந்தனர்க்குச்சுருதியின்முறைகல்யாணத்
தந்தமிலாதவெம்மானளித்திடமனைவியாகித்
தங்யைார்கயிலைநீங்காதிருப்பளித்தையருனே (௨௩)

எனப்புகல்வாய்மைகேட்டவிருடிகளிறும்பூதெய்தி
மனத்தினிற்சிவத்தியானம்வல்லராய்மகிழ்ந்திருந்தா
ரனத்திறையிந்தவேடரவ்வையைப்போற்றியிந்தத்
தினத்தினிற்கண்வாய்பெற்றசிறப்பிற்குச்சிறப்பாய்த்தென்றுன். ()

இத்திறமடியாருண்டபரிகலமேன்மையென்றே
பத்திசேர்சைவர்சொன்னபரிசெலாம்விரதன்கேட்டே
சித்தனுயகவிலிங்கதெரிசனம்பூசையாற்றி
முத்தியும்பெற்றுனென்றுமொழிந்தனன்யோகிதானே. (௨௫)

பத்தியாற்கின்னரேசன்பகர்பூசைச்சிறப்புச்செய்வான்
கத்திகைச்சிறப்புத்தீபக்காட்சியின்சிறப்பினோடு
மத்திருவன்னூர்பாடலாடலின்சிறப்பும்வாய்ப்பச்
சித்தனுயகன்றனக்கேதிருவிழாச்சிறப்புஞ்செய்தான். (௨௬)

அன்னவன்மனைவியாராமரிவையர்தாமும்வந்தே
மன்னுநம்முன்னர்வீணைவாசித்தார்வளிதான்ருக்க
வன்னவைமுழங்கல்கண்டேயதிசயித்தவைதாமாக
வுள்ளினர்நம்மைநோக்கிப்புறுவரங்கேட்கலுற்ருர். [உஎ]

நகங்களாற்றெறிப்பதின்றிநலம்பெறுமோசைநல்குஞ்
சகம்புகழ்வீணையாயாமுறுவரந்தருவாயென்ரு
ருகந்தவர்தமக்கேயவ்வாறுதவினமுமையேயன்ன
விகந்திடாவனையர்வீணையாயினரீதுகேள்ாய். [உஅ]

என்றரனியம்பக்கேட்டாள்வீணையின்வரலாறெல்லா
நன்றுநன்றெனநயந்தாணங்கைமாமகிழ்ச்சிகூர்ந்தா
டுன்றியவிசைகள்பாடிச்சோதியார்மகிழச்செய்தா
ளன்றுதான்வசந்தகாலமாகிவந்தடுத்ததன்றே. [உகூ]

நங்கைதன்கொங்கைதன்னைநாயகன்கைகளாலே
குங்குமவருவிபாயுங்குன்றிரண்டாகச்செய்தா
னங்கணன்புயங்கள்பன்னீரருவிக்குன்ருகச்செய்தாண்
மங்கைதன்கையாலின்னவசந்தன்கொண்டாடினரே. (௩0)

காவிகண்கண்டுகண்ணீர்கலுழவாய்கண்டேயாம்ப
லாவிபோயடங்கத்தூவியன்னங்கண்டைகண்டோடப்
பூவியல்வண்டுங்கையில்வண்டுமேபுலம்பியார்ப்ப
வாவிநீர்தன்னிலம்மைவள்ளலோடாடினளே. (௩க)

நீராடிச்சந்த்ரகாவிசிறந்தபட்டுடுத்துமுத்துத்
தாராடுமார்பின்முல்லைத்தாமங்குங்குமமுஞ்சாத்தி
வாராடுந்தனத்தாளோடுமணியாடுங்கண்டத்தெம்மா
னோராடுமணிமேல்வீட்டினினிதாடியிருந்தானன்றே. (௩உ)

இக்கதைபடித்தல்கேட்டலினிதெனவிரும்புவோர்க்குத்
துக்கமாமடவிதன்னைச்சுடுங்கொடுந்தீயுமாகிக்
கைக்கொளும்பெண்டீர்மக்கட்கடுஞ்சுறவெறிசஞ்சாரத்
தக்கசாகரங்கடக்கத்தருங்கப்பருனுமாமால். (௩௩)

என்வரனடியார்தங்களிரும்பிரசாதமேன்மை
யுனல்லருமவர்தமேன்மையுயர்சிவதருமம்யாவு
மனகனும்வியாதன்கூறுமம்முறைப்படியேசூத
முனிவரனேமிபோன்றமுதிர்வனத்தவர்பாற்சொன்னன். (௩௪)

இருபத்துமூன்ருவது உருத்திரவீணைவரலாற்றுச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-எஉ௩.

இருபத்துநான்காவது,

சத்தியலோகச்சருக்கம்.

பனகந்தனிநடமிடுமன்றெருமுதுபகைகொண்டிடுசகடறமோதும்
வனகந்தரகிரளகந்தருதிருவடிவஞ்சிலைபெறநடைகூரு [மான்
மெனகந்தருவினையொழியும்படியருளிறைவன்பிறைபணிசடையெம்
கனகந்திகழ்சபைநடனந்தருமொருகருணாநிதிசேவடிதானே. (௧)

மறையோதியமுனிபகர்வானுயர்தருமணிமாளிகையரியணைமீதே
புறையாதியையிருநாலாமூர்த்தியினுருவாகியவொருமுதலோனை
யிறையாமமலனையிறுகத்தழுவியவின்பந்தருமுமையன்போடு
நறைபாரமுதுபொழிந்தாலெனவுரைநாதன்றிருமுனநவில்கின்றாள். [௨]

ஆறுகியகுணபரிபூரணனெனுமரனையுபர்சத்தியலோகம், வேறு முலகினின்மிகுமேன்மைகள்பெறவியனல்வளமுறவிதிசெய்தாய், பேறு முலகினிலெய்துந்தகைமையர்பெரிதாம்புண்ணிய மெவைசெய்தோர், மாறுவரசெவன்வாணாளளவெவன்வாஞ்சித்தனனவைபகரென்றாள். [ ]

கனிவாய்மொழியுமைபகரச்சுடர்தருகண்மூன்றுடையவனுரைசெய்
பணிமால்வரைதருமயிலேயுயரனபதிமேவியசத்தியலோக [வான்
மினிதாகியநமதாடற்கிசைதரவெய்தும்படியதுசெய்தோமா
லுனியாவருமவனுறுதற்கரிதரிதுபர்மேருவின்மிசையுறுமன்றே. [௪]

தருவின்செறிவனநீடுங்குளிர்தருதடமெங்கணுமலரளிபாடும்
பெருகுங்கதிர்விடுசதகோடிகொடைகைபெறுமாளிகைகொடிமிசையாடு
மருகெங்கணுமுளமந்தாரத்தருவதனின்புடையுளமணிலிங்க
முருகும்பரிவொடுதொழுவார்வினைகடிதோடும்முயர்கதியதுகூடும். [௫]

அந்நாட்டுறைபவர்பசிநோய்தாகமுமடையாரியாமோர் விளையாட் டான், முந்நாண்மணிமண்டபமொன்றதனிடைமுனிவோரமரர்கண்மு றையாகப், பன்னாரணமுந்துதிசெய்திறைஞ்சிப் பரிவொடுபணிசெயவ ரியணைமேன், மன்னுவவணினிதுற்றேமவ்விடைவந்தானந்திறனந்தீசன்

அடியற்றிடுமரமெனவேவீழ்ந்துநம்மடியிற்பணிதருமவனன்பா, மு டியிற்செங்கைகுவித்தேயாடினன்முன்னின்றின்னன மொழிகின்றான், படியிற்றிகழ்தருகயிலைத்திருவரைபாங்குற்றிடுநீயீங்குற்றாய், நொடியிற் பெருவளமுளதேற்பதிலிசைநூறாயிரத்தொருகூறுண்டோ. [எ]

அமிர்தம்பொழிகனிகனிகொந்தளமலரண்டத்தளவினுமதிவாசங், கமழுந்தருநிறையுளவோ குளிர்துளிர்கனகத்தளிரென வொளிர்வான் மே, னிமிருங்கூவிளநிழலெங்கெங்கணுநிரைதந்திடநீணிரயத்திற், றிமி ரங்கெடவெயில்விடுசூரியர்நிகர்சிவலிங்கங்களுமுளவோதான். [அ]

குயில்பூவைகளளிகிளிமாமணியொளிகுலவுற்றிடுநிறமவைபெற்றே
மயிலாடிடவெதிரேனையாளுடையவன்மகிழ்நாமத்திசைபலபாடு

முயர்மாவொடுபலவுருவாழைகள்பலவுடையுங்கனிபழூறுந்தேன்
செபவாரமுதப்பெருநதியொடுபொருசெயலாலலையெறிதிறநீடும். (௯)

வே று.

அல்லனிக்கிடுங்கயிலைபத்தாழ்வரையருகின்
வில்வநீழலின்மேவியவிலிங்கங்கட்கெல்லாஞ்
சொல்லுமம்மலர்த்தேனபிடேகமுஞ்சொரியு
மல்லற்பூந்தளிர்வாளருச்சனையுமேவாய்க்கும். [க௦]

இனையவாகியகயிலையைநீங்கிடாதிருக்க
நினையுமாலென்றனெஞ்சகமையநின்னிதயத்
தனையமால்வரைதனைவிடுத்திவ்விடையமர
வனையுஞ்செஞ்சடைவள்ளலேமதித்தவாறென்னே. [கக]

அண்டர்நாதனின்முன்னரித்திறமெலாமடியேன்
றொண்டனுதலிற்சொற்றனன்சோதிநீயுறையக்
கொண்டதானங்கள்கோடிதான்குவலயத்துறினு
மெண்டருங்கயிலைக்கிணையாகுமோவெந்தாய். [க௨]

எனப்புகன்றநந்திக்கெதிர்யாஞ்சிலவிசைத்தே
நினைத்தநின்னுரைமெய்ம்மையேநீபேருலகி
லுனக்குநேர்தருதொண்டருநண்பருளரென்
றனக்குநேருமுண்டேனிற்கயிலைக்குநேர்சாரும். (க௩)

பாலிற்கோவின்பாலனங்களிலேபரமான
மேலுறுந்தருவவற்றினில்வில்வநல்லணியிற்
சாலுமக்கமாமணிமெய்யிற்றரிப்பதிற்பூதி
மேலும்பெண்களினிமயமான்மைந்தரிற்குகனே. (க௪)

சாற்றுதீர்த்தத்திற்சிவகங்கைதலங்களிற்காசி
யேற்றலிங்கத்திலேவிசுவேசன்மண்டபத்திற்
போற்றுமுத்திமண்டபமுனிவரிற்கும்பன்பூசை
யாற்றலிற்சிவபூசைமந்திரத்திலஞ்செழுத்தே. [க௫]

கலைகளிற்சிவவித்தைகாலாலயஞ்சூழ்கா
றலைகளிலெலமைவணங்கியதழும்புறுதலையே
மலைகளிற்றிகழ்மேருவேயதிகநாமகிழு
நிலைகளிற்கயிலாயமாம்வேதமுநிகழ்த்தும். (க௬)

ஈதுநந்திகேள்கயிலையுங்கவுரிதன்னிடமுந்
தீதிலன்பர்தஞ்சிந்தையுமூன்றிடஞ்சேர்வே
மோதுமூன்றினுமன்பர்தமுளமகிழ்ந்துறைவோங்
காதலாலரும்பூசனையாம்பெறுங்கருத்தால். [க௭]

ஏறுமன்பர்தம்பூசைகேளிவ்வளவென்றே
கூறுநற்கடங்காவிடங்கொண்மனக்கோயி
றேறுதற்கருஞ்சிறப்பைப்பார்செப்புவர்நந்தீ
மாறிலாநமையிரத்நவாசனத்தினில்வைத்தே. [கஅ]

அரியபூசையின்றிரவிபந்தானபிடேகத்
துரியபாறயிர்தேனெய்க்குவிண்புன லூறும்
பெரியமாக்கடல்களுமொவ்வாபெருவரையெழுந்
தெரியுமங்கவர்புரிநைவேத்தியத்திரளாகா. [க௯]

ஆரமட்டிடுஞ்சுண்ணங்கற்பூரமோடடைக்காய்
சாரவற்பொடுசோடசமாமுபசாரஞ்
சேருவித்தவரிப்படிசெய்தலானமக்கு
மோரிடத்தினுமவரிடத்தின்பம்போலுறுமோ. (உ0)

அளப்பிலானந்தம்பெருகமானதம்புரியன்ப
ருளப்பெருந்திருக்கோயிலேயுகந்தனநந்தீ
வளத்தினன்மிகும்பிரமன்செய்மானதபூசை
கிளத்தருந்தரமாகையாற்கேண்மைபெற்றுறைந்தேம். (கஉ)

சிறந்தமாநிதிமைந்தருமனைவியுஞ்சேர்ந்தே
நிறைந்தவல்வினைநீங்கிடநினைப்பரோமாந்தர்
மறந்துமோர்பகல்வரிசையன்பர்கண்மனக்கோயி
லுறைந்தயாமவணீங்கிடவல்லமோவுரைப்பாய். (உஉ)

பிரமனூர்செயும்பூசனைவிரும்பிமுன்பெயர்ந்தோ
நருமதாநதிக்கரையிலேநம்பியோர்நம்பி
புரியுமாபெரும்பூசனையுகந்தனம்புகுவோந்
தெரியுமத்தயாமத்தினிலென்றுசெப்புவனால். (உங)

அத்தயாமத்தினவன்செயும்பூசையாரமைப்பார்
வைத்தசாளரமண்டபஞ்சப்பரகோள
மெத்தைமேல்விதானங்குளிர்மாணிக்கவிளக்கம்
பத்தியாற்புரிதருமுபசாரங்கள்பலவே. [உச]

நல்லபோனகம்பானகநலம்பெறுகனியே
மல்லல்சேர்மதுவர்க்கநைவேத்தியவகைதான்
சொல்லருங்களபங்குளிர்சந்தனஞ்சுகந்த
மெல்லைதீர்ந்தவங்குள்ளனவெங்கணுமில்லை. [உரு]

தேவியோடவன்சிந்தைமானதப்பெருங்கோயின்
மேவிவீற்றிருந்தேவிளையாடிடவேண்டு
நாவிலாரமுதூறநன்னுமங்கள்பாடு
மோவிலாவிசைக்குருகுமெம்முளமுமென்றுரைத்தான். [உசா]

நந்திநீகடிதேகியேயெம்பெருங்கயிலை
முந்துகோபுரவாசலின்முறைபுரிந்துறைகென்
றெந்தைகூறினனென்றிருடிகட்கிதோசனைசேர்
கந்திதந்தருண்மைந்தனார்கட்டுரைத்தனரே. (உஎ)

இருபத்துநான்காவது சத்தியலோகச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-எ௫௦.

இருபத்தைந்தாவது

மானதபூசைச்சருக்கம்

வேறு.

வெள்ளத்திரைக்கங்கைவேணிப்பிரான்பாதவிரையார்மலர்
பள்ளத்திலலர்கின்றமலர்கொண்டுவழிபாடுபெயில்பத்தியா
லுள்ளத்தில்வைத்துந்தொழுந்தொண்டர்மணநாறுமுபயச்சரண்
வள்ளத்தைநிகர்கஞ்சமிகுவஞ்சநெஞ்சத்தின்மலர்கின்றவே. (க)

உரைபேறுமறைநாலுமுறையாகவேயோதுவானோதுவான்
விரையேறுதிருநீறுபுனைநந்திதனையெந்தைவிடைநல்கியே
நரைபேறுதனையேறியுமையோடுமேநண்ணினனர்மதைத்
திரையேறுகரைமேவுசிவயோகியிதயச்செழுங்கோயிலே. (உ)

அதிர்கின்றகணநாதர்புடைசூழமறைபாடவமரேசர்தா
முதிர்கின்றமகிழ்வோடுதனியோடமுனிவோர்கண்முனமாடவே
மதிகொண்டகுடைசாமரங்கோடிபுடைசூழவருகின்றபோ
தெதிர்கொண்டுதொழுமன்பனிறைவன்றனையாசனத்தேற்றினன். (௩)

குளிர்சந்தனக்கலவையாட்டினன்றொடைகொடுசாத்தியே
மிளிர்குங்குமத்தோடுகத்தூரிகற்பூரமேற்சாத்தினு
னொளிர்கின்றபொன்னுடைகடகங்கண்மகுடாதிபுளபூண்களுந்
தளிர்கண்டியிடைகொண்டிடுங்கொத்துமுத்தார்முஞ்சாத்தினன். (௪)

பருப்புப்பொருப்பைப்பிதிர்த்திட்டுநெய்யாறுபாலாறுடன்
சருப்பெற்றிடுஞ்சர்க்கரைப்பொற்கரைக்கேய்ந்ததயிர்வாரியும்
விருப்புற்றகறிவர்க்கமதுவர்க்கமிலையன்னவெற்போடுமே
திருப்பெற்றபாவாடைபூவாடைநிகழ்மண்டபஞ்சேர்த்தினன். (௫)

திருக்கண்சிறப்போடுகாளாஞ்சிதீபச்சிறப்பூட்டினன்
மருக்கொண்டதூபங்கள்கற்பூரவாலத்திவகைகாட்டினு
னுருக்கொண்டமின்னன்னபொன்னன்னநடையார்களுசிதங்களாத்
தருக்கின்றவிசைபாடலாடற்சிறப்புஞ்சமைத்தானரோ. (௬)

விழுகின்றகண்ணீரினொடுதண்டெனச்சென்றுவிழ்ந்தேபதந்
தொழுகின்றதொண்டன்றனைக்கண்டுமகிழ்கொண்டுசொல்வானெமான்
முழுதொன்றுமிதயங்கொணின்பூசைமிகநன்றுமொழிவாய்வரம்
பொழிதந்துளோமென்றபொழுதன்பினொடுநின்றுபுகழ்பேசுவான். (எ)

வேறு.

அம்பிகாபதியேபோற்றி அழிவிலாப்பொருளேபோற்றி
யெம்பிரானுமையுநீயுமீன்றருள்புரியப்பெற்றே
னம்பினேனுனதுபாதநான்றொழுதுய்ந்தேனந்தோ
சம்புவேகதியுமின்றுசார்ந்துளேன்போற்றிபோற்றி. [அ]

பாவிப்பாருளத்திற்பூசைபரிந்தருள்புரிவாய்போற்றி
யாவிக்கோராவியானவண்ணலேபோற்றிபோற்றி
சேவிப்பார்தமக்குமேலாஞ்செல்வந்தந்தருள்வாய்போற்றி
காவிக்கேசிகரதாயகண்டத்தாய்போற்றிபோற்றி. (கூ)

குழவிவெண்பிறையணிந்தகொன்றைவார்சடையாய்போற்றி
யழகமருமையாள்கொங்கையணிகளபங்கடோய்ந்த
மழவிளங்கதிர்போன்மேனிவானநாயகனேபோற்றி
விழைதருமடியார்க்கின்பவீடருண்முதல்வாபோற்றி. [கo]

உன்னரும்பாதபூசைக்குரியபாத்திரமுமானே
னென்னரும்பவங்கடீர்ந்தேயிகபரம்பெற்றேனெம்மான்
றன்னிகரில்லாநீவிர்தமியனேனிதயந்தன்னின்
மன்னியேபூசைகொண்டவரமன்றிவரம்வேறுண்டே. [கக)

ஆயினுமடியனேனுக்கருள்வரமுளதேளெந்தாய்
தாயெனுமெம்பிராட்டிதனையுநின்றனையுநாயே
னேயெனுமளவுநீங்காதிதயத்திலிருத்திப்பூசை
மேயினவாறுசெய்யவீற்றிருந்தருளவேண்டும். (கஉ)

சந்ததியாகவெற்குவந்தவர்தாமுநும்மை
வந்தனைசெய்துவாழும்வாழ்க்கைபெற்றுய்யவேண்டு
நந்திநாயகவென்றேத்திநருமதாநதிக்கரைக்கண்
முந்திபோகிசிந்தைப்பூசனைமுடிவிற்சொன்னான். (கங)

அடைக்கலமடியனேனுன்னம்புயத்தாளுக்கெந்தாய்
கடைக்கணீந்தருள்வாயென்றானென்னவேகருணைநாதன்
மடக்கொடியுமைக்குச்சொன்னானென்றுமாமறைகடேர்ந்த
வடிவுறுமங்கஞ்செல்வம்வந்தனைக்கங்கமாக. [க0]

மனையுடன்மைந்தர்தாமென்வழிபாட்டிற்குதவியாக
வனைவரும்பூசையாற்றவண்ணலேசெல்வம்வேண்டி
யுனதுபூசனையிற்காலம்போக்கவேயுதவிசெய்வா
யெனையினஞ்சனனத்தெய்தாவண்ணங்காத்திரட்சிப்பாயே. (கக)

ஐயவுன்னுடனெனக்குவழக்கென்னபிறவியாற்றச்
செய்யினுஞ்செய்வாயந்தச்செனனங்கடொறுமென்னெஞ்சு
மெய்யநின்பாதப்போதில்வெறியளியாகவேண்டு
மெய்துவன்சித்தியாவுமிவ்வரமேனுமீவாய். (க௨)

பத்திதான்பவரிடத்திற்பதிகநற்றலத்திற்கேகச்
சத்திதான்வருகசெல்வர்தமதிடஞ்சேருஞ்சத்தி
சித்தியாதொழிகமாதர்கோட்டியிற்சிந்தைசேரா
துத்தமச்சிவலிங்கார்ச்சனையினெஞ்சுவகைகூர. (கங)

காதுபுன்கவிகேளாமற்கடவுடன்சரிதங்கேட்க
வோதுநாச்சிவநாமத்தினூறமுதூறன்மாந்த

..நர்முன்குருட..ரெயன்கன்வள்ளன்முன்காந்திசேர
..ாதனேன்கைககளெம்மானடிப்பூசைபுரிகவன்றே. (கச)

..ன்றனக்கியாகயோகதன்மமிந்திரைவிலாச
..ன்றலார்செல்வம்வேண்டாவள்ளல்பூசனையேவேண்டுங்
..ன்றுதாய்கருப்பத்துள்ளுந்தோன்றியகுழவிப்போதும்
..வன்றிவேல்விழிபராசைக்காலத்தும்விரும்பிலேனே. (கரு)

..ப்பொழுதுனைநினைந்தேனினியுள்ளகாலமெல்லா
..ப்பநின்பாதப்பூசையடியனேன்புரிகநல்காய்
..செப்பியவிளமைக்கானிற்றெறிவைபராசைப்பேயிற்
..கைப்புருந்துழன்றேவிணிற்காலங்கள்கழித்துளேனே. (கசா)

..செண்பகமுல்லைவில்வந்திகழ்குருக்கத்தியாதி
..கன்பெறுமலர்கொண்டேத்துமவர்தமினந்தனத்தோ
..டெண்பெறுமனுவயன்றன்கற்பத்துமீறில்லாமற்
பண்புடனிருக்கநல்கும்பரமநிற்பணிந்திலேனே. (களா)

இங்குனதன்பர்பாதமேத்தவும்பெற்றிலேனே
சங்கரவுலகுக்கெல்லாந்தந்தைதாயாகிநின்ற
வங்கணவெனக்குநல்கினருட்கடல்குறைவதுண்டோ
வெங்குநின்றுலுமேழைக்கிரங்குமென்றுரைக்கும்வேதம். (கஅ)

அம்பிகாபதியேயுன்னையருச்சித்தேனெனையரட்சிப்பாய்
நம்பினேனெனப்பணிந்துநாத்தழும்பேறப்போற்றிச்
சம்புநின்முன்னர்நைவேதனஞ்செய்நின்மாலியந்தா
னெம்பிரானன்பரோடிருந்தருந்திடவேவேண்டும். (ககூ)

அருந்திலோர்பிடிக்கொருக்காலரகரசிவமகேச
வருந்திடாதருள்வாயென்றுவாழ்த்தியேபுசித்தல்வேண்டுந்
திருந்தவிப்படிச்செய்வானேற்செய்தபாதகங்கணீக்கிப்
பெருந்திருவாணைநல்கிப்பிறவாதநெறியுய்ப்பானால். (உ௦)

அப்பநின்மாலியத்தின்சொல்லனுவளவுண்டாலுங்
கையினிற்பரிசித்தாலுங்கமழ்முடிதனிற்கொண்டாலுஞ்
செய்யுமாபாவநீங்கிச்சிவபதமடைதறிண்ண
முய்யவங்கதுகையுற்றுலும்பராரமுதென்றோர்ந்தே. (உக)

ஆனந்தக்கூத்துமாடியரகராவெனமகிழ்ந்தோன்
றுனந்தமில்லாவன்பன்றனக்கிணையொருவருண்டோ
ஞானஞ்சேர்வசிட்டராதிமுனிவருநலத்தினெவ்வா
..ீனமிலிதனிற்பத்திசெய்தன்முற்றவமதாமே. (உஉ)

..புகலுமிங்கிவைபுசித்துப்பூரித்தோன்றன்னைக்கண்டே
..பகமகிழ்ந்தேவணங்கியாதரித்தவனேதேவ

ணிகரிலாவிதனையுண்டோனிறைகவிப்புலவனுவான்
மகபதிதுணையுமன்னேன்மலர்ப்பதம்வணங்குவானே. (உரு)

ஆரேனுஞ்சிவசேடத்தையரனடியாரோடுண்பார்
பாரேறும்பெரியோரென்றுபகருவர்முனிவரெல்லாஞ்
சீரேறுமிலிங்கபூசைசெய்தரன்கதையுஞ்சொல்வோ
ரேரேறும்பதத்தூள்சென்னியேற்றவன்யமனேடெய்தான். (௩சு)

கடவுடன்சரிதங்கேட்பிற்கந்தரமேநீவிம்மாய்
படர்சடையவன்பூசைக்குப்பலம்வில்வங்கையேகொய்யாய்
சுடர்விழியேவெற்பீன்ருடுணைவனைப்பாராய்வார்ரா
யடர்மனமேயெம்மானையனுதினநினைத்திடாயே. (உசு)

என்றுசொற்றுறைவோர்தங்கட்கிந்திரனுபேந்திரன்ரு
ஞென்றியவாசறன்னிலூழியத்தவர்களாவார்
கன்றியமனமேயெம்மானன்பரல்லாரைக்கண்டாற்
றுன்றியபுலையரென்றேதூரத்தேயகறிகண்டாய். (உசு)

கனவினுமேயன்னுரைநினையற்ககனதைவேண்டிற்
பனகபூடணனைத்தானேபரவிடாய்சென்னியேநீ
யனகனைவணங்காய்நாவேசிவனுமமறைதியன்றே
தினமுமென்செவிகளேநீர்சிவகதையமுதுண்பீரால். (உஎ)

நாசியேவள்ளல்சாத்துநன்மலர்மணங்கொள்வாயாற்
றேசுறுமுடம்பேகைகளிரண்டுசென்னியின்மேற்கூப்பிப்
பூசையின்முடிவினின்றேபுரிந்துகூத்தாடல்செய்தி
யாசைநெஞ்சனமேயீசனடிப்பதுமத்தன்பார்வாய். (உஅ)

சித்தமாம்வண்டேமாதர்சிமிழ்ப்புவர்க்காட்டைநீங்கி
யத்தனுர்ஞானவோடையரனடிக்கமலஞ்சேர்தி
பத்திசேருனக்கின்பத்தேன்பரவுறுமனவனத்திற்
குத்தமஞானனந்தக்கிழங்கையுமுதவுமன்றே. [உகூ]

சாய்த்திடுதலைமுன்னுயவங்கமேசங்கரன்றன்
வாய்த்திடுகோயிலங்கப்பிதக்கணம்வருதிபூழ்தி
தோய்த்திடுமுறுப்பினேடுஞ்சூழ்தொறுங்கறுத்துக்கன்றிக்
காய்த்திடுமுடம்புபெற்ருற்கடுவினைகளையலாமே. [௩௦]

மேதினியாதிசித்தசஞ்சலமிடாவைவீட்டற்
காதியைப்பணியும்பத்திக்குடாரமேயமைதல்வேண்டுஞ்
சோதியைப்பூசைசெய்துதுதிசெய்தாற்றுன்பமாக
மோதுறுங்கடலைநீங்கிமுத்தியைச்சேரலாமே. [௩க]

ஆதலாலீதுகேட்டிசதானந்தவரசரேறே
நீதியாற்பூசையாற்றிநிமலனுரன்பரோடு

நீதிலாவுறவுகொண்டுசேர்ந்தரனிவேதனஞ்செய்
போதனைக்கொடுத்தன்னுரையுகந்துகாத்தருடியன்றே. [௯௨]

அன்னதொண்டர்களுன்பூசைக்கங்கமாயுறைதற்பாலார்
மன்னவவவரேயல்லான்மற்றுளோர்தமைச்சேர்க்க
முன்னிருந்தவர்தாமந்த்ரமுறைமுறைபுகன்றுரென்னிற்
சொன்னவன்பூசைதன்னிற்றொலைவிலாப்பலனுண்டாமே. (௯௩)

போனகம்புரிந்தபின்னர்ப்புண்ணியனடியாரோடு
ஞானசாத்திரபுராணகவின்றுவிற்றிருத்தல்வேண்டு
மானபின்னந்திமாலைப்பூசையுமமைவினாற்றித்
தேனலர்கொன்றையார்க்குத்திருவர்த்தயாமந்தன்னில். (௯௪)

பூசனையாற்றிப்பொன்னாற்புரிபரியங்கமீதில்
வாசனைச்சுகந்தமாலைமலர்பலவொலியனாற்றி
யீசனுமுமையுமேவியிருந்தனரதனிலென்று
[illegible] (௯௫)

இப்படிநிசிக்காலத்துமிப்படிப்புரிந்துளோர்க
ளொப்பருமுலகையாண்டேயுயர்பதம்பெறுகுவாராற்
செப்பருமிலிங்கபூசைதனில்வருஞ்சித்திபோலே
தப்பிலாப்புண்ணியங்களொன்றினுஞ்சார்ந்திடாவே. (௯௬)

நீதிநன்னெறிகட்கெல்லாம்விசுவாசநிமித்தமாகு
நீதிலாவிசுவாசத்தாற்சிவபதஞ்சேர்தறிண்ணம்
பேதைமாந்தர்களுக்கீதுபெறுவதுமரிதுகண்டாய்
மேதகுகாசிமேவும்வேதியனொருவனுண்டால். [௯௭]

விசுவநாதரையும்வீரேசுரரையும்பூசைசெய்வோன்
றிசைபுகழ்தரும்வீரேசன்றிருக்கோவிறனிலெந்நாளு
மசைவிலாத்திருமெழுக்குந்திருவலகாதியாக
வசைவிலாப்பணிகள்செய்துமன்னுபூசனைகள்செய்வான். [௯௮]

அனையவனொருநாளண்ணற்கர்த்தயாமத்தின்பூசை
தனையுகந்தாற்றியாங்கட்சயனமுஞ்செய்தானன்னான்
முனமெழுந்தருளிவீரேசுரன்வந்துமுன்னர்நின்றான்
பனவன்றான்கண்டுவீழ்ந்துபணிந்துதோத்திரஞ்செய்தானால். (௯௯)

அன்னவன்றன்னைநோக்கிவீரேசனருளிச்செய்வான்
பன்னருமறையோயுங்கள்பத்தியாசாரமியாதே
யுன்னரும்விசுவாசந்தான்யாதவையுரைத்தியென்றான்
மன்னருமறைவல்லாளன்றொழுதனன்வகுக்கின்றானல். (௬௦)

அண்ணலெம்மாசாரம்நின்னடியருக்கடியராக
[illegible]

பண்ணவகினதுபஞ்சாக்கரசெபம்பண்ணுவோமியாந்
திண்ணமாமிவற்றையன்றிச்செய்யுமாசாரமென்னே (சுக)

இன்னணஞ்சிவதன்மங்களிபாவையுமேதெரிந்து
பன்னரும்பாவகோடிபாறவேபரிந்துசெய்வோ
முன்னருமிதயலிங்கபூசனையுறுதியாகத்
துன்னருமலர்கள்கொண்டுதொழுதருச்சனைசெய்வோமே. (சுஉ)

அரம்பையர்வந்துசேவித்தளகத்தான்மறைக்கும்பாத
வரந்தருங்கவுரிசெய்யகமலத்தாள்வந்திப்போமாற்
புரந்தனிற்சிறந்தகாசிப்புரவீதிதனிற்புகுந்து
நிரந்தரஞ்சஞ்சரிப்போம்நின்னுமம்புகலுவோமால். [சுங]

கோடிசூரியப்ரகாசக்குணக்கின்றுயேகனுகி
நாடரும்பொருளதாகிப்பரத்துக்கும்பரமாய்ஞான
வீடுதந்தருளுமேலாமகத்துக்குமகத்தாய்மேவுந்
தேடருநின்னைப்பூசித்தடியிணைசிந்திப்போமே. [சுச]

அம்பிகைசிவனுனந்தவலைகளிலாடல்செய்யு
நம்பியாம்வாலசுப்ரமணியன்றுணயத்தல்செய்வோஞ்
சம்புவீரேசர்முன்புசார்ந்துகங்காசலத்தின்
கும்பங்கள்கொண்டேநாளுங்குளிரவேபாட்டுகிற்போம். [சுரு]

கங்கையிற்சுத்திசெய்தகடிமலர்வில்வந்தன்னுற்
பொங்கியவோமத்துற்றபூதியாலுனைப்பூசிப்போந்
தங்கியவாரணசிச்சம்புவேயிவையேயல்லா
லெங்களுக்காசாரந்தானியாதெனவணங்கிச்சொல்வான். [சுசு]

ஈசனின்னருளாலிவ்வாறியற்றலேயென்பாற்செய்தி
காசியின்மகிமைநின்றன்கதைகளென்விடயமீதே
மூசுவேன்மற்றைக்காதைமுயலுவேனுயிரின்பாவ
நாசனேபொறுத்தாட்கொள்வாய்நாயினேன்பிழைகடானே. [சுஎ]

கூவிளநீழன்மேவுங்குணக்குன்றேதிருமடந்தை
காவலனுதிதேவர்க்கருள்புரிகடவுளாகி
மேவியகங்கையாற்றின்வெள்ளத்தினனைந்தவேணித்
தாவிலாநிதியேயாஞ்செய்தரும்பிழைபொறுத்தாள்வாயே. [சுஅ]

திரிவேணிமூழ்கிப்பூதிபுண்டரந்திகழச்சாத்தி
யரிதானகண்டிபூண்டேயனுட்டானநியமமாற்றி
யுறைசெய்தேயுருத்திராத்தியாயமஞ்செழுத்தைக்கங்கைக்
கரைமீதிலிருந்துநின்னைக்கருத்தினிலிருத்திலேனே. [சுகூ]

அருந்துயர்நீக்கியாளுமண்ணனின்னருளார்சென்மப்
பெருந்துயர்நீங்குமாறுபெற்றிலேன்சிவயோகத்திற்

றிருந்தியதவத்தோரோடுஞ்சேர்ந்திலேன்சிவனையேற்கு
மருந்தன்னகருணைதந்தாண்டருளெனவழுத்தல்செய்தான். [ருo]

இன்னவாறேத்திவீரேசுரனருளெய்தப்பெற்றே
மன்னியகாசிவாசம்பெற்றனன்மறையோன்றனே
யுன்னருஞ்சிவனைப்பூசையுஞற்றினோர்பெறுதொன்றுண்டோ
தன்னிகரிலாதகீர்த்திச்சதானந்தவரசரேறே. [ருக]

ஆதலானீயுமாதர்மைந்தர்மேல்வைத்தவன்பை
மாதொருபாகன்பாலுமன்பர்தம்மிடத்தும்வைத்தே
போதருஞ்சிவதன்மஞ்செய்துபர்கதைகேட்டியேலுன்
றீதெலாந்தீர்ப்பனென்றுசூதவன்றான்செப்பினனே. [ருஉ]

நாற்பத்தேழாவதுவீரேசுரச்சருச்சமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-கச அச.

நாற்பத்தேட்டாவது

சூரசேனச்சருக்கம்

வேறு

வேதநாயகன்விபுதர்நாயகன்விரைமலர்க்கமலாசன மின்னனுரிருவோர்களுபகவேறுவேறுருவங்கொடே,சோதிநாயகமாய்வளர்ந்ததன்னடியுநீள்சுடர்முடியுமே தொடர்ந்துவானுலகெல்லைமுற்றநடந்துகிழ்நிலைதுருவியே, வாதினாலவரோடிநாடியுணர்ந்திலாவொருநாயகன் வானநாயகன் ஞானநாயகன்மன்றிலாடல்செய்நாயகன், பூதநாயகனுதிநாயகன்பூவைபோன்மொழிப்பாவைதன் பொருவினாயகன்பாதமேத்தினர்புவனநாயகராவரே. [க]

ஞானமாமுனிபானவாக்கினவற்கிபோகிசொல்வான்சதா னந்தராசன்வணங்குதன்சூதவன்பகர்ந்தநலந்தெரிந்,தானனங்களோரைந்துடைக்கடவுட்கியன்றிடுபூசனை யாற்றுமாறுதன்னேற்றமாமுளத்தன்புபூண்டனனுமரோ,வீனமாகியமக்கள்பெண்டிரிடத்தில்வைத்திடுமன்பொழிந் திறைவர்பாதமிறைஞ்சுவோரவருபயதாண்மலரேத்துவோ, ரூனமாநரைதிரையினோடுறுமூப்புசாவெனவேயிட ருற்றிடுஞ்சனனத்தில்வந்தலைவுற்றிடார்கதியுறுவரே. [உ]

மடந்தைபாகரைப்பூசைசெய்பவர்செல்வமேசெல்வமாகுமான் மக்கள்பெண்டிர்மயக்கெனுங்கொடுவாளராக்கவர்வுற்றிட, விடந்தலைக்கொடிறக்குமன்னவர்சிவகதாமிர்தவாரியின் வீசுகின்றதோர்திவலைகிட்டினுய்விடுசேர்வதுதின்னமே. யடங்கலப்பொருநாதகேள்சிவகதையினா

முதக்கட லஞ்ஞைபெற்றிடுமொந்தருக்கதடுப்பதற்கதி தூரமாந்,திடம்பெ ருங்கடலதனிலேவருதினகரோதயகோடிபோற் சீவமாமணிகோடிபோ ற்சிவனேசர்கோடியர்செறிவரே. [ச]

அந்தமாதியிலானையேயுனுமறிவினர்கடம்மகிமையை யாரறிந்துறு வார்கண்மூவுலகத்தினும்மரிதாமவர், சுந்தரத்திருமேனியின்கதிர்கண்ட போதுடனேகடற் சூரியர்க்ககலாவஞானவிருட்குழாந்தொலைவுற்றிடு, மெந்தையார்திருவருளின்மேன்மைவிளக்குஞானவிளக்கென வின்ப மேபெறுமன்பராகியவிரதநகோடியுண்டாக்கினேர்,பந்தமற்றிடுமெவர்கட ம்பதபூசைசெய்துவணங்கிடும் பாக்கியஞ்சனனங்கடோறுமியற்றிடுந்த வபலனரோ. [ச]

அனையதொண்டர்களுக்கிறைற்திருவாக்கினற்பரிசத்தினு லானமூ ன்றினுமேயடுத்துளவவர்கள்பாவமகற்றுவா,ரினையர்தம்பத தூளின்மூவு லகெங்குமேபுனிதஞ்செய்வா ரினியதொண்டர்களெதிகொளத்தரிச னமுறத்தொழநன்மொழிப்,புனிதம்விண்டவர்செப்பமேனியின்மருத்து றப்பெறுவோரெலாம் புனிதராகுவரிவற்றினேர்கதைபுகலுவேனதுகே ட்டியான்,மூனமிலங்குசெழுந்தமிழ்த்திருநாட்டின்முத்தியழித்திடு முத் தமாநதிதீரமேன்முதுகுன்றமொன்றுளததனிலே. (ரு)

சிந்தையிற்சிவபத்திபெற்றவன்மிகவுமேதருமஞ்செய்வோன் றீரரா சகுலத்தில்வந்திடுஞ்சூரசேனனெனச்சொல்வோன், முந்துமுத்தநதிக்க ரைக்குளநேகமாலயமாக்கினன் முதல்வனர்தமிலிங்ககோடிபதிட்டை செய்துமுடித்துளா,னந்தமேவு மிலிங்கபூசனையாற்றுவித்தனனுடொறு மழகனர்பழமலையர்முன்னமமைத்துளான்மணிமண்டபஞ்,சுந்தரத்தொ ளிர்தீபதோரணமாலைபூமணமாலையுந் தூக்கினேனுமைபெரியநாயகிது ணைவர்பூசைதொடங்கினன். (சு)

அருணனுருதயாதியேதொடுத்தாற்றுபூசைமுதற்றிரு வத்தயாமவ ரைக்குமேசெயுமாறுகாலமெய்ப்பூசையி, லுரிமையேகொடுமாதர்சேய ரசுரிமைமற்றுமுன்னுமலே யுய்யுமாறுளபத்தியாலவைசெய்யுமாறுசெ லுத்துவோ,னிருணலம்பெறுகண்டராகியகருணையங்கடல்பூசனைக் கி னிதவன்கொணர்புனிதநன்பொருளிவளவென்றெவர்புகல்வரே,யொரு வரும்பெருதற்கருந்திருவுடனளந்திடவரியதோ ருண்மைநற்குணமுட னரன்பெயரோதுநாவையுமுடையனே. (எ)

அவனயந்துறுபரிசனங்களுமனையர்சங்கரநாமமே யறையுநாவினர் தூபதீபமோடலர்கண்மஞ்சனமாதியா, நவமுறும்பலகுடைகள்சாமரை விசிறிமற்றுளவரிசைக ளுடொறும்புரிபூசனைக்குறுதிரவியங்கள்கொடு த்துளார்,தவமிகுந்திடுமரசனுக்கனபதியெனும்பெயர்சார்ந்ததாற் சங்க ரற்குசிவகனம்புரியன்னராகிடம்மையே, யுவமையற்றிடுமன்பர்தாம்

பறவுதயவத்தமவலாயுமே ழுறுமாறுசுவைப்பதார்த்தமோடுதவிடுங் கொண்டையாலரோ. [அ].

தனதுடைக்கசரததுரங்கபதாதியோடுபண்டாரமாந் தவலைசெம்பு னுடையாபரணங்கள் கண்டிகைவாகன, மெனநலச்சிவனுமமுற்றதென ச்சொல்வான்பினைவேறுமேரிக்கலோகமடைந்தகாமியம்பிலானவன்வைத்திடும்,வனமதிற்புறவதனிலுற்றமரங்கள்படைங்கொடிசெடிகளின் மலர்கள்காய்கனியாவுமாமறையறையும்வள்ளறனுமமே, புனைகுவானவனுட்டிலுற்றசனங்கள்யாவருமன்னனேதபுத்திவைத்திடுபாவனைச்செயல்புரிகுவார்புவியரசனே. [கூ]

அரசனன்னவன்மருவலார்களநேககோடிவல்லமர்போர வவனடைக்கிடுபொழுதிலிங்கதைநவெல்லுவார்பிறிதில்லையாம், பரசிடும்பதியேயெனக்கொளுமன்னபோதிலெதிர்க்கிடும் படையுடைந்திடுமவனுளத்தினினைத்தகாமியமியாவையும், வரமெனும்படிசிவனதாணையின்வந்திடும்படியதுகொள்வான் மன்னனிப்படியிச்சையுற்றதுவாய்த்திடச்சிவபூசையி, னுரமதாகியவாசையுற்றனனுண்டியாசையுமற்றன ஞேதுபூசையிற் போதுபோக்குவன்மாலையர்ச்சனையுவகையான். (க0)

பூசைசெய்திடுபோதுபாதமுதற்சிரம்பரியந்தமும் பூதிதூளனமாவணிந்துபுண்டரங்கள்வயங்கவே, யாசையன்பர்களுடனிறைந்திடவாரன்மகிழ்ந்திடுகண்டிகை யணிகிரீடகல்வாகுமாலைகள்கந்தரத்தணிமாலைகடேகசேர்தருசன்னவீரமொடங்கியின்னதிலக்கமாச் செப்புமாமணிதூப்பொனாரமுடன்கலந்தணிசெய்கையான், பேசுசுத்தநிலத்தினிற்சுகவாசனத்திலிருந்தரன் பிரியமாகுமிலிங்கபூசனைபெருகுமன்புடனாற்றுவான். (கக)

சங்கரற்கபிடேகமுற்றிடுதிரவியந்தனின்மிக்கபா றயிர்நெய்தேனொடெலகனிக்குறுசாரமாரமுறுங்குழம், பங்கமாகியமந்திரங்கொடநேகவெள்ளமதாகவே யன்பினலபிடேகமுஞ்செய்தருச்சனைக்குளவகையெலாந், திங்கள்போலொளிர்முல்லைமல்லிகையில்வகல்லனதேடியே சிந்தையன்பொடணிந்துதண்புழுகோடுகுங்குமக்கலவையு, மெங்குமேகமழ்தரவணிந்தொளிர்குவளைமாமணியாரமோ டிறைமகிழ்ந்திடுநிறைபணித்திரளின்னடைமாலிகைசாத்தியே. (கஉ)

அன்னவெற்புதுகநிவளர்ந்திடமாமபுடமெவுதன பார்த்தியேற்றமதானசோடசமாருநல்லுபசாரமுந், சன்னிதிக்கணியந்நிவிழ்ந்துவணங்கிமேபிருகண்கணீர்த் தாரையோடிடத்தோத்திரம்பலசாற்றிக் கூத்துகின்றுடுவான்,மன்னுபல்லியமாதமா[illegible]ங்கள்பா[illegible]லாலான்மகிழ்வெ வாய்த்திடும்பக்திறப்பமைந்தருண்மன்னவன்[illegible]தோடதா, னென்னையாளரனுமெய்களித்திடமாகியபுசனை [illegible]திருசெய்திடயோகர்சித்தர்களொவரும் வந்துவணங்குவார். (கங)

அனையதோர்பிரதோடவேளையிலரியயன்றிசைகாவல ரமரரியாவருமவனிமீதினில்வந்துகங்கையைமுதலவாம், புனிதமாநதியாடிநீறுடுகண்டிமாலைபுனைந்தரன் பொருவில்கோயில்கடொறுமிலிங்கவருச்சனைப்பணிபூணவே,வனைதருந்திருவாணிமின்னயிராணிவின்னரமாதரார் வந்துசோடசவரிசையோடபிடேகபூசைவகைக்கெலா, மினையகைப்பரிசாரகத்தொழிலதுபுரிந்தியல்வீணையி னிசைபயின்றிடுநாடகஞ்செயவினியபூசனைபுரிவரால். (க௪)

அந்தவேளையிலெந்தைபூசனையன்றியொன்றுமியற்றிடா ரிமுழாவயன்றுளமிந்திரனுபர்தங்குழலூதவே,யித்திரைக்கொடிநாமடந்தையோடிந்திராணியும்வீணையி னிசைகள்பாடிடவானநாடர்களினிதுநின்றுகொண்டாடவே, மூன்றுமூவுலகத்துளோர்களும்வந்துகூடிடநதிகளின் முதன்மைபெற்றிடுகங்கைமங்கையுமுன்னர் நின்றுநடிக்கவே, நந்திவாகனனிமயமேவியநங்கைகொங்கைகளசையவே நாடகஞ்செயல்கண்டுவந்தருநடனமுற்றிடுவானரோ. (க௫)

புனிதமாம்பிரதோடபூசைகள்புரிபவர்க்குறுபெருமையும் பூசைகொண்டிடுபரமனாரவர்பொருவிலாதுயர்பெருமையு, மினையதென்றெவர்புகலுவார்களிவ்வேளையிங்கிதின்மறைவலோ ரினியபூசைசெய்யாதிருந்திடினர்தங்குலமாவரே, மனிதர்தங்களில்யாவராயினுமெந்தையார்திரையோதசி மாலைவேளைசெய்பூசையுந்தரிசனமுநெஞ்சின் மதித்திடார், தனுமயக்கிடுமதுவருந்திடுபுலையர்தந்திடுமைந்தரே சாற்றுமாவதிபாதகஞ்செய்தசாரன்மைந்தருமாவரே. (க௬)

பின்னுமங்கவர்மன்பதைக்குலமல்லர்வெங்கரமாகுவார் பெய்யும்வெய்யநறுநுகர்ந்திடுதையல்குய்யமுகந்ததிற், றுன்னுமாமுகம்வைத்துகந்திடுதுன்முகத்தவனென்பராற் றுய்யவையமடந்தைநையவுறுஞ்சுமைப்பரமாவரே, யன்னபாதகர்தம்மையீன்றிடுதாயர்தந்தையர்நரகுழவாற்றுவோரவர் குலமனைத்தையுமாழ்குழிக்குளழுத்துவோர், மன்னுமங்கவர்கற்பகாலம்வெந்நரகிலுற்றுவருந்தியே மகிதலந்தனில்வந்திறந்துபிறந்துதுன்புறுவார்களே. (க௭)

சம்புவின்பிரதோடபூசைதனைப்புரிந்திடுமன்புளோன் றன்னையீன்றிடுதந்தையேசிவதருமமாற்றுதவத்துளோ, னம்பியங்கவனைப்பயந்திடுமங்கைகற்புடைநங்கையே நாடுகின்றசகோதரங்களியாருநன்னெறியாளரே,யம்புவிக்குளவன்பயந்திடுசந்ததிக்கிளைமல்குமா லனையனன்மனைதானியந்தனமதிகவர்த்தனையாகுமா, லெம்பிரானடியானவன்பததூளியென்றலைமேலதா மெதிர்புகுந்திடிலவனையேதொழுதேத்துவோர்பெரியோர்களே. (க௮)

ஆகராசிவசங்கராதினசங்கமத்தினல்லுருவமா யடியன்முன்வரவேனுமென்றருநடனமன்பொடுபுரிகுவேன், பரமனார்பிரதோடபூசனைசாங்கோபாங்கமியற்றுவோர் பாங்கரிற்சகவாசமேவுறுபாக்கியம்பெறவேண்டு

வே, னுரகலோகமதுற்றவாசுகியாதிசர்ப்பவிராசர்தா மூரியமாதர்களோடுமேபிரதோடவேளையிலாடகப், பெரியவீசர்முனெய்தியே யபிடேகமோடுநைவேதனம் பெருகுசோடசவரிசையோடவர்பிரியபூசனை புரிவரே. (க௯)

அப்படிக்கரனன்புசேர்பிரதோடபூசனைசெய்துளோ ரவர்கட்பெருமையைவழிந்தெவர்சாற்றுவாரவையாற்றிடா, விப்படிக்கணின்வந்துமேபினிறந்துதீங்குடலெய்தியேயென்றுமேசெறிகும்பிபாகமழுந்துவார் கரையேறிலார், செப்புறுஞ்சிவனன்பரோடுகலந்துளார்சிவபாவனை சிந்தையன்பொடுபுரியவும்பிரதோடபூசனைபுரியவுந், தப்பிலாதமுயற்சிபெற்றிடுவார்கள்சங்கரனருளையே சார்வரங்கவரேநிறைந்திடுதாவில்பாக்கியவாளரே. (உ௦)

கற்பகாலமனந்தகோடிதவங்கள்செய்தவராயினுங் கருதரும்பிரதோடபூசனைகாதலித்திலராமெனி, லற்பமாமவர்செய்தபுண்ணியமியாவுமேயவமாகுமா லிவையர்க்குறுகற்பினல்விரதத்தின்மிக்கதுவாகுமால், வெற்புவில்லிதன்விரதமின்னதுசெய்தலார்கெடன்மெய்ம்மையே மிக்கதோர்திரைபோதசித்திதிமாலையுற்றிடும்வேலையி, லற்புடன்புரிபூசையிற்பரனற்புதந்தரமகிழுவா னகமகிழ்ச்சியவ்வளவுமற்றுளவர்ச்சனைக்கணுவந்திடான். (உக)

என்றுசொல்லியிவ்வாறுமுன்னுரைசூரசேனனெனச்சொலு மிறைவனைப்பிரதோட பூசனையினியநல்லுபசாரத்தாற், றுன்றுதொண்டர்களோடிருந்தினிதாற்றினுலெந்தநாளுமே தொலைவிலாச்சுகமெய்துமுத்தியையெய்தலாமெனநிதமுமே, சென்றியற்றிநல்வாழ்வுபெற்றனனென்றியாக்கினவற்கியாஞ் செம்மைவேதமுணர்ந்திடுஞ்சிவயோகியாகியமாதவ, னன்றில்வந்துறைசோலைசூழ்தருதுன்றுமாளிகைமிதுலைவா ழனகனுகியசனகராசனகந்தெளிந்திடவோதினன். (உஉ)

நாற்பத்தெட்டாவது சூரசேனச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-கரு௦ரு.

நாற்பத்தொன்பதாவது

இராசேந்திரச்சருக்கம்.

வேறு

தோடுங்குழையுஞ்சூழ்ந்தாடச்சுடருங்குழையின்பிறைச்சடையின்
காடும்பவுரிகொண்டாடக்கனகசபையினின்றாடித்
தேடுமறைகள்கொண்டாடவாரூர்ச்சிங்காதனத்திலிருந்
தாடும்பெருமான்புகழ்பாடிமேவிசெவிபயனையாறுடையாரே. (க)

இசைப்பான்முனிபாக்கினவற்கிராசன்சூரசேனனென்பான்
றிசைப்பாவுடையான்பிரதோடபூசைநாளுஞ்செய்துவந்தான்
பசைப்பான்மிகுந்தவவாவுடையபவசாகரத்தேவீழாம
னசைப்பான்மையதாங்கதிகொடுக்குநல்லவிரதமிதுவென்று. [௨]

இந்தவிரதமகிமையும்பூசனையின்விதியுமிசைவேத
முந்தவுரைக்குமவ்விதியைமொழிவாஞ்சனககேட்டியாற்
சிந்தைமகிழ்ந்துசந்ததமுந்திரிகாலமும்பூசனைபுரிவோ
னந்திப்பூசைபுரிந்தன்றியன்னமருந்தலாகாதால். [௩]

அரியபிரதோடப்பூசைபுரிவோன்றனக்குமதுவன்றே
பரியும்விரதமதுபுரிவோன்பானுமறைதற்கோரைந்து
தெரியுங்கடிகையெனவெளியிற்சென்றேயுடலந்தனிற்சுத்தி
புரியுங்கருமமுடித்தரன்றன்புனிததீர்த்தந்தனிலாடி. [௪]

பூதியுத்தூளனம்பூசிப்புரியுமனுட்டானஞ்செய்வோன்
வேதிபூதிதரியாமன்மிகுமாசமனஞ்செய்தானேற்
நீதிலியன்றவவனேயிந்திரியநுகர்ந்தானெனலாமா
னீதிநெறிதனினீறுதரித்தேதகியமஞ்செயல்வேண்டும். [௫]

நானம்புரிவோன்றனக்கியன்றநறுந்தண்புனலைச்சிவதீர்த்த
மானதெனவேபாவனைசெய்தாடிக்கருமஞ்செயல்வேண்டு
மேனிவருத்தமுறிலதனைவெந்நீராக்கிமூழ்கியரன்
றேனின்கொன்றைமுடிதோய்ந்ததிருமஞ்சனமுந்தெளித்திடுவான். [௬]

வெண்ணீறுத்தூளனம்பூதிமிக்கதிரிபுண்டரம்புனைந்து
பண்ணார்விரலிற்பவுத்திரமுந்தரித்துச்சந்திபண்ணினபி
னெண்ணார்சிவமந்திரசெபமுமியன்றமுடித்துப்பூசையில்லிற்
றண்ணார்கிழக்குமேற்குவடக்கேனும்பார்த்துச்சார்ந்திருந்தே. [௭]

மானுமழுவுமபயமுடன்வரதந்தாங்குஞ்சதுர்ப்புயமுங்
கூனலிளவெண்பிறையணிந்துகுடிலமுடியுங்குண்டலமோ
டானசருவாபரணமுமேயணிந்தவழகும்பெறுஞ்சிவனை
யீனந்தீர்க்குஞ்சிவலிங்கத்திடையேபாவித்தேத்தியே. [௮]

கருத்துகினைத்தபின்னுவாகனந்தாபனமுந்தான்செய்தே
யருத்தியுடனேபாத்தியமாசமனர்க்கியமுமேகொடுத்தே
திருத்துபஞ்சாமிர்தமுதலாமபிடேகத்தின்திரவியங்கள்
பொருத்தமுடனேவெவ்வேறுபுனிதவபிடேகம்புரிந்தே. [௯]

சுத்தசலத்தாற்சீருத்திரமனுவைச்சொல்லியாட்டியபின்
சத்திபாகன்றனக்கேயொற்றாடைசாத்திச்சந்தனமும்
பத்தியுடனேசாத்தியருச்சனைப்பன்மலரும்பரிந்தணிந்தே
சித்திபெறுதூபந்தீபங்காட்டிநைவேத்தியங்கொடுப்பான். [௧௦]

புன்னவகையுங்குறிவகைகளபூபவகையுமெயரன்றன்
மன்னரெத்தினிவேதித்தேபடைக்கயமுதுமுதலேத்திச்
சொன்னதூபந்தீபஞ்சோடசமாமுபசாரந்தொகுத்தே
யென்னையாளுமெம்பெருமான்முன்வீழ்ந்திறைஞ்சியேத்துவான். [கக]

புத்தேளிர்கடமதிப்பியேபூதபதியேபோற்றிமறை
வித்தேசந்திரமவுலியேவினைநோய்மருந்தேபோற்றியருட்
சத்தேசித்தேயானந்தந்தானானவனேபோற்றிபணி
முத்தேவருமோர்வடிவானமுதலேபோற்றிபோற்றியே. [கஉ]

என்னைப்புரப்பாயருள்விசுவநாதாபோற்றியேழையே
னுன்னைச்சரணமென்றடைந்தேன்காப்பாயுன்றாமரைத்தாளைச்
சென்னிப்பூவாயணிந்துதொழுநினைந்தென்னாளுசெல்வநிதி
மன்னுற்றிடுமுன்சிவலிங்கபூசையென்றேதிக்கின்றேன். [கங]

நிலத்தில்பாவருனைப்பணிந்தாரவர்கணிதிபின்பதிகளன்றே
குலத்திலெனையுநின்பாதபூசைபுரியக்குறித்தருள்வாய்
சலத்தின்முளைத்தபலபட்பஞ்சாராதருந்தாமரைசாரு
நலத்தவளிபோலென்னெஞ்சப்பிறரைநாடாதுனைநாடும். [கச]

இதயமுனைபேணினைத்திடுகவென்னாவுன்துநன்றும
மதனையெப்போதுந்துதிக்கக்காதுன்சரிதமதுகேட்கப்
புதியமலராலென்னகைகளின்றுணைத்தாண்மலரிற்பூசைசெய்க
விதிமாலயிபாவிப்பரிசுமேனுட்செய்தநவமன்றே. (கரு)

வள்ளலேயுன்பூசையினல்வருங்கல்யாணநன்மையெலா
முள்ளபொருளேசங்கராவீராவுமையாண்மணவாளா
தெள்ளுமமுதேயருட்கடலேசிறியனேனைப்புரந்தளிப்பாய்
பிள்ளைமதிசேர்முடியானேகாசிப்பதியெம்பெருமானே. (கசு)

காலகாலாவினிமேலென்கருத்தும்பாவந்தனிற்செல்லா
தேலவருள்வாய்பலயோனிதன்னிற்செலுத்துமிருவினையுஞ்
சாலமாதர்துர்க்கந்தயோனிவிரும்புஞ்சஞ்சலமும்
பாலவிழியாய்தீர்த்தேயுன்னருட்டேன்பருகப்பணிப்பாயே. (கஎ)

அடியேனெஞ்சம்பிரமபதமமரர்பதங்கள்விண்டுபதம்
படியேழ்புரக்குமிறைபதமும்பற்றிற்றிலதாலெந்நாளு
நெடிதாம்பிரதோடப்பூசைநிகழ்த்திநின்பானிவேதித்த
வடிபாலனமுன்னடியருடனிருந்தேயருந்தமதித்துளதால். (கஅ)

சென்றநாளெல்லாமவமேசெலுத்திச்சிவனேவீரேசா
வுன்றன்பூசைதனைப்புரியேனுனதாலயமுஞ்சூழ்போதேன்
குன்றமுலையார்மயற்கோட்டிகுறித்துக்காலம்போக்கிவிட்டே
னின்றதிவாயதுபொறுத்தேயெளியேன்றனைக்காத்தருள்வாயே. (ககூ)

சீராருனதுதொண்டருடனெனையுநினைவாய்சிறுபூனை
காரார்மத்தமெருக்குவில்வங்கங்கைப்புனலாலுன்பதத்தே
யாராதனைசெய்திலனொருவில்வந்தாற்பிரதோடத்தினத்தி
லேராருன்பொற்பதத்தணிந்தாலிரேழுலகுந்தருவாயே. (உ0)

வித்தேசிவபூசையிலுள்ளவிசுவாசஞ்சேர்பலன்பூசை
பத்தியுடையனிதயவயற்பதிபாதவமாய்ப்போயினதாற்
சித்திதருநின்சிவலிங்கபூசையெனுஞ்சஞ்சீவியென்னைத்
தொத்துபிறவிப்பிணிதீர்க்குமருந்தென்றுளத்திற்றுணிந்திலனே. (உக)

இளமைப்பருவந்தனின்மைந்தரென்னகுறைகள்செய்தாலும்
வளமைத்தாகத்தாய்தந்தைபொறுப்பருன்றன்மலர்ப்பாத
முளம்வைத்திறைஞ்சிநினையாமற்பேதைமதியாலுனைமறந்து
களவிற்றிரிந்தவெனதுபிழைபொறுத்தேகாத்துக்கொள்வாயே. (உஉ)

பிறப்புமிறப்புமில்லாமலருள்வாயலதுபிறக்கிலுன்னை
மறப்பதில்லாவரந்தருவாயென்றுவேண்டிவணங்கியே
சிறக்கும்பிரதோடப்பூசைசெய்யக்கடவன்செய்துடனே
யிறப்பில்லாததிருவத்தயாமப்பூசையுமியற்றி. (உங)

இயன்றசெபமுந்தான்புரிந்தேயியல்சேர்காலைமாலையுட
னயஞ்சேரோமந்தான்செய்காநதன்றனக்குறிவேதனஞ்செய்
பயன்சேரன்னமன்பருடனடுக்கப்பகர்வைசுவதேவ
முயன்றவிருபோதும்புரிகபிரதோடத்தோர்முறைபுரிக. (உச)

அன்னமருந்திப்பின்னிருகடிகையேனுமரன்காதை
பன்னிப்பொழுதுபோக்கிடவேவேண்டுஞ்சில்லோர்பண்ணவர்கண்
மன்னுதிரிகாலம்பூசைபுரிவோர்மத்தியானத்திற்
றுன்னும்பூசைமுடித்தருந்தியந்தப்பூசைதொடங்குங்கால். (உரு)

உடுத்தகலையைவிடுத்துமற்றோர்புனிதகலையையுடுத்துடல
மடுத்தநீறுத்தூளனமாவனைந்துபூசைபுரிவதென்றே
யடுத்துப்புகல்வார்பிரதோடபூசைதனக்கப்படியாகா
வெடுத்தபிரதோடத்திலுண்போனவர்செய்தோடமெனல்வேண்டா. ( )

தெரியுந்திரையோதசிவிரதஞ்சிவபத்தர்களாமறையோர்கள்
புரியும்பொழுதில்விசேடமதாப்புரியவேண்டுமிதற்கிணையாய்
பரியும்விரதம்யாங்காணப்பகரக்கேட்கப்பட்டதின்று
லரியவிவற்றிலோர்காதையரசசனகேட்டியால். (உஎ)

உலகமெல்லாந்தனதுசெங்கோலோச்சிப்புரக்குந்தனியானை
யிலகுந்திகிரிராசேந்திரனெழில்சேர்பிரமாவர்த்தமென
நிலவுந்தலமொன்றதிலிருந்தானிகரில்செல்வத்தளகேசன்
புலவர்க்கரசனிந்திரனும்போற்றுஞ்செல்வப்புரவலனே. (உஅ)

னையோன்பரிகுபுல்ணியப்புரிந்தானப்போதவனைக்காண்பதற்கே
னைதிர்தவத்துமறையோதும்வியாசமுனிவன்வந்தனனன்
னைவன்றனக்கேகெயெதிர்கொண்டுமுறையால்வணங்கியாசனத்திற்
ரிதோய்பிறையோனெனவிருத்திப்பரிந்தபூசைபுரிந்தனனால். [உ௯]

றைவன்வாதராயணனைப்பார்த்தேயிசைப்பானிசைநான்கு
றையுமறைதத்துவஞானமுறையினுணர்ந்தமாதவத்தோ
றையுமாசாபாசத்தினபாயநீங்குமுபாயமெந்தத்
றையிற்செயலாமெனயோகத்துறையுமுனிவன்சொல்லுவான். [௩0]

லகருமத்தெரிந்தனையாலரசஞாலத்தோரிந்தச்
சால்லையுணர்ந்துதருமபுத்திசேர்ந்தேயுய்யத்தொடங்கினையா
ல்லல்புரியுங்குடிவாழ்க்கையாசையொழித்தோரரிதறந்தான்
ல்லல்புரியும்பிரபஞ்சவசத்தோர்க்கெங்கேவருமன்றே. [௩௧]

க்கதருமவாசனை தான்பெற்றோன்விரத்தியாவனென்றே
க்கவிரத்தனல்லாதான்றருமஞ்சாரிலவைநில்லா
தாக்கவிரைந்தேநீங்கிடுமீதும்பர்தமக்கும்பொதுவன்றே
க்கடருமஞ்சாரில்வினைவாரிநீந்தப்பெறுவாரால். [௩௨]

ந்தத்தருமமேதெனிலெப்போதும்புரிவதநேகமுண்டால்
ந்துற்றிடுமோர்தருமத்தாற்றருமம்வாய்ப்பதெனமொழிந்தா
ரிந்தப்புதுமைதனைக்கேட்டவரசன்புகல்வானிருந்தவத்தோய்
றந்துற்றிடுமிங்கிதனைநானறிந்தேலெனிமொழிகென்றான். [௩௩]

னிவன்புகல்வானரசகேளிதனையறிந்துமொழிவிதாற்
னைநேரில்லானரிவனிதுதானேதென்னிற்சிவஞான
மனுநற்சிவபூசனையாகுமிதுவேதருமத்துக்கரமா
னையதமரர்க்கிறைசிவன்போலறங்கட்கெல்லாமிறையாமால். [௩௪]

தனின்மனந்தான்புகலரிதுமற்றைத்தருமத்திடைச்செலுமான்
தனைக்காய்ந்தோன்பூசனையாற்றருமமெவையும்வளர்ந்திடுங்காண்
தமுற்றிடுமெய்த்தவயோகயாகஞ்செனனகோடியிற்செய்
முதன்மைப்பலத்தினலன்றோசிவன்பாற்பத்திமுயல்வதென்றான். [ ]

பத்தியதுதான்பெறின்முத்திபலிக்குமன்றோதிரிகாலஞ்
த்திதருமெய்ச்சிவபூசைசெய்யவேண்டுற்றவைதன்னின்
மத்தியானபூசனை தான்விசேடமெக்காலமும்வரையா
தத்தியுரிந்தோன்பூசைதனைச்செய்யவேண்டுமெனவறைந்தான். [௩௬]

அரசன்புகல்வான்றிரிகாலமல்லாலெக்காலமும்பூசை
புரியவேண்டுமென்றுரைத்ததேதென்றிட முனிபுகல்வான்
பெரியவிலிங்கத்தினிற்பூசையிடைவிடாமற்பெரிதியற்றிற்
றெரியுக்காரரவமிடேகமாகுமதுசெப்புதுமன்றே. [௩௭]

வடிகொள்சீதச்சுகந்தநறுமஞ்சனத்தாலிலிங்கேசன்
முடியின்மீதிலிடைவிடாதபிடேகஞ்செய்முறையியற்றிக்
கடிகொண்மலர்களறுகுவில்வங்கலந்தேயருச்சித்தேத்துதலாம்
படியிலிவைசெய்தோர்வினைபோய்ப்பரமன்பாதஞ்சேர்குவரால். [௩அ]

பரமானந்தவமுதசாகரமாம்பரமனொருகுடங்கை
வரமாம்புனலோடறுகுவில்வமகிழ்ந்தேயழியாப்பதங்கொடுக்குந்
தரமாரறிவாரதிசயமேயன்றோவனையனருள்பணியா
ருரமாஞ்சனனசாகரத்தின்கரைசேர்கதுய்யமாட்டாரே. (௩௯)

நாற்பத்தொன்பதாவதிராசேந்திரச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௧௫௪௪.

ஐம்பதாவது,

வீரசித்துச்சருக்கம்

வேறு.

பூதிகண்டிகைபுனைந்தவரேனுமேசைவ
நீதிகொண்டிடுநியமத்தராய்ப்பத்திபூண்டே
சோதிசேர்தருசிவலிங்கபூசைசெய்தூயோ
ராதிசேவடிசேர்குவரல்லலொன்றிலரே. (௧)

முனிவன்யாக்கினவற்கிதான்மொழிகுவான்வியாச
னினிதுரைத்திடுவாய்மைகேட்டரசர்கோனிசைந்தே
யனையபூசனையாற்றுவோர்யார்பலனென்கொல்
புனையுமங்கதுமேதுரையெனமறைமுனிபுகல்வான். (௨)

ஓதும்வன்னநான்குள்ளவர்சங்கரர்க்கென்றே
வேதமோதியவிதிப்படிபூசைசெய்திடலா
மாதியார்சிவபூசையாற்றுனெவனேனுஞ்
சீதநீருண்டோன்வீரியநுகர்ந்திடுந்தீயோன். (௩)

உண்டிவேண்டினேன்மலநுகர்பன்றியொப்புறுவான்
பண்டுகாதையொன்றுளததுபகருவன்கேட்டி
மண்டலத்தினிற்சாத்தகியென்றோர்மன்னவன்றன்
கண்டகத்தர்துன்மார்க்கர்மந்திரரோடெங்கலந்தான். (௪)

அவன்புரந்திடுகொட்டியலோர்ந்திலானவமாஞ்
சிவந்தவாய்ச்சியர்கோட்டியிலேமனந்திகைத்தா
னிவந்தகொங்கைமின்னுரையெந்நோமுநீங்கா
னுவந்தநித்திரையுறுங்கனவிலும்பிரியாதோன். (௫)

காவலன்புணர்காதன்மின்னார்கவிலொருத்தி
பூவைபோன்மொழிப்பூங்குயில்பூவனம்புகுந்தா
ளாவலாலரன்பூசைசெய்யோகியாங்கமர்ந்த
தாவிலாவிளவரசன்முன்சார்ந்துகண்டனளால். [௬]

கண்டிபூண்டுமெய்ப்பூதியுந்தூளனங்கலந்தே
புண்டரந்திகழ்நெற்றியான்பூசைசெய்வானைக்
கொண்டலோதிகண்டேகுறுமூரல்கொண்டனளான்
மண்டுகாதலாளவன்முனஞ்சென்றுரைவதுப்பாள். [௭]

எந்தநாடுநீரெப்பொழுதிங்குவந்தடைந்தீர்
வந்தகாரியமேதுநுங்குலமெனவரஞ்சேர்
தந்தைதாயெவர்மணஞ்செய்துளீர்கொலோசாலப்
புந்தியாசைகொண்டேன்சொலுஞ்சொலுமெனப்புகன்றாள். [௮]

என்றுகேட்டவளழகுநல்லிளமையுமவடன்
குன்றுபோலுயர்கொங்கையின்பொலிவையுங்கண்டா
னன்றிதன்றெனகாணினன்முகங்கவிழ்ந்துரைப்பான்
மன்றலோதிமானரயர்தம்மரபுளேனென்பான். [௯]

வீரசேனனென்றந்தைதாய்வீரசூவென்பாள்
பாரின்மேம்படுகமலலோசனையென்றன்பாரி
சேருமென்செல்வகிகர்க்குமோவளமையுர்செல்வந்
சாருஞ்சாதுரங்கந்தனக்களவுசாற்றுவதோ. [௧0]

மாமணிப்பொலன்மண்டபஞ்சித்திரமாடங்
கோமுறைத்தனியரசுவீற்றிருந்திடுங்கூடம்
பூமகட்குறையுள்ளெனும்பொருளுறையறைகள்
காமரிந்தரன்முதன்மைசேர்சுதன்மைபோற்காணும். [௧௧]

என்றுகூறலுமதிசயமெய்தியேயிரண்டு
குன்றுபோலுயர்கொங்கைபாள்கூறிடுகின்று
னன்றுநன்றுநீர்தந்தைதாய்தமருறைநன்று
டென்றுசெல்வமுமனைவியும்பரிசனத்துடனே. [௧௨]

அனைத்துவிட்டுநீரயலவனுடலங்கார
வனத்திலேயிவன்வந்துறைகாரணமென்னே
தனத்தின்மிக்கநீர்தனியொருவழிபர்போற்சார்ந்தீர்
நினைத்ததேதர்மனத்துமுங்வயிராக்கியமெழுந்தீர். [௧௩]

இளமைமிக்குளர்திருவுநல்லுருவுமேயிமைந்தீர்
தளவவார்குழற்றருணியர்ள்நலந்தனைவேட்
டுளம்விருப்புறுபோகநீத்திவ்வுறுநலாமோ
வளமையெளவனத்திவ்வனத்தெவ்வணம்வந்தீர். [௧௪]

காளையம்பருவஞ்சென்றுமூப்புறிற்கண்டபாய்
வாளைவென்றகண்ணார்முபக்கெங்ஙனம்வருமே
யாளுநர்தமதிளமைபோமெய்ப்புறுமழகோ
நாளுநாளெங்குங்கண்டிலேனற்புதநலமே. [கரு]

இந்தநல்லழகெய்தினொருவருமில்லை
வெந்தவேளரன்வரங்கொடுமெய்ப்படைத்தனனே
வந்தமன்மதன்றுணைவனேவழகுடனிளமை
முந்துமோகத்துக்குறையுடானல்லவோமொழியில். [கசு]

இளமையோரிடமழகோரோரிடத்துறுமிரண்டு
மளவியுற்றிடன்மூவுலகத்தினுமரிதாற்
களவன்யாருடன்கலந்திவண்போந்துளிர்கடிதற்
குளமகிழ்ந்திடுதந்தையுந்தாயுமுற்றிலரோ. [கஎ]

அல்லதூடனுற்றீர்கொலோவகத்துறுமனையா
னல்லனல்லனேகோபத்தானனுகினீர்கொல்லோ
வல்லியாங்கவடனைவிடுத்தென்னுடன்மருவீர்
புல்லுபெண்மணியென்பெயரென்றனள்புகல்வாள். [கஅ]

என்னுடன்கலந்தீரெனிலிப்புவியெல்லா
மன்னுநும்மரசாட்சியாச்செய்திடவல்லேன்
றுன்னுபோகங்கள்யாவுமேநுமக்கெனத்தொகுப்பேன்
மின்னுபூணினீர்நுமைக்கண்டென்புருடனைவெறுத்தேன். [ககூ]

என்னைக்கூடினீரெனிற்கடிதேகியேயிரவிற்
றுன்னியென்னவனுயிர்விடத்தாற்றொலைத்திடுவேன்
பின்னரோர்கவலுற்றிடப்பெறுவதின்றுமான்
மன்னுமிப்புவித்திருவுநும்வசமுறச்செய்வேன். [உ0]

இளநிலாத்தவழ்செய்குன்றமெழுநிலைமாடந்
தளவமல்லிகைப்பூம்பந்தரஞ்சணைச்சயனங்
குளிருந்தென்றல்வந்துலவுசாளரம்படர்குடிசை
களபங்குங்குமம்புழுகுநெய்பொற்கிண்ணங்கலவை. [உக]

தாசிதாசர்களிவையெலாநுமக்கியான்றந்தேன்
பேசவீர்நெஞ்சிற்பிரியமேதவையெலாந்தருவேன்
கூசலேதனையுமுடைமனைவியாக்கொண்டா
லேசிலாப்பொருளேதுதான்கிடைத்திடாதுமக்கே. [உஉ]

எனதுமாமனைதனிற்புலிப்பாலிருந்துளதா
மனதுவந்தெனைப்புல்லின்மெய்தளர்ச்சிவாராம
லெனையதும்மடைவாவினிளைத்திடவளிப்பேன்
றினையுமேவேண்டியபொருளெலாந்தருகுவன்பேசீர். [உங]

வேறு.

இந்துசுந்தவனத்திலின்பசுகந்தநன்மல நற்றவா லிதுவுநாளின்றுடைபனுவலணைப்பிலேவிளையாடவே,சந்திரன்பொருபட்டுமெத்தைதகடமுயலைத்திரளுள்ளவாற் றளிபருத்திமேரசவர்க்கமமைத்திடும்படமாளிகை,வந்திருந்ததுபாருநீரெனதாமதித்துமயங்கிறீர் வாரும்வாருமனத்திலேபணுவெப்பதோர்பயம்வைத்திடீர்,புத்திபுற்றகலக்கமேனொரு புருடரிவ்விடைவந்துறார் பொற்றரம்பைபர்போற்செயுந்தொழின்மாதரார்வந்துபுகுவரே. (உச)

அனையமாதர்களுமதுசிந்தைதமகிழ்ந்திடும்பணியாற்றுவா ரருள்புரிந்துநும்முகமெடுத்தெனதானனத்தினைநோக்குவிர், மனதினுற்றிடும்விரதம்விட்டெனைமருவுநாமிருவோருமே மதனபோகவிதந்தருங்கலவிச்சுகந்தனைமருவுவோம், கனகதாமரைமலரினங்கைபோடமரர் மங்கையர்யாவருங் கடிதுவந்தெனதழகுகண்டுகண்ணேறுபட்டனர்போயினர்,தினகரநிவினோர்கள்கண்டிடல்விட்டுநீங்கிலரென்னையே செய்யமானிடர்கண்டுளோர்கடிகைத்திலாதேதவர்போவரே. (உரு)

அகிலமீதினின்மனிதர்பெண்ணெனுநாமமுற்றோரசேதன மதுவெதிர்க்கினுமாசையுற்றிடுவார்கணீரெனகாணுநா, ளகிலமாதர்கண்மணியெனப்பெயர்கொண்டுளேனிளநலமுள்ளனுடுமென்றனைநாடுவோர்களிலச்சிலார்களுமுள்ர்கொலோ, புகலுவீரெனதிளமைசுந்தரமிலகுதேகமதும்மையே போலும்வாலிபர்போகமிங்கிதபுருடருக்கிதமல்லவோ,விகலுகின்றதென்யானதிட்டவசத்தினாலுமையெய்தினே னென்னைநோக்குதல்செய்திலீரவையென்னபாவமிதென்பதே. (உசு)

அல்லக்காணுமோர்வாய்மைநானிதுசொல்லக்கேளுமெனைக் கல்டார லவிதனக்குமுடம்புபுளகிதவான்மையுற்றிடுமல்லவோ,நல்லசுந்தரமதனிலேமிகநல்லசுந்தரமங்கைநா னகிகவெள்ளங்கவிங்கிதமயபார்வையிலுணர்குவீ, ரெல்லைதிருநல்லழகர்நீரெனியேனுமப்படியல்லவோவிளமைபெற்றிடுநலமுமொத்தனவிருவருக்குமிசைந்ததால், வல்லமாதர்மிதிப்பெருக்கினின்மனதுவைத்திடுவார்களான் மருவுநானுமதிளமைநல்லெழில்வாஞ்சைவைத்துளனுமரோ. (உஎ)

ஒருவனுகிபகணவன்பன்னரை யுடையன்சில்பொருளுடையனேலோதுமற்றவனெடுமெகிழ்ந்துறைவார்களோவியமாதரார், பெருகுசெல்வமோடிளமைசுந்தரமுறுபெறுந்தகைமணமகன் பேதைமாதர்கைவசமதாய்விடின்விடுவரோபெரிதாசைகூர்ந். துருகுவார்களவ்வெழிற்கள்யாவையுமுடையவும்மையும்விடுவனோ வொளிநிறைந்திடுமதியமொத்திடுமாதுவந்திரநோக்கியே, பொருமதன்கணையால்வருந்தினனும்மைவிட்டயல்போந்திடேன் போகவேண்டியதேவனுமக்கவல்லனுமேயுடன்போதுவேன். (உஅ)

என்றுசொற்றமடந்தைமுன்னிராசவல்லபபத்தொடு மெழின்
முகங்கவிழ்வுற்றான்பதயிதபமீதினிருந்திடவே, நன்றுநன்றிதெனநகை
த்துமேலச்சொல்வார்சிலர்மொழி நாறலூறன்மலஞ்செறிந்திடுபாண்
டபாத்துமுடம்பைநீ, நின்றுநச்சிபிதற்றெனக்குமடந்தைமார்கண்மனைத்
துளார் நீணிலத்தினிலில்லையென்றுநினைத்திடேனிகரற்றுளோர், மன்
றலோதியர்தாமநேககரென் மாளிகைக்குளிருந்துளோர் வாளைவென்றக
ண்வேளைவென்றசொன்மதியைவென்றமுகத்தினர். (௨௯)

அவர்கடம்மைவெறுத்துளான்றிவற்றிடுஞ்செல்வம்யாவையு மாசை
பற்றுவெறுத்துளேனிருமாசையுற்றசடத்தையு, மிவர்தலுற்றிடுமோக
மின்றியிதினம்மன்றுவெறுத்துளே னெவ்வனத்தினிலாவதென்னவதின்
றுகாளையொழிக்கிடுஞ், சவமெனப்படுமுடலிராதகுசடுதியிற்படிசாருர்
வீண் சாற்றுகின்றனையேற்றமானசவுந்தரியமெனச்சொலே, புவலைகயுற்ற
திலொன்றுமில்லையுன்மனதிலுற்றமபக்கமே யுற்றுநோக்குதி பொத்தை
யூன்பொதிதோலெலும்புநரம்புமே. (௩0)

ஆதலாலிதிலாசைவைத்திலர்நாசமுற்றிடுபோதினி லரியதுன்பம
தெய்துமென்றறிஞோர்வெறுத்துளரதியால், பேதையாயுதரத்திலேம
லமூத்திரத்தொடுசுக்கிலம் பித்தயாமோடேபுழுத்திரள்பேசொணுமு
டைநாற்றமே, போதுகின்றமுகத்தின்வாயுமிழ்கோழைகண் வழிபீழை
காதுறுகுறும்பியிரண்டுகீணிலைவாயிலூழலுரைப்பதோ, வேதமுற்றது
வாரமொன்பதுமேவுகின்றசரீரமா மிதுநன்மேனிமினுக்குகின்றதோர்
தோலின்மூடியிருந்ததே. (௩௧)

மலத்தில்வந்திடுகிருமிபங்கிதனுக்கொர்சுந்தரமென்னபல் வகைய
தாகிய துக்கமுற்றிடுகர்ப்பசுக்கிலசோணிதங், கலத்தல்பெற்றதோர்மூ
த்திரத்தினிறைந்தயோனியின்வயலிலே காட்டுமிந்திரியத்தின்வித்திடுகா
லைவந்துமுளைத்ததா, முலத்தலுற்றிடுகிம்பவித்தினிற்பாரிசாதமுளைக்கு
மே லூழலுற்றவுடற்குமேயழகுண்டெனச்சொலலாகுமா, னலத்தை
மேவியவிளமைசுந்தரமென்றுநீகலுழ்கின்றியா னுடலங்கதெவர்க்குமின்
றதுநாட்டிலற்புதமாகுமே. (௩௨)

சிட்டருக்குமிவ்வுடலிலாசைகடோர்ந்துருவகையாலுறுந் தெரிவை
மார்கள்புணர்ச்சிபேமிகுசெல்வமென்றுபுகன்றியாற், கெட்டதாகுமம்
மாதராருடலத்திலுற்றதுர்க்கந்தமே கேள்வியுற்றுமறிந்துமேயுணரார்க
டாமதிகேடர்தா, நட்டமாகியநாறலுற்றவுடம்பைநானெனவெண்ணிடு
நரகனுக்குரைநின்சொலென்னிடைநண்ணிடாதகன்றேகுவாய், துட்ட
புத்தியைவிட்டிடாயமலோகமுற்றபயங்கரஞ் சொல்லுமோர்சொலக்கே
ட்டிலாய்கொல்சுடர்க்குள்வீழளிபோன்றுளாய். (௩௩)

ஆசையுற்றிறவளேனுமேயயன்மாதரைப்புணர்வெண்ணுவோ னரிய
தன்பிதிர்வர்க்கமோடெரிகும்பிபாகமதடைகுவா, னேசமுற்றவர்வதன
மன்றுவரின்றிதன்பெதிர்நோக்குவோ னெதிகளற்றிருநரகப்பாலம்

வெங்கரையமுற்றுவருந்துவான், சிசுமற்றவர்மலசலக்குழியானயோனி
யிலிச்சையே செய்துளோன்பரலோகசிந்தனையற்றபாமரனாகுவா, னுசி
காதகன்முலையருண்டிரண்டுள்சதைக்கட்டியா னகமுறும்பொழுதை
லைசெங்கீருறுநச்சுவாரழகென்கொலோ. (௯௪)

கலவியுற்றுவிழைத்தமாதர்கள்யோனியன்றியின்யோனிபோற் காண்
பதற்குவழங்குமோவிதிலாசைகொள்வதெக்கன்மமோ, வுலகினல்லதி
தல்லவென்றுணராதனுன்மதியோர்செய லுன்னுவாரிதுவன்றியினுடனு
தவுமிவ்வுடலுதவிடா, மலமதாமதிலுற்றவுள்ளுறுமூழனைக்கிலைவெளி
யிலே மாதர்மேனியைநோக்கியேயழகென்றுசொல்லிமயங்குவா, யிலகு
மானிடவடிவிலேசுசியில்லையோவெனவிழியே யிசைகொள்வேதியர்வ
ழவமேசுசியென்றுசொற்றிடும்வேதமே. (௯௫)

அதனிலுஞ்சிவபத்தர்மேனியததிகமாகியபுனிதமா மண்ணல்பூதி
த்ரிபுண்டரத்துடனரியகண்மணிமாலைபூண்,மதியுடைப்பெரியோர்கடம்
வடிவதிகமேயதுவருதலுன் மதியிலாய்சனனங்கடோறுமியற்றுமாதவ
மல்லவோ, கதியளித்திடுபரமனன்பர்கள்வேடமேகலியாணமாங் கடவு
ளாருளாலெனக்கிதுவந்ததாலதுகாண்டியால், விதிவசத்துறுசனன
வாசனையாமலத்தையகற்றினேன் மீண்டுமேர்தவழுக்கெடுத்துறுமேனிபூ
சுதன்மேன்மையோ. (௯௬)

ஈனமாங்குடிவாழ்க்கைசெல்வமிறக்குநாளுடனெள்ளள வெய்து
மோசெய்தவிறைவர்புண்ணியமொன்றுமேவருமேழைகே, ளானதோர்
பசுநிறையுளேகிடுகாலையாங்கதிலுற்றகன் றுதரித்ததையீன்றதாயைய
றிந்துபின்றொடர்வாறுபோற், றனமேவியசெல்வமுற்றிடின்மாமன்மை
த்துனனண்ணனந் தம்பியுற்றவர்பெற்றுளோரெனவந்திருந்து தருக்கு
வார், போனகாலையில்யாவருந்தொடர்வாரகளில்லையிறந்தவப் போதுமா
தர்புணர்ச்சிபோயதெனப்புரண்டழுவார்களே. (௯௭)

மகனமக்கெனவந்ததேசெல்வமெனவுளத்துண்மகிழ்ச்சியான் மா
நிலத்தவர்காணவேயழுவார்கள்போலலமருவனு, லகமதுற்றிடுதாசிதாச
ர்களுறவுளோரயலோர்களு மரும்பொருட்கழுவார்களன்றியையோவிவ
ன்றவமாற்றிலா, னிகந்தனிற்சுகமுற்றதன்றியிறந்தகாலையினுடன்வரற்
கேய்ந்தகாரியமொன்றுமே செய்திலானெனக்கவல்வாரிலை, மிருந்துகா
ரென்றுள்வெகுண்டுவெருட்சிசெய்திடுபயமலால் வேறுசற்றிலையால்ய
மாந்தகனற்பதந்தொழவேண்டுமே. (௯௮)

வேறு

காலகாலர்கருணைவாரிபானவள்ளலவர்நமைக் காக்கவல்லகடவுளா
மதன்றிவேறுகண்டிலே, ஞாலமீதின்மனிதர்தங்களினைமைமாதாகோட்
டியா னுதர்பூசைசேவையின்றிகாளவத்தமாக்குவார், சூலபாணிபாதமே
தமுற்றபோதுநினைவுறிற் சொல்லொணாதமுத்தியின்பசுகங்கிடைத்தல்

தின்னமே, கோலமார்தரிளமையின்பமதுநினைந்தழுங்குறுங் கோரபாவமதுநினைந்தகொடுமையாளர்நெஞ்சமே. (ருகூ)

அந்தமேவுபோதுமாதர்ழ்குரார்பெருந்தொனியரன்றனுமவழுதவாரிசெவிபுகாதடைக்குமே,யுந்துசீவனேகுகின்றபோதிலாதிபூதியே யுருத்திராக்கமாலைபங்கமெங்குமேயுறப்புனைந்,தெந்தைபாரிலிங்கமாட்டுபுனிதமஞ்சனந்தெளித்தினிதுவில்வமாலையுந்தரித்திடச்செய்தார்களே,னந்துமந்தவேளைவந்துகருணைசெய்துநாயகனெந்திதன்றன்வடிவலாற்றன்றருபமருள்வனே. [சo]

பூதிகண்டிமாலையும்புனைந்தரன்றனுமமும் புகலுநாவினேருகெண்கள்புனிதலிங்கதரிசனத்,தாதிநக்திருவினிற்றன்னுவினீங்குவான்றன்முன்னம்மையோடுநாயகனடுத்தெடுத்துமடியினின், மீதில்வைத்துடுத்தவுத்தரீகம்விசிமேனியின் வேர்வையாற்றித்தாரகத்தைமென்செவிக்கணுதவியே,கோதிலாதமான்மழுத்தரித்தசெங்கைமூன்றுகண் குலவுகின்றதன்னுருக்கொடுத்தளிப்பன்கயிலையே. [சக]

ஆனதன்மையாலெனக்குவாழ்வுபெண்டிர்மக்கண்மே லாசையில்லையண்ணல்பூசைசெய்துசந்நிதிக்கணே, யூனமுற்றவுடல்விடத்துணிந்துளேனவ்வேளையி லும்பர்தம்பிரான்றனுமம்பைபாகசங்கரா,ஞானநாதநீலகண்டகாலகாலசம்புவே நம்பவென்பதென்றனுவினடனகின்றுபுரியவே,யீனமற்றவென்கைவில்வமிறையிலிங்கமணியவே யெனதுசென்னியீசர்சந்நிதானமுற்றிறைஞ்சவே. (சஉ)

கண்களண்ணல்வடிவுகாணவடிகளென்றனெஞ்சுறக் காதுகாதைகேட்கவிப்படிக்கலமந்தகாலையி, லெண்கொளும்பிராணவாயுவேகவென்றுநான்சிவ லிங்கபூசைசெய்துளேனென்றுவீரசித்தென்றான், பண்கொள்சொல்விராசமேதவியாசையுற்றநெஞ்சகம் பக்குவிட்டுடைந்தரன்பத்திலன்புபாரவே, தண்கொளப்பகர்ந்தவாறுசனகராசனுக்குமுன் ஞ்சவமோனஞானிபாக்னவந்கிசாற்றினனரோ. (சங)

ஐம்பதாவது வீரசித்துச்சநுச்சமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-கருஅசு.

முதற்காண்டம்

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிவரகசியம்

திரியாங்கிசை

இரண்டாங்காண்டம்.

முதலாவது,

பூசாயோக்கியவனச்சருக்கம்.

வடிவெலாந்திருநீறணிந்தேகண்டிமாலை வடிவுறப்புனைந்திலிங்கபூசனைசெயவல்லேன், கடிகொள்கொன்றைசேர்வேணியாய்கருணையங்கடலேகடவுளேயெனுநாமமல்லாற்பிறிதறியேன், படியெலாந்திரிந்தேதகவிபான்மெலிவுற்றேன் பாவியேனுனதுருவினைப்பாவியேனெஞ்சி,லடியனேனுன்றன்சரணமல்லாற்சரணறியே னுண்டதொண்டரோடுறவுறவருள்புரிவாயே. (க)

அண்ணல்யாக்கினவற்கியாமுனிவரன்புகல்வா னரசன்வீரசித்துரைத்திடுமுண்மைகளனைத்தும், வண்ணவார்குழற்பெண்மணிகேட்டவளகத்தின் மையறீர்பத்தியுடன்வயிராக்கியமுற்றே,திண்ணமாங்குடிவாழ்க்கையின்சனனவாசனைதான் சிவனைப்பூசனைசெய்யில் விட்டொழிந்திடுமெனவே, யெண்ணமாம்பொருண்முன்னுங்கேட்டிருந்தனளிறைவ னீசன்பூசனைசெயும்விதியப்புகியென்பாள். (உ)

மெய்யிலுற்றதுர்க்குணமெலாஞ்செய்பனிநன்று விளம்பக்கேட்டனன்மெய்யெனமுற்றுமேதெளிந்தேன், மையல்பாகன்றன்பூசனைக்குதவுமேனிந்தச் சடலந்தான்சவுபாக்கியம்பெற்றதென்றிடலா,மையமேனியினியேனுமிவ்வுடலதுகொண்டேயமலன்பூசனையாற்றியேகதிபெறவேண்டும்,பொய்யிலாவிந்தப்படிவமுற்றிடெனதான்மாப் புனிதன்பூசனைப்பலன்பெறப்புரிந்தருளென்றாள். (ங)

இயமனார்பயந்தயத்தைதவகிர்ந்திடுமென்றே யியம்பினீரதியானு
முன்கேட்டிருக்கின்றேன், றயவினாற்சிவபூசனைசெயும்படியெல்லாஞ்சா
த்திரப்படிதப்பிலாதின்றுசாற்றிடுவீர், மயல்செயுஞ்சன்மபயந்தவிர்த்தி
டுங்குருநீயேவாய்த்திடுஞ்சைவசீலம்பெற்றோர்நும்போல்யாரே, யுயர்த
ருங்குருவெனக்குநீரருளுகிரென்றே யோதுபெண்மணிவார்த்தைகேட்
டரசனுமுரைப்பான். [௪]

காலகாலரர்ச்சனையினால்யமபயநீங்குங் கருதிடிற்பின்னரொன்றினு
ந்தீர்த்திடாகண்டா,யேலவார்குழலுனக்குந்துசெல்வங்களுளவா லீசன்
பூசனைகுறைவின்றியியற்றிடலாமாற், சாலமெய்ப்பொருள்கொண்டலா
ற்சங்கரன்பூசை தான்செயற்கியலாததோவென்றுசாற்றுவையே, லால
முண்டவன்பூசையோர்குடங்கையிற்புனல்கொண் டாட்டியர்ச்சனைசெ
யிற்கதிகாட்டியாள்குவனால். [௫]

அன்னதேனும்யாம்பெறுஞ்செல்வம்பயன்பெறவேண்டு மடைந்தி
டுஞ்சடந்திருவுமேநிலையலக்கண்டா,யின்னதன்மையவிவைசிவபூசனைக்
குதவிவைகளாற்பெறும்பயன்றனைக்கேட்கவேண்டுவதோ, சொன்ன
தோர்சிவபூசனைக்குதவிடாப்பொருளைச் சுடுவதேநலன்சித்திகள்கொடு
த்திடும்பூசை, தன்னையேசெயான்சனனவினைன்றிடத்தகுமாற் சாற்
றுஞ்செல்வங்கள்சிவனருளால்வருந்தானே. [௬]

அவன்றரும்பொருளவன்றனக்கேயெனவாக்கி லனையதன்மைகண்
டருங்கதியளித்திடுவானாற், றவமுன்செய்திலான்றனக்கரன் பத்திவரா
தாற் சங்கரன்பத்தியற்றவனுடன்சகவாச,முவமையற்றதோரவமெனலா
கும்பப்பாவி யுதவிடும்பொருளாலறஞ்செயினலமின்றே, பவமகற்றிடவே
ண்டினோர்பவமதுபெற்ற பயன்பெறச்சிவபூசைசெய்பயன்பெறுவாரே.

பரமன்பூசைசெய்வான்றனைப்பூசைசெய்வார்கள்பாபகோடிகணீங்
கியேபரகதியடைவா,ருரமதாகியபாவவெங்கானகந்தனக்கே யுற்றகண்
டகோடாலியேயாகுவரவர்காண், டிரமதாகியமோகநீத்தேதிருவன்னாப்
சிவனையேதினம்பூசனைசெய்திடுகண்டாய், கரமுங்கால்களுமுடலுமுந்தி
டமுறுமிளமைக் காலஞ்செய்திடும்பூசனைப்பலன்கணக்கின்றே. [௮]

அன்னதாலுனக்கிதமுறும்பூசனைபுரிவா னதற்குநானெறிசொல்லு
கேன்கேட்டியாலணங்கே, சொன்னதோர்சிவதீர்த்தத்திலாடிவெண்ணீ
று தூளனஞ்செய்துசிரநெற்றியுரமுடனுபி, பன்னுசானுவோடிரு புயம
ணிக்கட்டுமுன்கை பகர்தருஞ்சுவல்பின்மருங்கேகளங்கன்ன, மின்னப
ல்வகையிடத்தினும்புண்டரஞ்சாத்தியெழில்கொள் கண்டிகைமாலிகை
தரித்திடல்வேண்டும். [௯]

களத்திலேயுறங்காதினிற்கதிர்த்தொகைதலையிற் கட்டுமெம்பிகை
கோணத்திலொன்றெழுதொகையாம். வளர்த்தகொந்தளந்தனிலொன்
றுமார்பின்முந்நூலின் மன்னுகின்றமுன்னூற்றினன் மூன்றதாமாலை, கி
ளர்த்துதோள்களிற்சோடசமணிக்கட்டிலிரண்டு கேதந்தீர்த்திடுமிராசி
யின்றொகைகணூற்றெட்டா, யுளத்திலோதுறுமந்திரமாலையாக்கொண்
டேயுண்மையஞ்செழுத்தோதுதிற்சிவமடைவாயே. [க0]

புருடர்போலவேயாசமனஞ்செய்தேபுனிதன் பூசைத்தானத்திற்கு
சப்புல்லுப்புல்லதளேனு, மருவுமாசனத்தினில்வடக்கொடுகுணக்கேனு
மதிமுகம்பெறவிருந்துமந்திரம்பகிஞேனென்று, வருமைமேவுறுமஞ்செழு
த்தெனுமனுவதனு லண்ணல்பூசனைபுரிதியாற்சிவலிங்கமதற்கே,தருபஞ்
சாமிர்தமைந்திரவியங்கமழ்தருமஞ் சனம்பயபர்தயிரெண்ணெய்மாக்காப்
புடனெல்லி. (கக)

நெய்யதற்குவெந்நீரொடுசந்தனக்குழம்பு நின்மலோதகமிவையபி
டேகங்கள்புரிந்தே,துய்யவெண்பட்டுச்சுகந்தசந்தனம்வில்வமாலை சொ
ல்லுகின்றதிலட்சதைபலபுட்பஞ்சாத்திச், செய்யதூபதீபங்கள்கற்பூரத்
தின்றீபந் திருமுனம்பணிமாறிநைவேதனவகைகள், வையமெங்குமேம
ணக்குநெய்யொழுகுசுத்தான்னம்வாய்த்திடுங்கறிவர்க்கமபூபநற்கனிகள்,

கமழ்தருங்கிர்தகுளபரமானத்தினொடுதேங் காய்கரும்பிளநீரடைக்
காம்புபானீய, மமிழ்தமாமன்னமெவ்வகையுளவவையெல்லா மத்தனா
முனம்வைத்துநைவேதனமமைத்தே, யுமைமனோகார்க்கிரண்டுநான்கெ
ட்டுபசார முவகையாற்செய்துவாய்குழறிடத்துதியெடுத்தே,யிமையவர்
க்கிறைமுன்னர்வீழ்ந்திறைஞ்சிக்கண்ணீரோ டினியதேகத்தின்வேர்வை
யுமாடநின்றிடி. (கஉ)

நாதனார்திருப்பூசனைமுடித்தன்பர்தமக்கு நயந்துபூசைநைவேதனங்
கொடுத்துநீநுகர்ந்தே, யோதுறுஞ்சிவகதைவினையப்போதுபோக்குதியா
லுயர்தருங்கதிவிரும்பினோர்நாடொறுமிவைசெய், தாதியாரந்திப்பூசை
யில்விசேடமதாக வாற்றியேயத்தயாமபூசையுஞ்செயிலணங்கே, சோதி
யோடுறுசோதியாய்விடுதனிச்சயமாக் தூயதோர்பிரதோடகாலங்கள்வந்
திடிலே. (கங)

மாதுபாகனார்சிவலிங்கதரிசனஞ்செய்வோன் மன்னுங்கோடிதன்கிளை
யொடுஞ்சிவபதமடைவான், பாதகங்களைந்தொழியுமிப்பூசனைபுரியான்
பாக்கியங்களற்றவனரகத்தினிற்படர்வா, னோதுமிப்பொருள்குறுமுனிபு
ரைத்திடவுணர்ந்தே னுவகையாலவையுந்தருமிந்தப்பூசையென்றுரைப்ப
ப், பேதைபெண்மணிவணங்கியென்றாவர்கிரிபேசு பேசலுற்றவப்பி
ழைபொறுப்பீரெனப்புகல்வாள். [கச]

27

குரவர்நீருமதடியனேன்பிறவித்திக்கடலுட் குளித்திடாதுமதருட்
கரையேற்றுவீரென்றே, பரவுகின்றதுகண்டருந்துறவுபூண்டரனார்பத்தி
சேர்தருவீரசித்தரசனுமவளை,விரவுதங்கையாப்பாவித்துப்பெண்ணரசே
நீமேவுமுன்னுடைக்கணவன்றனனுமதிபெற்றே,யரனைப்பூசனைபுரிதியா
ன்முல்லைநல்லாருக் கறங்களாற்றுதல்கணவன்சொல்லன்றியாகாதால்.[ ]

தனிவனத்திலேகாங்கியாயிருக்குமென்னருகே தையனீதனிநிற்ப
துலோகசம்மதியோ, மனதுதான்பரிசுத்தமாயிருப்பினும்பார்த்த மாந்த
ருக்கிதுதான்விபரீதமாமன்றே, யெனதுநெஞ்சகமாதரைப் பழுக்கவே
காய்ந்த விருப்புத்தூணெனக்கிட்டிடினடுங்கிடுங்கண்டா, யனல்செறிந்
திடும்வாரியிலெவர்புகினைப்பா ரதனையொக்குமாலரிவையர்முயக்கமா
ரணங்கே. [கள]

அந்தமாயையிற்புகுந்தவன்றான்யமலோகத் தடைதறிண்ணமாமொ
ருகணத்தின்பமாதரித்தே,பந்தமுற்றிடுஞ்சுந்தரமாம்பரதாரப் பாவைமா
ரொடுங்கூடினேன்பலகற்பகாலம், வெந்துயர்க்கோநரகவேதனையுழ
ன்றிடுவான் மேவுமாங்கதிற்பசுவினதிறைச்சிகளுடனே, சிந்தைவைத்
தருந்துதலெளிதாம்பிறர்தாரஞ் சேர்தருணதிபாவத்தினதிகபாதகமே.[ ]

தாகத்தோடுதன்மேல்விழுந்தாடனைத்தள்ள றருமயன்றெனப்பிறர்
மனைபுல்லினேன்கும்பி, பாகத்தேயெய்துவான்றிண்ணமப்படிவரினும்ப
யந்துபுல்கிலானேபுருடோத்தமனாவான், போகத்தார்பரமாதரைப்புண
ர்ந்தவன்மேலாம் புண்ணியத்தவனாகிலும்பஞ்சபாதகனாய்ச்,சோகத்தார்
தருநிரையச்சூறாவளியதனிற் சுழலும்பஞ்சிபோற் பறந்திடுவானவன்
றானே. [கஅ]

காலவேல்விழியன்னியமாதரைக்கலந்தக் காலவேலையிற்கணமொ
ன்றிற்கோர்கற்பகால, மாலந்தீயுமேகூடியதெனுங்கும்பிபாகத் தடைவ
னாங்கவனன்னியனால்வந்தமகனா; மேலவார்குழலெனக்கந்தப்புந்தியின்
றாமா லென்முனின்றுநீபேசுதலும்புத்தியன்றாற், சாலநீட்டித்துநிற்பது
முறையலக்கடிதேதையலேயுன்றன்கணவன்பாற் சார்குவையென்றான்.

உதரத்திற்பசியுற்றதற்கேபலபேச்சா லுண்டியாகுமோதாமதமே
ன்புரிகின்றாய், மதனைக்காய்ந்தவன்பூசையைத்தாமதித்தெந்த வார்த்
தைபேசினுமங்கைநல்லாயவமன்றோ, விதனமுற்றுவாணாளவம்போக்
குதனன்றோ வீசுபாசமுந்தடியுங்கொண்டேயமன்பின்னே,பதனமென்
றுநின்றானிதுபோதும்வீண்பேசும் பாழ்த்தபேச்சினிலாவதென்பாவை
போவென்றான். [உக]

அன்னமன்னமென்னடையினாயிரண்டதாங்காலத் தரியபூசனையா
ற்றிடவேண்டுமோவெனக்கே, யென்னையாண்டருளிறைவன்பூசனைக்கு
விக்கினமா யிருந்துதாமதஞ்செய்திடாதேகிலங்கதுவே,பன்னுகின்றமா
பாக்கியமாங்கதுகண்டாய் பரமன்பூசைசெய்வார்க்குவிக்கினஞ்செய்பா

மேயர்க, ளின்னிலத்தினிலிடர்க்கடலினிற்கிடந்திறந்தேயியமலோகத்தி னரகினிற்குடியிருப்பாரே. [உஉ]

பரமன்பூசனைக்குறுமுபகரணங்கடமக்கேபார்த்துவிக்கினம்புரிந்தி டுகின்றவப்பாவி, கரஞ்செந்நாய்பன்றிகாகயோனியிற்செனித்திடுவான்க ருதுமங்கவனிருகண்ணுங்கெட்டவந்தகனூர், திரமதாம்பத்தியுடனிந்தப் படிசிவபூசை செய்யுநீரிங்குவந்ததேதென்றியேற்சொல்கேன், வரமதா ஞ்சிவலிங்கமாலயஞ்சிவதீர்த்த மன்னுபுட்பநல்வனங்களும்வாய்த்துள வவணே. [உங]

எங்குமில்லதோர்பூசையினுபகரணங்க ளிங்குமேவினவிவைகொடு பூசனைபுரிந்தாற்,றுங்கமாமுத்திகைவசமாமென்றுதுணிந்தேன் சொல்லு மிவ்விலிங்கத்தினையருச்சனைபுரிந்தோர், பங்கமாம்பவக்கோடைக்குப்ப ரகதித்தண்ணீர்ப் பந்தராமரன்பதநிழல்சேர்ந்துய்குவாரான்,மங்கையே துதிபூசைவிக்கினஞ்செயேலென்றே மன்னன்பத்திசேர்வீரசித்துரைத் தனன்மாதோ. [உச]

முதலாவது பூசாயோக்கியவனச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-உச.

இரண்டாவது,

வீரசித்துவிரத்தவயிராக்கியச்சருக்கம்

வேறு.

பிரமனூர்படைத்திடுமிந்தமானிடப்பிறப்பி
லுரமதாகவந்துதித்தவருடலமுள்ளளவும்
புரமெரித்தவனிலிங்கபூசனைபுரிந்தாரேற்
பரவுறுந்தனுப்படைத்ததாற்பயன்படைத்தாரே. (க)

பொருந்தயாக்கினவந்திமாமுனிவரன்புகல்வா
னிருந்தவீரசித்தெனுமிறைசைவவாய்மையினுன்
மருந்துபெண்மணிதன்னுடன்மாற்றஞ்சாற்றுங்கா
லிருந்துமாங்கவள்சேடியர்தேடியாங்கடைந்தார். (உ)

வந்தமங்கையர்மதனுருக்கொண்டுவந்தானென்
றந்தவீரசித்தரசனைக்கண்டருகடைந்தா
ரிந்தவேளனையானுடன்மருவுதுமெனவே
சிந்தைசெய்தனர்வனைந்தனர்தெரிவைநல்லாரே. (ங)

ஒருத்திவந்துதன்கணவனென்றுவகையாலொருகை
பொருந்தமாப்பிடித்திழுத்தனன்மற்றொருபூவை

யருத்தியோடுமற்றொருகையைப்பிடித்திழுத்தலைத்தாள்
வருத்தமாயொருமானனுண்மடிபிடித்திழுத்தாள். (௪)

பொறியிழுத்திடுமாறெனப்பூவையர்கூடி
நெறியிழைத்திடவிழுத்திடும்போதினுநேசஞ்
சிறிதுமுற்றிலன்செறுத்திலன்சிவன்செயலென்றே
யுறுதிபெற்றிடுமனத்தொடும்விரசித்துறைந்தான். (௫)

அதிலொருத்திதன்முலைபுயத்தழுந்திடவணைத்தே
மதிமுகத்தொடுமுகமவைத்துமுயங்கினள்வாங்காள்
புதியவாயிதழ்பருகினள்புட்குரல்கொண்டாள்
கதிவிரும்பினோனதனிலுங்கலங்கிலன்மனமே. (௬)

ஒருத்தியைத்தள்ளியொருத்திவந்தணைத்தணைத்துவப்பாள்
வருத்தந்தீர்ந்திடீரெனவந்துமடியின்மேலேறிப்
பொருத்தமாங்குறிபொருத்துவள்பூரித்தல்காணு
ளருத்திதீர்ந்தனளகன்றனளொருத்தியாங்கன்றே. (௭)

நமைமயக்கிடவந்தவனிவனெனநாடித்
தமைமறந்தனராயிரமடந்தையர்சார்ந்தா
ரமைவுறச்செய்தசாலங்கள்விரசித்தறிந்தா
னிமயநாயகிபங்கன்செயாடலென்றிருந்தான். (௮)

என்னகன்மமிப்படிவந்துவளைந்ததிங்கெனக்கே
முன்னர்யான்சிவன்றனக்கபராதமென்முயன்றேன்
மன்னுநன்மனைவிடுத்துறுதுறவியாய்வந்தேன்
றன்னையிப்படிமயக்குதல்சிவன்செயறானே. (௯)

அரிவைமார்கடம்முயக்கஞ்செந்தீக்கடலன்றோ
பிரியமாதவர்தொழுமண்ணலேபிழையடியேன்
புரியுந்தீவினையென்னையித்தினம்விடிபோதிற்
றெரியுஞ்சைவரல்லார்முகந்தெரிசித்துளேனே. (௧0)

காலைபூதியுங்கண்டியுந்தருக்ககிலேனோ
சாலவில்வத்தின்றளிராருச்சனைசெய்தேயிலிங்கத்
தேலவேயபிடேகமைவேத்தியமியற்றிச்
சீலமாம்பத்திசெய்துபூசித்திலேன்கொல்லோ. (௧௧)

இறைவன்பூசைக்குவிக்கினமாதரென்றிகழ்ந்தே
மறைவனந்தனிலுறையெனைப்பினும்வளைந்தனரா
லறையுமிங்கிவராலெனக்காவதொன்றிலையா
லுறையுமிங்கிவருடலுறநெருப்பையொத்தனவே. (௧௨)

பரமனேசிவனேயெனைப்பரிட்சிக்கும்பொருட்டோ
வரிவைமாரிவர்தம்மையுண்டாக்கிவிட்டீரா

லரிபுமென்னுடற்கட்டைக்கேனிவ்வழகமைத்தீ
நரியவிங்கிதுபிறரிடஞ்செலவுனுற்றீரோ. (கங)

ம்மைநம்பினேற்குறுந்துன்பமீங்கிவையொழிப்பீர்
செம்மையற்றவரிவரும்பூசைக்கிடர்செய்வார்
கொம்மைமாதரரரிவர்க்குநாண்குலைந்ததுகொல்லோ
வெம்மையாள்சிவனருச்சனைக்கிடருற்றதின்றே. (கச)

பரமன்பூசனைப்பலனளவில்லதாலிதற்கே
விரவும்விக்கினமெங்ஙனமிருந்துமேவியதோ
பெருமைப்புண்ணியத்துறுகண்வந்துறுமெனப்பெரியோர்
திருவுளப்புரிசொற்படிசேர்ந்ததாலின்றே. (கரு)

எங்கணேகுவேனிவ்விடர்தீர்க்குமாறெவனே
சங்கரன்செயல்யாவரேதவிர்த்திடற்பாலா
ரங்கமிற்றிடுநெடுக்கசாதனவிபத்திதுவா
மங்கையர்ப்புணர்ப்பொழித்தன்றேவிவ்வனம்வந்தேன். (கசு)

இங்குவந்தெனைத்தொடர்ந்ததாலெனக்கவல்வுற்றேன்
சங்கைதீர்தருமுறுதியாற்குற்றிபோற்சார்ந்த
சிங்கமன்னவன்றனைப்பின்னுந்தெரிவையர்தொடர்ந்தே
யங்கம்யாவையுந்தெரிந்திடக்கலைவிடுத்தடைந்தார். (கஎ)

புழுகுபூனைபோற்புகுந்தொற்றியொற்றியேற்கட்டித்
தழுவுகின்றனர்தோளினின்மார்பிற்றுண்டவங்கள்
பழுதிலாதிதம்வரவரப்பாடிபெட்டனரா
விழுதுநெய்யெனவுருகினுரென்செய்வாரவரோ. (கஅ)

இன்னவாறவர்செய்யவுமெரிபுகுபதங்க
மன்னவாமெனமதித்திருந்தானிறையவன்றான்
பொன்னனீரிவன்புஞ்சகன்புறம்புகுவோமென்
றுன்னியாலயம்விடுத்துடனெழுந்துபோயினரே. (ககூ)

இந்தவாறுபெண்மணிகண்டேயதிசயமெய்தா
வந்தமாதர்களித்தனைபேர்கலைமாற்றி
முந்தமேல்விழுந்திடவுஞ்சற்றேனுமேமுயங்கான்
யுக்தியாலிவனலியனேவொழிவுபூண்டனனே. (உ0)

உலவுநாய்க்குறிகாணினம்புருடர்நெஞ்சுவப்பார்
குலவுமிங்கிவனிளமையுமழகுமேகொண்டோ
னிலகரம்பையர்போன்மின்னாரித்தனைபேர்செய்
கலவியிற்கலங்கிலனிவன்போலுங்காண்பரிதே. [உக]

உலகிலுத்தமகுணத்துளாரொருவனிங்குற்று
னிலகுமிங்கிவன்றரிசனஞ்சேர்ந்துய்ந்தேன்யானே

புலமைபோன்சொலிற்புத்திரீறும்பெனக்கொழிக்குந்தன்மை
நிலவுபோன்றொளிர்முகத்திறனுணிணைந்துநின்றனனே. (௨௨)

அந்தவேளையிற்சுந்தரநிதிதனையளித்த
தந்தைதாயருங்கிளைஞருமனைவியர்தாமும்
பந்தமுற்றுளாரதகசதுரகபதாதி
தந்திரத்தருமந்திரத்தரும்வந்துசார்ந்தார். (௨௩)

சார்ந்தகோடிவெந்தானைபோரங்ககர்க்கொருசார்
சேர்ந்தபூவனமாலபந்திகழ்வதைக்கண்டார்
நேர்ந்தவாங்கதிற்சவுந்தரநிதிசிவநெறியே
கூர்ந்தவீரசித்துறைந்திடுவானெனக்கொண்டார். (௨௪)

அவன்விரத்தனிம்மதன்படையிருந்தகாவடையான்
சிவன்விருப்புறுமாலயமிருந்ததாற்சேர்வா
னிவணிருந்திடப்பெறினமதிட்டமாமென்றே
கவலுநெஞ்சினர்கடிபொழிலதனில்வந்தடைந்தார். (௨௫)

நென்னனம்முடைமாளிகைநீத்தகன்றனனு
லின்னந்தூரஞ்சென்றிருப்பதற்கநேகநாளிலதா
லன்னதேயிவணுலயமுற்றதாலகலான்
மன்னுவானெனநிச்சயித்தருகினில்வந்தார். [௨௬]

வந்துளோரவண்மாதர்தங்கூட்டத்தைக்கண்டார்
நந்தங்காதலனிங்கிரானயன்மடநல்லார்
முந்துறக்கண்டானேக்குறான்முகங்கவிழ்ந்துறுவான்
புந்திகூர்நல்லபுண்ணியவானவனன்றோ. (௨௭)

தனயர்தேவியர்தம்மையுமிச்சையானோக்கான்
கனதைசேர்தருசெல்வமுங்கடிந்தரன்பூசை
யனகனிச்சித்துச்சிவத்தியானஞ்செய்வானயலார்
முனமுறில்விருத்தவத்தைமின்னுரையுமுன்னுன். (௨௮)

மரங்கடோறுமாமயிலிருந்தாடுவபோலச்
சரங்கள்போன்றகண்ணார்வனஞ்சார்ந்தமைகண்டா
ரிரங்குநூபுரத்தார்களிப்போதுவந்தவராங்
கிரங்கொளாலயங்காலையிற்சேர்வனுஞ்சேர்வேம். (௨௯)

ஆலயந்தனிலரிவையரிவர்புகார்கனிகள்
சோலையிற்புகுந்திச்சையாற்றுருவுகின்றுரான்
மாலையோதியராயமுநிறைந்தனமைந்தன்
காலையிற்சிவபூசைசெய்கருத்தனுங்குறைவான். (௩௦)

பண்ணைசேர்தருமிடத்திலும்படர்குவதன்றே
பெண்ணினல்லவரிடத்தினிற்பெண்கள்சேர்ந்திடலாங்

மண்ணுகற்பிரானுடையத்தன்னிலிங்கணைவ
னண்ணினுமெனிற்பேர்குதிரென்னலுநடந்தார். (௬௧)

வில்வமீழலும்பார்த்திடுமென்றவர்விடுப்ப
மல்லலோதியர்வீரசித்தின்றிருமனையா
ரெல்லையில்லதோர்சிறுசிராடுமேகினாளையார்
அல்லுகாதலனுறையிடந்துருவினர்புகுந்தார். (௬௨)

பூதிபூசினருருத்திரங்கண்மணிபூண்டா
ரோதுமாலயந்தனிலரன்றிருமுன்னருற்றார்
சீதவில்வங்கள்சாத்தினர்சேவடிபணிந்தார்
காதன்மாதர்களவர்களிற்சிலர்கள்காரிகையார். (௬௩)

நடைகொண்மைந்தர்களுடையர்கள்சிலர்நடவாத
விடைகொண்மைந்தர்களுடையர்கள்சிலர்சிலரேந்தும்
புடைகொள்சேயினர்புகுநிறைகருவுளோர்பாதித்
தடைகொள்சூலினரிளமைசேர்தையனல்லார்கள். (௬௪)

அடிக்கொளுந்தனத்தரிவையரிவர்சிலரெல்லா
நடிக்குநாதனைவேண்டினர்புறத்தினினண்ணி
வடித்தவேல்விழியார்மணவாளனைக்கண்டார்
துடித்தநெஞ்சினரடிக்கடிதொழுதுதுள்ளினரால். (௬௫)

நான்கண்டேன்கண்டேனீகண்டாயிலையெனநயந்தார்
தேன்கண்டாலனசொல்லியர்மெல்லியர்தெளிந்தார்
வான்கண்டாலனமருங்குலாள்பெண்மணிகண்டா
டான்கொண்டாடிறுமழகுகண்டாண்மனந்தளர்ந்தாள். (௬௬)

அன்னமாதர்கண்முன்வந்துநீவிராரென்றாண்
மின்னனீருங்கள்கணவன்யாரென்றவள்வினவச்
சென்னிதாழ்த்தனர்நாணினர்வாயினுற்செப்பார்
முன்னிருந்திடுமன்னனென்றேகண்ணான்மொழிந்தார். (௬௭)

பின்னும்வாய்திறந்திசைப்பர்மின்னேயிந்தப்பெரியோ
ரன்னைதந்தையைமைந்தரையங்கனையயர்த்தே
யின்னதோர்வனத்தெய்தினர்துறவுபூண்டிவர்தாங்
கன்னிபாகன்பூசனையெந்நேரமுஞ்செயுங்கருத்தார். (௬௮)

மாதராயயலார்தமைமனத்தினும்பாரார்
நீதிலக்கினிசாட்சிபாச்சேர்ந்தவெங்களையே
நீயாவுமைபாகனையிதயத்துணரினார்க்கே
கோதைபேறுமனங்கூடினநாள்களுமுளவால். (௬௯)

பேசுநித்தியவிரதரிங்கிவர்பிரதோடப்
பூசைசெய்தபின்சிவனடியாரொடும்புசிப்பா
ராசையாயருணையமுதனிசியளவாக்
காசிநாதன்றன்பூசையிற்காலம்போக்குவரால். [சு௰]

இந்தமைந்தர்களிடத்தினுமிச்சையின்றிவர்க்கே
தந்தமைந்தர்தாமேகதேசந்தனிற்சார
வந்துளாரெனிற்சைவராகுகவென்றுமதிப்பா
ரந்தமாங்கண்டிபூதியுமணியுமாசையினர். [சுக]

சந்தனங்கலனுதிகளரசியற்றருமம்
புநதிவைத்திடாருட்டிணகாலம்புத்திரர்க்கே
கந்தம்பூசிமுன்விடிலதைப்புனல்கொடுகழுவி
யெந்தையார்திருநீறுமெய்யெங்கும்பூசிடுவார். [சுஉ]

புதல்வியர்க்குமெம்புத்திரர்தமக்கும்பொன்மணிப்பூ
ணதிகமாவலங்கரித்துவிட்டாலவையெல்லா
மிதமிலாவிவற்றுவதொன்றிலையெனக்கழித்தே
கதிகொணீறுகண்டிகைவடத்தாலலங்கரிப்பார். [சுஙு]

நெருனலிங்கிவர்தீர்த்தயாத்திரைசெயநினைத்தார்
கருணையங்கடல்கணபதிகுமரனந்தீச
னரிவைபாகனங்கவர்தமக்காலயமமைத்தார்
பெரிதுபூவனந்தடாகங்கள்பெருகச்செய்தாரால். [சுச]

குடையிடக்கயமாபரணாதிகள்கொடுத்தார்
சடையவன்றிருப்பெயரலாலொருபெயர்சாற்றார்
கடைகொள்வேல்விழிகட்டின்மெத்தையிற்றுயில்கருதார்
விடையவன்றிருநீற்றின்மெய்ச்சயனமேவிருப்பார். [சுரு]

அரிவையேயெங்கண்மணிப்பணியதனிடையிடையே
பரியுங்கண்மணிசேர்த்தலாற்பரிக்கவொண்ணாதாற்
பிரியமாவிவர்பூசைசெய்பெருகுமண்டபத்தி
லுரியபாடலுமாடலுமுவந்துசெய்வோமால். [சுசு]

இளங்குமாரர்களிவர்களுமிவரருளதனல்
வளங்கொளுஞ்சிவபூசனைமகிழ்ந்துசெய்வாரா
லளந்திடாதவஞ்செழுத்துருவேற்றுமன்பர்களோ
டுளந்தயாவொடுகூடிவீற்றிருப்பரொண்டொடியே. [சுஎ]

யாங்கள்காந்திருவர்க்கரசீன்றமெல்லியலா
ரோங்கும்வேலிந்தவரசர்தாஞ்சுயம்வரத்துற்றே
பாங்கின்வேட்டனர்பரமனைப்பரனடியாரை
யாங்குப்பூசனைபுரிதராபதியிவராமால். [சுஅ]

ுவரைக்காண்பதற்காகவேயிமையவர்சித்தர்
தவர்கள்காந்திருவத்தினேரடிக்கடிசார்வார்
நுவரிதழ்க்குயிலேயெனச்சுந்தரப்பதிதன்
றுவலைகந்தேவியர்பெண்மணிக்குரைத்தனரன்றே. [சகூ]

இரண்டாவது விரசித்து விரத்தவயிராக்கியச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-எரு.

மூன்றாவது,

மறலியுத்தரச்சருக்கம்.

வேறு.

சத்திசூர்விழிகளித்திடமணிப்பணிநிமல சாக்கிரங்கொள்வியாக்கிரங்களிக்கின்றுடும், பத்திசூர்தருகவமணிப்பரிபுரப்பதத்திற்பத்திசூர்தரப்பாவியேன்பாவியேற்கருள்வாய், துத்தியேறியபன்னகந்தரித்தவேணியனேசோதியேறியவின்னகந்தரித்தபாணியனே, யத்தியீருரிபோத்திடுமணிகொள்காத்திரனேயாடல்வேடனைப்பொடித்தருள்பாலநேத்திரனே.

அண்ணல்யாக்கினவற்கிமாமுனிவரன்புகல்வானரசன்வீரசித்தருந்தவன்சரித்திரமனைத்தும்,வண்ணவார்குழலவன்றிருமனைவியர்பகர்ந்தவார்த்தைகேட்டனள்பெண்மணியதிசயித்துரைப்பாள், வெண்ணிலாநகையீருமைச்சுயம்வரந் தன்னில்வேந்தன்வேட்டவாறென்கொல்காந்திருவர்தநகரந்; தண்ணுலாமிமயத்தடஞ்சாரலி லன்றேசார்ந்தவாறெந்தப்புண்ணியத்தவைசொலுமெனவே. [உ]

அன்னமங்கையர்தங்களிலொருத்திவல்லமைசேரறிவுளாள்பதுமாவதியாமவளுரைப்பாள், முன்னவன்சிவனன்பராமிவர்மின்னேயிறந்தமுற்பிறப்பினிலிருபிறப்பாளர்நல்குரவா, லுன்னருங்கொடுந்தானங்கள்வாங்கியுமுண்ணுவொருவன்வீட்டினிலுண்டிவேட்டருந்தியும்வருந்திப், பன்னரும்பலிக்குழன்றுமேயழன்றிடுங்கொடியபாதகஞ்செய்து பற்பகல்போக்கினரன்றே. [ரு]

இனையவாறுழன்றேமனைவருமிவர்வழியிலிறைவரம்பலவாணர்தங்கோயிலொன்றுளதா, லனையவாலயந்தனிற்சென்றுதரிசனப்புரிவாரந்திவேளிபர்சந்திதிச்சிறப்பெலாம்பார்ப்பார்,நனைகொள்கொன்றையார் திருப்பதிபங்களைநாடிநன்றுநன்றிதுவென்றுநெஞ்சிந்தனைநயப்பார். மனையில்வந்தவமருந்துறும்போதிலுமதனைமனத்திருத்துவரிப்படிநால் [illegible] செலவிடாண்டார். [ச]

தருமன்றூதர்கொண்டேகினரவன்முனம்விடுத்தார்சார்ந்தவிங்கி
வன்றான்புரிபாவபுண்ணியங்க, ளொருமையாப்புகல்வீரெனச்சித்திரகு
த்தரோதுவாரிவன்புரிபவமுரைக்கவொண்ணாதா, லருமைசேர்தருப்ப
ணவர்தங்குலத்தினிலுதித்தானூற்றுமின்றநற்கருமங்ளொன்றையு மறியா
ன், பருவமாதராலான்மனைபாணலநுகர்ந்தான்பாபஞ்செய்திடக்கூசிலா
ன்பரபொருள்கவர்வான். [ரு]

இனையதீவினையெண்ணிலபுரிந்திடுமிவன்றானிறந்திடற்கொருமதியெ
னவொருமதிசெய்தா, னனகராநடராசர்தங்கோயிலையடைந்தானந்திக்
காப்பினிற்சந்தித்தான்பூதியுமணிந்தான், பனகபூடணர்பூசனையின்சிறப்
பினைத்தினமும்பார்த்துவந்தனனிறந்தனனிவனெனப்பகர்ந்தார்,மனமு
வந்தனர்பூசைகண்டானெனக்கேட்டமறலிதான்பயந்தெழுந்தடிவணங்
கினனன்றே. [சா]

தன்றனுசனந்தனக்கிணையாகியசிங்காசனத்தில்வைத்தனன்மனத்
திறற்பூசைசெய்துரைப்பா, னன்றுசெய்தனைநான்மறையோய்சிவபெ
ருமானயந்திடுந்திருவந்திக்காப்பினிற்றரிசனந்தான்,றுன்றுமோவந்திவே
ளையிற்சேவைசெய்திடுவர்தூயரங்கவர்தேவரெல்லாந்தொழுநலத்தோர்,
வென்றிசேர்பவரரும்பெரும்பாவங்கணீங்கி மெய்வருந்துறார்மெய்க்கதி
பெற்றிடுவாரே. [எ]

அந்திவேளையிற்பரமர்சந்நிதியிடபேசனாரியபீசமோர்கையினிலணைத்
செல்கின்றவவருடன்சென்மகனைநோக்கிச்சிவையேயநன்னெறிபார்த்தேகென்றுரைச்சொ, லொல்கின்றசூத்திரன்றன்காதிற்புக்கதுயிர்விடுங்காலத்திலதுகேட்கப்பெற்றான், மல்கின்றபாவங்களெல்லாம்போக்குப் வள்ளலார்நாமங்கேட்டதனுற்றூதர், புல்கின்றிலாரென்றபோதுகாலன்புனல்வருணனொடுமவன்பாற்போயினனால். [௬௩]

வருணனைக்கொண்டவனுடலைப்புனிதமாக்கி வானவர்களொடுஞ்சித்ரகுத்தரோடுந், தருமனவனருகில்வந்துவில்வமாலை சாத்திவணங்கினனந்தச்சமைபந்தன்னி, லருகுமவனங்கத்தினூடேகின்றுமாகமுநாக்கும்மூக்கும்வாலுந்தீந்த, கருகுகருநாகங்களநேககோடிகாணுறவேபுறத்தில்வந்துமாண்டகண்டார். [௬௪]

அதிசயமுற்றவர்நின்றுரந்தப்போதிலவைகாணவயனுடன்மாலாங்குவந்தான், றுதிபெறுமாயனைவணங்கிப்புதுமையீதுசொல்லுமெனயமன்கேட்கச்சொல்லுகின்றான், கதிதருமெய்ச்சிவனமந்தன்னை*பாவற்காலத்திலிவன்செவியிற்புகவேபெற்றான், விதிமுறையிற்புண்ணியத்தாற்செய்தபாவவினையரவினுருவின்வந்துவீந்ததன்றே. [௬௫]

இங்கிதனுலிவன்புனிதனுகப்பெற்றானிவனம்மால்வணங்கலுறுந்தகையனுனன், பங்கமுறுமிவன்பாவகோடியெல்லாம்பரமசிவனமமேபோக்கிற்றன்றே, யங்கதுமாத்திரமன்றுற்சிவன்முன்னேகியானந்தடம்புரிவனிவன்றான்கண்டீர், பொங்குமிவன்புண்ணியத்துக்களவோவில்லைப் புவிதனின்மற்றுளதருமம்பலபோலன்றால். [௬௬]

அவைகளினின்பங்கனுகர்ந்தொழிந்தபின்னாருகிரையத்துறுசனனமொழிதயின்னஞ், சிவநாமபானந்தானவைபோலன்றுற்சென்னமரணத்துக்கச்சிறையைநீக்கு, முவமையிலாவப்பெயரைநினைக்கிற்கேட்கிலோதிடிற்பாபப்பகைகளெல்லாமோட்டித், தவமுதல்வனுகுமாதிக்கால்குஞ்சாற்றரியபேரின்பந்தருங்கண்டாயே. [௬௭]

சகலமுனிவோர்தேவர்நாகருண்ணுஞ்சாற்றருமாரமுதிதுவேயிதனையுண்ணார், புகலருஞ்சென்மக்கடலிலழுந்துவார்கள்போற்றருநற்கதிபெறவேவேண்டினேர்க, ளகமகிழ்ந்துசந்ததமுஞ்சிந்திப்பாரென்றருமறையுமரும்பொருளையறிந்தோர்தாமு, மிகவுமெடுத்துரைப்பரிதுவல்லாள்மேல்வீடுதரும்புண்ணியம்வேறில்லையன்றே. [௬௮]

* ஆவற்காலம் - இறுதிநாள்.

சிந்தைமகிழ்சிவநாமமகிமையிந்துசேகரனல்லாலொருவரறிவாரில்லை, வந்தவிதையறிந்தோரையாமெல்லோரும்வந்திப்போமறையின்முடிமணியதாகு, மிந்நாமத்தையரனருளினலேயாம்வணங்குவோமெவரும்பணிவதீதே, முந்துதவம்வருந்தமல்லாலிதனைப்போலமுத்திநலந்தரவெளிதொன்றில்லையாமே. [௪௯]

அரும்பாவிபெறவரிதுதருமசிலரடைந்திடுவர்சிவனமமிதனைநீத்தே, பொருந்துறுகாயம்வருந்தத்தவங்களாற்றிப்போகம் வேண்டிடுவோர்கையுற்றதேனை, வருந்தியெழுமகவினுக்குக்கொடுத்திடாமல் வனத்தினிற்போய்க்கொணர்ந்திடவேசென்றவேட, னிருந்தபடுகுழிமுள்ளில்வீழ்ந்தல்போலவிரும்பிறவியிடர்க்கடல்வீழ்ந்தழுந்துவாரே. [௫௦]

சாற்றரியசிவநாமம்பிறவிநோய்க்குச்சஞ்சீவியெனமாயன்சாற்றலோடுங், கூற்றுவனுமுளமகிழ்ந்தானயனேடே மால்குற்றுயிராய்க்கிடக்கின்றேன்றன்னைப்போற்றி, யேற்றமுடன்முன்னின்றேயியம்புகின்றனெம்பிரான்சிவநாமமிறக்கும்போதி, லூற்றமொடுஞ்செவியுறவேபெற்றாயுன்போலொருவருண்டோநீசிவனுக்குரியோனென்பான். [௫௧]

உன்னைநான்சிவனெனவேபாவிக்கின்றேனுனக்கிணையா வுலகத்திலொருவரில்லைப்,பன்னுமனத்தினிற்றேன்றும்படிபாவங்கள்பண்ணியதல்லாற்றருமஞ்செய்திலாயே, யின்னிலையுற்றனையிறக்குங்காலந்தன்னினிறைவர்சிவநாமங்காதுறப்பெற்றாயா, லன்னதனற்செயும்பாவமெல்லாநீங்கியம்புவியிற்சீவன்முத்தனெனவுற்றாயே. [௫௨]

மனைமனைவிசெல்வமெல்லாநீத்துக்கானின்மலைமுழைஞ்சு தனிலிருந்தேதவங்களாற்று, முனைவருக்குங்கிடையாதசிவனமந்தான்முடியுங்காற்பெற்றனையாலருள்பெற்றோரி, லுனைநிகரார்முக்கண்ண னுருவஞ்சார்வாயூற்றமுடனிருக்குங்காலரனமத்தி, னினைவுறினுமரணமுறுங்காலந்தன்னினினைத்திடச்சொற்றிடக்கேட்கநிகழ்ந்திடாதே. [௫௩]

ஆங்கதுதானேதினலென்னிற்பாசத்தவராழுகைகோழைநெஞ்சையடைத்துக்கோற, நீங்குறுபாவச்செயலாற்சித்தியாதாற்றிருவருள்பெற்றுடையோர்க்குச்சிவலிங்கத்தின், பாங்குபெறுதரிசனமெய்ப்பூதிகண்டிபரிவுடனேபுனைதல்சிவபக்கவீச, வோங்குமிந்துசேகரமாதேவவென்றேயோதிடக்கேட்கவும்பெறுவருண்மையாமே. (௫௪)

சங்கரலிங்கத்திற்பூசனைசெய்வோர்கடாண்மலர்நஞ் சென்னியின்மேற்றரிப்பவாமாற், பங்கமுறுமரணகாலத்திலீசன்பதமினைக்கக்கேட்கவடையாளம்பூண, விங்கிவர்பெற்றவர்முத்தியடைவரல்லாரெய்திலர்நிச்சயஞ்சிவன்றாளறியவென்றே, செங்கண்மால்கையெடுத்துப்புகன்றுநின்றுன்சேயிழைநங்கணத்தரங்குச்சென்றானன்றே. (௫௫)

மாணிக்கமானமுங்கொண்டணைந்தநந்தமாகணத்தர்தமைமாயனயனுங்கண்டே, சேணிற்சென்றடிவணங்கிப்பத்தியோடுஞ் சிதமொழியுட

னெங்கேசெல்வீரென்றார், காணுற்றகணங்கள்சொல்வாரிவன்முன்செய் தகருதருநற்புண்ணியத்தான்மரணகாலைப், பூணுற்றசிவனாமஞ்சைவர்வா க்காற்பொழியமுதமெனச்செவியிற்புகப்பெற்றானே. (௫௬)

அதனாலிங்கிவனையண்ணலருளினாலேயரதனமானத்தேற்றியமரர் போற்ற, முதலாகுங்கைலைவரையெம்பிரான்றன்முன்கொடுபோய் விட வந்தோமந்நாப்பண், பதமூன்றிநின்றுதவம்புரிந்தோர்க்கேனும்பரியு யிர்போங்காலரியபரமனாம, முதவலரிதந்நாமம்பொருள்கட்கெல்லாமுட் பொருளாமபீட்டமெல்லாமுதவுந்தானே. (௫௭)

நம்பனார்சிவநாமமகிதிக்குநேராய்நவிதியுமொப்பலவானோர்கள்கேட் டீர், நும்பரிவுபெறும்பூசைபெற்றுளானைநொடிவரையிற் சிவன்முனங் கொண்டேகுவோமென், றம்பொனொளிர்தெய்வவுருவவனுக்கீந்தேயரத னவிமானத்தின்மிசையினேற்றி, யிம்பர்கொடுவந்தனர்நங்கணத்தார்நங்கா யிருஞ்சிவநாமத்தியற்கையீதாமன்றே (௫௮)

அம்பிகையேசிவநாமவமுதபானமருந்துமருந்தவர்நமக்காவசியமா வா, ரெம்பெயரிதுவேயந்தரங்கமானரகசியமாஞ்சைவமணிமனக்கொ ளென்றே, நம்பனுரைத்திடக்கேட்டிப்படியோவென்றுநாயகிதானறிந்து சிவநாமந்தன்னா, லும்பர்பிரான்றனைப்பூசைசெய்தாளென்ன நந்திவிசு வாவசுவுக்குரைத்தானன்றே. (௫௯)

மீண்டுமுரைப்பான்முத்திவிளைப்பதற்கேவித்தாகு மிதுவன்றிவே றொன்றில்லைக், காண்டகுசங்கரன்பூசைசுகமேநல்குங்காதலினாலதையி யற்றவேண்டுமென்ற, வாண்டகைநந்தியைவிசுவாவசுவென்போன்வீழ் ந்தடியிறைஞ்சித்தோத்திரஞ்செய்தறைகின்றானா, னீண்டசடைவிசுவே சன்பூசையாற்றிநிகரில்கணதிபரானீர்நீரேயென்பான். (௬௦)

உமதுபதபூசைபுரிவோர்கடாமேயுமைபாகன்றிருவருளான்முத்தி சேர்வா, ரமலனடியார்கடமைப்பூசைசெய்தாலரன்பூசைபுரிந்ததுவேயா குமன்றே, விமலனுக்கப்படியன்றோவன்பர்தம்பான்மேவிய மெய்க்கரு ணையந்தவடியாரோடு, மமர்தருநற்சகவாசஞ்சிவபுராணவமுதவாரியை நிகர்ப்பதாகுமன்றே. (௬௧)

துங்கமுறுசங்கரனைப்பூசைசெய்வோன்சுரனவனாகினுமசுரனாகினு ந்தா, னங்கவனைத்தேவரெல்லாம்வந்திப்பாராலரியதொருசிவயோகரா குநந்தஞ், சங்கதரிசனஞ்சிவன்றனருளாலுற்றேன்சாற்றரியவுமதுபதந் தபிடேகஞ்செய், மங்களமாம்புனல்பருகிமேற்றெளித்தேன் மனையுட னேகுலந்தழையவாழ்வுற்றேனே. (௬௨)

முன்னுநான்சிவபுராணங்கள்கேட்டமுதன்மைதருந் தருமந்தால ன்றேயின்றும், பன்னுமுன்றன்வாக்கமுததாரைவாக்கப்பரிவினுடன் செவிவாயாற்பருகலானேன், றுன்னியசென்மங்கடோறுமிளமைமேவுந்

தோலைகயன்னோர்மோகவலைச்சிமிழ்ப்புற்றேய்ந்தே, னன்னபோதான்பூ
சையாற்றிலேனலையவுன்றனருளினின்றுசெய்யப்பெறறேன். (௬௩)

இப்பிறப்பிற்புனிதனேயாயினேன்யாணிக்கதைகேட்டோர்களெல்
லாமிறைவனோர்த, மொப்பரியசிவநாமமோதிநாளுமுயர்நாமமகிமையினா
ற்கதிப்பேறுற்று, ரப்பரிசால்யானுமுத்திசேர்வேனென்றேயந்தவிசுவாவ
சுவாங்கந்தர்ப்பன்றான், செப்பினனெப்பருங்கயிலைகாவல்பூண்டதிருநா
திதேவனுளமகிழ்ந்தன்றே. (௬௪)

இருபதாவது சிவநாமமகிமைச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-எ௨௬.

இருபத்தொன்றாவது,

பெண்மணிசிவபூசைச்சருக்கம்.

வேறு.

அறுகொருகுடங்கைநீர்கொண்டண்ணலார்பூசையாற்றிற்
பெறுதல்பேரின்பமென்றுபேசிடக்கேட்டிலாரோ
மறுகுறுமாதரார்க்குமாகிதிப்பூசைசெய்தே
சிறுகுசிற்றின்பங்கொள்வார்சிற்றினமாந்தர்தாமே. (௧)

யாக்கினவற்கிசொல்வானிப்படிசொல்லாநின்ற
வாக்கினன்வீரசித்தின்வார்த்தைபெண்மணிதான்கேட்டே
தேக்கியவன்பினோடும்வணங்கியேசிவபோதத்தி
னேக்கியகுரவர்நீரேயெனக்கெனநுவலுகின்றாள். (௨)

உம்முடைத்தயவுபெற்றேனென்னிடத்துவகையுண்டே
லம்மைதந்தருளுஞ்சைவவித்தையெற்கருள்வீரென்ற
கொம்மைவெம்முலைதன்வார்த்தைகேட்டலுங்கூறுகின்றான்
செம்மைசேருனக்கிப்போதுசெவ்வியன்றென்றுசொல்வான். (௩)

இன்னமுஞ்சிறிதுகாலஞ்சென்றபின்னிறைவன்யோக
மன்னியசைவசீலத்தொருமுனிவருவன்கண்டா
யன்னவனுனக்கிவ்வித்தையறைகுவன்புருடன்கோபந்
துன்னிடாமுன்னமேகுன்மனைக்கெனப்பின்னுஞ்சொல்வான். (௪)

புருடனெத்தகையனேனும்பொற்றொடிக்கற்பினல்லா
ரருடருசிவனவன்றானெமெனநினைத்தல்வேண்டுந்
தெருடரிலவனுக்கேற்றசெயல்வேண்டுமவன்றனேவ
றருமகிழ்வுடன்சரீரத்தளவுமேசார்தல்வேண்டும். (௫)

அவனுயிரிறக்கிற்றானுமாருயிரிறத்தல்வேண்டும்
புவனியிலவன்றனோடும்புகிற்சொற்கம்புகலாமன்றே

தவமிதுகுமரனூர்க்குச்சாற்றுமீதின்றேற்பாவ
மிவைகணீபுரிவாயென்றூனெங்கினளழுதுசொல்வாள். (௬)

சாற்றுமித்தன்மையெல்லாமெய்ம்மையேதருமசீல
மாற்றுநற்கணவற்சேர்ந்தவரிவையர்புரிவதாமான்
மாற்றுறுமதுபானஞ்செய்பதிதனுமனுளனோடும்
போற்றுறச்செய்துபாவம்புகச்சொலுமனுநூலுண்டோ. (௭)

பனவனேயெனினும்பூதிபதியடையாளமாலே
யனகமாமிலிங்கபூசையவையிலான்பதிதனவ
னுனவரும்பஞ்சபாதகத்தரோடுறைவர்மூட
ரனைகொண்கனுடனேசாதலாகாதென்றறையும்வேதம். (அ)

சாற்றரும்பதிதற்சார்ந்தார்தயரொடுகோசமாவா
ரேற்றமாஞ்செல்வமேனுமெனக்கதுவேண்டாவன்றே
மாற்றருமவனைவிட்டுக்கற்பழியாமைமன்னி
யாற்றருந்தவங்களாற்றறருமமாயிழையார்க்கன்றே. (௯)

அன்னவன்பேச்சினுமெலற்காவதொன்றில்லையையா
நன்னெறிக்கதிபேசேருநாடுவேன்சிதடரேனு
முன்னிபசாத்தியத்தையுதவுசாதனங்கைவாய்த்தாற்
பின்னவர்யார்சொன்னாலும்பிடிப்பரல்லால்விடாரே. (௧0)

நினைத்தகாரியங்கைகூடாதெனிற்சிறுமகவுநீங்கு
மனத்துறறன்னைச்செந்தீமலரெனக்கையாற்பற்றிப்
பினைச்சுடவிட்டவாபோற்பேதையேனுனதுகாட்சி
தனைப்பெற்றேன்மூடந்தீர்ந்தேன்றலைவன்மூடதையுந்தேர்ந்தேன்

இனியவனுடனேகூடியிறந்துவிட்டேனேயாகி
லனகானெடுத்தசென்மமவத்தமாயொழியுமன்றே
கனமுறுபதிதன்றூனேகளேபரமாவன்கண்டீ
ரினமலாப்புருடர்ச்சேர்ந்தேயென்பலன்பெறுவேனையா. (௧௨)

அவனிடத்தவகுணங்களுற்றவாலருவருத்தேன்
சிவனையோர்தரமுமிக்தச்சென்மத்திற்பூசித்திலேன்
பவமுறுஞ்சென்னமானேன்பராபரலிங்கந்தன்னைத்
தவமுறப்பரிசித்திலேன்றரிசித்தருனுமில்லேன். [௧௩]

அஞ்சமிர்தத்தினோடானஞ்சுமேபாடிநன்றூச்
செஞ்சுடர்க்கலவைச்சாந்தின்சேறபிடேகஞ்செய்தே
நஞ்சணிமிடற்றினார்க்குநல்லவில்வத்தினோடு
கஞ்சநன்மலர்கள்சாத்திக்கண்களிகூர்ந்திலேனே. [௧௪]

பாலுடன்றயிர்தேன்கன்னல்பலகனிச்சாறுமாறு
போலுறவபிடேகத்தைப்புரிந்துகையினைத்ததில்லே

யேலமார்சுவைபன்னத்தின்பிறங்கனைவேதித்தில்லே
ஞாலமுண்டவன்முன்கையாலவினயநடஞ்செய்திலேன். [௧௫]

சிவாலயந்திருமெழுக்காற்றெளித்திலேனலகிட்டில்லே
னவாவுடனுருத்ரவீணையரன்முனம்வாசித்தில்லேன்
றவாமனத்தோடுமெண்ணலந்தரியர்கஞ்சாரேன்
பவாலயமானசென்மபயமெவ்வாறொழிகுவேனே. (௧௬)

பூதிகண்டிகையணிந்துபுவனநாயகன்விழாவைக்
காதலென்கண்கள்காணதொழிந்தனகடவுணம
வாதரவமிர்தபானமென்றணுவருந்திலாதாற்
காதுகள்சிவபுராணகதைகளைக்கேட்டிலாவே. (௧௭)

மங்களலிங்கநாதன்மருவிடுங்கோயிறன்னைப்
பொங்குமன்புடனேகால்கள்புரிவலஞ்சூழ்ந்தவில்லைத்
தங்குபாவங்கடீரத்தலைவணங்கியதேயில்லை
யங்கந்தான்பிதக்கணங்களன்புடனுற்றவில்லை. (௧௮)

இத்தனைநாளும்பாவமியற்றினேனிறைவனார்தம்
முத்தமக்கோயின்மண்டபாதிகளுளுற்றவில்லே
னத்தமுநல்கிலேனென்றவள்சொலும்போதுவீர
சித்துவின்சேனைபோயச்செழுநகர்சூழ்ந்தவன்றே. (௧௯)

ஆர்த்திடுமரவங்கேட்டான்பெண்மணிபவடன்கேள்வன்
சாத்தகிவேடராசன்றனையர்களோடும்போந்தே
வேர்த்தனன்வெகுண்டெதிர்த்தான்வீரன்றன்சேனாநாதர்
பார்த்தனரெதிர்ந்துதாமும்பதகனைப்பிடித்துக்கொண்டார். (௨௦)

கட்டினர்கொண்டுபோய்த்தங்காவலனுறையுங்கோயில்
கிட்டினர்கண்டவேந்தன்கேட்டனனிதுவேதென்றே
பட்டினமிதனிலுற்றான்பாதகன்கிராதர்வேந்தன்
றுட்டனிங்கிவன்றன்செய்திகேட்டியென்றிறைஞ்சிச்சொல்வார்.

சிவபத்தியில்லான்வெய்யகுறும்பன்றீத்தொழிலன்சேர்ந்த
விவனையேபிடித்துக்கொண்டேயிந்நகர்நினதேயாக்கிப்
புவனநாயகநின்னீதிபுரிவதற்கமைவித்தோமா
லவனியிலிவன்றன்செல்வமளவிடற்கரியதெந்தாய். (௨௨)

தீர்த்தயாத்திரையிற்செல்லுஞ்சிவநெறிமாந்தர்தம்மை
யார்த்திவனடித்துக்கொல்வோனரிவையர்முயக்கநீக்கான்
கார்த்தகந்தரனைப்பூசைபுரிதருங்கருணைஞான
மூர்த்திநீபுரக்குநாட்டின்மூடனுற்றிடலாகாதே. (௨௩)

சாமிநீதயாசமுத்ரமாகையாற்சிறியனென்றே
பூமிபோற்பொறையுற்றால்யாமிதைப்பொறுக்கலாற்றேந்

தீமனத்திவனிருப்பதன்றான்பத்திசேராக்
கோமுறைபவன்றனூர்நீக்கொளுவிடவேண்டுமென்றே. (௨௪)

இவன்புனைபூண்கடம்மிற்கண்மணிபொன்றுமின்றாற்
சிவன்றனதக்கமில்லாச்சிங்காரவாரந்தாங்க
லுவந்தமங்கிலியமில்லாளொளிப்பணிபூண்டதொப்பாம்
பவம்புரியிவனைவைப்பதன்றெனப்பகர்ந்திட்டாரால். (௨௫)

அவருரைகேட்டலோடுமரசனுமுளத்திற்கொண்டே
சிவசிவாமகேசவென்றுசெப்பினன்சிவலிங்கத்தி
னுவகைசேர்சந்நிதானத்துற்றனன்பூசையாற்றிக்
கவலுற்றிறைஞ்சியேத்திக்கருதிவீற்றிருந்தானன்றே [௨௬]

மற்றதுகண்டசேனாபதிகண்மந்திரிகளானோர்.
குற்றமேயிழைத்தவேடன்கொடியசாத்தகியென்பானைப்
பற்றினர்பிடித்தடித்துப்பகர்சிரந்துணித்திட்டாரா
லிற்றதுள்ளிருந்தவேந்தற்கியம்பினர்மடநல்லாரே. [௨௭]

சிவன்றனைச்சிந்தைசெய்தேயிருந்திடும்வீரசித்தாந்
தவன்றனதருகிற்பற்மாவதியொடுசார்ந்துநின்றே
கவன்றநெஞ்சுடையளானபெண்மணிகண்கலுழ்ந்தே
யுவந்திடுமொழிவுபூண்டேனினியருளுதவுமென்றாள். (௨௮)

அன்னதுகேட்டவீரசித்தெனுமரசன்சொல்வா
னின்னினிதுக்கம்வேண்டாந்திங்களொன்றெமதூர்க்கேகி
மின்னனுப்வருதிநீதான்விழைந்தனமுடியுங்கண்டாய்
பன்னியநாளாகுசம்பரித்திநீயிருத்தியன்றே. (௨௯)

புறத்தினிலிருந்துதுக்கம்போக்கியேசிவத்தியான
மறப்பயனென்னவாற்றியொழிந்தபின்னாலயத்திற்
சிறப்புடன்பூசைசெய்தேயுறையெனச்சேனையோடு
முறப்பெறுங்கிளையோடூர்போயான்பூசைபுரிந்துற்றனல். (௩௦)

மங்கைபெண்மணியுந்தங்கைமாதர்களோடுங்கூடச்
சங்கையிறுக்கமாற்றிச்சூதகஞ்சார்ந்துபின்னாட்
பொங்குதண்புனலினாடிப்பூதிகண்டிகைபுனைந்தே
யங்குறுமுபவாசங்கள்விரதங்களாற்றுவாளால். [௩௧]

மைந்தர்கடங்களோடும்வள்ளலாராலயத்திற்
புந்திகொள்பத்திபூண்டுபுகுந்தருச்சனைசெய்துற்றாள்
பைந்தொடிகிளையார்தாமும்பணிபுரிந்துற்றார்சொன்ன
வந்தநாற்றினத்தில்விரசித்துவந்தடைந்தானன்றே. [௩௨]

தண்புனலாடிப்பூதிகண்டிகைமாலைசாத்தி
யெண்பெறுவில்வமாதித்திரவியமேந்திக்கொண்டே

பண்பெறுமிலிங்கபூசைபரிந்தனன்புரிந்திருந்தா
னண்புறுமவன்சொல்லாற்றுநங்கையும்வந்துகண்டாள். [௩௩]

விரதத்தாலிளைத்தமெய்யுமெய்த்திருநீறும்பூதி
தெரிவுற்றேபணிந்துபூசைசெய்வதுஞ்சிவசிவாவென்
றுருகிச்சொலுரையுங்கண்டான்வீரசித்தரசனுற்றாள்
பரிவுற்றதங்கைமார்தம்பத்தியும்பார்த்தானன்றே. [௩௪]

அதிசயமுற்றானப்போதரிவைதன்னிளையாரோடு
மதிபெறுமரசன்பாதம்வணங்கியேசூழ்வந்துற்றாள்
பதியெனுமரசேயுன்றன்பரிவருள்புரிதியென்றா
டுதிசெயுமவளைநோக்கியுவந்ததென்சொல்லுகென்றான். [௩௫]

என்றலும்வணங்கிநின்றேபெண்மணியியம்புகின்றாண்
மன்றல்சேருமையாள்பாகன்மாதேவன்பூசையாசை
நன்றதுநல்காயென்னநாரியர்வனத்திற்சேர்த
லன்றுநின்னுறையுண்மேவிவந்துவந்தாற்றாயென்றான். [௩௬]

எனவுரைபுகலக்கேட்டாள்பெண்மணியியம்புகின்றாண்
மனையினிற்செல்வந்தன்னின்மகவின்மேலாசையில்லே
னனைமலர்வில்வக்கானினருமதாதீரந்தன்னிற்
புனைதருமிலிங்கநாதன்பூசைமேலாசையென்பாள். (௩௭)

பூதிபுண்டரம்புனைந்துபுனையறுகலர்கள்கொண்டே
யாதியைச்சோமலிங்கநாதரைப்பூசையாற்று
மீதுசீவனமாவுற்றேயிறந்திடவாசையீசன்
பாதமேசாட்சியென்றுபகர்ந்தனள்பின்னுஞ்சொல்வாள். (௩௮)

அன்னபானீயம்வேண்டேனரனுமவமிர்தபானந்
தன்னையேவிரும்புகின்றேன்றழுவணைபஞ்சுமெத்தை
யின்னவற்றாசையில்லேனிறையவன்பாதமாகு
நன்னிழற்றுஞ்சுமாசைபெற்றுளேனுயினேனே (௩௯)

அரகராகருணைவாரியமலநான்செல்வம்வேண்டேன
பரவுமேபுருடன்றாயர்தந்தையர்பலரும்வீந்தார்
கரவுறுகுடும்பவாழ்க்கைகடிந்துளேன்காலனூரில்
விரவுறாவண்ணம்பூசைவிசுவேசற்பணிவேனென்றாள். [௪0]

பிறையணிவோன்பாதத்திற்பெரிதுறுநினைவினாலே
யறைதருதினந்தினப்பேர்ப்பிரளயபயமுமற்றே
னிறையருள்பெற்றுய்வேனுக்கிதனினுமதிகமாகப்
பெறுவதென்னென்றுநின்றுபெண்மணிபேசினாளே. [௪௧]

இருபத்தொன்றாவது பெண்மணிசிவபூசைச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௭௬௭.

இருபத்திரண்டாவது,

சித்திரகேதுநாட்டுச்சருக்கம்.

வேறு.

நெஞ்சமேகொடும்பிறவிக்கடலுளாழ்ந்துநேசமின்னார் நெட்டுரநெடுங்கராவால், வஞ்சவினைச்சுறவினால்வருமைந்தாழ்வால்வலைகாரனுங்கூற்றால்வருந்தாவண்ணங், கஞ்சன்மாலறியாதகடவுண்மூர்த்தி கங்கைவேணிபணிபமங்கைபாகன், செஞ்சரணந்தனிற்பூசைபுரிந்துநாளுந்திருக்கோயில்பணிந்துமுத்திக்கரைசேர்வாயே. (க)

திருந்தியபாக்கியவற்கிம்முனிவன்சொல்வான்சிவநாமவருச்சனையேபுரிவேனென்று, வருந்துமனத்துடனின்றுபத்திகூரமடந்தைபெண்ணின்மணிவகுத்தவார்த்தையெல்லா, மருந்தவனும்விரசித்துவேந்தன்கேட்டேயறைகுவானணங்கேநீபண்ணலார்நம், பொருந்துதிருவருட்குறித்தாம்பெருமைபெற்றாய்ப்பொருவரும்பத்தியிற்புனிதம்பூண்டோளாயே. (உ)

உலகினுயிர்க்குயிராகியுலகுமாகியுலகினுக்கும்வேறாமெனனினைக்கின்முத்தி, நிலவணிதிருமுடியான்றன்னைப்போற்றி நினைத்தனையான்மனவாக்குப்புனிதமுற்றாய், நலமிகுசானுவியாடப்பெற்றோர்முத்தி நண்ணுநல்போற்சிவநாமநவில்வோர்முத்த, ரலகற்றுமைபாகர்தம்மைநெஞ்சத்தாதரித்தாய்பேரின்பமடைகுவாயே. (ங)

அரனுடைத்தனைநெஞ்சத்துறுதியாக்கொளதுபுருடார்த்தங்களொருநான்குநல்கு, மரணமொடுசெனனவியாதியுமேபோக்குமங்கைநீமுற்பிறப்பில்வழிபட்டாபா, லுரமாகுமிப்பிறப்பிலதனாலன்றோ வுறுதிபெறும்பத்திபெற்றாய்கதியுஞ்சேர்வாய், பாவார்தம்பயம்பாபபயமாபத்துப்பயமியமபயம்பரமனுமந்தீர்க்கும். (ச)

நல்குரவின்பயந்தீர்க்குநல்லமுத்திநற்கீர்த்தியழகுதயிரியநன்மேன்மை, மல்குசோபனங்கள்சுவர்க்காதிபோகமாதருமுத்தியுமேவாய்க்குங்கண்டாய்,செல்கதிதந்தருள்பரமனுமமோர்காற்செப்பான்கேளானுயிர்சேர்பிணமதாவ, னல்லறருந்தீநரகிலழுந்துவானுலணங்கேயுய்வகைசிவன்பேரறைகிலானே. (ரு)

என்றனக்குச்சிவநாமவமிர்தபானமினிதருந்தத்தெவிட்டுகின்றதில்லைமாதே, நன்றிபெறுமதனால்யான்செல்வம்பெற்றேனதனருச்சனைநாமம்பத்திகாதை, துன்றுமிவைநான்குமெய்தலரிதுகண்டாய்சொல்லுமிவையுற்றதினஞ்சுதினமாகுஞ், சென்றவபதெல்லாஞ்சிவார்ச்சனைக்கேசெலுத்திலதுவேசென்மசபலமாமே. (சு)

பவமகற்றுஞ்சிவகாதைதகேட்கப்பெற்றபலன்காதுபடைத்ததற்குப்பயனுமன்றே, சிவமுறுமிக்காதைதனைப்புகலமுன்னாட்செய்தவத்தால்வந்தபயனுமன்றே,யிவையுகலக்கேட்டிடப்பெற்றிலையேயாகிலதுசெ

ன்மவாசையொழித்திடுமாறின்றே, யவமகற்றியின்பமருளுமங்காசைசான்பர்சகவாசத்தாலடையலாமே. (எ)

ஓங்குமின்பம்பாவுறல்குஞ்சிவநாமம்போலுறுதிதரும்பொருளுலகிற்கண்டதில்லை, யாங்கெனினுமிதற்கிணையாவொன்றுண்டென்றேயியம்புவோன்மிகுபாவபுத்தியாகுந், தீங்குறுகற்பழிமடந்தைசிறுவனென்றுசெப்புகென்கையெடுத்துச்சத்யமாக, விங்கிதுபோன்முத்திநலங்கொடுப்பதற்கொன்றில்லையென்றவர்சனைப்பார்த்தியம்புகின்றாள். (அ)

பயபத்தியுடன்வணங்கியரசேயந்தப்பகர்வரியசிவவித்தைதனைப்பகர்ந்தே, யயர்வுற்றவெனைப்புனிதம்பெறச்செயென்றாளாங்கதுகேட்டிடுமரசனதன்பின்சொல்வான், மயர்வற்றசிவமனுவங்கதுதான்சைவமாதவத்துக்குரவர்தம்பாற்பெறநீவேண்டுஞ், செயலுற்றதிதுவெனத்தாமதமதாகச்செப்பலும்பெண்மணிகேட்டுத்திகைத்தாளன்றே. (கூ)

சோகமுற்றுப்பூமியின்மேல்வீழ்ந்துயிர்த்துத்துடிக்கின்றாள்பெண்மணிசுந்தரஞ்சேர்செல்வ, ளாகமுற்றதுயருடன்கண்ணீர்கள்சோரவயர்வாளைக்கண்டங்கேதாவந்தோவிந்தப்,பாகையொத்தசொல்லிசிவபத்திபெற்றும்பரகதிதந்திடும்பஞ்சாக்கரமில்லாமற், போகின்முத்தியில்லையென்றேயென்செய்வோமப்புனிதமனுப்பெறிலன்றோகதிதானென்றான். ()

அண்ணலாரஞ்செழுத்தினுபதேசசந்தானதுவின்றேற்றசைவாசாரத்தின்சீல, நண்ணுறாதெனப்பெரியோர்சொல்வரன்றேநானிலங்காவலசனகநவிலக்கேளாய், திண்ணமுறுமிவற்றிலொருகாதைசொல்கேஞ்சிவலிங்கநிறைந்தகங்காதீரந்தன்னிற், றண்ணளிசேரரசுபுரிசித்ரகேதுத்தனிபாசனொருவன்சிவபத்திசார்ந்தான். (கக)

இரதகசதுரகதபதாதியுள்ளோனெண்ணரியநிதிக்குவையாபரணமாதி, சுரபிவகைபத்திரிகளரிவைமார்கள்சொல்லரும்பல்வகையிவைகட்களவையின்றாற், பரவுதிருநீறுடனேயுருத்திராக்கம்பரிந்தணிந்தபரிசனங்கடாமுமஃதே, திரமுறுமச்சைவசீலத்துவேந்தன்றிருநீறுகண்டிபுனைபரிமேற்கொண்டான். (கஉ)

கானகவேட்டம்புரியச்சென்றான்றுட்டக்கடுவிலங்கின்றொகுதியையுமாநடாத்தி, யூனமுறச்செய்யாதுகருணைசெய்தேயுற்றமயின்மான்மரைகடமையும்பற்றி, ஞானமுறுபூதியினைமாட்டிநாதனார்கண்மணியின்மாலைபூட்டி, யானசிவனுமங்கூய்ச்செவியின்மாட்டியாட்டியோட்டிடுவனந்தக்காட்டிற்றானே. (கங)

அவனுட்டிற்காட்டிலுற்றமிருகந்தானுமரன்பூதிகண்டியணியாதவில்லை, சிவனுமவிலிங்கமுடன்வில்வநீழல்சேர்ந்திலாநதிக்கரைகளெங்குமில்லை, தவமேவுந்தருக்களதனீழல்சார்ந்ததனியிலிங்கந்தனைத்தலைகள்வணங்கித்தாழ்ந்தே, நவமானதளிர்மலர்கள்கனிகள்கொண்டேநாளுமேயருச்சனைகணபந்துசெய்யும். (கச)

இருங்கானின்மிருகங்கடாங்கடுப்புந்துமபாவுமேசிவக்குறிமுன்காட்டி யுன்னும்வருந்தோகைவிரித்திலிங்கத்தெநற்சேரகன்றிடவடங்களசைக்தா டமயிலினங்களாடு, மருங்காதல்புரியுமவனுட்டிலீசனருச்சனைகள்புரி யாதார்யாருமில்லை; சுருங்காதெங்கனுநெருங்குமிலிங்கத்தொண்டர்தா னீறுங்கண்டிகையுந்துலங்குமன்றே. (௧௫)

எங்குமேயாலயங்கண்மனைகடோறுமிலிங்கமிருப்பவரெல்லாஞ்சைச வசிலர், தங்கிவிசுவேசசங்கரமகேசசாம்பசிவமாதேவ வென்றேசொல் வா, ரங்கவரெப்போதினுமேசிவபுராணமாதரித்துப்பாராட்டு மன்புபூண் டோர், மங்களாபாகர்திருவிழாவின்வரிசைபெறுந்தரிசனமேவாஞ் சிப்பாரால். (௧௬)

தருங்குழவிமுலைபருந்தாதிறைநாமத்தின்சாரவமுதிச்சையுறுமரி வைமார்கள், மருங்குறுமங்கலைப்பிரியார்வேடமாணமணிபணியிற்பிணிந னியும்வாழ்வுண்டாமென், றருங்கலனேடணிகுவர்மங்களங்களெல்லா மருளுமரனுமறுங்கவிசுவர்க்கம், பெரும்பரமுத்திதருமென்றேகற் பர்பிறிதெல்லாந்துக்கமெனப்பேசிடாரே. (௧௭)

பூதியணிபாதநெற்றியுருத்திராக்கம்புனையாவங்கஞ்சிவனைநினையா நெஞ்ச, மாதிசிவலிங்கமில்லாவீடுநாடம்பிகைபாகனுமில்லா வாக்கி தெல்லாந், தீதிவைகளனைத்தையுந்தீக்கொளுவவேண்டுஞ்சிவசிலமிவை நடத்துஞ்சித்ரகேது, மாதவஞ்சேர்ராசனைப்போராசசூடாமணியென்பார் தேவர்புண்யநிதியென்பாரே. (௧௮)

வணங்குவாரரம்பையர்களவன்றன்காதன்மனைவியர்கள்பூசைபுரி சைவசிலக், குணங்களுஞ்சங்கரசம்போசிவசிவென்றுகூறுகின்றமோதத்தி ரத்தின்குறைவும்பாரா, விணங்கியவர்பததூளிதலைமேற்கொண்டேயினி தாடல்புரிவர்வின்றேனுமேவலாலே, நிணங்கொள்ளிறைபவனுட்டிலரனன் பில்லார்சேர்ந்துளாரெனும்வார்த்தையில்லையன்றே. (௧௯)

வற்கடமேகோப்பமில்லைதருக்களெல்லாமலர்காய்கனிபெருந்தா னுமல்கு, நற்கருணைமாந்தர்மிகுகீர்த்திபாளர்காளுமழைவேண்டி லுடன் பொழியுமன்றே, பெற்குலவுவேயில்பனிபின்மிகுதிவாராதெழிற்பெறுங் கோக்குலங்குடப்பால்சொரியுமென்றும், பற்கொடியபயமின்றிவில்வமூ லம்புகுந்திலிங்கமுடியின்மூலைபொழிபாலாட்டும். (௨௦)

ஆயிரெல்லாம்பசுவினாதாங்கள்பினாக்கேயாறுமப்பெண்பாலம்பி கைதன்னை, நேயமுடனிட்டழைத்துப்புரந்தல்செய்வார்கிரிவனுட் டினராமிருகத்தொடு, சேபதருந்துலங்களுக்குஞ்சிவன்றன்பேரேசிவப த்தியவன்பெறலாலரசன்றேசம், பாப்பநரமக்கடலாகிப்பெருகிற்றன்றோ பயங்கவலையின்றிப்பெங்குஞ்சரிக்கலாமே. (௨௧)

சோரர்பயந்துட்டமிருகங்கடம்மாற்றும்பயமிலைப்புலிகண்மவுனா மாகிச், சாருமருந்தவர்போலவிருந்துங்காலன்றருபயமுமங்கிலையான்

மார்தரெல்லாஞ், சேருறுகாலங்கள்வந்தவுடனேயந்தத்தேகமொடுந்தெய்வவிமானங்களேறிக், காருறுகண்டன் கயிலைபுகுவர்சில்லோர்கட்வுளராய்ச்சிவலோகங்கலப்பரன்றே. (உ௨)

சிவலோகந்தனிலருநெறிக்கணுற்றதெய்வமந்தாரத்தருவினிழன்மேவும், பவமாற்றும்பரமசிவலிங்கபூசைபரிந்தார்திப்பிரசாதந்தனைநுகர்ந்தே, தவமேவுஞ்சிவனுங்கீர்த்தனங்கடாம்புரிந்தானந்தக்கூத்தாடிச்செல்வார், நவநவமாத்தருநீழன்மலர்ப்பாய்மேவிநற்கனிகணுகர்ந்தின்பநயந்துசெல்வார். (உ௩)

இனியபவபூபத்தின்வலைகதானுகர்ந்தேயின்னமுதநதிபருகிமெல்லச்செல்வார், நனிமகிழ்வினுடன்செல்லும்வழியிலோங்குநடைகாவணப்பந்தர்மலர்விதானம், பனிதருநன்னீழறனிலரம்பைமாதர்பாங்குகவரிகள்வீசவழகாலத்தி, கனிவுடனேதாங்கிநாடகங்களாடிக்கருதுருத்ரவீணையின்கானங்களார்ப்பார். (உ௪)

இடையிடையேகணநாதர்வந்துபூசித்தேத்திடமாலயன்முதல்வானவர்களெலலாந், தடையறவேவந்துதொழுக்கைகள்காட்டிச் சார்வார்களைவிண்டுபொறிக்குச்சாற்றும், விடையவனுக்கன்பருருத்திரன்கண்மாலைவிபூதிதிரிபுண்டரத்தின்மெய்யர்துய்ய, ரடையவிலிங்கார்ச்சனைசெய்தருமசிலரஞ்செழுத்தேயெப்போதுநவிலுநாவர். (உ௫)

ஈசனூர்பூசனையின்பிரசாதங்கொண்டிருந்தேககசுத்திபெறுமியல்பினோர்க, டேசுபெறும்விமானங்களேறிக்கொண்டுசிவனிருக்குங்கயிலைவரைச்செல்கின்றூர்பார், பேசுமவர்பெருமையென்னமனைவியாரும்பிள்ளைகளுமப்படியேகின்றூர்கண்டாய், பாசமுடன்சிவதருமம்புரிந்தவந்தப்பாக்கியத்தினுலன்றேபடர்கின்றூரே. [உ௬]

செல்கின்றூர்தமைச்சேடன்றேவிகாயத்திரிமடந்தையயிராணிசாயாதேவி, மல்குமிவர்தாம்வனசக்கரங்கள்கூப்பிவணங்கித்தோத்திரம்புரியும்வரிசைபாராய், வெல்கின்றசிவபூசைபுவியிற்செய்தார்வெள்ளிவரையினும்புரியப்போகின்றூராற், சொல்கின்றவிவர்கடமைக்காணப்பெற்றேன்றோகைபேகல்வினையின்றொகைபுற்றேமே. [உ௭]

இவர்கள்சிவனுறையுமந்தப்புரத்திலேகுமியல்பினேரிவர்களைநாங்காணப்பெற்று, னுவமையில்புண்ணியம்பெறலாங்கயிலைக்கேகினுவர்கடரிசனமெக்குக்கிடைப்பாதன்றே, தவறிடாதெதிர்கடிதுவந்துபார்த்துத்தருமமீபெறுகிசென்மசபலமீதாற், சிவனடியார்பாதகரிசனந்தான்பெற்றசெல்வமிதுபோதுமெனத்திருமால்சொல்வான். [உ௮]

இவ்வாறுதிருமாதுவின்மேன்றானானேரெல்லோருங்கேட்டிடவேயுரைத்துச்சொல்லு, மவ்வார்த்தையானங்களேறிச்செல்லுமரனடியார்தாங்கேட்டெம்மன்னலார்தப், பொவ்வாதவருளிதுவோவெனச்சிந்தித்தே

வலைகயுடன்செல்குவார்கயிலைக்கேகிச், செவ்வானமேனியான்றிருப்பாதத்திற்சேர்ந்துபின்னும்பிறவாதநெறிசேர்வாரே. (௨௯)

சனகமேனிப்படிப்பன்னவன்றனாட்டிற்சனங்களெல்லாநித்தியசோபனங்கள்பெற்றே, மனமகிழ்ந்துபுத்திரர்மித்திரர்களோடும்வாழ்வரங்ஙனெருபபழுமில்லைகண்டாய், கனகபூடணங்களிக்குமாதரில்லைகாதலரைப்பெறாரில்லைகணவன்பூசை, பன்கபூடணன்பூசைபுரிகுவார்கள்பாலர்களாவொருவர்களுமிறப்போரில்லை. (௩௦)

மாற்றவடன்றெடும்பகைசேர்பாதரில்லைவள்ளல்பூசையிற்போதுபோக்குவார்க, ளோறமுளவவர்களற்பத்தொழிலாற்பூசலெய்துவரேசிவபூசைமுடிவிலன்னோர், சாற்றும்வரங்கேட்பதுநும்பாதபூசைதன்னிலேகிடபத்திசாரச்செய்பு,மூற்றமனவண்டுநுந்தாட்போதிற்செந்தேனுண்டிருக்கவுதவுமதுபோதுமென்பார். (௩௧)

எமதுமனம்பூதியுடனுருத்திராக்கமிலிங்கபூசனைசிவபுராணகாதை, யுமையடைந்தோர்பதிபூசையிவற்றிலென்றுமுறுதிபெறும்பத்திபெறவுதவவேண்டும், கமழ்பகரானுபதிலிங்கபூசைசெய்யுங்காட்சிகண்கள்பெறவேண்டுங்கைகளுள,மமலசோடசவரிசையுபசாரத்தோடருச்சனைசெய்திடவெமக்கேயருள்செய்வாயே. (௩௨)

நாக்குனதுநாமமேபுகலவேண்டுநாதநின்கீர்த்திகள்காதுகேட்கவேண்டு,மூக்குநின்மாலியமணங்கள்கொள்ளவேண்டுமுறைமையான்மார்பினுதோண்முழந்தாணெற்றி, யேர்க்கனமெட்டால்வணங்குவோரைமுத்திபெந்திழைகவிவெதில்லையெங்கள்கால்கள்,பாக்கியஞ்சேர்காசியெல்லைசூழப்பண்ணும்பண்ணவநெற்றியினீறுபரிக்கப்பண்ணும். (௩௩)

இறைவனீசகலகாமியங்கள்செல்வமீந்திடுவாயென்றுமெமக்கவைகள்வேண்டா, முறைமையில்பாமுரைத்தமனோதந்தின் வண்ணமுற்றுவிப்பாயெமதுடைச்சந்ததிகளெல்லா, மறிவுடனெம்போலியற்றப்பெற்றுனுங்களவர்செய்பலமும்பெறுவோமவ்வாறுய்ப்பாய்,மறைபுகலுகின்றமாமுதலோராகிவாழ்வுபெற்றாரவர்நின்னைவணங்கலாலே. [௩௪]

எம்பிரானுனைப்பூசைபுரியப்பெற்றோரெய்தாதபேறுண்டோ சிவனேசம்போ, தம்பிரான்பாலலோசனகபர்த்திசந்திரசேகரபத்தர்க்கருளுநாத, வம்பிகாபதியேநீயென்றுநீங்காதமர்ந்திடுவாயெமதிதயகமலந்தன்னி, னப்பியஞானமதாகும்போகுட்டின்மீதேநாதநீங்கைதனைத்தழுவிக்கொண்டே. [௩௫]

எங்களுடையஞ்சலிக்கைவினையாகவிசைத்திமுன்னுமதோத்திரங்கட்டாயே, யங்கதனிற்றந்திரியினிசையாக்கொண்டேயடியேமைப்புரக்குநீன்வாயாரேனென்று. கங்கைகடிக்கரையாளுஞ்சித்ரகேதுக்காவல

[illegible] நல்வாரென்னப், புங்கவன்யாக்கினவற்கிமுனிவன்
ஞானட்புவியரசன்சனகனுக்குப்புகன்றானன்றே. [௩௯]

இருபத்திரண்டாவது சித்திரகேதுநாட்டுச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௮௦௩.

இருபத்துமூன்றாவது,

மந்திரமூர்த்திச்சருக்கம்.

வேறு.

நசைசந்தாடியென்முதலைவெனநாடோறும்வணங்கு நல்லோரிடம் வல்லார்தருநாணுகியகோண்போய், வசைந்தாடியின்வருபொன்னியின் வளரன்புமிகுந்தேமாறுது சுகவாரியைமருவும்படிசெய்வா, னிசைந் தாடியினுமைநாயகிபொருபாலொளிவீச விமையோர்புடைசூழுந்திரு வாரூரிலிருந்தே, யசைந்தாடியபெருமான்பணியாடுந்திருவடிக்கே யன் பர்டியபணியாடிநின்றுடிப்பணிவோமே. [௧]

அருள்யாக்கினவற்கித்திருமுனிவன்பகர்கின்றனமர்சித்திரகேதுந் தனியரசன்றிருநாட்டோர், மருண்மாமுயலகன்மீதினிலாடும்பதமீதின் வந்தித்திடு சிந்தைச்செயல்வன்பத்தியின்மிக்கார், தருமன்னனுமதுகண் டுளமகிழ்கொண்டனனுரைப்பான் சயிலேந்திரன்மகள்காந்தனல்லுயர் பூசனைபெற்றே, னிருமாநிலத்தெனைநேர்பவர்யார்சங்கரனருளாலின்பந் தருமனைமைந்தர்கள்பொருள்வாய்த்திடுமென்பான். [௨]

அடியார்க்கருள்பாளனென்குலத்தருந்தெய்வதமவன்றனடிப்பூசனை த னிற்காலங்களைவைபோக்குவனன்றே, முடிவற்றிடுமுயிர்க்கேயுயிராகும் மவன்றனையே முடிசாய்த்தடிபாவாமலிருப்பார்களுமுளரோ, கடியுற்றி டுகயிலைக்கிரிவளனுஞ்சிவன்மகிமைக்கதையுஞ்செவி தனிற்கேட்டிடக் கையுமெனதுளமு, நொடியெட்பொழுதேனும்மவமுயலாவணமரன்ற னக்கும்மருச்சனைபாவனை நுவலும்படிபுரிவேன். [௩]

மனதுற்றவையாவும்பெறுசைவந்தவருடனேவாசம்முறும்படிக்கே முனநான்செய்ததவந்தாற், பனகத்தையணிந்தோனருடரவே யதுபெ றுவேன்படருஞ் சமன்பயமுஞ்சென்மபயமுந்தவிர்வேனே, யனகச்சிவ சம்போகிரியீசாவுமைகாந்தாவடியேனுன்றனடிப்பூசைவிட்டகலா தருள் வாயே, யுனதற்புதவடியார்தமக்குதவுங்கருணையனென் றுரைத்தாசை யற்றுயர்பூசையினுள்போக்குவனன்றே. [௪]

இவ்வாறுயர்தருமன்னவர்திலகன்மனைமைந்தரிறையன்பர்களுடன் பூசைசெய்திருந்தானவனிருநா, ளவ்வானவருயர்நந்தனவனமேயென வளஞ்சேரலங்காரவனத்தேகின [illegible], [illegible]

சந்தனமுமாராவாழைகள்கமுகாவழைமல்லிகைசிறுசண்பகந்தடமல்
லிகைமௌவல், செவ்வாமிவைநிறைந்துற்றனபுனல்வாவிகள்சூழ்ந்தே
சிவன்கோயிலொன்றதுமன்பஞ்சிகரந்திகழ்ந்துளதே. [௫]

மதில்கோபுரமிசைமேதவழ்மதிபாதவளிரண்டுமணியாரமு மணியா
ரமும்விளைந்தாலெனவருவா, ரதிலெயுரும்பிரகாரத்தினுயர்நத்திகணேச
னமர்வார்பசும் பொற்பாவைசித்திரந்தாலணிபெறுமாற், சதிபேபுரிமட
வாரிசைபொடுபல்லியமுழங்குந்தங்கத்தளிர்வில்வங்கடமைக்குடம்புடை
யெங்கும், துதிபெபதருதருக்கூவிளமொன்றேடொன்றுநமைப்போற்று
ப்தாஞ்செல்வமெவர்க்குற்றுளதெனச்சொற்றிடுமன்றே. [௬]

எம்மான்றனதபிடேகத்தண்புனலாற்றழைந்திடுவோ மிறைவன்றி
ருவடியர்ச்சனைக்கெமதின்றளிர்வாய்க்கு,மம்மாவிவைபோற்செய்தவமா
ர்க்குற்றுளதெனவுமறையும் பிறைதருவேணியிலருச்சித்திடவென்றே,த
ம்மாதரவொடுபைந்தளிர்கொய்யப்புகுசைவத்தவத்தோர்களைக்கண்டே
யைபர்சார்விரிவண்வருவி, குமமாலுபப்பமூதற்றவெம்முயரும்பணையு
ளவாலுவைகொய்தான்முடிச்சாத்துமென்றடிதாழ்ந்துரைத்திடுமே. [ ]

தன்னீழலிலிங்கங்கடமக்கும்புதுமலரிற் றருதேனபிடேகத்தொடு
தளிரர்ச்சனைசெய்யு. நன்னீர்நிறையோடைக்குளிருக்குங்குளிர்கமலநா
ட்பூவுமப்படியன்பரைக்கூப்பிட்டுரைநவிலுஞ், சொன்னீடியதிருக்கோ
யிலின்சேணுற்றிடுமிவைகள் சொலுமென்றிடிலருகுற்றனசெயல்சொ
ற்றிடவேண்டா, வன்னீர்மையினலர்நல்குவபாவும்புகல்வதுகேட்டரச
ன்னுடன்வந்தோர்களற்புதமுற்றனரறைவார். [அ]

அசரங்களுமுரையாடுதல்செயுமோவிவைமனிதர்க் கடுக்குஞ்செய
லன்றேவெனவறைந்தாரவனுனற்ந்தார்,திசைகொண்டிடுதிருநீறுருத்தி
ரன்கண்மணிபுனைந்தார்சிவபூசைசெய் தவயோகியர்சிலர்தங்களைக்கண்
டா,ரிசைகின்றவப்பொழுதிற்றிசைமுகவேதியன்வந்தானிளங் கூவிளந்
தளிர்சந்தமோடிறையோன்மறைப்பூசை, நசையன்பொடுபுரிந்தேபிதக்
கணந்தோத்திரத்துடனே நமக்காரஞ்செய்திதயத்தினிறுடுற்றனனிருந்
தான். [கூ]

அரசன்மனைவியர்மைந்தர்களரனன்பர்களுடனேயலரோடையி
னீராடினனுடையாளங்கள்புனைந்தான், பரசும்பரிவுடன்பூசனைமனத்
தொடுறப்புரிந்தேபணிந்தோர்புடை யிருந்தானதுபதுமாசனன் கண்
டான்,விரசும்மிவன்சிவனெயெனமனத்தாற்றெழுதுரைத்தால்விமலாசி
வவென்றேதுசொல்பிரமாண்டமண்டியதே, பிரசங்கமழ்தார்வேந்தனு
ஞ்செவியிற்புகப்பார்த்தான்பிரமன்னிவன்சிவபத்தரிற்பெரியோனெனப்
பணிந்தான். [க0]

விளம்புற்றனரசன்வெகுநாள்பிற்பட்டவறியேன் விதியோயுனைக்க
ண்டேன்மனஞ்செயுசக்கினையுளதா. லுளங்கண்டிடுமாறைப்பொருட்கு

றுசாதனமுன்னை யுளுற்றும்வினைபல்லாமனுமுன்மேட புகல்கென்றான்,
றளங்கொண்டிடுமலராசனன்புகல்வானரசேநின் சரணக்கழன்மணிரா
சர்கடலையிற்புனைவதுவே, யிளந்தண்பிறைசூடும்பரன்பூசைத்திறமதனு
லெண்ணற்றிடு செல்வப்பொருள்யாவும்படைத்தனையே. [௧௧]

நீயேசிவனடியார்களிலதிகன்னருச்சனையானினதுள்ளமும்புனிதம்
வெகுமானன்னுனக்கிணையா, தூயோய்சிவதருமத்தினிற்காலங்கழிக்கி
ன்றாய்துணைமாதர்மைந்தர்கண்மைந்தர்கடொழிலுற்றனரிதுவே,தாயே
யெனப்புவிகாத்திடுமின்பாக்கியமன்றோதனிப்பாக்கியமேலாகியதருமத்
தினனீயே,சேயேயனையாய்நானுனைத்தெரிசித்ததினாலே திறம்பெற்றன
ன்றருமத்துறுசித்தித்திருவோனே. (௧௨)

ஒருலோகத்துநினக்கேயிணையிலையானினைக்கண்டோருறுசெல்வமி
வ்வளவாமெனவுரைக்கின்றவருளரோ, வருமாதருமத்தாலின்பந்தருசெ
ல்வ ளித்தேவையுந்தவருய்ப்பச்செயவந்தேபிறந்தனைநீ, திருமாதுறைந
ன்னாட்டினிற்றவயோகியர்போலேசெந்துக்களும்பசுவும்பகைதீர்ந்துற்ற
னவன்றே,தருமாச்சரியம்மாமிதுநின்னாட்டுயர்வனத்திற்றருவும்மிருகமு
ஞ்சங்கரன்றனிநாமஞ்சொல்வனவே. (௧௩)

இப்பாக்கியமேபுண்ணியத்தாற்பெற்றனைநீயேயிறையேயுன்றன்றி
ருநாட்டவர்சன்றிருநாமத், தொப்பேதுமிலமுதப்பெருக்கருந்தித்தெவி
ட்டிலராலுமைபாகத்தன்கயிலாயமுன்புவியாகவந்துளதாற், றப்பாவள
ம்பெறுநின்றனையேகண்டதுசிவன்றன்சாற்றுந்தரிசனமாநுதல்விழிச்சங்
கரன்றானே, செப்போகையிற்றரைகாத்திடுமணியேநினதுருவாய்ச்சேர்
ந்துற்றனனேவிப்புவிசிவலோகமதாமே. (௧௪)

எங்குஞ்சிவலிங்கங்கணிறைந்துற்றனவிதனுலிறைதேவியும்விளை
யாடுதற்கமைத்திட்டனகொல்லோ, புங்கந்தருமிவ்வாலயமின்பக்கடன்
முத்திப்போகத்திருவுறைதானமதாகப்பொலிவுறுமே, துங்கந்தருமிலிங்
கார்ச்சனையானந்தமொடியற்றுந் தூயோர்நிறைந்திருக்கின்றனரரசேநி
னைக்கண்டா, லங்கந்தருசிவபூசையின்மிகுபத்தியுண்டாமாலருமாதவஞ்
செய்தோயுனைப்பணியிற்றவமதுவாம். (௧௫)

இத்தன்மைகொளுன்றேசமதுற்றோர்கதிபெறுதற்கிசைக்கின்றதெ
ன்னினின்னாட்டினிற்பவம்பொய்யவையிலவே, முத்தன்சறுவேசன்றனை
யெல்லோர்களுந்தொழுவார்மோகத்திருடனைநீக்கிடவருமுச்சுடர்நீயே,
மத்தந்தருபவவெற்பினையிடிக்கும்மிடிபுவிமேல் வளர்கற்பகஞ்சிந்தாம
ணிமன்னுஞ்சுரபியுநீ, நித்தன்சிவசீலத்துடையாய்நீயெனல்பொய்யோ
நின்றன்குலதன்மஞ்சிவதன்மக்கிழங்காமே. (௧௬)

பணிவார்பிறப்பிறப்புந்தவிர்த்தருள்செய்வதுசிவன்றன்பாதாம்புய
ம[illegible]பாதமடைந்தாய், தணிபாதறங்காத்தேபுவிபரிக்குந்திறத்
தாலுன்றன்பூசைக்குக்கனிபூவிலைதருவுந்தருமன்றே பணிசேர்சிவன்றி

முன்னரின்னின்றுநடிக்குமானந்தநடங்கண்டவர் விலையாவையுமகலு
மவிலாவதிசயமாமிவைநான்கண்டதிலேயாதெனினியனுட்டுறைநகிளியா
வையுமரன்பேரியம்புவவே. [௧௭]

தருவுள்ளனயாவும்பணிக்கைகூட்டிடபரன்றன்றிருளிற்றனிர் கனி
கொண்டருச்சனைதான்புரிந்துளவான், மருவுள்ளமலர்க்கூவிளமெல்லா
மதிலைபால் வாதன்றிருநாமஞ்சொலிப்பேயர்ச்சனைசெய்தா, லருள்வன்
னருளென்றெயினந்தொடும்வந்திளந்தளிரா, லருச்சித்தனபுடைசூழ்வ
னவனைவிற்பனபாராய்,திருவுள்ளனின்செல்வமறுமேவசெல்வமெயாசே
ரிவனும்மிதுகண்டேயதிசயமுற்றனனன்றே. (௧௮)

இவையாவுங்கண்டதனுன்மனமிவன்விட்டபலேகா திசன்றனிவா
சம்பெறுமிந்தாவினிலென்றன், றவமேயுமிவ்வுடல்சங்கான்றனக்கற்பனை
ம்புரிந்தே நான்மேவுவன்சிவனுமவஞ்செழுந்தோதுமித்தருமேவ, யவனீக்
கிடுகுருவாமன்னனிபுண்ணியசேட த்தவதாரஞ் செய்தனேவேதஞ்சொ
ன்மபக்காரெனுஞ்சிவனுர், நவமாகிறைதரமண்டலவனமும்புரிவித்தாய்
காதன்னுனதிநபத்தினினுளும்முறைந்தனனே. (௧௯)

செல்வத்தவனியேயெனத்திகழ்பாரதிபதிசொ திருவார்த்தையை
க்கேட்டேமகிழ்திகழ்சித்திரகேது, நல்வித்தவன்சிவவித்தையினுயருத்
தமந்தனைபெகவிவ்வாயள விலவாகுமவ்வமுதக்கடலிடையே, கல்வித்
திறனுடனேனெனதுளமன்புடன்முழுகக் கருத்துற்றதெனத்தாமரைவே
தன்புகல்வான்மால், வெல்வித்திடுசிவதன்மமிரந்தாகரமலவோவேண்டு
ம்முனக் கவற்றுட்சிலவிளம்பத்தகுமென்பான். (௨௰)

பூபாலகநீசெய்தவிபாத்தன்மமுமுளவோபுகழுன்னடை நலம்யா
வையும்புகல்கின்றனவதுதான்,பாபாகரங்கெடுக்குமதுவெனக்கும்பலர்
தமக்கும் பவம்யாவையுந்தடுக்கும்வெகுசுகிர்தங்கள்கொடுக்குங், கோ
பாதிபன்பமனுஞ்சிவதருமத்தியலிவணிற் குறுகப்பயங்கூர்வன்னென
க்கூறும்மதுகேட்டே, மாபாவனைக்கருளுஞ்சிவன்மகிழ்வித்தையின்மகி
மை மறையாதுரைசெய்வாயெனமறையோனுரைசெய்வான். (௨௧)

உலகத்துளபலவித்தையிற்சிவவித்தையிங்கிதுவே யுயருஞ்சிகைம
ணியாமதுதருமத்தவர்பெறுவார், தொலைவற்றவங்கதன்மேன்மையென்
போல்வார்சொலற்கெளிதோசொல்லுமதன் *சொருபந்தெரிந்திடமாய
னும்யானு,மலகற்றிடுகாலம்மருந்தவமாற்றியுமறியேமவ்வித்தைவெந்தெ
ருப்பாம்பவமலையாம்பருத்திகட்கே, தலைமைப்பரம்பரையேயதனருமை
த்திறனறிவான் றகுமப்பொருள் மகிமைக்கொருகதைசாற்றுவன்கேண்
மோ. (௨௨)

மன்னுமுன்னைநாளிற்பிரமவமன்றிமற்றுள்ள மாமந்திரமெனுமூர்
த்திகள்வரதன்னருள்பெறவே, யன்னுவிமயச்சாரலிணைந்தங்கியிலபெ

* சொருபம்-குருக்கல்விகாரம்.

னூறாயிரம் யுகமாதவஞ்செய்தேயிளைத்துறுங்காற், றன்னைப்பிரணவமந்திரமொருமாமுனியாகத் தோன்றத்திகழுயர்மூர்த்தியையொருமந்திரமூர்த்தி, யென்னையகர்யார்நீரிவண்வருதற்றிறமுரையிரென்னப்பிரணவமாமுனியுன்னிச்சிலபுகலும். (௨௩)

நானேருறுமோமாமுருமுனியாகுவன்மேனா னாதன்சிவனாமப்பொருடனைப்பெற்றிடவிங்ங, னானேவெறுத்தாகாரமற்றுயர்மாதவம்புரிந்தேனானற்றுந்தவமிவணேசெயச்சிறக்குஞ்செயல்கேளாய், தேனேர்மொழியுமையாள்சிவனுடல்பாதியும்பெறவேதிகழிப்பிரணவலிங்கரைப்பூசித்ததுபெற்றா, டானேநிகராகுந்தவத்தானம்மிதுவவர்பாற்றணிமாதவம்புரிந்தேசித்திசார்ந்தார்சிலர்தாமே. (௨௪)

முனிவானவர்சிட்டாதிகளுயர்சித்தர்களிசையேமுயனாரதர் முதலோருயர்தருநாகர்கந்திருவர், தனையேநிகர்நந்தீசனைமுதலாங்கணநாதர் தனிமேருமந்தரம்விந்தமோடிமயத்திருச்சயிலங், கனைபாற்கடன்முதலாங்கடலரவின்குலந்தருக்கள் கடவுண்மணிநவமாநிதிகாற்கோடகன்சேடன்,வனைபைந்துளவினன்மாமலர்வாணன்கலைமங்கை வானத்திறையிந்த்ராணியைமுதலாந்தெய்வமாதர். (௨௫]

சிவவித்தையின்ஞானம்பெறவேண்டிக்கற்பகாலஞ் சிந்தித்தனர்தவமாற்றினர்சித்தித்திலரன்றே, யவமுற்றனமென்றேபினுமருமாதவமொருநூறாங்கற்பமிழைத்தாரதினும்வந்திலனரனே, குவிவுற்றனரனைவோர்களுமிவ்வாலயமதனிற்குழுமிக்கொடுதாமந்தணமிருந்தார்குறித்திடுவார், தவமுற்றனர்பஞ்சாக்கினிநடுவெட்சலமன்னந்தானின்றிமெய் கிரிசத்துறச்சார்ந்திட்டனமன்றே. [௨௬]

அரிதாகியபெருமாதவம்வெகுகாலம்வருந்தியாற்றுற்றனமன்றே யிலணுவும்பலனின்றே, பெரிதாகுநம்வாணாள்களுங்குறுகுற்றனவின்னும்பின்னுள்ளன நாளுநதவமிதுசெய்தலிற்பேறெ, னுரையீரிவைசெய்தும்மிதுவரையுநலமிலையே யுயருஞ்சிவஞானம்பெறவிதனான்முடியாதாந், தெரிவார்க்கரிதுணர்வாயதபீட்டங்களளிக்குஞ் சிவபூசனைசெய்தன்றியுறாதென்றுளந்தேர்வார். [௨௭]

இதனைமக்கடையாப்பொருளரிதாவொன்றுமில்லை யிந்நாட்செய்த தவமற்பமிங்கெய்தும்பயனிலையே, யதனாற்றுயர்பெற்றோமருச்சனைசாதனமன்றாலருமாதவத் துடல்விட்டிடின்ஞானம்பெறலரிதான், முதல்வன்சிவபூசைத்தவஞ்செயின்ஞானமும்வருமே முன்செய்தவம்வேண்டாசிவஞானம்பெறவேண்டு, நதிவேணியன்றனைப்பாவித்துநயந்தர்ச்சனைபுரிவோஞானம் பெறநாமித்தனைநாட்செய்தவமவமே. [௨௮]

சிறுபாலன்விண்மதியர்தனைக்கவரப்பெரிதாசை செய்தாலெனச்சிந்தித்திடுபயம்பெற்றிலம்யாமே, கிருபாநிதிசிவனர்ச்சனைசெய்தார்க்குமுன்வருவான்கேடில்லதோர்திருநீறுகண்டிகைமாலைதரித்தே, யறுகாகிலுமிளங்கூவிளந்தளிராகிலுங்கொண்டே யாராதனைசெயினெஞ்சிலபி

டங்களளிப்பான், மறுகாவலைகமனத்தாசையைப்பொடியாக்குறுங்க
லாய்வளர்பத்திதந்தாண்டானதுவருதல்லரிதாமே. [௨௯]

தரும்பத்திதழைத்தோங்கியமனத்தோடுமிலிங்கந் தனைப்பூசனைபு
ரிந்தாற்பெறற்கருமுத்தியைச்சார்வோ, மரும்புற்றிடுமனத்தன்புகொண்
டிலிங்கத்தினில்வில்வார்ச் சனைசெய்திடவெகுகாலங்கடவமாற்றினர
டைவார், விரும்பத்தகுமப்பூசையிலுமையாண்மணவாளன்மிகுநெஞ்சி
லபீட்டங்களளிப்பன்னெனவியந்தே, திரும்புற்றமனத்தோடுமிலிங்கத்
துருபூசை செய்வோமெனமந்த்ரம்பலசெய்தேமுடித்தனரே. [௩௦]

இருபத்துமூன்றாவது மந்திரமூர்த்திச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-அ௩௩.

இருபத்துநான்காவது,

மந்திரமூர்த்திகள்பூசைச்சருக்கம்.

வேறு.

வல்லியப்பணிபவல்லியமுழுங்கவல்லியன்முலைசிவகாம
வல்லியங்கயற்கணல்லியங்கோதைமாதுமைகண்டுகண்களிப்ப
வில்லியன்மேருவில்லினைபங்கழையின்வில்லினைவென்றவெம்பெருமான்
விலங்கியகனகசபையின்மாறுமலாடியேவெள்ளியஞ்சபையிற்
சொல்லியபதுமப்பாதமாறுடித்தொந்தமென்றுடியாருரிற்
சோதியாசனத்திலிருந்தசைந்தாடித்தொண்டர்தமிதயமதாகு
நல்லியற்கமலாசனத்தினிலசையாதிருந்துலகளித்திடுங்கருணை
நம்பரென்றுணர்வாரிம்பரோடும்பர்நாளுமேபணிபவாழ்பவரே. [௧]

அருமறைதெரிந்தயாக்கினவற்கிமுனிசொல்வான்பிரணவமூர்த்தி
யறைந்திடுமிவ்வாறனைவருங்கூடிப்புரிந்திடுமந்தணந்தெளிந்தே
பொருவருமுன்னைத்தவத்தினற்சித்தசுத்தராய்ப்பூதிருத்ராக்கம்
புனைந்திளம்பிறைசேர்வேணியானிலிங்கபூசனையாதராவினராய்த்
தரும்பரான்பூசைத்திரவியங்களிலேமுக்கியம்வில்வமேயென்றுஞ்
சங்கரனிலிங்கார்ச்சனைபுருடார்த்தஞ்சித்திகடந்திடுமென்று
முருகியவன்பான்முன்னுளோர்பூசித்துயர்கதிபெற்றுளாரென்று
மும்பரோடிம்பர்யாவருமிச்சையுற்றிதுபுரிவரேயென்றும், [௨]

சதுசென்மத்தின்பயத்துடன்மிருத்துபயமுமேதீர்த்திடுமென்று
மீனஞானத்தாலியற்றினுமகேசன்பூசனைக்கிரங்குவனென்றுந்
திதிலாத்திடஞ்சேர்பத்தியுற்றவராய்த்தேவர்களிருடிகளெல்லாந்
திகழ்தருநீறுபுனைந்தார்வன்றிருக்கண்மணிபுனைந்தா

சோதிமேயசகலசுகங்களுங்கொடுப்பாரென்றுகூவிளந்தளிர்முதலாச்
சொல்லரும்பூசைத்திரவியங்களினுற்றுக்கயோகங்களைநீக்கி
யாதிலைப்பூசைபுரிந்துகாலங்கள்போக்கியேயிட்டசித்திகடா
மடைந்தனர்வித்யாமூர்த்திகணிருமர்ச்சனைபுரிகிராலன்றே. [௫]

தவத்தினாற்பரமன்வந்திலனென்றுசலித்திடாதரன்றிருப்பூசை
தான்புரிந்தேரெனினைத்தவைபெறுவீர்சகலசித்தியுந்தருமிலிங்கஞ்
சிவக்கொழுந்தாகும்பிரணவமூர்த்தியிருந்துளனவன்றனைப்பூசை
செய்குவீர்பூசைமகிழ்வதுபோலத்தவந்தருமத்துளஞ்செய்யா
னுவப்புறுமுள்ளங்கையிலமுதமும்போலவைக்குமேயிருப்பிடமாகு
முன்மைசேர்சிவலிங்கார்ச்சனைவிடுத்தேயுறுதவஞ்செய்துடல்வருந்து
மவத்தமாமூடர்தாகமுற்றதனுக்கமுதமாமுதகமுன்னுறக்கண்
டதைவிடுத்தினகத்தபச்சிறுநீரருந்திடவிரும்புமாறதுவே. [௬]

மங்கைதன்மணாளன்சங்கரன்பூசைபுரிந்தவனருள்பெறுமவனே
வண்மைசேர்செல்வமுடையவனதனைவிடுத்துமற்றொன்றுசெய்திடுவோன்
சங்கைபொன்றின்றிமலத்தினைநுகரும்பன்றிநாயோனியிற்சனிக்குஞ்
சாற்றரும்பாவிசியகலைதபாகுந்தண்ணமுதக்கடற்றேனே
மங்குதலில்லாச்சுகத்தினைபளிக்குமாயிடிற்சிவனவன்றானே
மனத்தினிலிருந்தாலானந்தஞானம்வருதற்குக்கேட்கவேண்டுவதோ
திங்கள்வேணியன்மகேசனைத்தியானஞ்செய்திடமடிமைசெய்யாத
சிந்தையோன்முத்தன்பூசையிற்காலம்போக்கிடவாசைவேண்டியதே.

வில்வமேமுதலபூசையின்பொருள்கொடுவரவுழைத்திட வேண்டும்
விமல நாம்வாணலிங்கத்திற்பூசைவிழைந்துசீதப்புனலுடனே
செல்வநல்கிபகூவிளந்தளிர்கொண்டியற்றிடிற்போகமுத்தியுமே
சேரலாமந்தோவிப்படிக்கியைந்தபூசையிற்சிந்தைசெய்யாம
னல்வினைபுரியாதொழிந்தனமென்றேநான்மறைமுறையிடுமென்றே
நாரியோர்பாகர்பூசனையன்றிநானிலத்ததிகமொன்றுண்டோ
சொல்வரந்தருமற்றுறைகைபல்பானும்பூசையின்றொழில்புரிகினறோ
றுக்கமேசல்கும்பிறப்பினிற்பயமுந்துறந்தனன்சிறந்தனனன்றே. [௮]

பாவமோகமதாஞ்சுடர்விழுப்பதங்கப்பரமனுமத்தனற்கிரையாம்
பண்ணவன்பூசைமருந்துகையிருந்தாற்பிறப்பிறப்பெனும்பிணிபடா
தேவநாயகன்றனிலிங்கபூசனையேசெய்திடவேண்டுமால்வருத்தஞ்
சேர்ந்திடுந்தவத்தாலாவதொன்றில்லைபன்றிடும்பிரணவமூர்த்தி
காவிறைவனுரைத்தவுண்மைகள்கேட்டவித்தியாமூர்த்திகளெல்லா
நன்றுநன்றுடலைவருத்துறுந்தவத்தாலியாம்பலம்பெற்றிலமென்றே
பாவலாற்பூசைபுரிந்திடவொருப்பட்டெழுந்தனர்கங்கைநீராடி
யருந்திருநீறுபுனைந்தக்கண்டிகையுமணிந்தனரஞ்செழுத்துரைத்தார்.

றைபவனிலிங்கபூசனைபுரியவெண்ணினர்கங்கையின்கரையி
லிலங்கியவில்வவிருக்ஷகோடாயிருந்தனகண்டவர்தனதான்

முறைமையால்வித்யாமூர்த்திகளெல்லாமுன்னினர்துன்னினரிலிங்க
மூர்த்திகடம்மைப்பூசனைபுரிந்தேயிருந்தனர்முயலுமப்போதின்
மறைமொழிபுணர்ந்தகாசிபன்முதலாமாதவர்வந்துகண்டுவந்தே
வணங்கினர்நின்றாரந்தவேளையிற்றன்மந்திரமூர்த்தியிற்சிலர்தாம்
பிறையணிபரமனுமநோத்திரங்களாகராகிரீசமகேச
பின்னுகாமுன்வந்தருளுவாயென்றுபெருகுமன்பாலுருகுவரால். (௮)

ஏழையர்க்கருளுமன்மதகனுமேலொடுகீழ்முன்னும்பின்னு
மிடம்வலமெங்குமுனையலாலறியேமெங்கையுமன்னையுநீயே
மாழையொண்கண்ணிபாகனின்னல்லான்மற்றொருவரையுநான்மதியேன்
மனோகரலிங்கந்தனையிடைவிடாமன்மகிழ்ந்தியாந்தழுவிடுகின்றோந்
தாமுறுமெம்மைப்புரந்திடுகென்பர்சிலர்சிலரிலிங்கபூசையினிற்
சாற்றருமுத்திகானுன்னடையதனைத்தந்தருள்புரிதியென்கின்றார்
வாமுறுமிந்த்ரபோகமும்வேண்டேன்மலர்ப்பதம்வேண்டுவமென்பார்
மன்னுமெய்பத்தியென்றுநீங்காமலுன்பதத்துறவெனமதிப்பார். (௯)

இப்படிபுகல்பவம்புருடவார்த்தங்களுன்குமேபெறுகுவமென்றே
யேத்துவார்வணங்கிக்கூத்துமாடிறுவாரெதிர்நிற்குங்காசிபர்முதலா
மொப்பருமுனிவர்தங்களைநோக்கியுபர்சிவபூசைக்குவேண்டு
மோதுசாதனங்கள்சொல்லுவீரென்னவிருடிகளுரைத்திடுகின்றார்
தப்பறுபூசைக்குரியநல்வசனங்கேட்டிளிர்வேதத்திற்சாற்றுஞ்
சங்கரன்பூசைவிதியையோதுதுமாற்சந்தியாவ்வைகறையெழுந்தே
மைப்படிகண்டன்றனைநினைந்தப்பார்ச்சவுசகன்மந்தனைமுடித்து
மன்னியசிவதீர்த்தங்களிலாடிப்பூதிகண்டிகைவடம்புனைந்தே. (௧௦)

கூவிளநீழன்மேவியஞ்செழுத்தும்பிரணவமுதலுறக்குவித்தே
கூறும்வில்வத்தைநோக்கியேபூசைச்சாதனமானகோத்தருவே
மேவுமென்வணக்கங்கொண்டருளென்றுமூலத்திற்பவனடிவிடையின்
மிருடர்தம்முருவமுடிசிவரூபம்வேதமெயதனுடைத்தளிர்க
ளோவில்வேதாந்தரூபமாம்பணைகளுவைக்கெலாம்வணக்கங்கள்புரிந்தே
யொளிதருபானுவுடன்பிறந்தருளுமுயர்தருவினுக்கெலாமரசே
மேவியபூசைப்பலன்றருநிமித்தம்விருக்கமேயெனச்சொலிவணங்கி
யிரும்பியேசூழ்ந்தஞ்சலிசெய்துநின்றுவிண்ணப்பங்கேளெனப்புகன்றே.

வேதரூபமாமுன்னிடைத்தளிர்கள்பூசைக்குவேண்டுவவெல்லாம்
விருப்பியேகொய்கேன்பொறுத்தருளென்றுவிமலனைநினைந்துகொண்டிடத்தே
யோதுமத்தளிரின்காம்பினைப்பிடித்தேசலத்தினிற்றோய்த்தந்தளிரை
வேர்தருமிலிங்கந்தன்னின்முற்புறமேலுறும்படிசாத்திடவேண்டுங்
காதலினாலோரருச்சனைக்கொருகாற்கடிபுனல்கைதொடவேண்டுங்
கருதுமங்கதற்பின்பலமலர்புனையிற்கத்தரிப்பூமுனஞ்சாத்தித்
தெருண்மெய்த்தாமரைமலர்காம்பிலாமலேயருச்சனைசெய்து
செண்பகமெனவச்சாதிபோடலரியெருக்கிவைகாம்புறச்சேர்க்க. ( )

மிக்கமந்தாரைசெய்யபத்தியெனினும்வெண்மலரேனுங்காம்புநீனு
மேவிலதெனினுமருச்சனைசெயலாம்வேறுவேறுமனுக்கொண்டே
தொக்கநன்மலர்களருச்சனைசெய்யிற்றொலைவிலாப்பவமெலாந்தீர்ந்தே
சொல்லருங்கயிலைதன்மனையாகச்சூழ்ந்துவீற்றிருந்திடுவானற்
றக்கநன்மலரெத்தனையிருந்தாலுஞ்சிவன்மகிழ்வதுவில்வத்தளிரே
சாற்றுமோர்வில்வத்தருச்சனைப்பயனைச்சிவனன்றிச்சதுர்மறையறியா
வக்கணிபவர்க்குப்பூதிகண்டிகைநல்வில்வத்திலிருக்கின்றவாசை
யம்பிகையிடத்துமில்லைபால்வில்வமெப்படியுறினுமாமன்றே. [௧௩]

கூவிளந்தளிர்கள்பழுதிலாதுறிலங்கதிற்சிவன்மிகமகிழ்கூர்வான்
குலவுமாங்கதுதான்கிடைப்பதற்கரிதாற்கூறுநற்றளிரருச்சனையே
மேவிடுந்தருமசீலருக்கன்னதுறாதெனிற்பழுக்கடிபழுது
வீழ்சருகதன்றாள்சாத்தினுமகிழ்வன்வில்வத்தூணறும்புனற்குழைத்தே
தாவில்சந்தனமாச்சாத்தினுமகிழ்வனெத்தனைகாலமத்தளிரைத்
தள்ளிடான்சேமித்தணிதலுமாகுமவ்வருச்சனைபுரியாம
னாவினிலுணவுகண்டுயில்புரிதனன்றலவாங்கதிலாம
னாதனல்லுபசாரத்தொடும்புரியும்பூசனைநயந்திடானன்றே. [௧௪]

பானுவந்துறுதநாளெலாமுலகிற்படரிருணீங்கிடாவதுபோற்
பத்தியால்வில்வார்ச்சனையரற்கியற்றான்பாபங்கணீங்கிடாவன்றே
ஞானநாயகன்றீவினையொழித்தற்கேநல்கினதத்தருநம்ப
னுமெவ்வில்வத்துற்றிடுகாற்றைநயத்தல்போற்றென்றலுநயவா
ஞனசூரியன்றன்னிடத்தில்வந்துதித்தான்சந்திரனவனிடத்துதித்த
வரியகூவிளமிங்கிவைகளுக்கெல்லாங்காரணமம்புலிச்சடையோன்
மானமதில்லாவினையகூவிளத்தின்றளிரினலருச்சனைபுரிவோன்
மாநிலத்தழியாப்பாக்கியவானன்னவன்செயல்யாவரேவகுப்பார். ()

கடிகமழ்கரவீரத்தின்மின்போதாலருச்சியான்கிளையொடுங்கலியிற்
கடிபடுவானன்மாலைமந்தாரஞ்சண்பகமாலைசாத்திடுவோன்
கொடியவெம்பாவகோடிகணீங்கிக்கூறருமுத்தியிற்சேர்வான் [ழிப்பா
குறியதேயெனினும்வங்கநன்மலர்கள்சாத்துவோன்கொடுவினையொ
னொடிதருஞ்சாயங்காலையிற்புன்னைநாற்றிகழ்த்தாமரைதும்பை
நுவல்குருக்கத்திபாரிசாதத்தினுண்மலர்மாலைசாத்திடுவா
னெடியவனறியாவடிநிழற்சேர்வனீளறுகாலருச்சிப்பா
னிலத்தினிலுள்ளமலரெலாஞ்சாத்தும்பலத்தினைப்பெறுகுவானன்றே.

வேறு.

குளச்செந்நெலரியேகடலைவெள்ளெள்ளுக்கோதும்பைகாரெள்ளுக்கடுகு
வளத்துறுசம்பாவரிசிவாலாநெல்லரிசிவண்டினையொடுசாமை
கிளத்தியபாசிப்பருப்பிந்தவகையிற்கிடைத்ததானியத்தருச்சிப்போ
ரளப்பரும்பாபகோடிகணீங்கியருங்கதிபெறுகுவரன்றே. [௧௭]

அரும்பிரதோடந்தனிற்பனித்தாரையாரபிடேகமாற்றிடுவோர், விரும்புபாறயிர்நெய்தேனபிடேகம்விமலனுக்காட்டிடப்பெற்றோர்,பொருந்துறுபரிமேதப்பலன்பெறுவார்பூசைதானொருபகற்புரியின்,வருந்துறுபிரயகற்பகங்கள்புரிந்தமாபலமொழிந்திடுமன்றே. [௧௮]

கூவிளந்தளிராற்றினந்தொறும்பிரதோடத்தினிற்குபேரன்றனளி, லாவலாலருச்சிப்பவர்பலன்யாவரறைகுவர்யாமுமேயறியோ, மேவுமிங்கதனாற்சிவபதமென்றுமேலவர்சொலக்கேட்டிடுவோர், தூவலராகக்கண்ணிடந்தடியிற்சாத்தினன்றூயமாயவனே. (௧௯)

அருச்சனைமலரிலொன்றுதான்குறையவரிவிழிசாத்தியவடியிற்,றெரித்திடும்பத்திமுத்திமேல்வீட்டிற்செல்வதற்கமைத்தசோபானம் விரித்தகூவிளஞ்சாத்தினர்க்குமூவுலகும்விருத்தியாய் விட்டகாணியதாம்,பரித்தசென்மத்தோறிழைத்தபுண்ணியத்தால் வருமெனமுனிவரர்பகர்ந்தார். (௨௦)

இருபத்துநான்காவதுமந்திரமூர்த்திகள்பூசைச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௮௫௩.

இருபத்தைந்தாவது,

சித்திரகேதுமகிமைச்சருக்கம்.

வேறு.

கொஞ்சுதலையுடையமின்னார்க்கன்புபூண்டுகொடுமைதலைக்கொண்டுசெற்றுங்குழைவிலாமல், விஞ்சுதலையுடையநெஞ்சேவிளம்பக்கேளாய் விமலர்பதத்தன்புசற்றுமேவிலாயே, மஞ்சுதலையுடையநெடுமாடவீதிமணியாரூர்வீதிவிடங்கேசன்பாதத், தஞ்சுதலையுடையபத்திபெற்றதாலேயாடரவம்பெற்றபேறார்பெற்றாரே. (௧)

மறையுணர்யாக்கினவற்கிமுனிவன்சொல்வான்மாதவர்சொல்வினவுமந்த்ரவடிவரெல்லா, முறையுடன்கேட்டுளமகிழ்ந்துசிவன்பாற் பத்திமுதிர்ந்துபூசனைபுரியமுயற்சியானு, ரறைபுனலினாடிபணிவெண்ணீறுருடியங்கமெங்கும்புண்டரங்களணிந்துமேலா, மிறைவர்திருக்கண்மணிமாலிகையும்பூண்டேயினியவுபகரணவகையாவுமெண்ணி. [௨]

வில்வமாயிரந்தொட்டுக்கமலநூறுவிளங்குமிதழ்முளரிநெய்தன்மிக்கசாதி, மல்லிகைவெள்ளெருக்கலரிதும்பைமத்தைமந்தாரைகொழுந்துமாதவிமென்§கைதை, சொல்லியவிம்மலர்க்குவையுந்தொடையுமாட்டுந்தூயதிரவியமும்விண்ணோர்சுதையும்பூணு, மெல்லியவெண்பட்டாரமிரத்நக்காம்பின்விளங்குசாமரங்கவிகையாவுங்கொண்டே. (௩)

§ கைதை-சாபத்தினால்விலக்கப்பட்டது.

மஞ்சனங்களாட்டிநைவேதனத்தின்வர்க்கமன்னுசோடசமாகும்வ
ரிசையாவு,நெஞ்சுமகிழ்பத்தியுடன்மூன்றுபோதுநிமலலிங்கத்தருச்சனை
செய்நியதியாற்றித், தஞ்சமெனவீழ்ந்திறைஞ்சிக்கண்ணீராடுந்தடமார்
பினுடனின்றானந்தமாடி, யெஞ்சலிலஞ்சலிபுரிந்துபுளகங்கூரவினிதுரு
ஸ்தோத்திரங்களிசைக்கின்றாரால். (௪)

கருணைவெள்ளமேகாமதகனுவச்ராக்கதிர்விடுமாமணிமாலைபூண்ட
மார்பா, மருமலர்ப்பூங்குழல்பாகாமயக்கமின்றிவணங்குவார்சனனமரண
ங்கடீர்ப்பா, யுரிமைபெறுமுனதிலிங்கபூசையாற்று முண்மைபெறுபத்தி
யெமக்குதவவேண்டு, மருமைபெறுநாதவுன்னையடைந்துளோம்யாமா
தலாலெமதிடத்திலருள்செய்வாயே. (௫)

உனதுகாதைகள்கேட்கிற்றுயர்வாராதாலுற்றதனைப்பாராட்டுகிற்றி
லோமாற், பனகபூடணயாமுன்னடிமைமெய்யேபார்க்கிலுனதருட்குப்
பாத்திரமார்சொல்லாய், தனதுகாதலினிருப்பமேலாங்கற்பிற்றையறுயர்
கூர்வதுண்டோதம்பிரானின், கனதைபெறுந்தயையெங்கேயதனாலெய்
துங்கதியெங்கேயாங்களெய்துங்காலமெங்கே. (௬)

உமைகணவாவுனதிலிங்கபூசைவில்வத்துறுதளிர்கண்முதலியகொ
ண்டாற்றிலோமா,லமையுமொருகணமேனுமுள்றனுமமரசிவசங்கரவெ
ன்றேயாற்றிலோமாற், சமையுமினியாதுசெய்வோங்காவாய்நீநெந்தயாநி
தியேகன்மநுறுதிகங்களின்றி,யிமையளவுமுனைப்பூசிப்பதற்கியாங்களெ
ங்கேபொல்லாக்குணந்தீர்த்திரட்சிப்பாயே. (௭)

எங்கட்கிந்திரன்முதலோர்பதபோகங்கள்யாகதவயோகதானத்தி
னின்ப, மங்குறுவதவைவேண்டாவுன்றாட்போதின்வண்டெனவெம்மித
யமுறவழங்கல்வேண்டும்; பொங்குற்றவுனதுகதையாகும்வாரிப்புத்தமு
தமுணவேண்டுமுனதுபூசை, தங்குற்றவிளையாட்டிற்காலம்போக்கத்தந்
தருளியெமையாட்கொண்டருளுவாயே.. (௮)

சரணமெனவடைந்தோர்க்குவச்சிராங்கிதானாகும்பராபராமூன்ற
நாகு, மரணமதுபொடித்தவெங்கள்குலத்தின்றேவேவையவுனைநினைப்
போம்வெள்விடையினுற்ற, கிரணமுறுதுவசத்தாய்முராரிபூசைக்கிரு
பைநிதியுன்காதைகேட்பதல்லான், மரணமுறுந்தேவர்கதைகேளோமெ
ம்மைவழியடிமையென்றுசற்றேமதித்திடாயே. (௯)

மகதேசவீரேசவிசுவநாதவரந்தரும்போதருடியதுவரையும்யாங்க,ள
கமேவநினதுபதபூசைநீங்காதமைந்திடவே வேண்டுநினதன்பரோடுஞ்,
சகவாசம்பத்திக்குவித்தாம்வில்வத்தளிர்முதற்பூசைப் பொருள்கணிலம
தாகு, மிகும்வயிராக்கியமுழவுதொழிலாமின்னமேவிடின்முத்திப்பயிரு
ம்விளையுந்தானே. (௰)

இருபெருவெவ்வினையும்புரத்தல்செய்வாயெங்குறைநிறைந்துறையுமுனைக்
கெவ்வண்டத்தி,லுதவிடாப்பொருளுண்டோகொடுக்கத்தக்கவுனையடை
ந்தவெமக்கருளாதிருந்தலென்றோ, வதிகமாங்கருணைவாரிதியென்றோ
லையனைசரணெனவந்தடைந்துளோரை, த்திபாகபூரப்பதுண்மையா
மேநின்கருணையெமைக்குறித்துவந்திடாதோ. [௧௧]

எழுந்தருளிவந்தெமக்கேயருளவொட்டாவெமதுதலையெழுத்தை
யுனதிணைப்பொற்றாளா, லழித்திடவேபுரிந்துவந்தேயருள்வேண்டுமென்
றுவித்தியாமூர்த்தியவர்களெல்லா, மொழிந்துதோத்திரம்புரியுமளவிலெ
ம்மான்முதுமறையோனாகியவர்முன்னர்நின்றே, யொழிந்திடாதுரைப்ப
டிசெய்வீர்நும்மெண்ணமுறுவீரென்றுரைத்துத்திரோதானஞ்செய்தான்

மறைந்தவுடன்வித்தியாமூர்த்தியர்களெல்லாமனத்தில்வெருள்கொ
ண்டொருவர்முறிபோர்வந்தா, ரறைந்திடிலங்கவர்சிவனேயாகவேண்டு
மறியாமற்போயினுமவர்பொற்றாளிற், சிறந்திடுவில்வத்தளிராலருச்சித்
தேத்திச்சேவைசெயப்பாக்கியங்கள்பெற்றிலோமே, யுறைந்தவிந்தத்து
க்கசெனமஞ்சாம்பராகவுறவேண்டுமெனத்துயரமுறுகின்றாரால். [௧௩]

பரமனார்பதகமலபூசைசெய்வோர்பங்கயக்கண்ணன்கண்ணன்றனை
க்குமேலாய், வரமுறுமங்கவர்களால்வந்தித்தேத்தவள்ளலாரானந்தவயி
க்கஞ்சேர்ந்தே, திரமுறுசென்மத்திலுறுமினைப்புத்தீர்வார்தேவரியாவர்க
ளுக்குமதியொணாத, வரனமக்கேயெளிவந்துகாட்சிதந்தானறியாமலிரு
ந்துளோமறைந்துளானே. [௧௪]

தனக்குடங்கையுறப்பெற்றோன்விடுத்தவாபோற்சங்கரனையறியாம
லிகழ்ந்துளோமே, நினைத்திருந்தோமிடைவிடாதெதிர்ந்தபோதுகெட்டு
ரமதிகேடுவந்ததாலோ, மனத்தினியவுமைதழுவக்குழைந்தான்றன்னை
மாமறையுந்தெரிவரியவள்ளலானை, யனத்தனெனுமவன்றனையறியாதா
னையாரறிந்துபூசிக்கப்பெறுவர்தாமே. (௧௫)

மற்றவன்றன்வித்தையிலன்றபோகுணத்தான்மன்னுமாயிரவய
த்திணுலகமெல்லா, மற்றிடச்செய்தண்டகோடிகளியாவுமாகமுறக்காய்த்
தவுறுமரம்போனிற்பான், பற்றுமதின்பலத்திலுறுங்கொதுகுபோலப்ப
ங்கயன்மாலிந்திரனைமுதலபல்லோர், முற்றுவகண்டுமைமைப்பார்த்தண்
ணல்சற்றேமுறுவலித்தாமதலைபெவர்முன்னற்பாலார். (௧௬)

நமமாயையிரசதமாங்குணத்தைச்சார்ந்தேசாப்பவினையக்கலந்துபி
ரபஞ்சமெல்லா, மமைவுறச்செய்தேசாத்துவிதத்தினிலையாங்கவர்ந்தைத்
காத்தளிக்குமமலனன்றே, மிமிடமிவைநருமிதமட்டிலாதநிதன்மை
யுடையனுருணரப்பாலா, ரிமையனவிணுலகமெல்லாம்படைத்தலாலெம்
மற்கொருபேர்பவனெனவேயிசைத்துளானே. (௧௭)

அவ்வுலகிலாமழிக்குந்தன்மையாலேபரனெனப்பேர்பெற்றுளா னேயன்றன்னே, யிவ்விடைநாங்கண்டோந்திவினையினுலேயெழுமதி வாயவம்போயிருந்துளோமே, கவ்வையுறப்பண்ணியநந்தலையில்வேதன் கைபெழுத்தைச்சுடவேண்டுமெயக்கமோக,மெய்வகையாவொருகணந்தா னீங்குமாகிலுமைபாகன்றிருவடியைக்காணலாமே. (கஅ)

எந்தவகையாகினுமேமோகந்திரவெண்ணிலான்பாபப்ருப்பதத்தி னுலே, நந்துறுவான்காலங்கடொறுமேபூசைநண்ணுவான்காலபாகனுகி லானு, லந்திபகல்பூசைசெய்பார்நமதுபுந்தியாகமுமுற்றனபோதும்போ துமன்றே, முந்துசிவன்பிரசன்னமானபோதின்முற்றுதபொருளெவை யுமுற்றுந்தானே. (கசு)

சிந்தனைசெய்தேசிவனைப்பூசைசெய்வோன்றேவர்களுமுனிவர்களு ம்வணங்கத்தக்கோன், முந்துமவனெருவருக்குமினைத்தல்செய்யான்மு னைத்தபூரணமானசரற்காலத்தி, லிந்துவன்னசிவனேதற்பரமென்றோர்ந் தேயிறைபவனைப்பூசிப்போனெங்கேயானும், வந்தொருவனுள்னுகிலவ னேசெல்வன்மற்றவன்றுனெய்தாதபொருளுமுண்டோ. (உo)

மற்றவனுக்கொப்பவர்யார்சிவனேநாதன்மன்னியலிலையைநினைக்க ச்சித்தசுத்தி, யுற்றிடுமென்றறிந்திரவும்பகலுமபூசையுவந்துசெய்துசொ ல்வதெல்லாமவன்றன்காதை,முற்றுசெபமெல்லாமஞ்செழுத்தேயின்ன முற்றினேன்பெரியனெனமந்த்ரமேலோர், குற்றமறப்புகன்றரியசைவசி லங்குறித்திருந்தாரெனவேதன்கூறினுல். (உக)

உண்மையுரையிவைகேட்டசித்ரகேது வரியமனைவியர்மைந்தர்கி ளைஞரோடு,திண்மைபெறுஞ்சிவபூசைப்பிரியனுனன்சிந்தனைவேறியற் றிடான்சிவனைக்காணும், வண்மையினுனிறைமதியக்காட்சிகண்டமறிக டல்போன்மகிழ்வுறுவான்மைந்தர்மாத, ரெண்மருவுகிளைஞர்சிவபூசை செய்யுமியற்கைகண்டேபத்தரிவரெனக்காண்பானுல். (உஉ)

அவனதுசெல்வங்களெல்லாமண்ணலார்க்குமரனடியார்தமக்குமே யாகையாலே, யுவகையுறுபாக்கியங்களதுவேயாகுமுற்றவது மேன்மே லுமோங்கிச்செல்லு, மெவனேனுஞ்செல்வமுற்றோன்சிவனேசர்க்கே யீந்துமகிழ்ந்திமெவனேயின்பம்பெற்றோன், றவமேவுஞ்சனககேள்சை வசீலஞ்சார்ந்துசிவநாமசிந்தனையுஞ்சார்ந்தே. (உங)

சங்கரலிங்கத்திலொருவில்வமேனுஞ்சாத்திபருச்சித்தேதத்திக்கூத் துமாடு, மங்கவனேபிரளயகாலத்திலுற்றவரும்பயமுநீங்கிடுவன்றேவர் யாரு, மிங்கறையுமியாமுமேவணங்கத்தக்கோனிறைவனன்பன்சித்திர கேதுவையெந்நாளு, மங்குலுறும்வானவருமணங்கனுரும்வந்துதினங்க ண்டிறைஞ்சியேகுவாரால். (உச)

ஆங்கவன்றன்பாங்கிலுறைமாதர்மைந்தரனைவோருஞ்சைவசீலத் தாரி யோங்குசிவநாமகீர்த்தனங்கள்செப்வாருறுவிரதபூசையிற்கால

ங்கள்மேபாக்கு, மிங்கிவையெல்லாமுணர்ந்தேயரசனுமனையெய்தினன்பாக்கியமென்றேயுறுதிபூண்டான், நீங்கிலவன்வாழ்மனையேகயிலைபாகச்சிவன்றேவியுடன்மகிழ்ந்தேயுறைவன்றானே. (௨௫)

புரவலனங்கவன்கீர்த்திக்களவையுண்டோபொருந்துமவன்சைவசீலங்கடம்மைப், பரவரியசிவனேசர்க்களக்கொணாதாற்பத்திபெறுமவன்செயலைநினைத்துளோர்க, டிரமுறுசித்தியாவும்பெறுவரென்றேசெப்புமிவ்வாறரன்பூசைசெய்துளோர்பால், வரமுறுகூற்றுவனுருவமாதிமாலைவந்திறைஞ்சிச்சாந்தகுணம்பெறுவன்மாதோ. (௨௬)

அரன்பூசையிற்காலம்போக்குவோனேயம்புவியிற்புனிதனவனுயன்றானே, புரமுறுமிப்பத்திபெறுஞ்சித்ரகேதாமுண்மைவேந்தனுக்குநிதிக்குரியகோமான், திரமுளசெல்வங்களெலாஞ்சொரிவன்வேந்தன்சிவபூசைத்தினவரிசைச்சிறப்புச்செய்வான், பரவுறுமங்கவன்மாலைப்பூசைதன்னிற்பண்ணவர்விண்ணவர்பரிசாரகருஞ்சூழ்வார். (௨௭)

வனத்திலுளவிலங்குபுட்கடருக்கள்யாவும்வந்திறைஞ்சியருச்சித்தானந்தமாடு, மனைத்துலகிலுள்ளோருமரசன்பூசையதிசயங்கண்டாலயத்தில்வந்துகூடி, யினத்திலுடனிரவுபகலுணரார்சூழ்ந்தேயேத்திவொர்மாதர்மைந்தரிளையோர்தாமுங், கனத்தகிளைகன்னியர்கண்ஞானபூசைகருத்திருத்தியருத்தியொடுகிறைகுவரால். (௨௮)

அம்பிகைபாகற்கன்பர்க்கதிகனானவரசனரசுரிமைபூண்டளித்தலாலே, சம்புவின்றன்பத்தியந்தத்தரணிபாவுந்தழைத்துநிறைந்துளதளவில்கீர்த்தியோடும், வம்பவிழ்தார்புனைசித்ரகேதுவென்னுமன்னன்விளங்கினனென்றேசனகன்கேட்ப, விம்பர்புகழ்தவயோகியானஞானயாக்கினவற்கிம்முனிவனிசைத்தானன்றே. [௨௯]

இருபத்தைந்தாவதுசித்திரகேதுமகிமைச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௮௮௨.

இருபத்தாறாவது,

சேடன்வந்தசருக்கம்.

வேறு.

பொன்னைநேர்சடையாயுமைபாகனேபுற்றிடங்கொண்டருள்விடைப்பாகனே, யென்னையாளவுன்றன்கமலாலயத்தெல்லைதன்னிற்சனனமுந்தந்துளாய், தன்னைநேருன்கனகசபையினிற்றாண்டவத்திறங்காணவுந்தந்துளாய், மன்னுகாசியில்வாசமுந்தந்துநின்மலர்ப்பொற்றாணிழலுந்தரவேண்டுமே. [௧]

ஞானயாக்கினவற்கிமகாமுனிகவிலுவான்புகழ்ச்சித்திரகேதுவா,மா னான்னவனாட்டிலுள்ளோரெலாம்வள்ளலார்சிவவித்தையிற்சுத்தரா, யா

னம்மென்மைப்பெறப்புவியாண்டுதன்னரியபூசைபுரிந்திருந்தானவன்.ஞாளித்தபலவெகுமானங்கொண்டேகினனயன்றன்னுடைத்தானமே. [௨]

அரசன்பத்திபெருகவடிக்கடியண்ணல்பூசனையாற்றியிருந்துளா,னுரைசெய்வேந்தன்றரிசனம்வேண்டியேபுரகமேவந்தனொருசைவன் வேடமாய்த், தரையில்வந்துவணங்கிப்புகழ்ந்துளான்றம்பிரானடியானிவனென்றுபர், வரைசெய்தோளவனீயெந்தநாடிங்குவந்ததேதுன்குலமேது தானென்பான். [௩]

சிலமேதுன்குலமனையாண்மைந்தர்செய்கையேதுதினஞ்செய்கருமமே, னேலவேபுகல்வாயென்றுரைத்தலுமெழில்கொண்மானிடவேடத்தினெய்தினோன், பாலலோசனனைச்சிந்தைசெய்தனன்பாத்திபன்றனைநோக்கிப்பகர்வனு,லேலும்பாதலந்தன்னிலராக்குலத்தெய்தினேன்சிவபூசையியற்றுவேன். [௪]

மாதர்மைந்தருமப்படியேசிவன்வந்தனைத்தொழில்சற்றும்வழுவலார், காதலாலரன்பூசையல்லான்மற்றைக்கடவுளோரைக்கருத்திலிருத்திலோ,மோதுதேவர்களிற்சிவஞானத்தையுணர்கிலார்தம்பெயருமுரைக்கிலோ, மேதிலாரெனுந்தேவரைப்பூசிக்கவெண்ணுகின்றவரெங்குலத்தில்லையே. (௫)

பூதிபூசிடுஞ்சைவனேயேகண்டாற்பொருந்தியேயவனோடுரையாடுவோஞ், சோதிபூசைசெய்பாரிடத்தெத்தனைசுகமுற்றாலுமவரிடந்துன்னலோ, மாதியார்க்கணிசந்தனநீறுதூசணிமலர்த்தொடைமெய்யிலணிகுவோ, மாதர்பூப்பறிந்தேபுணருஞ்சுகம்வரதனுக்கற்பிதஞ்செய்குவோமரோ. (௬)

வெள்ளைநீறுடன்கண்மணிதாங்கிவிரேசற்போற்றியமெல்லியற்சேர்குவோ, புள்ளுமற்றிதில்லாமடமாதரோடுறவுசெய்திலம்பார்த்துரையாயாடிலேம், வள்ளலார்சைவசிலபுராணங்கண்மன்னுகின்றவிரதங்கள்கேட்பதுந், தெள்ளுகின்றதுமல்லாதபுன்மொழிசிந்தைசெய்வதுஞ்சொல்வதுமில்லையே. [௭]

பூகநாதன்றரிசனத்தாயுடான்போக்குவோம்பிணிகாலபயமின்று, லோதுமெங்கண்மனைகளெலாஞ்சைவ வுத்தமத்தவரேநிறைந்துற்றுளார், நாதனந்தியு டன்பிங்கிநடியுநண்ணுவார்வில்வநற்பருத்துன்னுமா, லாதிபாரிலிங்கமேகசநுறைந்திமொலயங்களொப்பாகவிளங்குமே. [௮]

கூவிளத்தருநீழல்கடோறுமேகுலவிலிங்கநிறைந்துறுமவ்விடை, மேவிப்பூசித்துநாமங்கள்பாடுவோமிக்ககாதைகள் கேட்கவிரும்புவோ, மோவிலாதவணங்கம்பிதக்கணமுற்றமேதாத்திரமஞ்செழுத்தோதுத, ஞவினற்சொல்லும்வார்த்தையெல்லாஞ்சிவ நாமமேசொலிக்காலங்கள்போக்குவோம். [௯]

சாற்றுமெங்கடக்காவாசங்கராசம்புவேயுமைபாகவீசனென், றேற்றமேதார்சிவநாமவமிர்தமேயிச்சைகொண்டிடுமற்றொன்றிலிச்சியா, வாற்றுபூசையில்வில்வத்தளிர்கொடேயருச்சித்தேதந்துமிலிங்கதரிசனம்,போற்றிநோக்குதலன்றியெமதுகண்புறத்திலொன்றையு நோக்கல்புரியுமோ.

கொன்றைவேணியர்க்குவில்வக்கொழுந்தளிர்சாத்திப்பூசை
கன்றுபசாரத்தாற்றிடனமுஞ்செய்துநாளும். (௬௫)

நருமதைக்கரைக்கண்வாழ்வோர்கானிலத்தோர்கட்கெல்லாந்
திருமிகுமுடியிற்சூடாமணியெனுஞ்செல்வரென்றே
பருதிசொற்கேட்டபன்மாவதிமிகப்பரிந்தேயீசன்
றருகதையிரவிநீயேயிரவெலாஞ்சாற்றுயென்றாள். (௬௬)

அன்னவாறுரைத்திருந்தேகாலையிலகன்றான்வெய்யோ
னன்னதிமுழ்கிப்பூதிகண்டிகைகபந்தணிந்தே
மின்னனுள்பூசையாற்றவிரும்பினள்கோயிலுற்று
முன்னியபூப்புத்தோன்றத்துயரொடுமனைக்கட்சேர்ந்தாள். (௬௫)

போயினுள்பூசையாசைபொருந்தினண்மனத்தாற்செய்வா
ளாயினுணன்குநாளுமயின்றிலாளைந்தாநாளிற்
றூயநீர்மூழ்கிக்கோயிறுன்னியைந்தினத்துமாற்று
மேயபூசனைகளெல்லாமொருங்குடன்விதியிற்செய்தாள். (௬௬)

அந்திப்பூசனையுமாற்றியாங்குற்றுளந்தப்போதில்
வந்துற்றான்பரிதிகண்டான்வணங்கினடந்தைதாயு
முந்துற்றகுருவுநீயேயருச்சனைமுடங்கினேர்க்குப்
பந்தித்தவிதிகளேதுகதியேதுபகர்தியென்றாள். [௬எ]

வினவிடவெய்யோன்சொல்வான்விளங்கிழாய்விமலன்பூசை
தனையிழந்துய்ந்தாருண்டோசஞ்சிவிதன்னைநீத்துப்
பினையொருமருந்தாலாவிபிழைத்தவருளரேயுண்டா
கினைவிலாமூடர்நீப்பரவர்களேமரநிகர்ப்பார். (௬அ)

கடவுளர்ச்சனைவிடுத்தறன்னினுங்கல்லிலேதன்
முடியினைமோதிச்சாதன்மொழியினன்றாங்கோகத்தி
கொடியதோர்பிரமகத்திகுருபன்னிகலங்களுண்ட
லொடிவில்பூசனைவிடுத்தோன்பவத்தினுக்கொப்புறாவே. (௬௯)

சங்கரன்பூசைதன்னுலெளிதறஞ்சாருமன்றே
யங்கதுசார்கலார்துற்சனரவராகுவாராற்
றிங்கள்வேணியனைப்போற்றவொட்டாசெய்பவங்களென்ப
புங்கவன்றனைச்சிந்தித்தாற்போகுமப்புன்மைதானே. (௭௦)

பவவினைகற்பகாலஞ்செய்யினும்பவமின்றாமாற்
சிவனருச்சனைவிட்டோனைத்தெரிசிக்கிற்பயமக்கே

யுவமையிலானைபோர்காலருச்சிக்கிலுவரியான
புவியினிற்பிறப்புநீங்கும்பவவெற்பும்பொடியாமன்றே. [௫௧]

நன்மைவர்த்தனைபெற்றோனையருச்சித்துநலத்தைச்சேர்வான்
புன்மையாலிழந்துளோனேபதிதன்புண்ணியன்பூசிப்போன்
றொன்மைசேர்புதுமைக்காதையிதிலொன்றுசொல்வங்கேளாய்
பன்மைசேர்பாவநீங்குமிவைகேட்கும்பரிவினோர்க்கே. (௫௨)

வேறு.

சாரலோங்குமிமயத்தடவரைச்சாரணனொருவன்சஞ்சரித்துளான்
மாரனார்வசத்தாற்றன்னிளநலமாதினோடுமயங்கிமுயங்குவான்
நீரவேளைவென்றானையருச்சியான்சிவலிங்கந்தெரிசித்திலன்கூவிள
வாரமீதினுஞ்சேர்ந்திலன்றொண்டரைமருவிலானவரோடுறவாகிலான்.

சுரதலீலையரிவைதன்றோணலந்தோயுமின்பந்தனையேசுகானந்த [லான்
விரதமாக்கொண்டுகாலங்கள்போக்குவான் மின்னனாளையொருகணநீங்க
சரதமாஞ்சிவபூசைசிந்தித்திடாச்சாரணன்னொருநாளவ்வனத்தினில்
வரதனார்மகிழ்கூவிளநீழலின்மாலைவேளையின்மாதொடும்வந்துற்றான்.[ ]

ஆங்குவந்தனர்தொண்டரொருவர்தாமந்திவேளையின்மாப்பிரதோடத்திற், பாங்கிலாத்துட்டப்பாவியவன்றனைப்பார்த்தனர்மடப்பாவையோடுற்றுளா,னீங்குவந்தவெனைக்கண்டுநாணமேயெய்ந்திலான்பயமுஞ்சற்றுமெய்திலான், றீங்குசேரிந்தப்பாவியைக்காணயான்செய்ததீவினையென்னெனச்சிந்திப்பார். [௫௫]

போவதெங்கினியிந்தவில்வத்தின்கீழ்ப்பூவைபங்கினிலிங்கமொன்றேய்ந்ததே, மேவியேகொய்தருச்சனைசெய்திடமிக்கமென்றளிருந்தழைந்துற்றதே, யாவலாயபிடேகஞ்செயக்கங்கையாற்றுமஞ்சனமும்மருகுற்றதே, தாவில்சானுவிக்கூலத்தருச்சனைசங்கரர்க்குப்பிரியமதாகுமே. [ ]

இந்தவில்வமந்தாகினிவீசுகாற்றேய்ந்தவாரித்திவலையினிக்கவே, முந்துபூந்தளிர்வாடாதிருந்ததிம்மூலத்தேதமறைமூலத்தைதப்பூசித்தா, லந்தமற்றிடுமங்களமாகுமென்னதிட்டமெப்படிப்போவதறிந்திலேன், வெந்துபர்ப்பவமுன்னமென்செய்துளேன்விக்கினஞ்சிவபூசைக்குமேவவே.

இனியதோர்பரன்பூசைக்குவிக்கினமெங்கிருந்துவந்தெய்தியதென்செய்வேன், றனிவருந்தலைத்தன்மங்கட்குத்தடைசாருமென்பர்சிவார்ச்சனைலாபந்தா, னனிவரற்கிவர்நீங்கிடவேண்டுமானல்லகாலநமக்குவந்தெய்திடிற், பனிவருந்திங்கள்வேணியன்பூசனைப்பாக்கியங்கள்பலித்திடுமென்பவே. [௫௮]

இந்தவேளையிற்பூசைக்குவிக்கினமெழுந்திடும்விதியைச்சுடவேண்டுமான்,மூந்துபுண்ணியமெய்திலிக்காலத்தின்முதல்வன்பூசனைவாய்த்திடு

மையாக்குமோ, பந்தமற்றிடுபாசங்களிங்கிடும்பாக்கியஞ்செய்திலாவெனக்கெய்துமோ, வந்தமற்றதருமத்தினோர்கட்கேயந்திப்பூசைபுரியக்கிடைக்குமே. (௫௯)

சனனந்தோறும்பவங்களிழைத்துளார்சாபங்காலத்தருச்சனைசிந்தியார்,மனமயக்குறுபாவத்தரிவையர்மலநிறைந்திடுபாண்டவுடலுக்கே,யினிதினிச்சைகொள்வோரந்திவேளையி லீசன்பூசைக்கெங்கேவிருப்பெய்துவார், புனிதன்பூசையமிர்தமுண்டுய்ந்திடார்பூவைபோகவிடந்துய்த்துமாய்வரே. [௬௦]

அரியபுண்ணியமாமஞ்சனத்தினலண்ணல்பூசைநிதானங்கைக்கொள்ளலா, முரியபூசனைமஞ்சனமின்றியேயோதுமுத்திநிதியங்கிடைத்திடா, தெரிதரும்விசுவேசனருச்சனைசெய்யவிக்கினஞ்சேர்ந்தெப்பாவமோ,பிரியமாப்பிரதோடதரிசனம்பெற்றுளார்சன்மசாபல்யராவாரே.

அண்ணலார்சிவலிங்கதரிசனமருச்சனையொடுதோத்திரமாற்றலார்,கண்ணினோடுகைநாக்கிற்பயனென்னுமென்றுகாதல்செயன்பர்கவலுற்றே நண்ணிநின்றிடும்போதினிற்கூவிள நன்னிழற்கணுறைசாரணன்மகிழ், பெண்ணினல்லவள்காதலன்றன்னொடும்பேசுவாளந் தரத்தில்வந்தோமென்றே. [௬௨]

குளித்திடுந்தண்புனல்வத்திரமெங்கேகுளிருஞ்சந்தஞ்சுகந்ததாம்பூலங்க, டளிர்த்தபுட்பசயனம்பணிவகைசாரமா மன்னவர்க்கங்கடாமெங்கே, யளித்திடப்பெறுவார்தமைக்கண்டிலேனுமெனப்பகர்ந்தாளந்தப்போதினிற், களித்தசேடியர்நீகவலேலெனக்கைக்கொண்ட னன்னவையாவுங்கொணர்ந்துளார். (௬௩)

அந்திப்போதிற்கற்பூரச்சுடரமைத்தனைத்துந்தாங்கொடுவந்தவைகாட்டியே, யிந்தப்போதங்குமிங்குந்திரிந்ததாலின்றுபாணித்தவாபொறுப்பீரென்றார்,வந்துசாரணன்றன்வில்வமூலத்தில்வைத்தயாவையுநோக்கியம்மாதரைப், புந்தியால்வெகுண்டே தன்மனைவிக்குப்புகுந்தியாவையும்பார்த்துக்கொள்வாயென்றான். [௬௪]

என்றபோதிலுடனெழுந்தேயவளித்தனைப்பொழுதுந்தாழ்த்ததென்னென்றே, நின்றசேடியர்தங்களைக்கோபித்தேநிறைந்ததீபத்தொளிகள்பரப்பினள், சென்றுபார்த்தவையம்பமெனக்கொடேசெறுத்தம்மாதர்தம்மேல்வெறுப்பாலிவை,பொன்றுங்கொள்கிலேனென்றுகுடச்சலமுறுஞ்சலத்தோடிலிங்கத்திலூற்றினள். [௬௫]

கலவைச்சந்தனச்சேற்றையிறைத்தனள்கமழும்பூந்தொடைகைக்கொண்டெறிந்தனள், சலவைச்சேலைகளும்மணிப்பூண்களுஞ்சாந்தலிங்கத்தின்மேல்விழவீசினள், பலவகைச்[illegible]

ரத்தோடெடுத்துமுன்கொட்டினள், குலவுகின்றதன்செடியர்மேல்வைத்தகோபத்தான்முகங்குப்புற்றுவீழ்ந்துளாள். [௬௬]

கண்டசாரணனோடரனன்பருங்கையெறிந்துநகைத்திறும்பூதுற்றார், தொண்டனரவ்வவிலிங்கத்தின்முன்விழுந்தோகைதன்செயல்பார்த்தனர்சொல்வராற், கெண்டையங்கணிவளுறுங்கோபத்தாற்கிடைத்திடும்பொருள்யாவையுமேகொடே, யண்டர்நாயகனைப்பிரதோடத்திலரியபூசனையாற்றினளாமரோ. (௬எ)

சென்மந்தோறுமிவள்சிவபுண்ணியஞ்செய்திருந்தவளாமென்றுசிந்திப்பார், தன்மமேவுமரம்பைகொல்கந்தர்ப்பர்தையலாள்கொலிவடவந்தாளென்னோ, கன்மமாருருவாய்ந்தநுலோகசகாயத்தாலருள்செய்திடல்காணென்பார், வன்மவேனைவென்றரந்திப்பூசனைமாதிவட்குநன்றுவந்துவாய்த்ததே. [௬அ]

அருங்கற்பூரத்தின்றீபமமைத்தனளடவித்தீபவக்காணிற்கிவளுடல்கருங்குழற்செய்யவாயிவட்கண்டனன்சடியபாவங்கள் யாவையுங்கண்டிலேன், சுருங்குகின்றமருங்குறன்கோபமேசோதிபூசைக் குதவியெச்சூழ்ந்ததே,விரும்பிடும்பிரதோடதரிசனமேவினான்சென்மம்வீணெனலாகுமே. [௬௯]

பாவிதேகம்புவிக்கொருபாரமாம்பகருமாங்கவனைக்கண்டபோதிலே,பாவிவாங்கியமபடர்கொண்டுபோயடர்த்துரப்பிநரகினிற்றள்ளுவார், மேவுதூதர்கடுண்டிலிற்கோத்திடமென்றசைப்பொதி மீன்போற்றுடிப்பரே, தேவதேவனையேபிரதோடத்திற்செலபுட்பங் கொடுபூசனைசெய்துளோர். [எ௦]

வெய்யபாவக்கராவோடார்நிறைமிக்கசென்மக்கடற்கரையேறுவா, ரையராங்கவரைத்தரிசித்துளோரளவிலாத்துன்பந்தீர்ந்தின்பஞ்சேர்வரே, செய்யும்யாகதவயோகத்தாற்பயன்சேர்வதென்பிரதோடத்திற்பூசைபாற், பொய்யில்போகமெலாநுகர்ந்தேமுத்திபொருந்துவாரெனவன்பர்கொண்டாடினர். (எக)

முப்பதாவதுபற்மாவதிச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-ககசச.

பிருங்கியுத்தரச்சருக்கம்.

வேறு.

மல்லலுற்றிடுகாசியம்பலமதுரைசேதுமறைப்புன
நல்லஞானியர்சேர்குடந்தைநன்னகரருச்சுனபுரமுடன்
செல்லதீர்த்திகைமலையிற்செலவேவிகினத்திடுசிந்தையோ
ரல்லலுற்றபிறப்பிறப்பிலலைந்திடார்கதியடைவரே. [க]

சிலபாக்கினவற்கிமாமுனிசெப்புவான்சிவபத்தர்தா
மாலையாம்புரிபூசைவிக்கினமின்றிவாய்த்திடுமோவெனுச்
சாலநின்றுவிசாரமுற்றனர்கங்கையங்கரைசார்ந்திடு
மேலமுற்றிடுவில்வநற்றருவிதனையொப்பதுகண்டிலேம். [உ]

இங்கணுற்றவிலிங்கமொப்பொரிலிங்கமில்லையெனமகிழ்ந்
தங்கணுற்றனர்விக்கினஞ்செய்தவவர்கண்மேன்மிகுகோபமாத்
தங்குகின்றதோர்சாரணன்பணிதானியற்றியதாதியைப்
பொங்குகோபமொடேயழைத்திவைபுகலுகின்றனனென்பவே. [ங]

நிபரிந்தருள்போகபண்டமியாவுநேரிழையிங்கிவள்
கோபமுற்றனள்வாரிவாரியிச்சிலையின்மீதுகுவித்துளா
டாபமுற்றிடுபோதுவந்திலைதாமதித்தனைசாலவே
சோபமுற்றனளென்றுளான்சிவபத்தர்நின்றிவைசொல்லுவார். [ச]

இந்தலிங்கரைமுந்துகண்டிலனினிதுநான்றரிசித்திடில்
வந்தவிப்பிறவித்துயர்க்குள்வருந்திலேனின்றுகண்டிடத்
தந்தபுண்ணியமெவைகொலோபுருடார்த்தநான்கையுஞ்சார்ந்துளே
னிந்துவாரமொடின்றுதான்பிரயோதசித்தினமேய்ந்ததே. (ரு)

கூளிநற்பெயர்கொண்டுறுஞ்சிவநிசியெனுந்தினமானதி
லாளுமண்ணலருச்சனைக்கெனவந்தயான்றரிசித்தனன்
காளகண்டனையந்திவேளையிற்காணலாற்கட்டதுன்பம்போய்
நாளுநல்லருள்பெற்றிலேனிதுபுண்ணியத்தினினண்ணினேன். [சு]

எனக்குமுந்துளவறிவின்மிக்குளதிங்குவந்திடுமளவிலே
தனக்குநேரறுசைவரைத்தரிசனமடைந்திடுதன்மையோ
கனக்கும்யாகதவங்களால்வருகருமமன்றிதுவுண்மையே
புனற்கொழுஞ்சடையானையேந்துதிபோற்றுவேனுனைத்தாலுமே. (எ)

அர்ச்சனைப்பொருளொன்றிலேனுலகத்திலாசையழுந்தினேன்
சற்சனர்க்கருடம்பிரான்சிவசங்கராசந்த்ரசேகரா
பொற்சடைப்புனிதாவெனப்புகழ்வாயுனக்கதுபுனிதமே
சொற்சொலன்னதுயானெனச்சர்க்கரையாகநச்சுநிராமொடாறும். (அ)

அன்னதோர்சிவகாமமாமமிர்தத்தைநாளுமதிந்திடு
முன்னோரான்பெறமுன்னைமாதவமுற்றகோடியிற்பெற்றுளேன்
சொன்னயாகமதிற்புசித்திடுசோமபானபுசிப்பைவிட்
டென்னையாளுறுமீசனுமவினிப்பைநாடுதியென்றுமே. (கூ)

கண்களேகுருக்கத்திகூவிளஞ்சாத்தியேயலங்காரஞ்செ
யெண்கொளும்மிலிங்கேசரைத்தரிசிக்கப்புண்ணியமென்செய்தாய்
புண்கொளாமெலிவறியன்மின்னுறுபொற்பொருப்புறல்போற்கொள்வீர்
வண்கொண்மங்களமுரியதாமிதுமனைகண்மக்களின்வாய்த்ததே. [௧௦]

எனதுபுண்ணியமதனிலுற்றனிரிந்தியத்தினின்முதன்மைநீர்
தனதுநீரகசியமதொன்றுரைசாற்றுவேன்கனவதனிலு
மனகலிங்கரைநோக்குவீர்சிவனருகுநின்றுமிழற்செய்தே
தினமுமேதளிர்பலமுநல்குசெழுந்தருக்களும்புனிதமே. [௧௧]

பரமனுக்கொருகுடையெனத்தழைபயில்வுறும்பணைமேவிடுந்
தருமமுற்றிடுகூவிளத்தருமகிமையாவர்கள்சாற்றுவா
ரருமைசேர்பிரதோடபூசனையாற்றுமிங்கிவண்முத்திசேர்
பெருமைபெற்றனளிவளையான்றெரிசிக்கவென்னுளபெற்றியோ. (௧௨)

மங்கையேபிரதோடவேளையிலிங்கபூசனைவரிசையா
லங்கையாலரன்மகிழவாற்றினையெனவுரைத்திடுசைவர்தாஞ்
சங்கைதீர்தரவருகுசென்றுவணங்கியர்ச்சனைதான்செய்தே
செங்கணீர்வரத்தோத்திரஞ்செய்துதிருமுனின்றவப்போதிலே. (௧௩)

கயிலைவாழ்சிவனருள்செயக்கணநாதர்மிக்கபிருங்கிபொன்
சயிலமன்னவிமானமுங்கொடுசார்ந்துளார்வருதன்மைகண்
டயில்கொள்சக்கரவரிமுதற்பலதேவர்தாமுமடைந்துளா
ரெயிலெரித்தவிலிங்கவர்ச்சனைசெய்திருந்துழியெய்தினர். (௧௪)

கண்டுதொண்டொடிறைஞ்சியாச்சரியத்தொடுங்கணநாதரை
யண்டர்நோக்கினர்சொல்லுவார்சிவனர்ச்சனைக்குரியீர்கணீர்
விண்டிடுங்கிரிகாலமுந்தெரிவீரிவ்வில்வநிழற்குளே
பண்டரங்கனிலிங்கவர்ச்சனைபண்ணினோர்களியாவரே. (௧௫)

அவர்கள்புண்ணியமிவ்வளவென்னவளந்திடற்கரிதாகுமாற்
றவளநீற்றினன்மகிழ்தரும்பிரதோடபூசனைசாற்றுங்கா
லுவகையிட்டமெலாமெனப்படியுதவுந்தேனுகிகர்க்குமே
யிவணிலுற்றவிலிங்கபூசனைகண்டுமாமகிழ்வெய்தினேம். (௧௬)

குங்குமங்களபஞ்சுகந்தமலர்த்தொடைக்குளிர்பூசைகொண்
டிங்குமேவுமிலிங்கரைத்தரிசிக்கும்பாக்கியமெய்தினேந்
துங்கமாம்பிரதோடவேளையிற்சுகந்தசந்தனஞ்சாத்தினோர்
சங்கரன்கயிலைக்கணேமணிமானமேறினர்சார்குவார். [௧௭]

அந்தியின்னெவணிலிங்கசேவையையடையினும்பவமகலுமே
மூந்துகூவிளநீழலிற்பிரதோடவேளையின்முறைமையாற்
கந்தமேவுசுகந்தபூசைகொள்கடவுளைத்தரிசித்துளோர்க்
குந்துறும்பலன்யாவர்தேர்வரவ்வொருவனேயறையறிவனே. [௧௮]

பரமனைப்பிரதோடவேளையிற்பத்ரபுட்பபலங்கொடே
திரமுடன்பணிபவர்தமக்குயர்செல்வம்யாவையுமெய்துமே
வரமதாகுமிப்பூசையெண்ணறுதருமமுற்றவர்மருவுவார்
கருணையிந்தவிலிங்கமூர்த்தியைக்கண்டுகொண்பயனுற்றதே, (௧௯)

வேறு.

என்றுபுகன்றனர்தேவர்பிருங்கியெனுங்கணநாதரிதனைக்கேட்டே
துன்றுகடவுளர்தமைப்பார்த்துரைக்கின்றார்சொல்லரியசுகங்கணல்குங்
கன்றுமானேந்திதன்விநோதம்யாங்களுமின்றுகாணப்பெற்றேன்
சென்றிவளைக்கொணர்வருவீரெனவிறைவனேவவிவண்சேர்ந்துளோமே

சாரணனிங்கிவன்றீயோனிவணலம்வேட்டேதிரிவான்றனியேகாந்தஞ்
சேரவிங்ஙன்வந்தடைந்தான்போகார்த்தத்திரவியந்தான்சேடிமார்கள்
வாரமுடன்கொடுவருமதித்ததாற்கோபமுறுமதியளானு
ளிரமனமில்லாதாள்கணவனையும்வெகுண்டிடுவாள்யாவும்பாராள். (௨௧)

பாங்கிதான்கொடுவந்தபாறயிர்நெய்சற்கரைதேன்பழத்தின்சாரம்
வாங்கினுள்சிவலிங்கத்தூற்றினுள்சந்தனத்தைவாரிவீசித்
தேங்கமழ்பூந்தாமங்கள்சிதறினுடீங்கனியபூபவர்க்கங்
கோங்கிளமென்முலையன்னராசிகளுமெடுத்துமுன்னேகொட்டினளே.

அடங்காதகோபத்தாள்கண்ணீர்களோடவேயவனிமீது
முடங்காதுவணங்குவார்போல்வீழ்ந்தாளிவையெலாமுதல்வனுர்க்கே
திடங்காணும்பத்திபெறும்பிரதோடபூசையாச்சேர்ந்ததாலே
படங்காணுமபாம்பணிவான்பிரியமுற்றேயிவடன்பாற்பரிவுகூர்வான். []

விருத்தமுடனிவைசெய்தாடனக்குருகும்பெருமானுர்விரும்புகின்ற
கருத்தினுடன்பூசைசெய்வார்க்கருள்கதியையாரறிவார்கருடராச
னெருத்தில்வருமெருத்திலெழுந்தருள்பரமர்பிரதோடத்திதயமொத்தே
திருத்தினுமல்லாமலுமேசெய்யினுந்தம்பதங்கொடுத்தறிண்ணமாமே.()

கோபத்தாலிவளெறிந்தபொருளெல்லாந்தம்பூசையாகக்கொண்டே
பாபத்தைத்தீர்த்தளித்தான்பகவனெவராகிலுமேபத்தியோடு
மாபத்திற்காத்தளிக்குமண்ணல்பரமெனப்பூசையாற்றுவாரேற்
றுபத்தையுறுஞ்சனனந்தீர்த்துவேண்டியதெல்லாந்தருவன்றனே. ()

வாலனுகிலுமுதியோனுகிலும்பத்தியிற்பூசைவாய்க்கச்செய்யிற்
காலவேதோழமைகொள்குபேரனெனமைந்தனெனத்தயவுகூர்வான்

ஞாலமீதுமைகார்தன்பூசைசெயவேண்டுமெனநாடுவோர்க்கே
பாலலோசனனிசமும்பரமுந்தந்தாள்வனெனப்பகரும்வேதம். (உகூ)

பரமசிவனிலிங்கத்திற்பிரசன்னமாவதுபோற்பலவாயுள்ள
திரமுறுமூர்த்திகளிடத்திற்கண்டிலேஞ்சிவலிங் கத்தியற்றும்பூசை
யுரமுறுமுத்தியிற்சேருஞ்சாதனமாஞ்சிவலிங்கத் துதித்தான்றே
பிரமன்மாலிந்திரனேமுதற்றேவர்சகத்திலுள்ளோர்பிறருந்தானே. [ ]

உயர்தருங்காசியிலிருந்தேயுமைவிசுவேசனைப்பூசையுஞற்றுகின்றோ
ரயர்விலுருத்திரகணங்கட்கதிபதிகளாய்விடுவரகிலமூன்றிற்
கயல்விழிபாகன்றொண்டர்க்கடையாதபொருளுளவோகடவுள்பத்திச்
செபலரிதாமுழுதும்வருந்தேவசிகாமணிபூசைசெய்துளோர்க்கே.(உஅ)

திறல்பெருகுமகத்தானதேவசிந்தாமணிகையிற்சேர்ந்தோர்பின்னு
முறலாயிற்றெனவற்பக்காசுகொள்வரோபூசையுஞற்றியுற்றோர்
பெயின்மற்றையின்பமுறார்சிவபதமேபெறுவரெனப்பிருங்கிகூற [ா
விறல்பெறுந்தேவர்கள்வினவிவீழ்ந்துகிடந்தவடனையேவியந்துபார்த்தா

விறுகணாதராம்பிருங்கிகைப்பூதியிலவடன்மேனியெங்குந்
தேறிடவேதைவந்துபுனிதமுறச்செய்துமின்னேதெரிவைபாகன்
கூறிடவந்துனையழைத்துக்கொடுபோகமணிமானங்கொண்டுபோந்தோ
மேறுதிவந்தெனக்கேளாளனந்தராசிருங்கனுவினிதுகாண்பாள். (௩௦)

உன்னதமாஞ்சிவலிங்கமொன்றுறக்கண்டாள்பூதியுருத்திராக்க
நன்னயமாப்புனைந்துகொண்டேயைந்தமிர்தமுதலானநற்பதார்த்தந் [ன்
துன்னுறுமஞ்சனமாட்டித்தூயவெண்பட்டாடையுயர்சுடர்பொற்பூணு
மன்னுகலவைச்சந்தமணிமாலையுடன்கண்டிவடமுஞ்சாத்தி. [௩௧]

கூவிளத்தின்றளிர்சுகந்தமாலையுங்கொண்டருச்சித்தேகுறைவிலாத
நாவிலினித்திடுநானுவிதமானதிவ்வியநல்லமிர்தராசி
தாவிலபூபங்கனிகள்பானீயமுதலனைவேதனங்கள்செய்தே
யோவறுதூபந்தீபஞ்சோடசமாமுபசாரமுதவிப்பின்னர். [௩௨]

பணிந்துபிரதக்கணதோத்திரநடனகானந்தான்பண்ணும்வேலை
திணிந்ததிடபத்திபெறுமொருசைவாவ்விடத்திற்சிவபூசைக்கே
தணிந்திடுமாறுங்கண்டாளெங்குவந்தீரெங்கேகத்தொடங்குகின்றீ
ரணிந்திடுமிவ்விடத்துறையவேண்டுமேலுறைந்திடுதிரையரென்பாள்.( )

சங்கரன்பூசைப்பொருள்கள்வேண்டியநான்கொடுவந்தேன்றருகின்றே
லங்கதுகொண்டேயானைநன்றாகப்பூசிப்பீரையரே [ஞ
ரிங்குமக்கிச்சைப்படியேகைக்கொள்வீர்மறைச்சைவரெய்தப்பெற்றுந்
றுங்கமாமவர்தமக்கென்றிரவியமெல்லாங்கொடுக்கத்துணிந்துளேனே,

உற்றவென்பாக்கியத்தில்வந்தீர்நும்போலப்பாத்திரமூவுலகுங்காணேன்
விற்றருமாரக்கோவையங்கதங்குண்டலமகுடம்வினைதப்பூண்கள்

...ற்றவானிரைசெம்பொன்மாளிகையுந் தருகின்றேன்பெரியசேகீர
...ந்திரைவபாவையும்பரிக்கில்யான்புளிதமுற்றபெறுவாழ்வுந்தேனே. ()

...த்திகொளுமந்திரந்தானிகழுளவவைகளைநான்போற்றல்செய்யே
னெக்கைதயார்சைவதித்தையஞ்செழுத்தாற்பூசிக்கவிச்சிக்கின்றே
னந்தமனுவுபதேசம்புரிந்திடுவீரதுபவங்களகற்றுமென்று
மந்திரங்கடமக்கெல்லாமரசென்றுங்கேட்டுளத்தின்மகிழ்வுற்றேனே. ()

இப்போதுபுனிதமாம்புண்ணியகாலமிதனிலுதவிசெய்வீ
ரெப்போதின்மூலமனுவுபதேசங்கிதையென்றவர்தினுற்ற
வைப்பாருமவ்விரண்டின்மாதர்களுக்குபதேசம்புரியுமந்தத்
தப்பாதமந்திரந்தருளுமெனச்சாரணைதான்சாற்றினளே. [௩௭]

மின்னேருமருங்குலாள்சொலக்கேட்டபொன்னுரைசெவெறுத்தகிங்கைதத்
தனையெருஞ்சைவர்தாஞ்சாற்றுகின்றார்சாரணைபோசமாகும் [ஞ்
பொன்னேர்கொணன்மனையாலாவதென்னேபுவிசுவர்க்கஞ்சத்யலோக
சென்னெருமெனியான்வைகுண்டலோகமுநான்சிந்தியேனே. [௩௮]

உவையனைத்தும்பிரளயங்கடமிலழிந்துபோய்விடுமாலுதும்பரத்தின்
குவைபடைத்தபலத்திலுற்றகொதுகவையார்விரும்புகின்றார்கூறுமந்த
கவைபடைத்தகனிவீழ்ந்துநாசமுறுவதுபோலவண்டமாகு
மவைபனைத்தும்போய்விடுமாலவற்றையிச்சிப்பாரதிட்டம்பற்றார்தாமே.

ஆங்கைவயும்விரும்பாதவெமக்குனதுபொருளிச்சையாகுமோதான்
பூங்குழலாய்செல்வழியிலறுகொடரன்பணிவிரைவிற்புரிதிகண்டாய்
தேங்குதாமரையிலையிலுருள்புனலாமனமதுசிவனுமவ்வாறு
மிங்கிவைப்பபடியுறலாற்றுமதியாதரன்பூசையியற்றுவாயே. (௪௰]

அரும்புகைசேர்கொணர்ந்தவருப்பொருள்களிங்கேசேர்க்கட்டுக
ஞ்செப், விரும்புவிடயந்தவிர்த்தாயிமகிதவ்வியவேலசசெய்தி, தரும்ப
சிவின்மோகத்திலழுந்தாதவரமென்றேசாற்றுகிறாய், கருங்க...
யுற்றோன்கனவினுமேசுகமடையக்கண்டிலோமே. [௪௧]

இச்சைதனைவிடுத்தின்னேசிவபூசைபுரிந்தியாலிலிர்...
வச்சுறுமோதெரியாதுபூசைசெய்யாதவன்பிறப்பு... வாயென்றே
துச்சனைவுறுடல்புவிக்குச்சுமையாகும்பெரியோர்... [illegible]
னச்சியவருச்சனையடாகையாற்பூசைசெய்துநன்றுவாரே. [௪௨]

இளமடவார்தமைக்கண்டாற்பற்காட்டிக்கால்பிடிப்பனொன்றுமீசன்
றளமலர்த்தாள்கருத்தில்லைவைத்துச்சங்கராவருளென்றுகணங்கூட்டார்
வளை... விட்டாடைமின்னார்தமக்குதவவ்வர்மறுக்கவலிப்பபோர்த்தே
யளமகிழ்ந்துபார்த்திருப்பர்சிவன்றனக்குச்சாத்தமனத்துன்னிலாரே. [ ]

மற்றுமுளபொருள்களுமப்படி புரிவரவர்களெல்லாம்வையமாளுங்,
குற்றமெரும்பாரமன்றோதலைமைபெறவேண்டுமெனி லுமையாள் கேள்
வன்,கற்றைவார்சடைப்பரமன்பூசனையேசெயவேண்டுங்கற்பந்தோறுஞ்
சொற்றசிவபூசைசெய்வோர்பததூளேமூவுலகசுத்தியாமே. [௪௪]

அரிபிரமர்பூசனைசெய்பரமனடிபரவுதல்செய்தவரேமேலோர், தெ
ரிவருமின்பக்கடலாமவர்களைப்பூசிக்கிலதுசிவனுக்காகும், பெரியவராம
வர்க்காணிற்பாவகோடிகளெல்லாம்பெயர்ந்துபோமாற்,கரியகண்டரடிய
ரல்லாற்பெரியவர்களொருவரைநாங்கண்டிலோமே. [௪௫]

நாகபூடணனுமநாவினனவின்றுநெஞ்சினினைத்துநாளு
மேகசிந்தத்துடன்பூசையியற்றுவார்சிவரூபத்தியல்வாரென்றே
சோகம்பாவனைப்பெரியோர்சொல்வார்களென்றுமறைதூயசைவர்
பாகைநேர்மதுரமொழிச்சாரணைமின்னாள்கனவிற்பகர்ந்தாரன்றே. [௪௬]

முப்பத்தோராவது பிருங்கியுத்தரச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௧௧௧௦.

முப்பத்திரண்டாவது,

சாரணசொற்பனபூசைச்சருக்கம்.

வேறு.

சீதருருந்திருவீதிபாரூர்நாகைதிருநள்ளாறுடன்மேவதவணங்காருய,
லேரூர்கோளிலிவாய்மூர்பொன்னிநாட்டி னெழுவீடங்காகவிருந்தசைந்
தேயாடிப், பாரூர்கடொறுஞ்சடைகடோறுநின்றுபரிந்தாடிக்குடந்தைந
கர்க்கீழ்க்கோட்டத்து, மாரூர்வெண்பிறையாடித்தங்கூத்தையாடவல்
லார்புகழேகொண்டாடுவோமே. [௧]

ஆரணபாக்கினவற்கிமுனிவராசனறைகின்றான்சைவர்சொன்னவா
ர்த்தையெல்லாஞ்,சாரணப்பெண்கேட்டொடுக்கவணக்கத்தோடுஞ்சாற்
றுவாளுமதுசொற்சத்தியமேகண்டீ, ரேரணியுமுமதுதரிசனத்தினாலே
யெனக்குவிடமெனும்விடயத்திச்சையில்லைச், சீரணியுஞ்சிவபூசைத
னிலேயென்றன்சிந்தையொடிந்தியமெலாஞ்சென்றவன்றே. [௨]

உருக்கமுடனருச்சிக்கக்காதைகேட்கவோதுமாலயம்பணியத்தொ
ண்டர்கூட்டத்,திருக்கவேவேண்டுகின்றதென்றன்புந்தியிங்கிவற்றைத்தி
டம்பெறவேபுரியுமாறு, பொருக்கெனநுந்திருவாக்காலுறுதியாகக்கடவ
தெனப்புகன்றிடுவீரென்றபோதிற், றிருக்கருசிந்தைத்தவத்தோர்சொ
ல்வார்மின்னேசிவபத்திபெற்றனைநீதிடம்பெற்றாயே. [௩]

உறுதிபெறுமிவற்றிலொருகாதைகேட்டி யுயரிமயச்சாரலிலோர்
செல்வமேவுந்தன், சிறுவரொடுபவுத்திரர்கடழைக்கவாழ்வான்சிறுவிகம

...க்கன்றாளொருத்தியுன்றாள், பெறுகுதலைப்பருவத்திலரன்றன்பத்தி பெற்றுளாளருச்சனையின்பிரியமுற்றாண், மறுவிலாவாயுள்சிவநாமகானம் வள்ளல்கதைகேட்பதிலும்போக்குகின்றாள். (௪)

அன்னவடானுப்பரிகைதன்னிலேறிபரனுமவிசைவீணைக் கானம் பாடி, மன்னிளம்போதிமயச்சிரமாயமீதின்மருவுசிவனாலயத்தின்சிகரத் தன்னிற், றுன்னிவருவாடைபரிமளங்களோடு தூயமலர்மாலையொன்று கொணர்ந்துவீசப், பன்னரியவதனையேகையிலேந்திப்பார்த்தெந்தவுலகத்ததுதானென்பாள். (௫)

இதுபோற்பூலோகத்திலெங்குங்காணேனிமையவர்தம்மந்தாரமாலைதானோ, மதுமேவுமிம்மலர்ப்போதிவாரில்லைவாசமாங்கின்னரர்கந் திருவர்தேயத், ததுவோவென்றதிசயித்தேவிசாரமுற்றுளாரதனைவிமானமேலிவர்ந்துசென்றாள், விதுமேவுசடையனாலயத்தைக்கண்டாண்மேவினாளதன்சிறப்பைவியந்தாளன்றே. (௬)

மண்டபங்கோபுரஞ்சிகரம்பிரகாரங்கண்மலர்மாலைசுடர்மாலையிரத்கமாலை, யெண்டருபொன்னரிமாலைதொண்டர்மாலையிவையனைத்துமாலைகைக்கொண்மாலைகண்டா, ளண்டர்நாயகனிலிங்கந்தன்னைநோக்கியடிபணிந்தாளவ்விடத்தினின்றேபாடு, மொண்டொடியோர்சவுந்தரியநிதியம்போல்வாளோர்கையுடனடகஞ்செய்வாளைக்கண்டாள். (௭)

இளம்பருவக்கன்னிதன்னைபிராசகன்னியெதிர்ந்தனளன் புடனவட்பார்த்தியம்புகின்றா,ளளந்திடவேபரியகடைக்கண்படைத்தாயாவனியன்னையாரத்தன்றானு, ளுளந்தயவுபெறுமுன்றன்கொழுநனெங்கேயுற்றானின்னடனவித்தைதயெங்கேகற்றாய், வளர்தருமின்னிசையயின்றாய்குருவாரென்னுமன்மகட்குக்கந்தர்ப்பமாதுள்சொல்வாள். (௮)

கன்னிகையேயெமருமனஞ்சிவபூசைக்கேகாதலிக்குந்தளமகனாற்கனைதபெற்றேம், பொன்னினியல்பலபொருளுஞ்சிவனுக்காக்கும்புந்தியுடையோர்தொழிலுமிதுவேயென்று, மன்னவன்றன்மகள்கேட்கக்காந்தர்ப்பன்றன்மகள்சொன்னாளவள்கையின்மாலைகாட்டி, பின்னமலர்யாதிதன்பேரதுமாதேயெங்கேயுற்றாளிதனைக்காட்டாயென்றாள். (௯)

கந்தருவமாதுசொல்வாண்மின்னேயிதுகாலமன்றுசிவன்றனக்குப் பிரியமாக, வந்தயானடனகானங்கள்செய்பவாய்த்தருணமடையடைபொன்றுளதனைக்கேட்ட, வந்தமாறுங்கவடனன்புநோக்கியதிசயமுற்றவளடம் பார்த்திருந்தாள், முந்துமாலைப்போதுவரவேயந்தமொய்குழலாள்கங்கைதனின்மூழ்கச்சென்றாள். (௧௦)

புனலாடிநீறுகண்டிபுனைந்தாளந்தப்போதுவந்தார்கந்தர்ப்பலோகத்துள்ளா, ரனலாடுஞ்சுடலைதனிலாடிபூசைபாதரித்தாரவர்களோடுபுகுந்தாள்கோயில், மனதார்வமுடனுறைவிதங்களானவரிசையுடன்புரிந்தனர்வந்தோர்யாரு, மின [illegible] லைகிலெய்தினரே. (௧௧)

கன்னியவள்சிவன்றனக்கேபிரியமாருங்கானஞ்செய்தாலயத்துநி
ன்றாளந்தத், தன்னிகரில்லாள்கணவன்றானுமெய்த்திச்சங்கரனை யருச்ச
னைசெய்ததன்பின்சார்ந்தே, பன்னிதனைக்கண்டுமின்னேபரமன்பூசைப்
பணிமுடிந்தபிரதோடவேளைபோயிற், றின்னினிநாகப்பசிக்கே பெரு
மேம்பாவென்றனுமன்னவன்மோகமில்லாள்சொல்வாள். (கஉ)

உன்றனக்குப்பிரியமாம்படியெங்கேனுமுறைக்கிடுதி செல்லுதியா
லிறைவன்கோயில், லென்றனக்குதீங்கமனமில்லைகண்டாயிவ்வுடலம்வி
ழ்பளவுமிகுதச்சேர்வேன், பின்றுமற்றையோரிடமும்பெயரகில்லேன்
பிறைபணிவான்பூசனையிற்காலம்போக்கு, கின்றனன்யானுன்வார்த்தை
போதும்போதுங்கிடையாதவின்பெனக்குக்கிடைத்ததென்பாள். (கங)

ஆகாரசித்திரையிற்புணர்ச்சிதன்னிலாசையற்றேனரன்பூசைக்கடவ
கான, மாகாதல்கொண்டுநெம்மான்வெள்ளிவரையிடத்துமபோய்
ப்பூசைமகிழ்ந்துசெய்வே, னேகாய்நீசிவனையருச்சனைசெய்யாதாரெடு
த்தசென்மம்வீணன்றேசாரமில்லாச், சோகாதிகஞ்செய்குடிவாழ்க்கை
தன்னிற்சுகமுண்டோசுத்தர்சிவபத்தர்சேரார். (கச)

நீசாதுவாயழைத்தல்போதும்போதுமெனக்கிழத்தியவரேறுநின்
றொன்றேனுந்தான், பேசாமலிருந்தகாலத்திலாசைபெரிதுற்றாளிவை
யெல்லாம்பார்த்துநின்ற, தூசாருமல்குலிராசாதிபன்றன்றோகையுமப்ப
டிபுரியத்துணிந்தே தூய, வாசாரமுடன்பூசைபுரிந்திரா வி லாகாரசித்தி
ரையற்றுடினளே. (கரு)

அப்படியங்கவளோடுஞ்சென்றாளன்றளரன்பூசையாற்றியேயகரிலே
சேர்ந்தா, ளிப்படியிப்படிதனினற்சென்மமுற்றோரெண்ணிறந்தோர்பூச
னைசெய்தின்பம்பெற்றார், கொப்படிபாய்கூர்விழிச்சாரணையேயிதாற்கு
டிவாழ்க்கைதனைவேண்டேன்பொருளுண்டாகின், மைப்படிகண்டன்பூ
சைபதனைச்செய்வேன்மற்றிதுவேபொருளென்றுமனங்கொண்டேனே.

அரன்பூசையின்றிப்பாரின்பஞ்சேர்வாரரும்பசியோ னாகாரத்திச்சை
போலப், பரன்பூசைபுத்திமுத்திதருவதென்றுபத்திசெய்வார்புத்தியுளப
ண்பினோர்கள், வரஞ்சேருநாவலந்திவுள்ளமாந்தர்வரதன்பூசனையிலின்ப
மருவல்போலத், திரஞ்சேருஞ்சுவர்க்கமோடுசத்யலோகந் திருமால்சே
ருலகத்துங்கண்டதின்றால். (கஎ)

இதுவேமேலாந்தருமமென்றுசைவரிசைந்தனர்சாரணமானுனினி
துகேட்டு, மதுவேயுமலர்கொண்டுபத்திபோடுமன்னுசாதனப்பொருள்க
ள்யாவுங்கொண்டே, விதுவேணியருச்சனைகள்செய்தல்போலமெய்க்க
ணவுகண்டெழுமவ்வேளைதன்னிற், சதுர்வேதமுணர்பிருங்கிவார்த்தைகே
ட்டுத்தாமரைக்கண்மலர்ந்துபார்த்தெழுந்திருந்தாள். (கஅ)

அவடனைப்பார்த்தேப்பிருங்கிமானத்தேறுயனைக்கேயென்றிடக்கே
ட்டுடைப்பினாறு, முவமையிலாவறிவுபொருளாகையாலேயுவன்றனைப்

பார்க்தார்சர்பமுறச்சொல்வாளாந், சிவனையருச்சனைசெய்வோர்க்கிடையூறாகத்திங்கிழைப்போர்சேர்கதியுமுண்டுகொல்லோ, தலைமுடையகணாங்கணீர்புகல்வீரென்றுரைடைபல்சொற்கேட்டுப்பிருங்கிசொற்றுகின்றான்.

ஈங்கிவடான்றநுமத்தார்புவியின்மீதிலிறைஞானமுனைத்தமுனையெனச்சிந்தித்தான், பூங்குழலாய்நல்வசனம்வினவுகின்றாட்புகலுனக்கேசுகமுடையக்கடவுதன்றே, பொங்குநீசிவபூசைப்பத்திபெற்றாயுனையாசர்க்கரசருமேவணங்கவேண்டும், பாங்குபெறுமுனக்குமுனமில்லாப்பத்திபவித்தகிச்சொற்கேட்டவர்க்கும்பாவம்போமே. (௨௦)

சந்தேகமில்லாமதேயிதிநீனோர்காளைசாற்றுகின்றேன்சனகமாமுனிவனிங்கு,வந்தேகங்காசலப்பொற்கபடப்போதுபணத்தகலவைச்சந்தம் வில்வந்தும்பை, செந்தாமரைபளிவெள்ளெருக்குசெவ்வெருக்கூமத்தைகுருக்கத்திமுல்லை, கொந்தார்செண்பகம்புன்னையந்தாரையாதிமொழியலர்கற்பூரத்பநந்தூபங்கள். (௨௧)

முக்கனிகள்பரமான்னமன்னராசிமொழிதருபல்வகைக்கனிகளபூபவர்க்கஞ், சர்க்கரைபான்முதலானபொருள்கள்கொண்டு சங்கரனையுபசாரத்தாற்பூசித்தே, மிக்கதவமுப்புரிந்தானதனைக்கண்டுமேதினியேல்லாநடுங்கவும்பரெல்லாந், தக்கதிதுவன்றெனவேநடுக்கமுற்றுச்சாற்றரியவிசாரமுடன்றளர்ந்துளாரே. (௨௨)

சனகரிவைசிவபூசைதவமுஞ்செய்வார்சாற்றுமேவராதிக்கந் தனையிச்சித்தார், மனமகிழ்வைநண்ணபதஞ்சத்யலோகம்வைகுபதந் தான்பெறவோதெரிந்திலோமா, லனகரிவர்விழைவுறாப்பதங்கட்பிலாசையுறாரிவரிதயஞ்சிவனைதேர்வான்,றினமுமிவருதயமுதற்சாயாந்தத்துந்சிவபூசைதனிற்காலம்போக்குகின்றார். (௨௩)

என்றேவிண்ணவர்சிந்தையுடையராகிபாவர்கட்குமதிமோகங்கொடுக்கவல்ல, குன்றோமுலையரம்பைதன்னைக்கூவிக்கூறுகின்றார்சனகர்சிவபூசைசெய்வார், நன்றேமேவர்பதத்தைக்கொள்ளவென்றேநாடுகின்றாரோதெரியோநங்காய்நீதான், சென்றேசெய்தவர்பூசைவிக்கினந்தான்செய்தியெனக்கேட்டவுடன்றிகைத்துச்சொல்வாள். (௨௪)

அந்தகலிக்கையினளாகிமிக்கதிபங்களஞ்சடக்கிவனவாசத்தார்த்துராரு, நெஞ்சுதிடமாக்காலம்போக்குகின்றார்நிகரிலிருவிக்கினராய்ப்பூசைசெய்வார், வஞ்சமற்றவரிடத்தேதன்விக்கினந்தான்பருவுமோவிதிலெக்கேமனஞ்செல்லாதால், விஞ்சுகின்றவர்தமக்கேகருசிக்குமாற்றால்விக்கினஞ்செய்திடும்வகைதான்விளம்பீரென்றாள். (௨௫)

கோலஞ்ஞானருச்சனைக்குவிக்கினந்தானினைத்தவன்றனெண்ணமவன்றனையேகொல்லு, மாலசிவபூசையினிற்பாவகோடிபகலுமெலிவிக்கினஞ்செய்திடுபோதான். [illegible] டவுளாரு

சகைபாவவலைசகடம்மை, யிமையதனிற்பொடியாக்குமடியாமென்றுவி
டையூற்றின்றிரணமெங்கேநிற்குமன்றே. (௨௬)

அளவிலாப்புண்ணியம்பாக்கியங்களால்குமரன்பூசைதனிற்புத்திசெ
லுத்திலோமா, விளமதிவேணியன்றனாராதனைக்கேயிடையூறுசெயும்பவ
த்திற்களவையுண்டோ, வுளமதனினினைக்கினுமேயுய்யமாட்டா னுற்ற
சென்மமவநரகிற்கற்பம்வீழ்வன், வளமருவுசிவபூசைபுரிவோர் தம்மை
வணங்குவோனவர்கள்பெறும்பதத்தில்வாழ்வான். (௨௭)

காற்பாசவரைபோன்றபாவகோடிக்கனபொருப்புக்கரன்பணிதீக்க
ட்டியாகு, நூற்பாவினோரிழையாமிடையூறந்தநுவல்பெரியகாட்டெரிமு
ன்னெங்கேநோக்குஞ், சேற்பாவும்விழியுமையாள்பாகன்பூசைசெய்பவ
ன்யாவரும்வணங்குஞ்செல்வனன்னோன், பாற்பாவத்தடைபுரிதலளவி
ல்பாவம்பலிப்பதற்கேபண்ணவர்தீயெனச்சொன்னீரே. (௨௮)

தேவர்காணீரிதைநினைத்தபோதேதீயபவமடைந்திடுதிர்சனக
ர்பூசை, மேவியேவிலக்கியிடினுங்கள்சென்மம்வீணாகுங்கடைப்பட்டம
னிதனேனு, மாவியழிந்திடவிடுந்தானுகர்தனுண்டோவெனவரம்பைய
றைந்திடலுமமரரெல்லா, நீவிரகினிகழ்த்தியதுமெய்யேயெங்கணெஞ்சி
னிற்சஞ்சலநீங்குமாறெவ்வாறே. [௨௯]

எங்களையேநடுக்கமுறப்பேசுகின்றாயெப்படியாயினுமிதனைப்புரி
யாயென்னிற்,கொங்களையும்பூங்குழலாய்சுவர்க்கவாசங்கூடுகிலோமென்
றிடலுங்குழைவினோடு, மங்களமாமரம்பையிவர்தமக்குமெற்கும்வந்த
வாவருகவெனவிடைதான்கொண்டே,சங்களையுங்கைவீசிமதுரம்பேசிச்
சனகமுனிபூசைபுரியிடத்திற்சார்ந்தாள். [௩௦]

வந்துதவ்முனிவனைக்கண்காட்டிக்கோட்டிமயல்பூட்டியெதிர்நின்
றாள்சனகர்கண்டே, சிந்தையிற்சஞ்சலமுடனே விசாரமுற்றுச்சிவபூ
சைத்திடசித்தமுடையேனியானே, முந்துறுமிங்கிவடன்னைக்கண்ட
போதின் மோகமுற்றிதன்னையெனமுன்னும்போதி, லந்தரத்தில்வா
ணிசொலுமரம்பையேயிவ்வருமுனிவர்சிதேந்திரியராவர்கண்டாய். [ ]

மாதருநவங்களையேனவிலையுமதித்தறியாரிவரிடத்தினிநடாத்
தல், பாதகமேயல்லாமலாவதில்லைப்பாவையர்மேன்மோகமில்லாவரை
க்கண்டா,லோதுகின்றகற்பதுமைபோலப்பார்ப்பாருளம்வையார் நீயவ
த்தமிழைக்கின்றாயா,லேதமிலாரிமையோர்தஞ்சுவர்க்கபோகத்திச்சை
யிலார்நீயுனிடத்தேகுவாயே. [௩௨]

ஆசையுள்ளோன்கற்பாவைபூப்பாமின்பானுபவிக்கலாமென்றுநி
னைப்பனுகிற், றேசிகனும்விரத்தன்மின்னாரிடத்திலின்பஞ்சேருமெனச்
சிந்திப்பானதுபாவஞ்செயேசுகாமுகர்க்கல்லாலிவர்கட்குண்டோவீசன
ன்பர்மாதரைக்கல்லென்றேபார்ப்பார், பேசுபொம்மைகையொடுகால
லசைத்தல்கண்டுபேதைக்காமுகரேனுந்தழுவிடாரே. [௩௩]

அரும்புமுலைரம்பைகேள்கைகால்கொங்கையசைத்தசைத்து
க்கூத்தாடுபரிசதனால், விருப்புவரோசனகர்க்கேசெய்யுங்கோட்டிவிதத்
தினாற்சாபமுற்றுக்கெடுதிபோறுங், கருப்புமொழியாயிவர்தாங்கிக்குப்பா
லர்கதிர்மதிபாலபணிவர்களல்லகண்டாய், தருப்பொருளாஞ்சிவனடி
யார்தங்கட்கெல்லாந்தலைவரிவர்யாதரின்பஞ்சார்கிடாரே. [௩௪]

பயந்தருதேவர்கள்சொன்னவார்த்தைகேட்டுப்படர்ந்தனையங்கவர்க்
கியராற்பயந்தான்வேண்டா, வினைபந்தவயர்பதம்புகுதார்கற்பந்தோறுமீ
சன்பூசனையுவந்தேயிருப்பரென்றே, யுயர்ந்தவசிட்டசொல்லவரம்பைகே
ட்டேயுண்மையெனப்பயந்தவர்பாற்போயினாளால், வியந்தருள்சாரண
மாமனைசிவபூசைக்குவிக்கினஞ்செய்தோர்நரகிற்புகுவர்தாமே. (௩௫)

எனப்பிருங்கியாங்கனங்கட்கிறைவன்சொல்லவிசன்பூசனைப்பிரி
யையிபயபுகின்று, ளனைத்துமுணருஞ்சிவன்றனிடத்திலவைத்தவன்பி
னினைவதெரிந்துற்றனைநந்தாயன்றே, யனத்திலரன்பூசைகளவினிற்செ
ய்வேறருடன்னுகின்றவிக்கினமாய்வந்தனைத்தா, யுனக்கிதனாற்பவமின்
றேகனவிற்பூசைபோதுசாக்கிரபூசைபொப்புறுதோ. (௩௬)

கன்னுசிவபூசையினிற்றுதிபாகயந்துளனதற்கொருவிக்கினம
தாகப், பண்ணியுற்றுப்கனவினன்கண்டபூசைப்பலப்பொருளிப்போதெ
திர்க்கப்பெற்றிலேனே, விண்ணளவுமுயர்ந்தவந்தச்சிவலிங்கம்போன்மெ
தினியிற்கண்டிலேனப்பமாலை, பெண்ணில்காலாக்கினிகள்சுடர்வபோல
விமைக்கின்றவலங்காரங்கண்டிலேனே. [௩௭]

வில்வமால்கைபெங்கேபலபூமாலைவிதானமெங்கேமிக்கநைவேதன
வெற்பெங்கே, பல்வகையாமபிடேகத்திரவியங்கள்பகரைந்தாமமிர்தப்
ரவாகமெங்கே, செல்வமிகுகலவைச்சந்தனம்வெண்பட்டுத்திகழுமணி
ப்பணிபெங்கேபூவின்மாரி, புல்வனவிவ்வண்டநிறைந்துள்ளவெங்கே
பொன்மணிச்சாமரைகொடிசத்திரங்களெங்கே. [௩௮]

என்றனக்குப்பாக்கியமாஞ்சிவனைக்கண்டேனிவைகளெல்லாமெங்
கேபோய்விட்டதந்தோ, வுன்றனதுபொல்லாதசேட்டையாலேயுற்றமெ
லாங்கெடுத்தெனையேயழைக்கவந்தாய், நன்றுறுமானந்தமுற்றுங்கெடு
க்கவென்றேநடந்தனையேகெட்டேனென்செய்வன்யாவும், பொன்றிட
வேயிழந்தனனேகிரிசர்பாதம் பூசைசெய்வேனிடத்திரக்கம் புரிந்தி
லாயே. [௩௯]

இக்கடியபாடபுத்திகளங்கட்கெல்லாமிலாறவவுனக்கெங்குவந்ததே
க்கதபாகு, மக்கணியும்பரமசிவன்றனக்கேயன்பாலருளிலேயேயமனு
மிந்தத்தடைசெய்வானோ, தக்கயான்புரிபூசைவிக்கினஞ்செய்தாய்சங்க
ரனரிதற்குனையுந்தண்டியாரோ, மிக்கவென்பாக்கியங்களெலாமுன்றனா
லேவிடுற்றதென்றரற்றிவீழ்ந்தாளன்றே. [௪௰]

இவ்வாறுதிடபத்திரமக்கும்வாராதிவண்முன்னிருந்தபுத்திபோயிப்போது, செவ்வாறுமிசேர்சிவன்றன்பத்திபெற்றுள்செப்புமிதற்கன்றோ நாமிச்சைகொண்டோர், தவ்வாதகோரதவம்புரியவல்லதாபதவேந்தர்கடமக்குங்கிடையாதன்றே, யொவ்வாருமிலாதசிவனருளாலன்றி யொன்றினுலும்பெறுதற்கரியதாமே. [சுக]

சங்கரனெவ்வழியிறுஞ்சிவகோடிதம்பவங்கள்போக்குவனோதெரிந்திலோமா, லங்கவன்பூசனைபுரிவோர்தாமேமுத்தரனையவர்கள்குடும்பனுன்பமடைந்திடாரே, யிங்களிதாப்பரயசிவன்பூசையாலேயெய்தாதருமபலமெய்தலாமே, மங்களமாஞ்செல்வங்கள்பெறுவதற்கேவரதன்பூசனையல்லாலில்லையொன்றே. [சுஉ)

இதுவொன்றுமேபோதுமன்றேமானளிவளிந்தவிலிங்கதரிசனத்தினுலே, மதுவொன்றுமலரினுற்பூசைசெய்யமன்னுமுன்னைப்பவங்களெலாம்போக்கப்பெற்றுள், விதுவொன்றுவேணியன்மெய்யருளுஞ்செய்தான்மேவுமவன்மகிமைபெவ்வாறறிவல்லோர், துதிகொண்டநமதுபாக்கியத்தினுலேசோபனமாமிவ்விலிங்கந்தரிசித்தோமே. (சுங)

ஈங்கிதனலெய்தரிபசுகத்தினேடுமிதயமுற்றயாவுமே பெறுதுமன்றே, பூங்குழலாளிவடனைபெகொணர்கவென்றுபுண்ணியனந்தனையேவப்பெற்றதாலே, பாங்குபெறுமிவ்விலிங்கந்தரிசனந்தான்பண்ணப்பெற்றுளமன்றேயிதனைப்பார்க்க, வோங்குமாதாயந்தான்பெறுவதென்னேயுயர்காசிவாசமுறும்பலம்பெற்றோமே. (சுச)

மங்களவீரேசனைரக்கூவிளநற்கங்காமஞ்சனங்கொண்டருச்சனைசெய்வரத்தினுலே, யிங்கிதச்சிவநபகருமதேசவிலிங்கதரிசனமும்பெற்றுய்ந்தோமென்றே, திங்கள்வேணியர்மங்கைகேசரிசர்தேவநாயகர்கயிலைகாவல்பூண்ட, துங்கனும்பிருங்கிமுதலானமேலாந்தூயகணநாதர்கடாஞ்சொற்றாரன்றே. (சுரு)

முப்பத்திரண்டாவது சாரணைசெற்பனபூசைசந்தமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-கஉ௯௫.

முப்பத்துமூன்றாவது,

விசுவாவசுச்சருக்கம்.

வேறு.

காவிரிப்பதுமின்புராணநற்கதையுநாளுமேகேட்பதுன்புகழும்
பாவிரித்திடுசெந்தமிழினற்பரவும்பணியுமேபணித்தெனைப்புரப்பாய்
காவிரித்திருவுமரிசின்மாநதியுங்கலந்திருமருங்குமேசூழும்
பூவிரிப்பொதும்பர்க்குடந்தைமாநகர்வாழ்புனிதனேயமுதநாயகனே. [ ]

சாலநற்முனிவன்பாங்கினவற்கிசொற்றனன்பெருங்கியேபமுதலாம்
வல்லமைசேருங்கணங்கள்விண்ணோர்கண்மனத்திடைவிசாரமுற்றனரா
லல்லறிக்கிடாமென்னினிச்செய்வோமிவனுரைப்பாசத்தாலார்க்கே
பெல்லவர்தமையும்படுத்தனனிறைபூசனையர்பாலெலம்விறல்செலுமோ.

சங்கரனெவப்பணிபெங்ஙன்புரிகேஞ்சத்திபோயொழிந்ததிங்கெமக்கே
பிங்கிவடனைக்கொண்டேகிடாதிருக்கிலிறைவனுக்குத்தரமென்னே
துங்கமாமண்ணல்பணிபிழைத்தவர்க்குச்சூழவயானநிச்சயமே
யிங்குதாமெகினத்திதன்கணங்கள்கையாடிக்காற்றிலமன்றே. (௩)

அண்ணலார்பணித்தபணிபிழைத்திடுறுப்பாவிகளாகுவமன்றே
பண்ணவர்வெகுண்டாற்கோபவங்கியினுற்பாரெலாம்பொடிப்பொடிபடு
மெண்ணமேன்செய்கோமுக்கிரமானசிக்கிரகத்தினாதனுற் [மே
கண்ணுதறனக்கேபுக்கிரரெனப்பேர்கலந்ததானலந்திகழ்கணத்தீர். (௪)

அங்கவர்கோபவங்கியார்தணிப்பாராற்பிலோமதையென்னசெய்வோ
மெங்குநாம்புகுவோம்புகுமிடத்தின்பமுண்டுகொல்சரணமென்றடைந்
சங்கரானறியாவராதரிப்பார்தற்பரர்சினத்தையார்தரிப்பா [தாற்
றங்கணார்முன்னமிலீலையாற்சினமுற்றண்டமெலாந்தகித்துளரால். (௫)

திருமலிதூசெய்துமையுடன்கயிலைசேர்ந்தனர்கருணைவாருதியார்
மருவுறார்கோபம்வரிற்கெடுமுலோகமற்றவர்வெகுட்சியினுலே
யிருமைசேருலகமடலையாப்முடிந்தெதத்தனை தாமென்றுபுகல்கேம் [சில்
பெருமைசேரிறைவரருளினுற்பின்னும்பிறந்தெதத்துணையென்கேம்பே

நாயகரவராலெத்தனைகோடிநாரணர்முதலிமையோர்கள்
போயகன்றனர்கண்மீளவும்வந்தார்புண்ணியர்நித்யகல்யாணர்
தாயினுமினியரானந்தர்கருணாசாகரரவரருள்பெறுநாந்
தாயவரேவல்செயாவிடிற்கருணைதோன்றுருவாயிடாரெமக்கே. (௭)

அறிவிலோம்பொறியுமற்றிலோமிவளையதட்டிநாந்துயிலுணர்த்திடவே
வெறியுறுகுழலாள்யாரடாவென்றேவெகுண்டனளெழுந்திருந்தனளே
நெறியினியென்னேபாவிகளானோநேரிழைகனவினிற்பூசைச்
செறிதருமிடைபூறிழைந்தனமடியாந்தீவினையுற்றுளோமியாமே. (௮)

என்செய்வோமென்றுநின்றனர்கணத்தோரேந்திழைவீழ்ந்தனளா
யட்கு, முன்செய்நல்வினையாற்றுயில்வரக்கனவின்முதல்வனைப்பூசனைபு
ரியுந், தன்செயல்சிவன்றன்செயலெனவுணருஞ்சைவரைக் கண்டுடிப
ணிந்தான், மின்செய்நுண்ணிடையாள்விரதமாதவரேகண்டெளன்மன
வெனவிரிப்பாள். (௯)

ஆலயமென்றங்கதனிலேவாரிலிங்கரவரைநாளுவிதப்போருளா...
[illegible]

னைலவார்குழலோரிளநலமின்றுடோழியரொடுமவனெய்திச்
சாலசிவபூசைபுரிந்தரன்முன்னர்த்தானுமேநடஞ்செயக்கண்டேன். [ ]

அன்னவள்கேள்வன்மன்மதவிகாரமடைந்துளானுங்குவந்துற்றுன்
மின்னனுள்கையைப்பிடித்தனனின்பமெல்லியல்கேட்டியானமது
பொன்னகரதனிற்புகுந்துபார்புரிசைப்பூவணைதன்னின்மேலேறி
யின்னலமிரவுமுழுவதுநுகர்தும்வருதியென்றிசைத்தனன்வெகுண்டாள்

வைதனள்போபோவென்றனளதனைக்கேட்டனன்மால்பெரிதுடை
யான், கைதனைக்கொடுத்தேயெடுத்தனன்கொடுபோய்க்கனகமானத்தி
ன்மேல்வைத்தே, பைதருமரவேரல்குலாளுடன்றன்பதியினிற்புகுந்திட
நடந்தா, னைதருமிடையாள்செலுநெறியதனிலதனுலைய மொன்றுகண்
டாள். [௧௨]

காமுகனுக்குத்தலைவனேடுரைப்பாள்காதலகன்னியம்பருவத்
தேமமாரெந்தைமனையிடையுறுங்காலெனதுடைக்குரவர்வந்தெய்தித்
தாமமார்குழலாய்சிவலிங்கங்காணிற்சார்ந்தருச்சனைசெய்வாயென்று
ராமதுவெனக்கேவிரதமற்றதனுக்கானிவந்திடிலுயிரழியும். [௧௩]

வினையினேனுயிர்தான்விடுகினும்விமலன்பூசனைவிடுகிலேன்கண்டாய்
மனையினிற்சிறியவயதினிற்றொடுத்தவிரதமீங்கிதனைநீமறுத்தா
ணைவருதாராய்நரகினிற்புகுதிபாக்கியவசத்தினுனம்பன்
கனைகழற்சரணத்தருச்சனைபுரியுங்கனபத்திகிடைத்திடுங்கண்டாய். [ ]

அருமையாற்கிடைத்தசிவபத்திக்கதிட்டமற்றிடுந்தன்மையினாலும்
புருடனுன்மனையின்வாழ்க்கையினாலும்புகுந்திடும்விக்கினமன்றே
கருமமுமறியாய்காமத்தின்வசத்தாற்காலமுமகாலமுமுணராய்
தருமமார்சிவன்றன்பூசனைக்குரியசந்தியாகாலமிதன்றே. (௧௫)

ஈங்கிதையுணராவுனதிளமையினையிளமினார்மேல்வைத்தகருத்தைத்
தீங்குறவெரியிற்கொளுத்துதிவிடுதிசெல்லுதிகடிதினின்மனைக்கே
பாங்குறுமெனையேவலிதினிற்புணரிற்பருவரல்வருமுனக்கன்றி
யோங்குறுதேறுஞ்சாம்பராங்காமமொழிவுறுதெனிலுரைக்குவன்கேள்.

இறந்துவீழ்பெண்கத்தபத்தினைக்கூடியினமேபெருக்கிடுங்காமத்
திறந்தனைத்தீர்திமனதினுலாசைசேர்ந்திடாமாதினைக்கண்டாற்
புறந்தருபிணம்போனேக்குதியுனக்கேபுத்திரவாஞ்சையுண்டாகி
லறந்தருகாலமறிந்துநீபுணர்தியதுவெனக்கிதயசம்மதியே. (௧௭)

மூடர்தத்துவங்களறிவுறுமையினுன்மொழிதருமொழிவவர்க்குறுதா
னுடுதற்கரியசிவபத்தியில்லார்நாயகனருள்பெறுதவரே
தேடரும்பரமன்கருணையேபுரியிற்சேயிழைபார்மயக்கொழியுங்
கூடுமதின்றேற்கற்பகாலத்துங்குடும்பத்தின்மயக்கறுதன்றே. (௧௮)

...தவார்த்தையினிலாவதொன்றில்லையிசனைப்புசனைபுரிவே
னக்தியின்வேளையாகியதென்றுளாங்கதுகாமுகன்கேட்டே
...தணிகளத்தாய்நல்லதுபோதும்போதுநம்மனைநடவென்றே
சிந்தையில்வெகுட்சியுற்றனன்கசையாற்சேயிழைதன்னைவீசினனே. [ ]

அடித்தனன தட்டியவன்வெகுவிதமாவார்த்தலுமாங்குவிட்டசையா
ள். பொடிப்பொடியாகிக்கொடித்தடந்தேர்தான்போயது கண்டனனயர்
ந்தான், றுடித்தருமிடையாடுடித்திலளெழுந்தாள்சோதியாலயத்தினிற்
புகுந்தா, ...டித்திடுந்தோளான்றெருட்டர்த்தனன்போகான்றடித்தகைந்தா
லௌநின்றான். [௨௦]

சென்றவள்சிவதீர்த்தத்தினின்மூழ்கித்திருவெண்ணீறுருத்திரவக்க,
மின்றிகழ்மணிப்பூண்வெண்ணிறப்பட்டுந்தரித்தனள் விண்ணவர்பெரு
மான், பொன்றிகழ்கோயிற்குட்புகுந்திறைஞ்சிப்பூதியினாற்சிவபூசை,நன்
றமடவாள்புரிந்தனள்பூசைத்திரவியநாடிநைந்துரைப்பாள். (௨௧)

அம்பிகாநாதசம்புவேயானதிரவியங்கொண்டுனையடியே
னிம்பரிற்பூசைசெய்திடச்செல்வமெய்திலேன்பாரயிர்செய்தேன்
வம்பவிழ்கன்னல்கங்கையின்புனலான்மஞ்சனமாட்டுகிலேனு
னும்பர்நாயகபூஞ்சுகந்தநற்சந்தமொண்ணிறத்துகில்பணியணியேன். [ ]

சோதிசேர்கற்பூரத்தினிற்றீபதூபங்கள்கொடுத்தறுகுடனே, சாதி
சேர் வில்வஞ்சாத்தியேபூசைதான்செயப்பெற்றிலேனியானே, தீதிலாவ
ன்னமபூபத்தின்வகைநைவேத்தியஞ்செயப்பெறுகிலனே, கோதிலாப்
பொருள்கள்கிடைத்தகொண்டுனைப்பூசித்தனன்கொண்டருளுதியே. ()

புனிதமாதவர்கள்குடும்பமாமிடும்பைப்புணரிநீந்திடச்சதாகால
மினிதுபூசிப்பார்பூசைசெய்வோருக்கிகபரந்தந்தருள்புரிவாய்
மனதுடன்மடவார்மயக்கினிற்புகுவோர்மன்னருநரகிற்றுன்னுவரா
லனகனேமோகவந்தகாரந்தீர்த்தருடருமிரவிநேயன்றே. [௨௪]

உனையருச்சிக்கவென்னுடைமோகவிருட்டினையொழித்தருள்புரிவாய்
தினமுநின்னருளாலருச்சனைபுரியச்சிந்தையைத்தழைத்திடச்செய்தி
வினையினேனைதனற்பாபபந்தங்கள்விட்டொழிகுவனெனவிமலன் [வாள்
றனையினிறைஞ்சித்தரும்பொருளின்றியருச்சித்தேனெனமனந்தளர்

அந்தவேளையினிற்பூசனைபுரியுங்கின்னரனரும்பொருள்கொண்டே
வந்தனன்பூதிகண்டிகைதரித்தேதான்மன்மகள்கண்டுளமகிழ்ந்தா (ளி
னுந்துமன்புடையாளவளறுப்பூசைப்பொருள்கொடுயருச்சனையுஞற்
முந்திடுங்கானமபாடிநின்றுடிமுக்கணனைமகிழ்வுறச்செய்தான். [௨௬]

அன்னதுகண்டவிளநலமுடையாளருச்சனைசெய்திடுமிவற்கே
...ன்னமேதார்செல்வமெய்திடுமேமிறபேமிறனவியர்...

கின்னரன்கண்டுவணக்கமோடன்னோகேதமுற்றிருந்துளாயென்னை
யுன்னருந்துன்பநீக்கிடச்சிவன்றானுற்றுளான்றுயருறேலென்றான். [உஎ]

பூசனைபுரியாதவர்க்கலோதுன்பம்புகுந்திடுமித்துயர்விடுவா
யீசனையந்திப்போதினினுனதிரவியவில்வங்கொண்டேத்து
நேசனாமவன்றன்பவத்துயர்நீங்கிமலனுருவனுமைபாகன்
றேசுறுபூசைபுரிபவனஞ்ஞைதீர்ப்பவனின்னநீராளே. [உஅ]

புண்ணியன்சிவன்றன்பூசையிற்புந்திபுகுமளவுந்துயர்நீங்கா
தண்ணலாம்விருவேசன்றனைபருச்சிப்போர்க்குமோருந்துயருண்டோ
கண்ணுதல்வீரேசுரன்விமலேசன்கடவுள்சித்தேசுரன்விகடை
விண்ணவர்பணிதுண்டீசுரன்றுண்டிவிநாயகன்றன்மகசேவை. [உகூ]

அன்னவர்தம்மைகினைத்திடிற்றுக்கமகன்றிடுகினைத்திலேயோ
வென்னனையென்றாக்கின்னரன்புகலவிறைவர்காசியைநினைக்கின்றா
ணன்னகரதுதானெப்படித்தாமோநானதுகாடிலனங்கோ
துன்னரும்பாவப்பாசபந்தத்திற்சுழல்குவேனென்செய்வேனென்பாள்.

சிவன்விசுவேசனருச்சனைதனிலேசிந்தைதான்செல்கிலதென்னே
கவலுறுஞ்சென்மகோடியில்வீரேசுரன்றனைக்கருத்திருத்தாதிப்
பவமதையுற்றேன்சென்மமும்வயதும்பயனின்றிக்கழிந்துபோகியவே
யவமதாத்தாயர்துயருறப்பிறந்தேனதிற்பிரயோசனமென்னே. [ஙக]

எறிந்திடவேண்டுமிச்சென்னைத்தையெரிதரும்வீட்டிருப்பார்போற்
செறிந்திடுமூடருடன்சகவாசஞ்சேர்ந்திடச்செய்ததெப்பவமோ
மறிந்தமான்கரத்தாயென்மனமுனதுமலர்ப்பதத்திருந்திடப்பணிப்பா
யறிந்திடுமறிவும்விடயநீத்துன்றனருடனையறிந்திடவருளே. (ஙஉ)

சங்கராவென்றன்பவங்களைப்போக்காய்சரணமேசரணமென்றடைக்தே
னிங்கெனைப்புரப்பாயெனநின்றுபுலம்புமேந்திழைமனத்துயரிரக்கம்
பொங்கிபசிந்தைக்கின்னரன்கண்டற்புதமுடன்கொடுவந்தபூசைக்
கங்கமாம்பொருள்களாதரவோடுமளித்தனன்பணிந்துகைக்கொண்டாள்

மனமிகமகிழ்ந்தஞ்செழுத்தின்மாதிரத்தால்வள்ளலைப்பூசனைபுரிந்தாள்
கனதைசேரவடன்கருத்தினையறிந்தகின்னரன்கழறுவானன்னே
யுனதுளமதனிலிச்சையாம்பொருள்கள்யாவையுமுதவிடவல்லேன்
றனையன்யானுனக்குப்பராபரன்பூசைதான்செய்வாயெனக்குநீதாயே.

புகுந்திடுஞ்சனனவாசனையொழிந்துபுந்தியாற்சிவார்ச்சனைபுரிதி
தகும்படிநித்தமிப்படிசெய்வாய்தனுவெடுத்தோர்சென்மமயக்கே
மிகுந்திடுவார்களவர்சகவாசமேவிடில்விக்கினம்வருமாற்
செகந்தனிற்பெரியோரிவையறிந்தரனைச்சிந்தித்தியாவும்பெற்றனரே. [ ]

என்றுகின்னரன்றான்புகன்றனகேட்டேயிறைஞ்சினளியம்பிடுகின்றாள்
பொன்றிரளிரத்நகோடிதானியங்கள்பொருந்தவேயெனக்கிருந்துளவா

கொன்றிடுமவைவின்றருச்சனைக்குதவாதொழிந்தவவைகொள்வதே
ரின்றிகழ்சடையோனாலயஞ்சமைக்கவிசாரமுற்றிருந்துளனென்பாள்·
ருந்தவைபுரியுமபாயகிபுகல்வாய்காமுகனென்னுடைக்கணவ
னருந்தியாயான்செயர்ச்சனைதகைவானவன்சிவபூசனையறியான்
பொருந்துறுஞ்சனனவாசனையதனாற்போகமேவிடாதுற்றனவன்மா
திருந்திமருணத்தான்பூசைசெய்வதற்கேகேடுசூழ்கின்றனனன்றே. ( )

வெறியதுபிடித்தோருன்மத்தமேவியருச்சனைமேவுதலிலரா
யறிவிலராகிநரகவேதனையிலடைவராங்கதுநிசமாமே
றியசிந்தையராயிளநலமின்னார்ச்சேர்வதற்குபாயமேபுரிவார்
சிறியதுநீர்க்குஞ்சிவனருச்சனைதான்கிடைத்திடநினைத்திடாரன்றே.

புரைதவிராசகுலக்கொடிபுகலக்கின்னான்கேட்டௌப்பூரித் [தெல்லா
துரைசெய்வாளெல்லாவிலக்கணங்களுமேயுடையபொன்னேமினார்க்
மரசியேமோகமறுப்பவன்சிவனேயன்றிமற்றியாருளர்தவத்தோர்
நிரைதருந்தேவரனைவருமோகநீங்கலார்நீக்கவல்லவரோ. [௫௯]

புண்ணியன்பூசைபுனிதமேயாகுமதற்குறுதடைபிரபஞ்ச
மென்னுறுபிரயாசத்தினிலன்றியெய்துறுதிறைசிவபூசை
பண்ணுறும்பெரியோர்பாருபகாரம்பணிப்பலனனைத்தையுமடைவார்
கண்ணுறுவீணர்மோகதுக்கத்திற்கலங்குவார்சுகம்பெறமாட்டார். [௬௰]

மோகமுற்றவருமெத்திறமேனுஞ்சிவார்ச்சனைமுயன்றிடின்மோக
சாகரஞ்சின்னாளினிலொழிவாரப்பத்தியுமரன்றரவேண்டு
மாதுமர்ச்சனையான்மனத்துயர்முன்போலடைந்திடாதறிமகவுளதாம்
போகமாசொழிந்தர்ச்சனைபுரிவார்க்குப்புதல்வர்ன்றேற்பிதிர்வருந்தும்.

ஆங்கவர்வருந்தாவண்ணமேபரமனர்ச்சனைப்பலத்தினாற்றனே
ராங்குறுகற்பின்மடநலாளிடத்திற்பாலர்சற்குணத்துடனுதிப்பா
ங்கிவைதன்னிலொருகதைபுகல்கேனழில்பெறுகாந்தர்ப்பநகரி
லாங்குறுவிசுவாவசுவெனுமொருபெருநடையகந்தர்ப்பனுற்றுளனே. [ ]

வன்றனக்குருவிலிளமையினலஞ்சேர்மனைவியரநேகர்தாமமர்ந்தார்
தனிற்பெற்றசெல்வத்திற்களவேவில்லையத்தையலார்தம்மை
ந்துமுன்வதுவைபுரிந்தபின்னவனுக்கொழிவுவந்துற்றதாலவன்றன்
ந்தவாய்க்கருங்கட்டெரிவையர்போகவிச்சையேமிகவுறச்செய்தோர்

அன்னவன்விரக்தசிந்தையனேனுமாங்கவர்தமையும்விட்டகலான்
மின்னார்போகந்தன்னையும்விரும்பான்விமலனாலயத்தினிற்போகித்
தன்றிகரில்லான்பூசனைத்தியானந்தன்னிலேகாலம்போக்கிடுவா
னிவன்பூசைவிக்கினம்வந்ததிலேயிவனிப்படியுறுங்கால். [௬௨]

ஆங்கவன்பிதிர்க்கண்மறைபவருருக்கொண்டணல்வெண்ணீறு
யுமணிந்து... பாங்குறு... புனைந்துசங்காரம்போயபமாதேவ வென்

* ...நீ-வாய்.

றோதித், தீங்கறுசைவச்சிவனடியவராய்த்திறல்பெறுமவன் றிடத்துட
னே,பூங்குழலுமைகேள்வனைப்பணிந்துறையுமாலயம்புகுந்துளாரன்றே

கண்டனன்விசுவாவசுவெதிர்கொண்டான்காதலால்வணங்கியாச
னத்திற் றொண்டுடனிருத்திப்பூசனைபுரிந்தான்சொல்லுவான்சிவனடித்
தொழும்பீ, ரெண்டருயபெரியீர்பூசனையெங்கேயெங்கிருந்தெங்கெழுந்
தருள்வீர், பண்டருமறையீர்பகருதிரென்றான்பரிவுறுபிதிர்க்கள்சாற்று
வரால். (௬௬)

மேருவின்சிகரந்தனிலிருந்திங்குவருகின்றோம்விமலனதுருவாய்ச்
சாருறுமிலிங்கபூசனை கயிலை தனிலிருந்தியற்றினோம்யாங்கள்
சீருறுபரமனருளினாலென்றுஞ்சிவார்ச்சனைபுரிதிறம்பெற்றோ
மேருறுமெங்கட்கெந்தலோ கத்துமிசைந்திடாக்கருமமொன்றிலையே.()

முக்கணன்பூசைத்திறத்தினாற்சகலகாமமுமுறையினிற்கொடுக்கத்
தக்கபாந்தேவர்கணங்கள்பூசிக்குந்தன்மையேஞ்சகலலோகத்தும்,புக்கு
றைந்திடுவோமாங்கொருதினத்தினிற்போந்துளோம் பொன்னுலகதனி
ன்,மிக்கவானவர்கோன்விதியுடன்பூசைபுரிந்திடவிதியுலகடைந்தோம்.

ஆங்குறுமலரோன்பூசைபெற்றிருந்தோமவ்விடைப்புதுமைகண்ட
னம்யா,மீங்கதுபுகல்வோந்திறமுடன்கேட்டியயன்சபையிருந்துளோர்த
ம்மிற்,பாங்குறுசிலர்செந்தாமரைமலர்ந்தபரிசெனமுகமுடையவராய்த்,
தேங்குகங்கையினன்றியானமாமமிர்தபானத்தாற்செழித்திருந்துளரால்

அன்னவர்பெருமையாவரேயுணர்வாரவர்பரமாணந்தருசிசே
ரின்னமுதாகுஞ்சிவரகசியத்தினிருங்கதைகேட்பதேயல்லாற் [ய
பண்ணுமற்றொன்றும்பயின்றிடார்பஞ்சாக்கரத்தொடுமுருத்ரவத்தியா
தன்னையேமனத்திற்றரித்தனர்பூதிகண்டிகையுடலெங்குந்தரித்தார்.)

கோமளவில்வத்தளிரொடுநானாவிததிரவியங்களுங்கொண்டே
யாமளையிடத்தானிலிங்கவர்ச்சனைசெய்திடபத்தியிதயமுற்றுடையா
ராமவர்துக்கமென்பதொன்றறியாரவர்களிற்சிலர்விசுவேசர்
தாமரைச்சரணார்ச்சனைசெய்தாரேனுஞ்சஞ்சலமனத்தராயிருந்தா ()

ஊக்கமதுடையவெங்கடமிதயமாங்கவருறுதுயர்கண்டே
யேக்கமதுற்றதயன்றனைநோக்கியாங்களிங்கிவர்களிற்சிலரோ
ராக்கமதின்றியுறைந்தனரென்னேயென்றனனம்புயக்கிழவ
னீக்கமதில்லாதிவர்மனத்துயர்நேர்காரணநிகழ்த்துவனென்பாங் ()

நற்றவர்கேண்மின்கந்தர்ப்பலோகநனும்விசுவாசுவென்பான்
கற்றைறவேணியன்றன்பூசனையொழியான்கண்டிபூதியுந்தரித்துடை'பா
னுற்றிடுமிளமைபெற்றிடும்புவதிமாதர்களநேகரோடுறைவான்
சொற்றிடுமிவ்வாறுற்றுமம்மாதர்தம்மொடுந்தோயகில்லானால். [நிரு]

அவனவர்ப்பிரிபானன்னவன்வடிவோவாங்கவன்மனைவியரழகோ
வுவமைமாற்றின்றூற்செல்வமுமிகுமாலொளிமணிமாளிகைமேல்வி
டவைசெலத்தருமோவவன்விளையாடுமெங்கணுமெய்தருஞ்சோலை
ரவிறருமந்தவனத்துறும்போதுநாரியர்தம்மொடும்பேசான். [௫௪]

அந்தநல்வனத்திற்கங்கைநீர்வாய்க்காலாகவேயோடிவந்தவணிற்
கொந்துறுமலர்ப்பூஞ்செடியொடுகொடிகடருக்களுங்குளிர்தரப்பாயு
மூந்துமாணிக்கமிழைத்தசோபானமுளரியோடையுமுளதவணில்
வந்துளேயுறைவானவ்வனத்தருக்கண்மாலையாப்பூத்திடுமென்றே. [௫௫]

அவ்வனநடுவினரதனமிழைத்தகோபுரமம்பொன்மண்டபங்கள்
செவ்வுறுபிரகாரத்துடனந்திகொடிக்கம்பமிடபத்தேவுடனே
யெவ்வெலாத்திசையுமேத்திடுமிலிங்கநாயகனினிதுவீற்றிருப்பான்
மூவ்வகையுலகும்பரவிடும்விசுவாவசுவவன்முறைமையிற்பணிவான். ( ]

அந்தநல்வனத்திற்றருக்குலமளிக்குமருங்கனிமலர்கொடேயரனை
முந்துறுபூசைபுரிந்துண்டிநீத்துமுசிப்பிலாதாங்குறைகுவனாற்
சிந்தையில்விடயவிச்சையதாகத்தெரிவையர்தங்களைப்பாரான்
புந்தியின்மைந்தர்பவுத்திரர்வேண்டுமென்னவும்பொருந்திலனவனே. [ ]

ஆங்கவன்பிதிர்க்களீங்கிவர்கண்டீரவன்புரிபூசையினாலே
யோங்குநம்முலகினிவருறுகின்றூருறையினுமவன்றனக்குரிய
தீங்ககறருசந்ததியிலாமையினாற்சிந்தையிற்கலக்கமுற்றுறைவா
ரேங்குவரவன்பூசனைத்தடைவந்தாலிழிந்துபோகுவமியாமென்றே. ( )

இருந்தவட்புதல்வர்தமையவன்பெறானேலெய்திடுந்துயரெனவேக்குற்
றருந்திடுமமுதுமயின்றிடார்மனத்திலானந்தமுற்றிலாரிருந்தார்
பொருந்திடுமவன்சந்ததியிலானென்றேபூசைநைவேதனத்தடிசில்
விருந்தெனவளிக்கின்வாங்குறாரேற்றாற்கையின்விட்டெறிகுவாரிவரே.

எச்சமற்றிருந்தானவனெனவிவர்களின்பமற்றிருந்தனரிதனை
விச்சைசேர்விசுவாவசுவறிகிலனால்விமலனையத்தயாமத்து
நச்சுறுபூசைபுரிந்துறுகின்றானரியர்ப்புணர்ந்திலன்பரமன்
பொச்சமிலாராதனையமுதுண்டுபூரித்தான்போசனமறியான். (௬௦)

மைந்தர்களாகாரத்தினிற்செழிக்கின்மாதரைப்புணர்ந்திடுமின்பஞ்
சிந்தனைசெய்வார்விசுவநாயகன்பூசனைருசிசித்தம்வைத்துடையார்
புந்தியிலுண்டிமாதர்தம்போகம்பொருளென்னார்புராந்தகன்பூசை
யந்தமிலாதபொருளெனக்காலம்போக்குவாரெனவயனறைந்தான். ( )

முப்பத்துமூன்றாவது விசுவாவசுச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௧௨௬௬.

காலாக்கினிச்சருக்கம்.

வேறு.

மாவிலந்தைபலாசுதாதகிவன்னிமாமருதங்
கூவிளந்தளவம்பலாமலர்கொன்றைபுன்னைகுரா
நாவனீழலின்மேவிவாழ்தருநான்மறைப்பொருளான்
மூவர்பாடியமேதவநாயகமுதல்வனைத்தொழுவாம். (க)

முனிவன்யாக்கினவற்கிசொற்றனன்முளரிமேலுறைவா
னினிதுகூறியவாய்மைகேட்டனமியாங்கடாமெனவே
மனமகிழ்ந்திடுபிதிர்கண்மாதவவேடமாய்வருவோ
ருனதுளத்தினில்வைத்தியாலெனவோதுவார்பினுமே. (உ)

கேட்டியால்விசுவாவசுப்பெயரோய்கிளத்துவமியா
நாட்டின்மிக்கதோர்மைந்தரின்மையினல்லையொன்றிலையே
தேட்டிலுற்றிடுபுதல்வருஞ்சிவபத்திசேர்ந்துளரேற்
பீட்டின்மிக்கவராவர்சங்கரர்பிரியமெய்துவரே. (ங)

பெருகுசந்ததிபெற்றிலார்கள்பிதிர்க்கடம்மொடுமே
யுருகுதீயவெநரகிலுற்றிடுவார்களுண்மையதே
வருகடன்மறைசொல்லுமூன்றெனமாதவத்துடையோர்
தருவினீழலுளோர்பிதிர்க்களிஞோர்கடங்கடனே. (ச)

இருமைமாணியினெறிநனூலுறலிருடிதங்கடனே
தருமபன்னியொடேமகஞ்செயலமரர்தங்கடனே
யருமைசேர்தருபுதல்வரைப்பெறலதுபிதிர்க்கடனே
யொருமைசேர்தருமவைகண்முக்கடனுதவவேண்டியதே. (ரு)

இனையசந்ததியுதவவேண்டுவ*தெவிசுவாவசுவே
நினையுவந்துசொனேநெடும்புவிநீயுறைந்திடுநாட்
புனையும்வேணியன்பூசைசெய்குவைபின்னர்யார்புரிவார்
மனையின்மைந்தர்செய்கடனிலாதுநின்மறையுநின்பெயரே. [சூ]

எவன்மனைக்கிடைபரமனர்ச்சனையின்றியுற்றிடுமே
லவன்வணங்கிடுபிதிரயன்பதியதிலுறைந்திடினுங்
கவனமோடுறுநரகிலாழ்குவர்காதன்மைந்தர்கடாஞ்
சிவன்மகிழ்ந்திடுபூசையில்லிடைசெய்தன்மாதவமே. (எ)

தனதினுற்புரிபூசைநாடொறுமேதழைத்திடவே
மனதுவந்திடுமாதரோடொல்வேளைவந்துறுபோ
தினிதுகூடிநன்மைந்தரைத்தரவேணுமன்றிமினோர்
நனியுறுஞ்சிறுபோகம்வேண்டிடினரகநிச்சயமே, (அ)

---

* எ-குறுக்கல்விகாரம்.

வேறு.

நானுமேசிவபூசைசெய்துறுசந்ததிக்குமஃதுதவியே
மானவன்புரிபூசைவழிவழிமன்னிநாளும்விளங்குநீ
ஞானமொன்றியமணிமயச்சிவலிங்கபூசைநயந்துளா
ரினவிக்கினமெய்திடாதுசெயினியமைந்தர்கள்வேண்டுமே. (௯)

இங்குனக்குளபூசையின்பொருளெண்ணிறந்தனவல்லவோ
பங்கமற்றிடுமுன்குணத்திசைபரவைமாதருமுற்றுளார்
பொங்குபுத்திரரிலையெனப்பழிபூணுறாததன்முன்னநீ
தங்குசந்ததிவாய்த்திடச்செய்திசங்கரன்பணிதழையவே. [௧௦]

நட்பினெய்தினமுன்னிடத்தினில்பாங்கடாமெந்தநாளினுந்
திட்பநல்கியசிவனையர்ச்சனைசெய்திநீயதனலியாம்
பெட்பின்மேவியநேயமங்கதுபெருகுமுன்னிடையன்றியு
நுட்பவறிவிலரேனுநீதிடனுட்பராமெனநோக்குவாய். (௧௧)

பனவர்தங்குலமுற்றுடன்சிவபத்திபெற்றிடுமெங்கண்மே
லுனதுசிந்தையிலுவகையெய்தலுரைக்கவேணுமதேகொலோ
புனையும்வேணியர்தமைப்பருச்சனைபுரியுமைந்தர்பவுத்திர
ரினையர்தங்களைநோக்குகின்றதுமேலதாகியவின்பமே. (௧௨)

சாற்றுமப்படியுடையனேமுத்தனன்னவன்றந்தைதாயரும்
போற்றிடுங்குலமுழுதுமேயுயர்புனிதமாஞ்சிவபூசனை
யாற்றிலார்தமைப்பெற்றபேர்நரகத்திலாழ்பவர்நீபெறு
மேற்றமாம்புதல்வர்சிவன்பணியுறுவர்காரணமுரைசெய்கேம். (௧௩)

நீறுகண்டியணிந்துசிந்தையினித்தனைத்தொழுபத்தியே
தேறுமாதரைநல்லவேளையறிந்துசேர்ந்திடிற்சைவநூ
லாறுசேர்புதல்வரையுயிர்ப்பர்களவர்களுன்னிலுமிக்கதாய்
நூறுசேரொருபதின்மடங்குநுண்ணியர்களாவர்கடிண்ணமே. ()

அவர்கடஞ்சிவபூசைகண்டுளமகிழ்தியென்றனன்புசேர்
தவர்களானபிதிர்க்கள்சொற்றனகேட்டுவந்தனன்சம்பதித்
துவகையுற்றிடுமவர்களுக்குறுபூசையாற்றினனுண்மையாஞ்
சிவன்மகிழ்ந்துறுமவனதன்பமுதுண்டயன்பதிசேர்ந்துளார்.(௧௫)

மற்றிவாறுநிகழ்ந்தபின்விசுவாவசுத்திறல்வாய்மையோன்
கற்றைவேணியன்மெய்த்தியானமுடன்களங்கள்களித்துற
நற்றினத்தினின்மேவியேசுரதத்திலின்பநயந்துளான்
பொற்றிரட்சடைபூதிகண்டிபுனைந்தமைந்தர்பிறந்துளார். [௧௬]

வந்தசந்ததிதாயநேகர்தம்வதனநோக்கிமகிழ்ந்துளான்
முந்துமங்கவர்தங்களுக்கரனுமந்தான்முறையாகவே

தந்தனன்னுமைகாந்தனேடுசதாசிவன்சருவேசுர
னிந்துசேகரனீலகண்டன்புராந்தகன்னிறையென்றரோ. [௧௭]

மாதவச்சிவபத்திபெற்றிடுமைந்தர்கற்றனர்நான்மறை
யோதுசாத்திரமோடுருத்திரவத்தியாயமுவந்துளார்
நீதிபெற்றிடுசைவசீலநெறிக்குண்மிக்கனர்சிவகதை
த்திலாகமமோடுறுஞ்சிவதருமமாம்பொருடேர்ந்துளார். [௧அ]

அரியதோர்சிவபூசைசெய்திடுமுறுதிபெற்றனரனைவரு
முரியமைந்தரைநோக்கியேமகிழ்வுற்றனன்விசுவாவசு
தெரியுமாதவர்யோகர்கண்டனர்சிந்தையிற்பரிவெய்தினர்
வரிசைமைந்தரைத்தழுவினன்றந்தைவாழியூழியென்றே சொன [௧௯]

அந்தமைந்தர்கடந்தைதாளிலிறைஞ்சியஞ்சலியத்தரா
யுந்துமன்பொடுரைப்பரையவுனூலுறுந்தயவாலெமக்
கெந்தவெம்பவமுந்தணிந்திட வீறில்செல்வமளித்திட
முந்துறுஞ்சிவபத்தியுந்தருதருமநீமொழிவாயென்றார். (௨௦)

மைந்தர்சொல்லியவாறுணர்ந்துமகிழ்ந்துசொல்வனியானெனச்
சிந்தைசெய்துரைசெய்குவானுறுசிறுவர்காடிடசித்தர்தா
மந்தமற்றிடுபத்தர்தாந்தொழவரியவின்பமளித்திடு
மெந்தையார்பதகமலமேயிதயத்திருத்திடவேண்டுமால். [௨௧]

ஆசையிற்செலுநெஞ்சைபண்ணறனன்பராலறியத்தகுந்
தேசுபெற்றிடுசரணபங்கயமீதிருத்திடல்செய்குவீ
ரீசனார்பதமயனுமாயனுமிந்த்ரனுமற்றையாவரு
நேசமாவிதயத்தில்வைப்பதுநிகரதற்கிலையுலகிலே. (௨௨)

அனையசேவடிநினைவினல்வினைவாகுமின்பசமுத்திர
மினையதெய்திடிலுலகமியாவையுமெய்திடப்பெறலாகுமே
வினையெனும்பவவடவிசுட்டிடுமெங்கியாம்விசுவேசர்தாள்
புனையுமன்பொடுபோற்றிடிற்சனனக்கொடுந்துயர்போக்குமே. ()

நவநிதிக்குவையனையமைந்தர்கள்கேண்மினந்தலினுதனை
யவமுறும்பலதேவரோடுவமித்திடுமறிவவையொணு
வுவமையற்றவிந்நினைவெனக்குமுமக்குமுற்றிடவேண்டுமாற்
சிவனருச்சனையன்றிமற்றுளதேவரைத்தொழநீயதே. (௨௪)

என்றுவேதமுணர்ந்துளோர்களியம்பியுற்றனர்மைந்தர்கா
ணன்றுணர்ந்திடுமிவையினோர்கதைநவிலுவேனதுகேண்மினோ
வொன்றுமிங்கிதுகேட்குறிற்சிவபத்தியுற்றிடுமேலைநாட்
குன்றெடுத்தவனுக்குமாமதகுமரன்வந்துபிறந்துளான். (௨௫)

அமையுநாரணன்மைந்தனெஞ்சினிலரனையும்பலகடவுளோர்
தமையுமேநிகரெனநினைந்திடுபுத்திவந்ததுசாரவே

சுமையிலாதுபர்காலவங்கியின்மாலையாய்வரல்கண்டன
னிமைபுரிந்திலனோடிவந்துறுதந்தைதலோகமதெய்தினன். (௨௬)

தாதைதாளில்வணங்கிநெஞ்சொடுமுடனடுங்கிடச்சாற்றுவா
னேதையாவெனையேவனந்ததுகாலவங்கியெங்கேகுவேன்
மாதயாநிதியாயடைந்தவர்தமையளித்திடவல்லபே
ரோதபாதிசையெங்குமோடிவனந்ததுற்றதுநோக்குவாய். (௨௭)

இதனையேதடைசெய்யவல்லமையில்லையோநினக்கெம்பிரான்
சுதனசக்கரமாயினுங்கதையாகிலுந்தொடநினைகுவா
யதனமாக்குறுமிதனைநீகடிதாற்றிலுய்குவனென்னவே
மதனுரைக்குமவ்வளவிலிந்திரனயனுமாதரொடெய்தினர். (௨அ)

வந்துமாயனையேவணங்கினர்கண்கணீர்வரவாடியே
முந்துமாமுகவொளிமழுங்கினர்மொழிதளர்ந்திடவுரைசெய்வா
ரெந்தையேபிரளயமதுற்றிடுமங்கியண்டமதெங்குமே
யுந்துறுவனைவுற்றதெங்ஙனமேகுவோமுயிருய்குவோம். [௨௯]

இனையவெய்திடவரனிடத்தபராதமேதுபுரிந்துளோம்
புனைதுழாயவவென்றனர்பினுமயன்சொல்வானரன்பூசைசெய்
மனையின்வைகினன்காலவங்கிவனந்திடற்கபராதமாம்
வினையிழத்திலன்வந்தவங்கியுருத்ரனுமிதுமெய்ம்மையே. (௩0)

காலவங்கியிதுறவனந்திடுகாரணம்மெனவோதுவாய்
சீலநீசிவபூசனைக்குறுதாழ்ச்சிசெய்ததுமுளகொலோ
வாலமுண்டவனர்ச்சனைக்குறுபண்டமியாதையயர்த்தனை
மாலதாய்மலர்வாடல்வண்டுணல்வரதன்மேலருச்சித்தியோ. (௩௧)

ஆதிபூசையைநீறுகண்டிமெயணிசெயாதுசெய்தாய்கொலோ
பூதிமந்திரமானதன்றியோர்புனையுமந்திரமுள்ளதோ
வீதலாற்சிவபூசைமந்திரமீனமாஞ்சுரமானதோ
சோதிசேர்தருவில்வநீரிடைதோய்த்திடாதருச்சித்தியோ. [௩௨]

தூபநீறொடுசேர்தஞ்சாத்தலிலாய்கொலோகமழ்தூபமுஞ்
சேயதீபமுமாதரத்தொடுதிருமுன்காட்டிலையோசிவ
னேயமாமபிடேகத்தின்பொருணீமறந்ததுமுண்டுகொ
லாயரோமமதுற்றவன்னமருத்துவித்ததுமுளகோலோ. (௩௩)

பழதுசொத்தைகலந்திடாக்கனிபாகுதேன்கறிவர்க்கமு
மிழுதினொடுநைவேதனத்தொகையாவுஞ்செய்தலிலாய்கொலோ
முழுதுமஞ்செழுத்ததுகோடேயமிமந்திரித்திடுமுறைமையாற்
றொழுதல்செய்திலைபோலுந்தாமறைவழிதுதித்திலைபோலுமால். [ ]

இறைவிமுன்னிறைவனையருச்சனைசெய்திலாய்கொலிலக்குமி
யுறையுந்தேவிதன்பூசைசிந்தைசெ... பற்றிலாய்கொலோ

வறைதரும்மிலிங்கார்ச்சனைக்குள தாமதங்களுண்டாயதோ
குறைதருந்திரவியமுண்டோமனங்குழைந்ததோத்திரமில்லையோ.

வேறு.

என்றுபிரமதேவன்றனியம்புமொழிநாரணன்கேட்டே
தன்றுபயத்தினொடுஞ்சொல்வான் றூயாயுயிர்போம்வேளையினு
நன்றுதருகண்ணுதல்பூசைநான்றன்வழுவல்செய்யேனூற்
பின்றுமுகாந்தகாலத்தும்பிறழாதியற்றல்புரிவேனே. [௩௬]

மாதேவன்பூசனைப்பிரியமருவாமனத்தோடேயிருக்குங்
கோதேயனையதேகத்தாலாவதென்னேகுழவிமனை
தீதேதருசெல்வங்களிவற்றுனுமாவதென்செப்பாய்
பூதேசனையெக்காலத்தும்பூசைசெய்யார்க்காவதுண்டோ. (௩௭)

தந்தைபுனிதன்றனக்குதித்தோன்றனேசிவனைப்பூசைசெய்வான்
சிந்தைமகிழ்தேவுத்தமனம்பிகைதன்பாகன்சிவபூசை
வந்தமுறைமையாற்புரியான்வாணாள்செல்வம்வீணாமே
யெந்தைபூசையமுதன்றியமுதம்வேட்டோனெரியுண்போன். (௩௮)

ஆழிதன்னாலவன்முடியையறுத்தல்வேண்டுமெகிலேசன்
வாழியுமைகேள்வன்பூசைமன்னுந்தவத்தாற்பெற்றேனே
யூழிநாதன்பூசையிலாஞசமுறுவனுவன்றனே
பாழிவையந்தனக்குற்றபாரமவனாலாவதென்னே. (௩௯)

பூசைக்குதவுந்தேகத்தைப்போற்றல்வேண்டுமெல்லாத
வாசைக்குதவுஞ்சடலத்தையாழியாற்கொய்திடல்வேண்டுந்
தேசனுமஞ்சொல்லாதநாவைச்சிதைத்தல்செயவேண்டு
மாசிலரன்பூசையிலழுந்தென்மனமந்திரத்தைமறவாதே. (௪0)

திருநீறுடன்கண்டிகைமாலைதிரிபுண்டரத்தைமறந்திலனு
லுருகுமனத்தின்மோகமுறேனுறுங்காற்கேடுதான்வருமே
மருநீடியகொந்தளவுமைதன்மணவாளன்றன்பதகமலத்
தருநீழலிலென்மனமிருக்குமதுசத்தியஞ்சத்தியமாமே. [௪௧]

இதனுக்கெம்மான்பதங்கரியேயிதுபேதிக்கிலென்மனத்தை
விதனத்தேகந்தனைச்சுடவேவேண்டுமெனவேதியமித்தேன்
சுதனொப்பானென்றாகன்றய்தந்தையானசோதியையே
முதன்மைப்பூசைபுரிவதுவேவேலையாகமுயல்வேனே. (௪௨)

ஈசன்றனைச்சிந்திப்பதல்லாலெனக்கேயிச்சையொன்றிலையாற்
றேசனவன்மங்களவுருவந்தேர்வார்பெறுவர்மங்களமே
யாசையாகியவன்றனையேயருச்சிப்பேன்வேண்டியவெல்லா
நேசமுடனேதந்தளிப்பனிதியமெனக்கன்னவன்றனே. (௪௩)

அந்தத்தனத்தையார்விடுவாரமலன்பாதரேணுவே
யெந்தத்தருமந்தனக்குமேமுதன்மையிறைகாலாக்கினியான்

மூந்தத்தகன்மானவண்டமுழுதுமுளைமதன்வேர்வையினுற்
பிர்தப்படைத்துவிளையாமெம்பெருமான்பாதம்பணிவேனே. (சுச)

மன்னத்திருமாலயனுடனேபுகலும்போதிலிந்திரனு
மின்னற்கதிரும்வானேருவிரவினர்கண்டயன்வெகுண்டே
பன்னிப்புகல்வான்காலத்திற்பரமர்புரிகாலாக்கினிதான்
றுன்னற்கேதுவிலையெவரோவபராதத்தைத்துணிந்துளரால். [சரு]

ஆங்காரத்தாலெவனேடாவமலன்பூசையியற்றுதான்
பாங்காயானுமாதவனும்பதுமைதானும்பாமகளு
நீங்காதரனைப்பூசித்தோகீவிர்செய்யாதிருந்தீரா
லெங்காத்துபருற்றிடவிவ்வாறெழுந்ததநானறிந்தேனே. (சசு)

அதனுக்கேதுஞ்சந்தேகமிலையகோவிதாச்சரிய
மதமுற்றிடுமித்தேவர்களிலெவரோவள்ளறனைப்பணியா
ரிதனைக்குறித்தேநின்மலனுமிறைநெற்றியிற்கணெரியெழுந்தே
விதனத்துடனேயாவரையும்வீட்டும்படிக்குவெகுண்டதுவாம். (சஎ)

துப்யமதுசூதனனேநஞ்சோதிபத்தியில்லாத
வெப்பவவரால்யாவரையும்வீட்டும்படிவந்தெழுந்ததே
செய்பவேண்டுஞ்செயலென்னேயவர்கண்மட்டிற்செல்லாதா
ளையுகமையும்விடுவதிலைமேலென்செய்வோநவில்வாயே. (சஅ)

அந்தோவாலவிடம்போலவகாலந்தான்வந்தடுத்ததுவா
லெந்தோகாலகாலர்தமதாணையாலெல்லோர்தமையும்
வந்தோர்காலாக்கினிசூழ்ந்துவளைத்துக்கொண்டதாவினியா
முந்தோகையினிலெவணடைவோமிருந்துப்போலமுளைத்ததுவே. ()

எங்கேபுகுந்தாலிதுவெய்தாதியம்பிரிமையாநயனத்தீர்
நங்காதலியரொடுகோடிக்குளிங்ஙன்விடுத்துநாமகல்வோ
மங்கேபோகிலின்புற்றேயமைதற்கிடமுண்டோவென்றே
